# பெரியார் பல்கலைக்கழகம்

**(NAACʼA++' Grade - State University - NIRF Rank 56
State Public University Rank 25)**

**சேலம் - 636 011**

## தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மையம்

## முதுகலைத்தமிழ்

## முதலாமாண்டு – முதற்பருவம்

## தாள் - II:

## சங்க இலக்கியம்

**(Candidates admitted from 2025-26 onwards)**

# PERIYAR UNIVERSITY

## CENTRE FOR DISTANCE AND ONLINE EDUCATION (CDOE)

## M.A தமிழ் 2025 admission onwards

## CORE II

சங்க இலக்கியம்

Prepared by:


முனைவர் க. மைதிலி
பேராசிரியர்
தமிழ்த் துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்-11


Scrutinized & Verified by:


BOS Members,
Centre for Distance and Online Education (CDOE)
Periyar University
Salem - 636011

| அலகு | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| **Unit – I** | பத்துப்பாட்டு – சிறுபாணாற்றுப்படை முழுவதும் | **1-35** |
| **Unit – II** | புறநானூறு – பாடல்கள்: 2 முதல்-20 பாடல்கள் வரை<br>பதிற்றுப்பத்து – (ஐந்தாம் பத்து பரணர்) | **36-112** |
| **Unit – III** | அகநானூறு – (நெய்தல்திணைப்பாடல்கள் 10)<br>210, 220, 230, 240, 250, 260, 270,<br>280, 290, 300<br>நற்றிணை – (மருதத்திணைப் பாடல்கள் 10)<br>20,30,40,50,60,70,80,90,100,120<br>குறுந்தொகை – (முல்லைத்திணைப் பாடல்கள் 6)<br>188, 190, 191, 191, 193, 194<br>ஐங்குறுநூறு – (குறிஞ்சித் திணைப் பாடல்கள்)<br>குன்ற குறவன் பத்து | **113-158** |
| **Unit – IV** | கலித்தொகை – பாலைக்கலி7,8,9,10,11 (5 பாடல்கள்)<br>பரிபாடல் – திருமால் 1, 4 (2 பாடல்கள்)<br>வையை 7 (1 பாட்டு)<br>செவ்வேள் 8, 5 (2 பாடல்கள்) | **159-216** |
| **Unit – V** | ஆய்வுநோக்கு - திணையியல், சமுதாயவியல் நோக்கு<br>திணைக்கோட்பாடும் சமுதாய அடிப்படைகளும், களவு, கற்பு வாழ்க்கை, புலவர் மன்னர் உறவுநிலைகள், இனக்குழு அரசு உருவாக்கச் சூழல்கள், தொன்மம் காட்டும் சமுதாயம், | **217-274** |

# சங்க இலக்கியம்

நோக்கம்

- உலகின் மிக மூத்த இலக்கியங்களில் சிறப்புமிக்கதாகச் சங்க இலக்கியம் திகழ்கின்றது. ஒருவகையில் மலையாளக் கவிஞர் சச்சிதானந்தம் குறிப்பிடுவது போல திராவிட மொழிகளின் ஆதிகவிகள் சங்கப் புலவர்கள் தான்.
- நிலமும் பொழுதும் திணைப்பாகுபாடுகளுமாக இயற்கையில் தோய்ந்தெழுந்த இலக்கியம்சங்க இலக்கியம். தமிழ் மண்ணின் மணம் கமழும் தனிப் பெரும் சிறப்பு சங்க இலக்கியத்தின் பெருமைமிக்க அடையாளம் ஆகும்.
- சங்க இலக்கியம் அகம், புறம் எனும் இருபெரும் பிரிவில் அமையும். சங்கச் சான்றோர் தம் செய்யுளுக்குப் பொருளாக மக்கள் வாழ்வினை அமைத்து, அதனை அகத்திணை, புறத்திணை என வகுக்கலாயினர். இதில் அகம் என்பது காதல் ஒழுக்கத்தையும் புறம்என்பது போர் முதலான பிற ஒழுக்கங்களையும் குறிக்கும்.
- பழந்தமிழரின் அகப்புறவாழ்வியல் மரபை அறிந்து கொள்வதற்குக் சங்க இலக்கியம் பெரிதும் உதவுகின்றது.
- அகப்புறப்பாடல்களில் காதல்,போர் வீரம் போன்ற பொருள்களைக் கூறுவதோடு அறமும், சமுக விழுமியங்களும் விளம்பப்படுகின்றன.

பாடப்பகுதி

## அலகு-1

## சிறுபாணாற்றுப்படை

### நோக்கம்

- சங்க இலக்கியம் பழமை வாய்ந்த இலக்கியம் ஆகும்.
- பழந்தமிழரின் வாழ்வியலை அறிந்துகொள்ள சங்க இலக்கியங்கள் உதவுகின்றன.
- சிறுபாணாற்றுப்படை அறத்தையும் பிறரை வழிப்படுத்தும் மனிதநேயத்தையும் முன்மொழிகின்றது.
- கடையெழு வள்ளல்களின் ஈகை பண்புகளை இந்நூல் எடுத்துரைக்கின்றது.
- கொடைத்திறத்தின் சிறப்பினை அறியலாம்.

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் |
| பாடப்பட்டோன் | : | ஓய்மான் நாட்டு நல்லியக்கோடன் |
| திணை | : | பாடாண்திணை |
| துறை | : | ஆற்றுப்படை |
| பா வகை | : | அகவல்பா (ஆசிரியப்பா) |
| மொத்த அடிகள் | : | 269 |

### ஆற்றுப்படை

விறலியர், பாணர், கூத்தர், பொருநர் என்போர் தமது வறுமையைப் போக்க வள்ளல்களிடம் சென்று பொருள் பெறுவது அக்கால வழக்கம். அவ்வாறு பரிசு பெற்றுச் செல்லும் மேற்கூறிய நால்வகைப் பிரிவினருள் ஒருவன், பரிசு பெறச் செல்லும் இன்னொருவனை வழிப்படுத்தும் முறையில் அமைவதே ஆற்றுப்படை ஆகும்.

நிலமகளின் தோற்றம்(1-6)

மணி மலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணி முலைத் துயல்வரூஉம் ஆரம் போல,
செல்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்று.
கொல் கரை நறும் பொழில் குயில் குடைந்து உதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடி, புடை நெறித்து,
கதுப்பு விரித்தன்ன காழ் அக நுணங்கு அறல்.

இளைப்பாறும் பாணன்(7-12)

அயில் உருப்பு அனைய ஆகி ஐது நடந்து
வெயில் உருப்புற்ற வெம்பரல் கிழிப்ப,

வேனில் நின்ற வெம்பத வழி நாள்,
காலை ஞாயிற்றுக் கதிர் கடா உறுப்ப,
பாலை நின்ற பாலை நெடு வழி,
சுரன் முதல் மராஅத்த வரி நிழல் அசைஇ,

விறலியரின் அழகு(13-31)

ஐது வீழ் இகு பெயல் அழகு கொண்டு அருளி,
நெய் கனிந்து இருளிய கதுப்பின், கதுப்பு என
மணிவயின் கலாபம் பரப்பி பலவுடன்
மயில் மயில் குளிக்கும் சாயல், சாஅய்
உயங்கு நாய் நாவின் நல் எழில் அசைஇ,
வயங்கு இழை உலறிய அடியின், அடி தொடர்ந்து
ஈர்ந்து நிலம் தோயும் இரும் பிடித் தடக் கையின்
சேர்ந்து உடன் செறிந்த குறங்கின், குறங்கு என
மால் வரை ஒழுகிய வாழை, வாழைப்
பூ எனப் பொலிந்த ஓதி (13-22)
நளிச்சினை வேங்கை நாள் மலர் நச்சிக்
களிச் சுரும்பு அரற்றும் சுணங்கின், சுணங்கு பிதிர்ந்து
யாணர்க் கோங்கின் அவிர் முகை எள்ளிப்
பூண் அகத்து ஒடுங்கிய வெம்முலை, முலை என
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன் சேறு இகுதரும் எயிற்றின், எயிறு என
குல்லை அம் புறவில் குவி முகை அவிழ்ந்த,
முல்லை சான்ற கற்பின், மெல் இயல்,
மட மான் நோக்கின், வாணுதல் விறலியர்
விறலியரின் காலைத் தடவி விடும் இளைஞர்கள்

நடை மெலிந்து அசைஇய நல்மென் சீறடி,
கல்லா இளையர் மெல்லத் தைவரப்

பரிசில் பெற்ற பாணன் வறுமையில் வாடிய பாணனைச் சந்தித்தல்(34-40)

பொன் வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின்

இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ,
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன், கடன் அறிந்து இயக்க,
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ,
துனிகூர் எவ்வமொடு, துயர் ஆற்றுப்படுப்ப,
முனிவு இகந்து இருந்த, முதுவாய் இரவல

சேர நாட்டின் வளமை(41-60)

கொழுமீன் குறைய ஒதுங்கி, வள் இதழ்க்
கழுநீர் மேய்ந்த கய வாய் எருமை,
பைங்கறி நிவந்த பலவின் நீழல்,
மஞ்சள் மெல் இலை மயிர்ப் புறம் தைவர,
விளையா இளங்கள் நாற, மெல்குபு, பெயரா,
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குட புலம் காவலர் மருமான், ஒன்னார்
வட புல இமயத்து வாங்கு வில் பொறித்த,
எழு உறழ் திணி தோள், இயல் தேர்க் குட்டுவன்,
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே, அதாஅன்று

பாண்டிய நாட்டின் பெருமை(51-67)

நறவுவாய் உறைக்கும் நாகு முதிர் நுணவத்து
அறைவாய்க் குறுந்துணி அயில் உளி பொருத,
கை புனை செப்பம் கடைந்த மார்பின்,
செய்பூங் கண்ணி செவி முதல் திருத்தி,
நோன் பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி, மடவோர்
நகாஅர் அன்ன நளி நீர் முத்தம்,
வாள் வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி,
தோள் புற மறைக்கும் நல்கூர் நுசுப்பின்
உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர் பூண் புதல்வரொடு, கிலுகிலி ஆடும்
தத்து நீர் வரைப்பின் கொற்கைக் கோமான்,

தென் புலம் காவலர் மருமான், ஒன்னார்
மண் மாறு கொண்ட மாலை வெண்குடை
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்,
தமிழ் நிலைபெற்ற தாங்கு அரு மரபின்,
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே, அதாஅன்று

சோழ நாட்டின் பெருமை(68-83)

நறு நீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
துறு நீர்க் கடம்பின் துணை ஆர் கோதை,
ஓவத்து அன்ன உண் துறை மருங்கில்,
கோவத்து அன்ன கொங்கு சேர்பு உறைத்தலின்
வருமுலை அன்ன வண்முகை உடைந்து
திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை,
ஆசு இல் அங்கை அரக்குத் தோய்ந்தன்ன,
சேயிதழ் பொதிந்த செம் பொற்கொட்டை,
ஏம இன் துணை தழீஇ, இறகு உளர்ந்து
காமரு தும்பி காமரம் செப்பும்
தண் பணை தழீஇய தளரா இருக்கை,
குணபுலம் காவலர் மருமான், ஒன்னார்
ஓங்கு எயில் கதவம் உருமுச்சுவல் சொறியும்
தூங்கு எயில் எறிந்த தொடி விளங்கு தடக்கை,
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்,
ஓடாப் புட்கை உறந்தையும் வறிதே, அதாஅன்று

கடையெழு வள்ளல்களின் சிறப்பு(84-

பேகன்

வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும் (84-87)

பாரி

...............சுரும்பு உண
நறு வீ உறைக்கும் நாக நெடுவழிச்

சிறு வீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும்

காரி

……………………… கறங்கு மணி
வால் உளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நல் மொழி இரவலர்க்கு ஈந்த,
அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல் தொடித் தடக் கை காரியும்

ஆய் அண்டிரன்

…………… நிழல் திகழ்
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவம் தாங்கிய சாந்து புலர் திணிதோள்
ஆர்வ நன் மொழி ஆயும்

அதிகன்

……………………….. மால் வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்து விளை தீம் கனி ஔவைக்கு ஈந்த,
உரவுச் சினம் கனலும் ஒளி திகழ் நெடுவேல்
அரவக்கடல் தானை அதிகனும்

நள்ளி

…………………………. கரவாது

நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம்
முட்டாது கொடுத்த முனை விளங்கு தடக்கை,
துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங்கோட்டு
நளி மலை நாடன் நள்ளியும்

ஓரி

…………………….. நளி சினை
நறும் போது கஞலிய நாகு முதிர் நாகத்துக்
குறும் பொறை நல் நாடு கோடியர்க்கு ஈந்த,
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும்
……………………. என ஆங்கு
எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள்

நல்லியக்கோடனின் ஈகைச்சிறப்பு(113-125)

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்,
விரிகடல் வேலி வியலகம் விளங்க,
ஒரு தான் தாங்கிய உரனுடை நோன் தாள்
நறு வீ நாகமும், அகிலும், ஆரமும்,
துறை ஆடு மகளிர்க்குத் தோள் புணை ஆகிய,
பொரு புனல் தரூஉம் போக்கறு மரபின்,
தொல் மா இலங்கைக் கருவொடு பெயரிய,
நல் மா இலங்கை மன்னருள்ளும்,
மறு இன்றி விளங்கிய வடு இல் வாய்வாள்
உறு புலித் துப்பின் ஓவியர் பெருமகன்,
களிற்றுத் தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்து அடி
பிடிக்கணம் சிதறும் பெயல் மழைத் தடக்கை
பல் இயக் கோடியர் புரவலன்

பரிசுப் பெற்றபாணன் மன்னனைப் பாடிச் சென்றமை(126-129)

………………………………..பேர் இசை
நல்லியக்கோடனை நயந்த கொள்கையொடு,
தாங்கரு மரபின், தன்னும், தந்தை
வான் பொரு நெடு வரை வளனும் பாடி,
முன் நாள் சென்றனம் ஆக (125-129)

நல்லியக்கோடனைக் காணுமுன்இருந்த வறுமை நிலை(130-140)

……………….. இந்நாள்

திறவாக் கண்ண சாய் செவிக் குருளை,
கறவாப் பால் முலை கவர்தல் நோனாது,
புனிற்று நாய் குரைக்கும், புல்லென் அட்டில்
காழ் சோர் முது சுவர்க் கணச் சிதல் அரித்த
பூழி பூத்த புழல் காளாம்பி,
ஒல்கு பசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல்,
வளைக் கை கிணைமகள், வள் உகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை,
மடவோர் காட்சி நாணிக் கடை அடைத்து,
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்,
அழி பசி வருத்தம் வீட…………

நல்லியக்கோடன் வள்ளன்மை(141-143)

…………………. பொழி கவுள்
தறுகண் பூட்கைத் தயங்கு மணி மருங்கின்
சிறுகண் யானையொடு, பெருந்தேர் எய்தி,
யாம் அவண் நின்றும் வருதும்.

பாணனின் ஆற்றுப்படுத்தும் பண்பு(143-145)

……………………… நீயிரும்
இவண் நயந்து இருந்த இரும்பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு செல்குவிர் ஆயின்

எயிற்பட்டினத்திற்குச் செல்லும் வழியும் பரதவர் தரும் விருந்தும்(146-163)

அலை நீர்த் தாழை அன்னம் பூப்பவும்,
தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்,
கடுஞ்சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும்,
நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்,
கானல் வெண் மணல் கடல் உலாய் நிமிர்தர,
பாடல் சான்ற நெய்தல் நெடு வழி
மணி நீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனி நீர்ப் படுவின் பட்டினம் படரின்
ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன,

வீங்கு திரை கொணர்ந்த விரை மர விறகின்,
கரும் புகைச் செந்தீ மாட்டிப், பெருந்தோள்
மதி ஏக்கறூஉம் மாசு அறு திருமுகத்து
நுதி வேல் நோக்கின் நுளைமகள் அரித்த
பழம் படு தேறல் பரதவர் மடுப்ப,
கிளை மலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்,
தளை அவிழ் தெரியல் தகையோற் பாடி
அறல் குழல் பாணி தூங்கியவரொடு,
வறல் குழல் சூட்டின் வயின்வயின் பெறுகுவீர்

வேலூர் செல்லும் வழியும் எயினர் தரும் விருந்தும்(164-195)

பைந்நனை அவரை பவழம் கோப்பவும்,
கரு நனைக் காயா கண மயில் அவிழவும்,
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்,
செழுங்குலைக் காந்தள் கை விரல் பூப்பவும்,
கொல்லை நெடு வழிக் கோபம் ஊரவும்,
முல்லை சான்ற முல்லை அம் புறவின்
விடர் கால் அருவி வியன் மலை மூழ்கிச்
சுடர் கால் மாறிய செவ்வி நோக்கித்
திறல் வேல் நுதியின் பூத்த கேணி,
விறல் வேல் வென்றி வேலூர் எய்தின்
உறுவெயிற்கு உலைஇய உருப்பு அவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ்சோறு,
தேமா மேனி சில் வளை ஆயமொடு,
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்
ஆமூர் வளமும் உழத்தியரின் விருந்தோம்பலும்
நறும் பூங்கோதை தொடுத்த நாட் சினைக்
குறுங்கால் காஞ்சிக் கொம்பர் ஏறி,
நிலை அரும் குட்டம் நோக்கி நெடிது இருந்து,
புலவுக் கயல் எடுத்த பொன் வாய் மணிச்சிரல்,
வள் உகிர் கிழித்த வடு ஆழ் பாசடை,
முள் அரைத் தாமரை முகிழ் விரி நாட் போது
கொங்கு கவர் நீலச் செங்கண் சேவல்,

மதி சேர் அரவின் மானத் தோன்றும்,
மருதம் சான்ற மருதத் தண் பணை,
அந்தணர் அருகா அருங்கடி வியன் நகர்,
அம் தண் கிடங்கின் அவன் ஆமூர் எய்தின்
வலம்பட நடக்கும் வலி புணர் எருத்தின்
உரன் கெழு நோன் பகட்டு உழவர் தங்கை,

பிடிக்கை அன்ன பின்னு வீழ் சிறுபுறத்துத்
தொடிக் கை மகடூஉ, மகமுறை தடுப்ப,
இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த
அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்.

நல்லியக்கோடனின் ஊர்ச்சிறப்பும்அதன் அண்மையும்(196-202)

எரி மறிந்தன்ன நாவின், இலங்கு எயிற்றுக்
கரு மறிக் காதின், கவை அடிப் பேய் மகள்,
நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல,
பிணன் உகைத்துச் சிவந்த பேர் உகிர் பணைத்தாள்
அண்ணல் யானை அருவி துகள் அவிப்ப,
நீறு அடங்கு தெருவின், அவன் சாறு அயர் மூதூர்
சேய்த்தும் அன்று, சிறிது நணியதுவே

நல்லியக்கோடனின் அரண்மனை வாயில்(203-206)

பொருநர்க்கு ஆயினும், புலவர்க்கு ஆயினும்,
அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்,
கடவுள் மால் வரை கண்விடுத்தன்ன,
அடையா வாயில் அவன் அருங்கடை குறுகி,

சான்றோர் புகழ்தல்(207-209

செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்,
இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்,

செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த

மறவர் போற்றல்(210-212)

அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ்சினம் இன்மையும்,
ஆண் அணி புகுதலும், அழிபடை தாங்கலும்,
வாள் மீக்கூற்றத்து வயவர் ஏத்த

மகளிர் வாழ்த்துதல்(213-215)

கருதியது முடித்தலும், காமுறப்படுதலும்,
ஒருவழிப் படாமையும், ஓடியது உணர்தலும்,
அரி ஏர் உண்கண் அரிவையர் ஏத்த

பரிசிலர் ஏத்தல் (216-218)

அறிவு மடம் படுதலும், அறிவு நன்கு உடைமையும்,
வரிசை அறிதலும், வரையாது கொடுத்தலும்,
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த

## நல்லியக்கோடன் அவையில் வீற்றிருக்கும் காட்சி(219-220)

பன் மீன் நடுவண் பால்மதி போல
இன்நகை ஆயமொடு இருந்தோற் குறுகி

## யாழ் வாசிக்கும் முறை(221-230)

பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன,
அம் கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்,
மணி நிரைத்தன்ன வனப்பின் வாய் அமைத்து,
வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து,
கானக் குமிழின் கனி நிறம் கடுப்ப,
புகழ் வினைப் பொலிந்த பச்சையொடு, தேம் பெய்து,
அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்கு புரி நரம்பின்,
பாடு துறை முற்றிய பயன் தெரி கேள்விக்
கூடு கொள் இன் இயம் குரல் குரல் ஆக,
நூல் நெறி மரபின், பண்ணி ஆனாது

## மன்னனைப் புகழ்ந்து பாடும் தன்மை(231-235)

முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்,
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்,
ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்,
தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்,
நீ சில மொழியா அளவை……………..

### மன்னன் இரவலரை உபசரிக்கும் பாங்கு(236-245)

………………மாசில்
காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇப்,
பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி,
கா எரியூட்டிய கவர் கணைத் தூணிப்
பூ விரி கச்சைப் புகழோன் தன் முன்
பனி வரை மார்பன் பயந்த நுண் பொருள்
பனுவலின், வழாஅப் பல் வேறு அடிசில்
வாள் நிற விசும்பிற் கோள்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து,
விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி

### நல்லியக்கோடன் அளிக்கும் பரிசுப் பொருட்கள்(246-261)

திறல் சால் வென்றியொடு, தெவ்வுப் புலம் அகற்றி,
விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி,
நயவர் பாணர் புன்கண் தீர்த்த பின்,
வயவர் தந்த வான் கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பால் கதிர் பரப்பி
உருவ வான் மதி ஊர் கொண்டாங்கு,
கூர் உளி பொருத வடு ஆழ் நோன் குறட்டு
ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு,
சிதர் நனை முருக்கின் சேண் ஓங்கு நெடுஞ்சினைத்
ததர் பிணி அவிழ்ந்த தோற்றம் போல,
உள் அரக்கு எறிந்த உருக்குறு போர்வை,

கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி,
ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடைப் பாகரொடு
மா செலவு ஒழிக்கும் மதனுடை நோன் தாள்
வாள் முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசில்

## நல்லியக்கோடனின் புகழும் மாட்சியும்(262-269)

……………………………… மென் தோள்
துகில் அணி அல்குல் துளங்கு இயல் மகளிர்,
அகில் உண விரித்த அம் மென் கூந்தலின்
மணி மயில் கலாபம் மஞ்சு இடைப் பரப்பி,
துணி மழை தவழும் துயல் கழை நெடுங்கோட்டு,
எறிந்து உரும் இறந்து ஏற்று அருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான், கொய் தளிர்க் கண்ணி
செல் இசை நிலைஇய பண்பின்
நல்லியக்கோடனை நயந்தனிர் செலினே. (261-269)



பாடற்பொருளுரை:

### நிலமகளின் தோற்றம்:1-6

மணி மலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணி முலைத் துயல்வரூஉம் ஆரம் போல,
செல்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்று. (1–3)
கொல் கரை நறும் பொழில் குயில் குடைந்து உதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடி, புடை நெறித்து,
கதுப்பு விரித்தன்ன காழ் அக நுணங்கு அறல். (4-6)

மூங்கிலாகிய தோள்களையுடைய பெரிய நிலமகளின் நீலமணிகளையுடைய மலையாகிய மார்பில், அசையும் முத்து மாலையைப் போல அசைந்து, மலையை வருத்தி ஓடுகின்றது தொலைவிலிருந்து வரும் காட்டு ஆறு.ஆற்றின் நீரினால் இடிக்கப்படும் கரையில் உள்ள நறுமணமுடைய சோலையில் உள்ள குயில்கள் தங்கள் அலகினால் குத்திக் கீழே உதிர்த்த புதிய வாடல் மலர்களைச் சூடிய, பக்கங்கள் சுருண்ட நிலமகளின் கூந்தல் விரிந்திருப்பது போல இருந்தது கருமையான நுண்ணிய மணல்.

### இளைப்பாறும் பாணன்:7-12

அயில் உருப்பு அனைய ஆகி ஐது நடந்து
வெயில் உருப்புற்ற வெம்பரல் கிழிப்ப,
வேனில் நின்ற வெம்பத வழி நாள்,
காலை ஞாயிற்றுக் கதிர் கடா உறுப்ப,
பாலை நின்ற பாலை நெடு வழி,
சுரன் முதல் மராஅத்த வரி நிழல் அசைஇ, (7-12)

இரும்பில் உள்ள வெப்பத்தைப் போன்ற சூட்டையுடைய பரல் கற்கள் தங்கள் கால்களைக் கிழித்ததால், மெல்ல நடந்து சென்று, முதுவேனில் காலத்தின் வெப்பமான காலை நேரத்தில், காலைக் கதிரவன் தன் கதிர்களால் வெப்பத்தைச் செலுத்த, பாலைத் தன்மையைக் கொண்ட நீண்ட பாலை வழியையுடைய சுரத்தில் உள்ள கடம்ப மரத்தின் வரிகளாக உள்ள நிழலில் தங்கி,

அருஞ்சொற்பொருள் : ஐது - மென்மை, கடாவுறுப்ப - செலுத்துதலைச் செய்ய, அசைஇ - தங்கி.

### விறலியரின் அழகு:13-33

ஐது வீழ் இகு பெயல் அழகு கொண்டு அருளி,
நெய் கனிந்து இருளிய கதுப்பின், கதுப்பு என

மணிவயின் கலாபம் பரப்பி பலவுடன்
மயில் மயில் குளிக்கும் சாயல், சாஅய்
உயங்கு நாய் நாவின் நல் எழில் அசைஇ,
வயங்கு இழை உலறிய அடியின், அடி தொடர்ந்து
ஈர்ந்து நிலம் தோயும் இரும் பிடித் தடக் கையின்
சேர்ந்து உடன் செறிந்த குறங்கின், குறங்கு என
மால் வரை ஒழுகிய வாழை, வாழைப்
பூ எனப் பொலிந்த ஓதி
ளிச்சினை வேங்கை நாள் மலர் நச்சி
களிச் சுரும்பு அரற்றும் சுணங்கின், சுணங்கு பிதிர்ந்து
யாணர்க் கோங்கின் அவிர் முகை எள்ளிப்
பூண் அகத்து ஒடுங்கிய வெம்முலை, முலை என
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன் சேறு இகுதரும் எயிற்றின், எயிறு என
குல்லை அம் புறவில் குவி முகை அவிழ்ந்த,
முல்லை சான்ற கற்பின், மெல் இயல்,
மட மான் நோக்கின், வாணுதல் விறலியர்
நடை மெலிந்து அசைஇய நல்மென் சீறடி,
கல்லா இளையர் மெல்லத் தைவரப் (33)

எண்ணெய் பூசப்பெற்ற, கருமையான மென்மையான கூந்தல், மழை பெய்யும் மேகம் போன்ற அழகைக் கொண்டிருந்தது. அக்கூந்தல் போன்ற கருந்தோகைகளைப் பரப்பி ஆடும் ஆண் மயில்கள், விறலியின் சாயலுக்குத் தாம் ஒப்பாகவில்லையே எனக் கருதி பெண் மயில்களின் நிழலில் மறையும். ஓடி இளைத்த நாயின் நாக்குப் போன்ற அழகிய மென்மையான அணிகள் இல்லாத பாதங்கள். அவ்வடியைத் தொடர்ந்து மேலே செல்லும் பெண்யானையின் நிலம் தோயும் துதிக்கை போன்ற திரண்ட செறிவான தொடைகள். தொடைபோன்ற மலை வாழையின் பூப்போன்ற கூந்தல் முடிச்சு. கூந்தல் முடிச்சியின் கீழ் வேங்கை மலர் போன்ற சுணங்கு. அச்சுணங்கினை வேங்கையின் நாள்மலர் எனக் கருதி விரும்பி ஆரவாரிக்கும் வண்டுகள். சுணங்கு, சிதறிக்கிடந்தாற் போன்ற புதிய கோங்கின் மொட்டுக்களை இகழ்ந்து நகையாடும் தோற்றத்தினையுடைய அணிகலன்களின் அடியில் கிடக்கும் விரும்பத் தகுந்த முதலைகள். முலை போன்ற வளமை பொருந்திய பனை நுங்குகள். நுங்குகளின் இனிய நீர் ஊறும் தன்மை வாய்ந்த பற்கள். பற்கள் போன்ற கஞ்சங்குல்லைக் காட்டில் வளர்ந்த முல்லை மொட்டுக்கள், அவிழ்ந்த நிலையுடைய கற்பு. மென்மையான இயல்பினையுடையர். மான்போன்ற பார்வையர். ஒளி பொருந்திய நெற்றினையுடைய விறலியர். தம் நடையால்

மெலிந்து ஓய்ந்த மென்மையான சிறிய அடிகளை, கல்வி கற்காத இளைய வயதினர் மெல்லத் தடவி கொடுத்தனர்.

அருஞ்சொற்பொருள் : இகு - வீழ்தல், பெயர் - மேகம், கதுப்பு - கூந்தல், சாஅய் - ஓடி இளைத்து, உயங்கு - வருந்தும், இழை - ஆபரணம், வயங்கு - விளங்கும், குறங்கு - தொடை, சுரும்பு - வண்டு, சுணங்கு - உடலில் தோன்றும் அழகு, கோங்கு - மரம், முகை - மொட்டு, பெண்ணை - பனை, புறவு - காடு.

## பரிசில் பெற்ற பாணன் குடும்பத்துடன் வந்த பாணனைச் சந்தித்தல்:34-40

பொன் வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ,
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன், கடன் அறிந்து இயக்க,
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ,
துனிகூர் எவ்வமொடு, துயர் ஆற்றுப்படுப்ப,
முனிவு இகந்து இருந்த, முதுவாய் இரவல (34-40)

பொற்கம்பிகளை நீட்டினாற்போல உள்ள முறுக்கின நரம்பின் இனிய ஓசையையுடைய சிறிய யாழை இடது பக்கமாகத் தழுவி, நட்டப்பாடை என்னும் பண் நிறைந்த இனிமை தெரிகின்ற பாலை யாழை இயக்குதல் தெரிந்த முறைமையை அறிந்து, அசையாத உலகத்தில் பரிசில் தருவாரை விரும்பி, வள்ளல்கள் இல்லாததால் வெறுப்பு மிக்க வருத்தத்துடன் பாணன் இயங்க, வறுமைத் துயரம் உன்னைக் கொண்டு போவதால், வழி வருத்தம் தீர்ந்திருந்த, பேரறிவு உடைய பரிசில் நாடுபவனே, நான் கூறுவதைக் கேட்பாயாக!

அருஞ்சொற்பொருள் : நைவளம் - நட்டபாடை என்னும் பண், பாலை - பாலைப் பண், வள்ளியோர் - வள்ளல் தன்மையுடையோர், நசைஇ - விரும்பி, எவ்வகை - துன்பம், முதுவாய் - பேரறிவு.

## சேர நாட்டின் வளமை:41-50

கொழுமீன் குறைய ஒதுங்கி, வள் இதழ்க்
கழுநீர் மேய்ந்த கய வாய் எருமை,
பைங்கறி நிவந்த பலவின் நீழல்,
மஞ்சள் மெல் இலை மயிர்ப் புறம் தைவர,
விளையா இளங்கள் நாற, மெல்குபு, பெயரா,
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும் (41-46)
குட புலம் காவலர் மருமான், ஒன்னார்
வட புல இமயத்து வாங்கு வில் பொறித்த,

எழு உறழ் திணி தோள், இயல் தேர்க் குட்டுவன்,

வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே, அதாஅன்று (47-50)

சேரரின் தலைநகரம் வஞ்சி. மிகுதியான நீர்வளம் உடையது. கொழுத்த மீன்கள் நீர் நிலைகளில் உள்ளன. பெரிய வாயையுடைய எருமைகள் நீர் நிலைகளில் உள்ள கழுநீர்ப் பூக்களைத் தின்னச்செல்லும்போது அவற்றின் காலடியில் பட்டு மீன்கள் துண்டு துண்டாகின்றன. எருமைகள் காட்டு மல்லிகைக் கொடிப்படுக்கையில் படுத்துக் கொண்டு தான் தின்ற உணவை அசைபோடுகின்றன. அசைபோடும் போது இளம் தேன் மணம் வருகின்றது. மிளகுக் கொடிகள் படர்ந்த பலா மரத்தின் நிழலிலுள்ள மஞ்சள் செடியின் இலைகள் எருமைகளின் முதுகைத் தடவுகின்றன. மேற்கு நாட்டு அரசர் குளத்தில் தோன்றிய குட்ட நாட்டு அரசன் குட்டுவன் தன் ஆற்றலால் வடநாட்டுப் பகைவரை வென்று, இமய மலையில் தன் வில்கொடியைப் பொறித்துள்ளான். கணையமரத்தைப் போன்ற திண்மையான தோள்களை உடையவன் அவன். அவன் தலைநகராகிய வஞ்சி மாநகர் சென்றாலும் அங்குக் கிடைக்கும் பரிசில் சிறியதுதான். அதுமட்டுமில்லை.

அருஞ்சொற்பொருள் : ஒதுங்கி - நடந்து, கயம் - பெரிய, கறி - மிளகு,மெல்புகு - அசை போடுதல், குளவி - காட்டு மல்லிகை, குட - மேற்கு, ஒன்னார் - பகைவர், எழு - கணையமரம்.

## பாண்டிய நாட்டின் பெருமை:51-67

நறவுவாய் உறைக்கும் நாகு முதிர் நுணவத்து

அறைவாய்க் குறுந்துணி அயில் உளி பொருத,

கை புனை செப்பம் கடைந்த மார்பின்,

செய்பூங் கண்ணி செவி முதல் திருத்தி,

நோன் பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த (51-55)

மலர்கள் தேனைச் சொட்டும் இளமை முதிர்ந்த நுணா மரத்தினது வெட்டின சிறிய மரக்கட்டைத் துண்டுகளில், இரும்பு உளியால் குடைந்து கையினால் செம்மையாகக் கடைந்து செய்த மாலையை மார்பில் அணிந்தும், நெட்டியால் செய்யப்பட்ட மாலையைச் செவி அடியில் சூடி, வலிமையான காளைகளையுடைய உப்பு வணிகருடைய வண்டியுடன் வந்த,

மகாஅர் அன்ன மந்தி, மடவோர்

நகாஅர் அன்ன நளி நீர் முத்தம்,

வாள் வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி,

தோள் புற மறைக்கும் நல்கூர் நுசுப்பின்

உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற

கிளர் பூண் புதல்வரொடு, கிலுகிலி ஆடும் (56-61)

பிள்ளைகளைப் போன்ற பெண் குரங்கு ஒன்று, மடப்பத்தையுடைய மகளிரின் பற்களை ஒத்த, செறிந்த அழகான முத்துக்களை உள்ளே அடக்கிய, வாளின் வாயைப் போன்ற வாயையுடைய கிளிஞ்சலை, நுண்ணிய இடையையும், பின்புறத்தை மறைக்கின்ற அசையும் ஐந்து பகுதியாகப் பிரிக்கப்பட்ட கூந்தலையுமுடைய உப்பு வணிகரின் மனைவி பெற்ற, விளங்குகின்ற அணிகலன்களை அணிந்த புதல்வர்களுடன், கிலுகிலுப்பை ஆகக் கொண்டு விளையாடும்.

> தத்து நீர் வரைப்பின் கொற்கைக் கோமான்,
> தென் புலம் காவலர் மருமான், ஒன்னார்
> மண் மாறு கொண்ட மாலை வெண்குடை
> கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்,
> தமிழ் நிலைபெற்ற தாங்கு அரு மரபின்,
> மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே, அதாஅன்று (62-67)

நிறைந்த நீரை எல்லையாகவுடைய கொற்கையின் மன்னன், தென்னாட்டின் மன்னர் குடியைச் சேர்ந்தவன், பகைவரின் நிலங்களைக் கொண்டவன், முத்து மாலையை அணிந்தவன், வெண்குடை உடையவன், கண்ணுக்கு அழகாகத் தோன்றும் மலர்ச்சரத்தை அணிந்தவன், விரைந்து செல்லும் தேரையுடைய பாண்டியனின் தமிழ் வீற்றிருந்த, பொறுத்தற்கு அரிய மரபையுடைய, மகிழ்வைத் தருகின்ற தெருக்களையுடைய மதுரையில் பெறும் பரிசும் சிறிதே.

அருஞ்சொற்பொருள் : நறவு - தேன், நுணவுத்து - நுணா மரம், அயில் - இரும்பு, நோன் - வலிமை, பகடு - காளை, உமணர் - உப்பு விற்போர், மந்தி - பெண் குரங்கு, எருந்து - கிழிஞ்சல், கிலுகிலு - கிலுகிலுப்பை.

## சோழ நாட்டின் பெருமை:68-83

> நறு நீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
> துறு நீர்க் கடம்பின் துணை ஆர் கோதை,
> ஓவத்து அன்ன உண் துறை மருங்கில்,
> கோவத்து அன்ன கொங்கு சேர்பு உறைத்தலின் (68-71)

நறுமணமான நீரையுடைய பொய்கையின் அடைத்த கரையில் நிற்கும் செறிந்த தன்மையை உடைய கடம்ப மரத்தின் இணைதல் நிறைந்த மாலையைப் போன்று பூத்த மலர்களின், இந்திரகோபத்தைப் போன்று தோன்றும் மலர்த் தாது உதிர்ந்ததால், காண்பதற்கு ஓவியத்தைப் போன்று உள்ள குடிக்கும் நீரையுடைய துறையின் அருகில்,

> வருமுலை அன்ன வண்முகை உடைந்து
> திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை,
> ஆசு இல் அங்கை அரக்குத் தோய்ந்தன்ன,

சேயிதழ் பொதிந்த செம் பொற்கொட்டை,
ஏம இன் துணை தழீஇ, இறகு உளர்ந்து
காமரு தும்பி காமரம் செப்பும் (72-77)

எழுகின்ற முலையை ஒத்த பெரிய அரும்பு நெகிழ்ந்து அழகிய முகம் போல மலர்ந்த தெய்வத் தன்மையுடைய தாமரை, குற்றமில்லாத உள்ளங்கையில் அரக்கைத் தோய்த்தாற்போல் உள்ள சிவந்த இதழ்கள் சூழ்ந்த, செம்பொன்னால் செய்தாற்போல் உள்ள நடுப்பகுதியின் மீது, தன்னுடைய இன்பமான இனிய துணையைத் தழுவி, சிறகை அசைத்து விருப்பமுடைய ஆண் தும்பிகள் சீகாமரப் பண்ணை இசைக்கும்.

தண் பணை தழீஇய தளரா இருக்கை,
குணபுலம் காவலர் மருமான், ஒன்னார்
ஓங்கு எயில் கதவம் உருமுச்சுவல் சொறியும்
தூங்கு எயில் எறிந்த தொடி விளங்கு தடக்கை,
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்,
ஓடாப் புட்கை உறந்தையும் வறிதே, அதாஅன்று (78-83)

மருத நிலம் சூழ்ந்த நிலையான குடியிருப்பையுடைய கிழக்கின்கண் உள்ள நிலத்தின் மன்னர் குடியில் பிறந்தவன். இடி தன்னுடைய கழுத்தினால் உரசும் கதவையுடைய பகைவரின் உயர்ந்த தொங்கும் கோட்டையை அழித்தவன் சோழன். ஒளியுடைய கடகம் அணிந்த பெரிய கைகள் உடையவன். தான் தேடாது அடைந்த நல்ல புகழையுடையவன். நல்ல தேர்களையுடைய சோழனின் குடிமக்கள் நாட்டை விட்டு விலகாத சோழ நாட்டின் உறந்தையில் கிடைக்கும் பரிசும் சிறிதே. அது மட்டும் அல்ல,

அருஞ்சொற்பொருள்: கோவம் - இந்திரகோபப் பூச்சி, ஏமம் - காவல், காமரம் - ஒரு வகை பண், பூட்கை வலிமை.

## கடையெழு வள்ளல்களின் சிறப்பு: 82-118

### பேகன்

வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும் (84-87)

மலைநாட்டையுடையவன் பேகன். மழைவளம் வாய்ந்த மலை. மலைப் பக்கத்தில் மயில் ஆடி அகவியது. மயில் குளிரால் நடுங்கிக் கூவுவதாகக் கருதி அம்மயிலின் குளிரைப் போக்கத் தன் போர்வையைத் தந்தான் பேகன். ஆவியர் குலத்தில் தோன்றியவன். அரிய ஆற்றலும் அழகினையும் உடையவன்.

அருஞ்சொற்பொருள்: வானம் - மழை, மஞ்ஞை - மயில், கலிங்கம் -ஆடை, போர்வை.

### பாரி

……………சுரும்பு உண
நறு வீ உறைக்கும் நாக நெடுவழிச்
சிறு வீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும் (87 – 91)

பறம்பு மலைக்குத் தலைவன் பாரி. பல அருவிகள் விழும் வளமுடையது அம்மலை. சுரப்புன்னையும் முல்லைக் கொடிகளையும் உடையது அம்மலை. வண்டுகள் உண்ணும் தேன் பிலிற்றுகின்ற சிறிய மலர்களை உடைய முல்லைக் கொடி கொழு கொம்பு இன்றிப் படரத் தவித்தது. தன் பெரிய தேரையே அக்கொடி படரக் கொடிதான் பாரி.

அருஞ்சொற்பொருள் : சுரும்பு - வண்டு, வீ - பூ, நாகம் - சுரப்புன்னை.

### காரி

……………………… கறங்கு மணி
வால் உளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நல் மொழி இரவலர்க்கு ஈந்த,
அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல் தொடித் தடக் கை காரியும் (91-95)

ஒலிக்கும் மணிகளையுடைய வெள்ளைப் பிடரி மயிரையுடைய குதிரைகளுடன், உலகத்தோர் வியக்கும்படி, அன்பான நல்ல சொற்களைப் பொருள் வேண்டி வருபவர்களுக்கு அளிப்பவனும், சினம் மிகுந்த சிறப்புடைய அச்சத்தை உண்டாக்கும் பெரிய வேலினை உடையவனும், சுழல இட்ட கடிகைகளையுடைய (வளையல்களையுடைய) பெரிய கைகளையுடைய காரியும்,

அருஞ்சொற்பொருள் : வால் - வெண்மை, உளை - பிடரி மயிர், புரவி - குதிரை.

### ஆய் அண்டிரன்

…………… நிழல் திகழ்
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவம் தாங்கிய சாந்து புலர் திணிதோள்
ஆர்வ நன் மொழி ஆயும் (95-99)

வில்லைத் தாங்கிய சந்தனம் பூசிய திண்மையான தோள்களை உடையவன். நற்சொற்களை விரும்பிப் பேசுபவன். கல்லால நிழலில் இருந்த இறைவன் சிவனுக்கு, மகிழ்வோடு நாகம் ஈன்ற நீலமணியையும் ஆடையையும் கொடுத்தவன்.

அதிகன்

………………………….. மால் வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்து விளை தீம் கனி ஔவைக்கு ஈந்த,
உரவுச் சினம் கனலும் ஒளி திகழ் நெடுவேல்
அரவக்கடல் தானை அதிகனும் (99-103)

உயர்ந்த மலையின் கமழும் பூக்களையுடைய மலைச் சரிவில் உள்ள அழகான அமிர்தமாகிய, விளைந்த இனிய நெல்லிக்கனியை, ஔவைக்குக் கொடுத்தவனும், வலிமை உடைய சினம் நின்று எரியும் பெரிய வேலையும், ஒலிக்கும் கடலைப் போன்ற படையை உடையவனுமாகிய அதிகனும்,

அருஞ்சொற்பொருள் : மால் - பெருமை, சாரல் - பக்கமலை, உரவு - வலிமை, அரவம் - ஆரவாரம்.

நள்ளி

……………………………. கரவாது
நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம்
முட்டாது கொடுத்த முனை விளங்கு தடக்கை,
துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங்கோட்டு
நளி மலை நாடன் நள்ளியும் (103-107)

தங்கள் மனதில் உள்ளதை மறைக்காது, தன்னிடம் அன்புடன் இருப்பவர்களுக்கு அவர்கள் வாழ்க்கையை இடையூறு இல்லாது நன்றாக வாழ்வதற்காக எல்லையில்லாதுப் பொருட்களைக் கொடுத்தவனும், போரில் வெற்றி பெற்ற பெரிய கைகளையுடையவனும், துளியையுடைய மழை பொய்யாது பொழியும், காற்றுத் தங்கும் உயர்ந்த உச்சிகள் கொண்ட அடர்ந்த மலைகளையுடைய நாட்டையுடைய நள்ளியும்,

அருஞ்சொற்பொருள் : முட்டாது - குறையாது.

ஓரி

……………………….. நளி சினை
நறும் போது கஞலிய நாகு முதிர் நாகத்துக்
குறும் பொறை நல் நாடு கோடியர்க்கு ஈந்த,
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த

ஓரிக் குதிரை ஓரியும்என ஆங்கு

எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள் (111-112)

அடர்ந்த கிளைகளில் நறுமணமான மலர்கள் நெருங்கி இருந்த இளமை முதிர்ந்த சுரபுன்னை மரங்களையும் சிறிய மலைகளையும் உடைய நிலங்களைக் கூத்தாடுபவர்களுக்குக் கொடுத்தவனும், காரி என்ற பெயரையுடைய குதிரையையுடைய காரி என்பவனோடு போரிட்டவனும், ஓரி என்ற பெயரையுடைய குதிரையையுடைய ஓரியும்,என அந்த ஏழு பேர், எழுந்த போர்களில் வெற்றி அடைந்தவர்கள், கணைய மரம் போன்ற திண்மையான தோள்களை உடையவர்கள்.

அருஞ்சொற்பொருள் : கோடியர் - கூத்தாடுவோர், பொறை - சிறிய குன்றுகள்.

நல்லியக்கோடனின் ஈகைச்சிறப்பு:113-125

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்,

விரிகடல் வேலி வியலகம் விளங்க,

ஒரு தான் தாங்கிய உரனுடை நோன் தாள் (113-115)

அக்கடையெழு வள்ளல்கள் மேற்கொண்ட ஈகையாகிய பாரத்தை, பரந்த கடலை வேலியாகக் கொண்ட அகன்ற உலகம் தழைக்க, ஒருவனாகத் தானே தாங்கிய வலிமையுடைய முயற்சியை உடையவன் நல்லியக்கோடன்.

நறு வீ நாகமும், அகிலும், ஆரமும்,

துறை ஆடு மகளிர்க்குத் தோள் புணை ஆகிய,

பொரு புனல் தரூஉம் போக்கறு மரபின்,

தொல் மா இலங்கைக் கருவொடு பெயரிய,

நல் மா இலங்கை மன்னருள்ளும், 120

மறு இன்றி விளங்கிய வடு இல் வாய்வாள்

உறு புலித் துப்பின் ஓவியர் பெருமகன்,

களிற்றுத் தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்து அடி

பிடிக்கணம் சிதறும் பெயல் மழைத் தடக்கை

பல் இயக் கோடியர் புரவலன் (116-125)

நறுமணமுடைய மலர்களை உடைய சுரபுன்னை, அகில், சந்தனம் ஆகிய மரங்களின் துண்டுகளை நீராடும் துறையில் உள்ள பெண்களின் தோள்களுக்குத் தெப்பமாகக் கொண்டு வந்து தரும், கரையை இடிக்கின்ற ஆற்றினையுடைய, தொன்மையான பெருமைமிக்க இலங்கையின் பெயரை, நகரம் தோன்றிய பொழுதில் இருந்து கொண்ட, அழித்தற்கு அரிய மரபை உடைய, மாவிலங்கையின் சிறந்த மாவிலங்கை மன்னர்கள் பலருள்ளும் மறு இல்லாது விளங்கும், பழியில்லாத குறியைத் தப்பாத வாளினையுடைய, புலியைப் போன்ற

மிகுந்த வலிமையுடையவன் அவன். ஓவியர் குடியில் பிறந்த பெருமான். களிற்றைச் செலுத்தியதால் ஏற்பட்ட தழும்பு உடைய அசையும் வீரக் கழல்களை அணிந்த திருத்தமான அடிகளையும், பெண் யானைகளை வாரி வழங்கும் மழையைப் போன்ற வள்ளன்மையுடைய பெரிய கைகளையும் உடையவன். பல இசைக் கருவிகளையுடைய கூத்தர்களைப் பாதுகாப்பவன்.

அருஞ்சொற்பொருள் : நுகம் - காளைகளின் கழுத்தில் பூட்டப்பெறும் நுகத்தடி, ஆரம் - சந்தனம், புணை - தெப்பம், துப்பு - வலிமை, களிறு ஆண்யானை, பிடி - பெண்யானை, கோடியர் - இசைக்கருவிகளை இயக்கும் கூத்தர்.

பரிசு பெற்ற பாணன் மன்னனைப் பாடிச் சென்ற முறை:125-129

………………………………………..பேர் இசை

நல்லியக்கோடனை நயந்த கொள்கையொடு,

தாங்கரு மரபின், தன்னும், தந்தை

வான் பொரு நெடு வரை வளனும் பாடி,

முன் நாள் சென்றனம் ஆக (125-129)

அவனை விரும்பிய கொள்கையுடன் சிறந்த மரபினையுடைய தந்தை போன்ற நல்லியக்கோடனின் விண்ணை முட்டும் மலை வளத்தைப் பாடி முன்னாள் சென்றோம்.

நல்லியக்கோடனைக் காணுமுன் இருந்த வறுமை நிலை:130-140

……………….. இந்நாள்

திறவாக் கண்ண சாய் செவிக் குருளை,

கறவாப் பால் முலை கவர்தல் நோனாது,

புனிற்று நாய் குரைக்கும், புல்லென் அட்டில் (129-132)

காழ் சோர் முது சுவர்க் கணச் சிதல் அரித்த

பூழி பூத்த புழல் காளாம்பி,

ஒல்கு பசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல்,

வளைக் கை கிணைமகள், வள் உகிர்க் குறைத்த

குப்பை வேளை உப்பிலி வெந்ததை,

மடவோர் காட்சி நாணிக் கடை அடைத்து,

இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்,

அழி பசி வருத்தம் வீட………… (133-140)

விழிக்காத கண்ணையும், சாய்ந்த செவிகளையும் உடைய குட்டிகள், பிறரால் கறக்கப்படாத பாலினை உடைய முலையை உண்ணுதலைத் தன் பசி மிகுதியால் பொறுக்க இயலாது

அண்மையில் ஈன்ற நாய் குரைக்கின்ற புன்மையை உடைய அடுக்களை, அதன் கண் கூரையிடத்து உள்ள கழிகள் கட்டற்று வீழ்ந்து கிடக்கும் பழைய சுவர், அச்சுவரில் தோன்றிய கறையான் அரித்துச் சேர்த்த புழுதியிடத்துக் காளான் பூத்து விளங்கும் அட்டில். இத்தகைய நல்குரவினால், இளைத்த உடலை உடைய நுண்மருங்குல் கிணைமகள் கடும்பசிக்கு ஆற்றாது குப்பையில் நின்ற வேளைக் கீரையை நகத்தால் கிள்ளி வந்தாள், சுவை பயத்தற்கு இடும் உப்பும் இல்லாத வறுமை, உப்பின்றி அட்டிலிலே பக்குவம் செய்து கீரையை புறம்கூறுவோர் காணுவதை நாணித் தலைவாயில் கதவை அடைத்து, என் சுற்றத்தோடு பகிர்ந்து உண்டோம். இத்தகு வறுமை எம்மை விட்டு அகலவும் அறிவு முதலியன அழிவதற்கு காரணமாகிய பசியால் உளதாகிய வருத்தங்கள் அறவே ஒளியவும் இந்நாள் மதம் பொழிகின்ற கதுப்பினை உடைய, கொலைத்தொழில் மிக்க சிறுகண் யானையோடு பெரிய தேரினையும் பெற்று யாம் அந்நல்லியக்கோடன் அரண்மனையினின்றும் வருகின்றோம்.

அருஞ்சொற்பொருள் : குருளை - குட்டி, புனிற்றுநாய் - ஈன்று அணிமையான நாய், அட்டில் - அடுக்களை, சமைக்கும் இடம். காழ் - கம்பு, சிதல் - கரையான், பூழி - புழுதி, புழல் - உள்துளை, உகிர் - நகம், மிசையும் - உண்ணும்.

நல்லியக்கோடனின் வறுமை போக்கிய வள்ளன்மை:140-143

…………………. பொழி கவுள்
தறுகண் பூட்கைத் தயங்கு மணி மருங்கின்
சிறுகண் யானையொடு, பெருந்தேர் எய்தி,
யாம் அவண் நின்றும் வருதும். (140-143)

மதம் வடிகின்ற கன்னத்தையுடைய, கொடுமையுடைய வலிமையையும், அசையும் மணியையையும் உடைய சிறிய கண்களையுடைய யானையுடன், பெரிய தேரினையையும் அடைந்து, அங்கிருந்து நாங்கள் வருகின்றோம்.

### பாணனின் ஆற்றுப்படுத்தும் பண்பு: 144-145

……………………… நீயிரும்
இவண் நயந்து இருந்த இரும்பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு செல்குவிர் ஆயின் (143-145)

நீங்களும் இங்கு உங்களை விரும்பி இருக்கும் பெரிய சுற்றத்துடன், உயர்ந்த உள்ளத்துடன் செல்வீர் ஆயின்,

எயிற்பட்டினத்திற்குச் செல்லும்வழியும்பரதவர் தரும் விருந்தும்:146-163

அலை நீர்த் தாழை அன்னம் பூப்பவும்,
தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்,

கடுஞ்சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும்,
நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்,
கானல் வெண் மணல் கடல் உலாய் நிமிர்தர,
பாடல் சான்ற நெய்தல் நெடு வழி
மணி நீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனி நீர்ப் படுவின் பட்டினம் படரின் (146-153)
ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன,
வீங்கு திரை கொணர்ந்த விரை மர விறகின்,
கரும் புகைச் செந்தீ மாட்டிப், பெருந்தோள்
மதி ஏக்கறூஉம் மாசு அறு திருமுகத்து
நுதி வேல் நோக்கின் நுளைமகள் அரித்த
பழம் படு தேறல் பரதவர் மடுப்ப,
கிளை மலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்,
தளை அவிழ் தெரியல் தகையோற் பாடி
அறல் குழல் பாணி தூங்கியவரொடு,
வறல் குழல் சூட்டின் வயின்வயின் பெறுகுவீர் (154-163)

அலையும் நீரையுடைய கடற்கரையில் அன்னத்தைப் போன்ற தோற்றத்தையுடைய மலர்களைத் தாழை மரங்கள் பூக்கவும், வேனில் காலத்தின் துவக்கத்தில் மலர்ந்த செருந்தி மலர்கள் கண்டாரைப் பொன்னென மருளச் செய்யவும், முதல் சூலையுடைய முள்ளிச் செடிகள் நீலமணியைப் போன்ற மலர்களைப் பூக்கவும், நெடிய தாளினையுடைய புன்னை மரங்கள் முத்துப் போன்ற அரும்புகொள்ளவும், கடற்கரையின் வெண்மணலில் கடல் நீர் படர்ந்து ஏற, புலவர் பாடும்படியான சிறப்புடைய நெய்தல் நிலத்தில் உள்ள நீண்ட வழியில் நீலமணியைப் போன்ற நீர் சூழ்ந்த இடங்களையும், மதிலையும், மதிலைத் தன் பெயரில் கொண்ட, குளிர்ந்த நீரையுடைய குளங்களையும் உடைய, எயிற்பட்டினத்திற்குச் செல்வீர் ஆயின்,உயர்ந்த ஒட்டகம் துயில் கொண்டிருந்தாற்போல் மிகுந்த அலைகள் கொண்டு வந்து குவித்த நறுமணமுடைய அகில் மரத்தின் விறகினால் கரிய புகையையுடைய சிவந்த நெருப்பைக் கொளுத்தி, பெரிய தோளினையும், நிலாவும் ஏங்கும்படியான மாசற்ற அழகிய முகத்தில் கூர்மையான வேலைப் போன்ற கண்களையும் உடைய பரதவர் பெண் அரித்த, பழையதாகிய கள்ளைப் பரதவர் உங்களுக்குக் கொணர்ந்துக் குடிக்கக் கொடுப்பார்கள். மலர்க் கொத்துக்களையுடைய தோட்டங்களை உடைய கிடங்கில் என்னும் ஊர்க்கு மன்னன், அரும்பு அவிழ்ந்த (மலர்ந்த) மாலையை அணிந்த நல்லியக்கோடனைப் பாடி, தாள இறுதி உடைய குழலின் தாளத்திற்கு ஆடும் விறலியருடன் நீங்கள் உலர்ந்த குழல் மீன் குழம்பை மனைதோறும் மனைதோறும் பெறுவீர்.

அருஞ்சொற்பொருள் : தமனியம் - பொன், கழாஅல் - கழலுதல், முண்டகம் - கழிமுள்ளி, நித்திலம் - முத்து, கானல் - கடற்கரைச் சோலை, பனிநீர்ப்படு - குளிர்ந்த நீரையுடைய குளங்கள், விரை - மணம், நுதி - கூர்மை, தேறல் - கள், குழல் - வேய்ங்குழல், வரின் - இடந்தோறும்.

## வேலூர் செல்லும் வழியும் எயினர் தரும் விருந்தும்(164-177)

பைந்நனை அவரை பவழம் கோப்பவும்,
கரு நனைக் காயா கண மயில் அவிழவும்,
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்,
செழுங்குலைக் காந்தள் கை விரல் பூப்பவும்,
கொல்லை நெடு வழிக் கோபம் ஊரவும்,
முல்லை சான்ற முல்லை அம் புறவின்
விடர் கால் அருவி வியன் மலை மூழ்கிச்
சுடர் கால் மாறிய செவ்வி நோக்கித்
திறல் வேல் நுதியின் பூத்த கேணி,
விறல் வேல் வென்றி வேலூர் எய்தின் (164-173)
உறுவெயிற்கு உலைஇய உருப்பு அவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ்சோறு,
தேமா மேனி சில் வளை ஆயமொடு,
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர் (174-177)

பசிய அரும்புகளையுடைய அவரைக் கொடி பவளம் போன்ற பூக்களைத் தொடுப்பவும், கருமையான காயா மலர்கள் கூட்டமாக இருக்கும் மயிலின் கழுத்தைப் போன்று மலரவும், தடித்த முசுண்டைக் கொடிகள் சிறிய பனை இலைப் பெட்டியைப் போலும் உள்ள மலர்களை மலரவும், பெரிய காந்தள் மலர்க் குலைகள் கைகள் போன்று மலரவும், கொல்லையில் உள்ள நீண்ட வழியில் இந்திரகோபம் (மூதாய்) ஊர்ந்து இருக்கவும், முல்லை ஒழுக்கம் பொருந்திய முல்லைக் கொடிகள் உடைய முல்லைக் காட்டில், மலை இடுக்குகளில் குதிக்கும் அருவிகளையுடைய பெரிய மலையில் ஞாயிறு மூழ்கிய நேரத்தில் வானை நோக்கி, வலிமை மிக்க வேலின் நுனியைப் போல உள்ள மலர்கள் பூத்த குளங்களையுடைய வெற்றியுடைய வேலால் வெற்றி பொருந்திய , வேலூரை நீங்கள் அடைந்தால்,மிகுந்த வெயிலுக்கு வருந்துகின்ற வெப்பம் விளங்குகின்ற குடிசைகளில் உள்ள எயினக் குலத்து மகளிர் இனிய புளியை இட்டுச் சமைத்த வெப்பமான சோற்றை, இனிய மாமரத்தின் தளிர்போன்ற மேனியையும் சில கை வளையல்களையும் அணிந்த நும் குடும்பத்தின் பெண்களோடு, நீவீர் ஆமான் சூட்டு இறைச்சியுடன் பெறுவீர்.

அருஞ்சொற்பொருள் : நனை - அரும்பு, கொட்டம் - கொட்டைப்பெட்டி, சிறுபெட்டி, ஒழுக்கம் - ஆற்றி இருத்தல், விடர் முழைஞ்சு, குகை வியன் - பெரிய, சுடர் - ஞாயிறு, கதிரவன் உருப்பு - வெப்பம், அவிர் பொருந்துதல், குரம்பை - குடில், அட்ட - சமைத்த.

ஆமூர் வளமும் உழத்தியரின் விருந்தோம்பலும்:(178-195)

நறும் பூங்கோதை தொடுத்த நாட் சினைக்
குறுங்கால் காஞ்சிக் கொம்பர் ஏறி,
நிலை அரும் குட்டம் நோக்கி நெடிது இருந்து,
புலவுக் கயல் எடுத்த பொன் வாய் மணிச்சிரல்,
வள் உகிர் கிழித்த வடு ஆழ் பாசடை,
முள் அரைத் தாமரை முகிழ் விரி நாட் போது
கொங்கு கவர் நீலச் செங்கண் சேவல்,
மதி சேர் அரவின் மானத் தோன்றும்,
மருதம் சான்ற மருதத் தண் பணை,
அந்தணர் அருகா அருங்கடி வியன் நகர்,
அம் தண் கிடங்கின் அவன் ஆமூர் எய்தின் (178-188)

நறுமணமான மலர்களை மாலையாகத் தொடுத்தது போலப் பருவத்தில் பூக்களைக் கொண்ட கிளைகளையும் குறிய தாளினையுமுடைய காஞ்சி மரத்தின் கிளையில் ஏறி, எல்லாக் காலத்திலும் நிலையாக இருத்தல் அரிதாகிய உள்ள குளத்தின்கண் கூர்ந்து நோக்கி, நெடும் பொழுதிருந்து, புலவு நாற்றமுடைய கயல் மீனை மூழ்கி எடுத்த பொன் நிற வாயையுடைய நீலமணியின் நிறத்தையுடைய கிச்சிலியின் (மீன்கொத்திப் பறவையின்) பெரிய நகம் கிழித்த வடு அழுந்திய பச்சை இலையையும், முள்ளுடைய தண்டினையுடைய தாமரையின் அரும்பு மலர்ந்த அதிகாலை மலரில், தேனை நுகரும் நீல நிறத்தையும் சிவந்த கண்ணையுமுடைய ஆண் வண்டு நிலாவைச் சேர்கின்ற கரும்பாம்பை ஒக்கும், மருத ஒழுக்கம் நிலைபெறுதற்கு அமைந்த மருத நிலத்தின் குளிர்ந்த வயல்களையும் அந்தணர்கள் குறைதல் இல்லாத அரிய காவலையுடைய பெரிய மனைகளையும், அழகிய குளிர்ச்சியான அகழியையும் உடைய அவனுடைய ஆமூரை நீவீர் அடைந்தால்,

வலம்பட நடக்கும் வலி புணர் எருத்தின்
உரன் கெழு நோன் பகட்டு உழவர் தங்கை,
பிடிக்கை அன்ன பின்னு வீழ் சிறுபுறத்துத்
தொடிக் கை மகடூஉ, மகமுறை தடுப்ப,
இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த
அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு

கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர். (189-195)

வெற்றி உண்டாகும்படி நடக்கும், வலிமையான கழுத்தினைக் கொண்ட, உடல் வலிமையுடைய எருதினை உடைய, உழவரின் தங்கை, பெண் யானையின் தும்பிக்கையைப் போன்ற பின்னின மயிர் வீழ்ந்து கிடக்கின்ற சிறிய முதுகையும் வளையல்கள் அணிந்த கையையுடைய பெண், தன்னுடைய மக்களைக் கொண்டு, நும்மைப் போகாது தடுக்க, கரிய வைரம் பாய்ந்த மரத்தினால் செய்த உலக்கையின் பூணின் முகத்தைத் தேயச் செய்த குற்றுதல் அமைந்த மாட்சிமைப்பட்ட அரிசியினால் செய்த கட்டியாகிய வெள்ளைச் சோற்றை, பிளந்த காலையுடைய நண்டின் கலவையுடன் உங்களுக்குத் தருவாள்.

அருஞ்சொற்பொருள் : நறும் - மணம், கொம்பர் - கொம்பு, குட்டம் - குளம், சிரல் - சிச்சிலிப் பறவை, உகிர் - நகம், பாசடை - பசிய இலை, கொங்கு - தேன், சேவல் - ஆண் வண்டு, பணை - வயல், கிடங்கு - அகழி, எருது - காளைமாடு, தொடி - வளையல், காழ் - வயிரம், அமலை - கட்டி, கவை - பிளவு, அலவன் - நண்டு.

நல்லியக்கோடனின் ஊர்ச்சிறப்பும் அதன் அண்மையும்:(196-202)

எரி மறிந்தன்ன நாவின், இலங்கு எயிற்றுக்
கரு மறிக் காதின், கவை அடிப் பேய் மகள்,
நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல,
பிணன் உகைத்துச் சிவந்த பேர் உகிர் பணைத்தாள்
அண்ணல் யானை அருவி துகள் அவிப்ப,
நீறு அடங்கு தெருவின், அவன் சாறு அயர் மூதூர்
சேய்த்தும் அன்று, சிறிது நணியதுவே (196-202)

தீப்பிழம்பு சாய்ந்தால் ஒத்த நாவினையும், விளங்குகின்ற பற்களையும் வெள்ளாட்டுக் குட்டிகளைக் காதணியாக அணிந்துள்ள காதுகளையும் பிளவு பெற்ற கால்களையும் உடைய பேய்மகள், நிணத்தை உண்டு சிரித்த தோற்றத்தைப் போல் அவனுடைய போர் யானை, தான் கொன்ற பிணங்களை உதைத்துச் சிவந்த பெரிய நகங்களையும் பெரிய கால்களையும் உடையதாகத் தோற்றமளித்தது. போர்க்களத்தில் யானைகள் கிளப்பிய புழுதியை, யானைகளின் மதநீர் அருவிகள் அவித்தன. அதனால் புழுதியடங்கிய தெருக்களை உடையதாயிருந்தது அவன் திருவிழாக்கள் எடுக்கும் ஊர். அது தூரத்தில் இல்லை. அருகில் தான் உள்ளது.

அறிஞ்சொற்பொருள் : கருமறி - வெள்ளாட்டுக்குட்டி, நிணன் - கொழுப்பு, பணை - பெரிய, அருவி - மதநீர், சாறு - திருவிழா, சேய்த்து - தூரம், நணித்து - பக்கம்.

நல்லியக்கோடனின் அரண்மனை வாயில்:(203-206)

பொருநர்க்கு ஆயினும், புலவர்க்கு ஆயினும்,
அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்,

கடவுள் மால் வரை கண்விடுத்தன்ன,
அடையா வாயில் அவன் அருங்கடை குறுகி, (203-206)

கிணைப் பொருநர்க்கு ஆயினும் அறிவுடையோர்க்கு ஆயினும் அரிய மறைகளைக் கற்றுணர்ந்த நாவினையுடைய அந்தணர்க்கு ஆயினும் அடையாது திறந்தே இருக்கும் அவன் அரண்மனைக் கதவுகள். அவன் அரண்மனை வாயில் கடவுளர் வீற்றிருக்கும் மேரு மலையின் கண் போன்றது. ஏனையோர், புகுதற்கரிய வாயில். அங்கே சென்றது.

சான்றோர் புகழ்தல்(207-209)

செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்,
இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்,
செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த, (207-209)

பிறர் தனக்குச் செய்த உதவியைப் போற்றி அவருக்கு நன்மை செய்தல், அறிவும் ஒழுக்கமும் இல்லாத மாக்கள் இனம் தனக்கு இன்மை நோக்கினாருக்கு எல்லாக் காலத்தும் இனிய முகமுடையவனாய் இருத்தல், அகமும் புறமும் இனியனாக இருத்தல், ஆகிய பண்புகளை எப்போதும் நெருங்கி இருக்கின்ற சிறப்பினை உடைய அவனை அறிந்தோர் புகழ்வர்.

மறவர் போற்றல்:(210-212)

அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ்சினம் இன்மையும்,
ஆண் அணி புகுதலும், அழிபடை தாங்கலும்,
வாள் மீக்கூற்றத்து வயவர் ஏத்த (210-212)

தன் வீரத்தைக் கண்டு அஞ்சி வந்தவருக்கு அருள் செய்வான். கொடிய கோபம் அவனிடம் இல்லை. மறவர் நின்ற அணியில் புகுந்து அதனைக் குலைப்பான். அழிந்த படையில் சென்று பகைவரைப் பொறுத்துக் கொள்வான். இவ்வாறு வாள் வலிமையுடைய மறவர் அவனைப் புகழ்வர்.

அருஞ்சொற்பொருள் : தாங்கல் - பொறுத்தல், வயவர் - மறவர்.

மகளிர் வாழ்த்தல்:(213-215)

கருதியது முடித்தலும், காமுறப்படுதலும்,
ஒருவழிப் படாமையும், ஓடியது உணர்தலும்,
அரி ஏர் உண்கண் அரிவையர் ஏத்த (213-215)

தன்நெஞ்சு கருதியதைத் தான் முடித்தாலும் தான் விரும்பும் மகளிர் தன்னை விரும்பும் நிலையிலும் மகளிர் வயத்தனாய் ஒரு வழிப்படாது, தன் வழிப்படுத்தலும், மகளிர் நெஞ்சில்

நினைப்பதை உணரும் நிலையிலும் உள்ளவன் என செவ்வரி படர்ந்த மையுண்ட கண்களை உடைய அரிவைப் பெண்டிர் புகழ்வர்.

பரிசிலர் ஏத்தல்(216-218)

அறிவு மடம் படுதலும், அறிவு நன்கு உடைமையும்,
வரிசை அறிதலும், வரையாது கொடுத்தலும்,
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த (216-218)

அறியாமையுடையாரிடத்து தானும் அறியாமை உடையான் போன்றிருத்தலும், அறிவுடையாரிடத்து தனது அறிவு நன்குடைமையைக் காட்டலும், வருவோர் தகுதியைத் தெளிவாக அறிதலும், சிறப்பில்லாதோருக்குக் கொடேன் என்று வரைந்து கொள்ளாது வந்தோர்க்குத் தக ஈதலும் ஆகிய நிலைகளைப் பாராட்டிப் பரிசில் வாழ்க்கையுடையோர் புகழ்வர்.

அருஞ்சொற்பொருள் : வரிசை - தகுதி

நல்லியக்கோடன் அவையில் வீற்றிருக்கும் காட்சி:(218-220)

பன் மீன் நடுவண் பால்மதி போல
இன்நகை ஆயமொடு இருந்தோற் குறுகி (219-220)

பல விண்மீன்களின் நடுவே இருக்கும் முழு மதிபோன்று, முத்தமிழ் கற்ற அறிவோரிடையே இனிய மகிழ்ச்சியைத் தரும் கூட்டத்தோடு இருப்பவனை அணுகி

அருஞ்சொற்பொருள் : ஆயம் - கூட்டம்

நல்லியக்கோடன் முன்னிலையில் யாழ் வாசிக்கும் முறைமை:221-235

பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன,
அம் கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்,
மணி நிரைத்தன்ன வனப்பின் வாய் அமைத்து,
வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து,
கானக் குமிழின் கனி நிறம் கடுப்ப,
புகழ் வினைப் பொலிந்த பச்சையொடு, தேம் பெய்து,
அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்கு புரி நரம்பின்,
பாடு துறை முற்றிய பயன் தெரி கேள்விக்
கூடு கொள் இன் இயம் குரல் குரல் ஆக,
நூல் நெறி மரபின், பண்ணி ஆனாது (221-230)
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்

இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்
ஏரோர்க்கு நிழற்ற கோலினை எனவும்
தோரோர்க்கு அழன்ற வேதனை எனவும்
நீசில மொழியா அளவை……….. (231-235).

பச்சைக் கண்களையுடைய குரங்கு, பாம்பின் தலையைப் பிடித்தபொழுது அப்பாம்பு குரங்கின் கையை இறுக்கியும் நெகிழ்த்தும் பிடிப்பது போல் அழகிய தண்டில் நெருக்கமாகச் சுற்றின நெகிழ வேண்டிய இடத்தில் நெகிழ்ந்தும் இறுக வேண்டிய இடத்தில் இறுகியும் நரம்பு இருக்கும் வார்க்கட்டையும், இரண்டு விளிம்பும் சேர்த்து இணைத்த இடத்தில் மணியை அடுக்கி வைத்தாற்போல் அழகாக பொருந்திய ஆணிகளையும், வயிறு சேர்ந்த ஒழுங்கான தொழில் வகை அமைந்த பத்தரினையும் (உடல் பகுதியையும்), காட்டில் உள்ள குமிழ மரத்தின் கனி நிறத்தை ஒத்த தோல் போர்வையினையும், தேனைப் பெய்து அமிழ்தத்தைத் தன்னிடத்தில் பொதிந்து துளிக்கும் நரம்பினையும் கொண்டது யாழ். பாடும் துறைகள் யாவும் பாடுதற்கு அமைந்த பயன் விளங்குகின்ற கூடுதல் இசையைக் கொண்டது இனிய யாழ். இசை நூல்கள் கூறுவதைப் போல் செம்மையாக ஆக்கி அவனைக் குறையாது நீவிர் பாடுவீராக. பெரியவர்களுக்குக் குவித்த கைகளை உடையவன் நீ என்றும், மறவர்களுக்கு மலர்ந்த மார்பையுடையவன் நீ என்றும், உழவர்களுக்கு நிழல் தருகின்ற செங்கோலை உடையவன் நீ என்றும், தேரினை உடைய அரசர்களுக்கு வெம்மையான வேலை உடையவன் நீ என்றும், அவனைப் புகழ்ந்து நீ சில சொற்களைக் கூறுவதற்கு முன்னர்.

அருஞ்சொற்பொருள் : ஊகம் - கருங்குரங்கு, கோடு - யாழ்த்தண்டு, தீவவு - வார்க்கட்டு, அகளம் - பத்தர், குமிழ் - குமிழம் பழம், பச்சை - தோல், இலிற்றுதல் - துளித்தல், ஆனாது - குறையாது, இளையோர் - வீரர்.

மன்னன் இரவலரை உபசரிக்கும் பாங்கு:234-245

………………மாசில்
காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇப்,
பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி,
கா எரியூட்டிய கவர் கணைத் தூணிப்
பூ விரி கச்சைப் புகழோன் தன் முன்
பனி வரை மார்பன் பயந்த நுண் பொருள் 240
பனுவலின், வழாஅப் பல் வேறு அடிசில் (235-241)
வாள் நிற விசும்பிற் கோள்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து,
விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி (242-245)

மாசு இல்லாத மூங்கிலின் தோலை உரித்தாற்போன்ற ஆடையை உடுக்கச் செய்து, பாம்பு சினந்து எழுந்தது போன்ற எழுச்சியைத் தரும் கள்ளைக் கொடுத்து, நெருப்புக் கடவுள் வேண்டியதால் காண்டவம் என்ற காட்டினை எரித்த அம்பையுடைய அம்புறாத்தூணியையும் பூக்கள் வரைந்த கச்சையை அணிந்த அருச்சுனனின் அண்ணனாகிய, பனியுடைய இமயத்தைப் போன்ற மார்பையுடைய வீமசேனன், எழுதிய நுண்மையான சமையல் குறிப்புகளுடைய நூலினின்றும் வழுவாது, பல்வேறு உணவு வகைகளை,ஒளியுடைய நீலவானத்தில் கோள்மீன் சூழ்ந்த இளங்கதிர்களையுடைய கதிரவனை இகழும் தோற்றமுடைய விளங்கும் பொற்கலங்களில், நீ விரும்பி உண்ணுபவற்றைத் தானும் விரும்பி மனதில் கொண்டு, நும் மீது மிகுகின்ற விருப்பத்தால் தானே நின்று நும்மை உண்ணச் செய்து,

அருஞ்சொற்பொருள்: காம்பு - மூங்கில், சொலித்தல் - உரித்தல், அறுவை - ஆடை, உடீஇ - உடுக்கச் செய்து, தூணி - அம்பு வைக்கும் கூடு, தன்முன் - அண்ணன், பனிவரை - இமயமலை, அடிசில் - உணவு, எள்ளல் -இகழல்.

நல்லியக்கோடன் அளிக்கும் பரிசுப் பொருட்கள்:246-262

திறல் சால் வென்றியொடு, தெவ்வுப் புலம் அகற்றி,
விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி,
நயவர் பாணர் புன்கண் தீர்த்த பின்,
வயவர் தந்த வான் கேழ் நிதியமொடு (246-249)
பருவ வானத்துப் பால் கதிர் பரப்பி
உருவ வான் மதி ஊர் கொண்டாங்கு,
கூர் உளி பொருத வடு ஆழ் நோன் குறட்டு
ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு,
சிதர் நனை முருக்கின் சேண் ஓங்கு நெடுஞ்சினைத்
ததர் பிணி அவிழ்ந்த தோற்றம் போல,
உள் அரக்கு எறிந்த உருக்குறு போர்வை,
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி,
ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடைப் பாகரொடு (250-258)
மா செலவு ஒழிக்கும் மதனுடை நோன் தாள்
வாள் முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசில் (259-261)

வலிமையுடைய வெற்றியுடன், பகைவரை அவர்களுடைய நிலத்திலிருந்து அகற்றி, வெற்றியை உடைய மன்னர்களின் அரண்களை அழித்து, அங்குக் கிடைத்த பொருளால் தன்னிடம் விரும்பி வருபவர்களுக்கும் பாணர்களுக்கும் உதவி, அவர்களுடைய துன்பத்தைத் தீர்த்த பின்னர், தன்னுடைய படை மறவர்கள் கொண்டுவந்து தந்த மிகுந்த பொருட்களுடன் தேர்

ஒன்றையும் கொடுப்பான். கூதிர்கால வானில் பால்போலும் ஒளியைப் பரப்பி ஊர்ந்து செல்லும் வடிவான திங்களைப் போல் தோன்றும், கூரிய உளியினால் ஆழ்ந்து செதுக்கின வலிமையான நடுப்பகுதியில் இருந்து (குடத்தில் இருந்து) பிரிந்த ஆர்களை சூழ்ந்த இரும்பு விளிம்பை உடைய உருளைகளுடன் (சக்கரங்களுடன்), சிந்துகின்ற அரும்பினை உடைய முருக்க மரத்தின் உயர்ந்து ஓங்கி வளர்ந்த கிளைகளில் உள்ள சிவப்பு நிற பூங்கொத்துக்கள் முறுக்கு நெகிழ்ந்த தோற்றம் போல, உள்ளே உருக்கப்பட்ட செவ்வரக்கு வைத்து செய்த மேல் பலகையினையும் உடைய (கூரையினையும் உடைய), வலிய தொழிலைப் புரியும் தச்சரின் கைத்தொழில் முற்றுப் பெற்ற பின்னர் ஓட்டம் உண்டு என்ற நல்ல பெயர்பெற்ற அழகிய நடையுடைய அத்தேருடன், குதிரையின் ஓட்டத்தைப் பின் நிறுத்தும் மிக்க வலிமையுடைய கால்களையும் ஒளியுடைய முகத்தையுடைய எருதையும், அதனைச் செலுத்தும் பாகனுடன் தருவான். அன்றே உங்களுக்கு அவன் பரிசிலைத் தருவான்.

அருஞ்சொற்பொருள் : தெவ்வுப் புலம் - பகை நிலம், எழில் - அரண், முருக்கி - அழித்து, நயவர் - விரும்பியோர், புன்கண் - வறுமைத் துன்பம், வயவர் - படைவீரர், நேமி - சக்கரம், முருக்கு -முள் சுருக்கு, பாகர் - தேர், பாண்டில் - வெள்ளை எருது, வலவன் - செலுத்துவோன்.

நல்லியக்கோடனின் புகழும் மாட்சியும்:263-269

……………………………………………………மென் தோள்<br>
துகில் அணி அல்குல் துளங்கு இயல் மகளிர்,<br>
அகில் உண விரித்த அம் மென் கூந்தலின்<br>
மணி மயில் கலாபம் மஞ்சு இடைப் பரப்பி,<br>
துணி மழை தவழும் துயல் கழை நெடுங்கோட்டு,<br>
எறிந்து உரும் இறந்து ஏற்று அருஞ் சென்னிக்<br>
குறிஞ்சிக் கோமான், கொய் தளிர்க் கண்ணி<br>
செல் இசை நிலைஇய பண்பின்<br>
நல்லியக்கோடனை நயந்தனிர் செலினே. (261-269)

மென்மையான தோள், ஆடை அணிந்த இடை, தளர்ந்த தன்மையையுடைய மகளிர் அகில் புகையை ஊட்டுவதற்கு விரித்த அழகும் மென்மையுமுடைய கூந்தல் போலே, நீலமணியின் நிறத்தையுடைய மயிலின் தோகையை மஞ்சின் இடையே விரித்து, தெளிந்த முகில் தவழும் அசையும் மூங்கிலையுடைய நெடிய உச்சியில் இடி இடித்துப் பிறர் ஏறுவதற்கு அரிதாக உள்ள மலைகள் மிக்க நாட்டிற்குத் தலைவன், கொய்யப்பட்ட தளிரினால் தொடுத்த மாலை அணிந்த பிறர்பால் நில்லாது செல்லும் இயல்புடைய புகழ் தன்னிடத்தில் நிலைத்து நிற்பதற்குரிய பண்பையுடைய நல்லியக்கோடனிடம் நீவிர் விரும்பிச் சென்றால்.

அருஞ்சொற்பொருள் : கலாபம் - மயில் தோகை, மஞ்சு - மேகம், துணி மழை - தெளிவான மேகம், கழை- மூங்கில், உரும் - இடி, கண்ணி - தலைமாலை.

கொள்குறிவினா

1.சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர்

அ) நக்கீரனார் ஆ) உருத்திங்கண்ணனார் இ) இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்

ஈ) மாங்குடி மருதனார்

2.நல்லியக்கோடனின் தலைநகரம்

அ) காவிரிப்பூம்பட்டினம் ஆ) கிடங்கில் இ) மதுரை ஈ) வஞ்சி

3.காரியுடன் போர் செய்த வள்ளல்

அ) பாரி ஆ) ஆய் இ) பேகன் ஈ) ஓரி

4.எயிற்பட்டினம் …..……… நிலத்து ஊர்

அ) நெய்தல் ஆ) மருதம் இ) முல்லை ஈ) குறிஞ்சி

5.“பன் மீன் நடுவண் பால்மதி போல” என்னும் அடி இடம்பெறும் நூல்

அ) சிறுபாணாற்றுப்படை ஆ) முல்லைப்பாட்டு இ) புறநானூறு ஈ) பத்துப்பாட்டு

6.பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்களின் எண்ணிக்கை

அ) 4 ஆ) 5 இ) 6 ஈ) 3

விடைகள்

1. இ) இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்
2. ஆ) கிடங்கில்
3. ஈ) ஓரி
4. அ) நெய்தல்
5. அ) சிறுபாணாற்றுப்படை
6. ஆ) 5

குறுவினாக்கள்

1.விறலியின் தோற்ற வர்ணனைக் குறித்து விளக்குக.

2.சேர நாட்டின் வளமையைச் சிறுபாணாற்றுப்படைப் பாடல்கள் வழி நிறுவுக.

3.கடையெழு வள்ளல்களின் கொடைச்சிறப்பினை எடுத்துரைக்க.

4.நல்லியக்கோடனின் ஈகைச் சிறப்பு குறித்து விளக்குக.

5.உழத்தியரின் விருந்தோம்பல் முறைமையை எடுத்துரைக்க.

6.நல்லியக்கோடன் இரவலரை உபசரிக்கும் பாங்கினை விளக்குக.

நெடுவினாக்கள்

1.பரதவர்கள் மற்றும் எயினர்களின் விருந்தோம்பல் முறைமையினை சிறுபாணாற்றுப்படைவழிநின்று விவரிக்க.

(அல்லது)

கடையெழு வள்ளல்கள் குறித்து விளக்குக.

2.நல்லியக்கோடனின் நாட்டு வர்ணனையினை எடுத்துரைக்க

(அல்லது)

நல்லியக்கோடனின் விருந்தோம்பும் பண்பினை விவரி

பாடநூல்கள்

ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ) -பத்துப்பாட்டு,கோவிலூர்மடாலயம,கோவிலூர் சிறுபாணாற்றுப்படை- நியூ சென்சுரி புக் ஹவுஸ் (பி)சென்னை

சங்க இலக்கியம் - கழக வெளியீடு, சென்னை

## Related Online Contents

- **Tamil Virtual University Library – www.tamilvu.org/library**
  **http://www.virtualvu.org/library**
- **Project Madurai – www.projectmadurai.org.**
- **Chennai Library – www.chennailibrary.com**
  **http://www.chennailibrary.com**
- **Tamil Universal Digital Library- www.Ulib.prg**

# அலகு –2

## புறநானூறு, பதிற்றுப்பத்து

## புறநானூறு

நோக்கம்

- சங்க இலக்கியங்களில் புறப்பொருள் பற்றி கூறும் நூல் புறநானூறு ஆகும்.
- புறநானூறு 400 பாடல்களைக்கொண்டது.
- சங்ககாலதமிழ் இலக்கியத்தின் செழுமை, மொழிவளம், நடை, உவமை, ஆகியவற்றை புரிந்துகொள்ள புறநானூறு உதவுகிறது.
- சங்ககாலத்திலிருந்த தமிழரின் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள், அரசியல், போர், பொருளாதாரம், சமூகஅமைப்பு ஆகியவற்றைப் பற்றிய செய்திகளை அறியமுடிகிறது.
- போரில் வீரர்கள் காட்டிய திறன்கள்,அரசர்களின் பண்பு,அரசியல் திறன் அகியவை இதில் வெளிப்படுகின்றன.
- புறநானூறு தமிழரின் வரலாற்றையும்,தமிழரின் பண்பாடுகளையும் ஆழமாக புரிந்துகொள்ள உதவும் ஒருமுக்கியமான நூலாகும்.

புறநானூறு – பாடல்கள்: 2 முதல்-20 பாடல்கள் வரை

**புறநானூறு:** பாடல் எண்: 2

2.போரும் சோறும்!

பாடியவர் : முரஞ்சியூர் முடிநாகராயர்.

பாடப்பட்டோன் : சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்.

திணை : பாடாண்.

துறை : செவியறிவுறூஉ வாழ்த்தியலும் ஆம்.

துறை விளக்கம் : மன்னர் போன்றோர்க்கு நல்லறிவு புகட்டுதலைக்கூறும் புறத்துறை.

பாடல்:

மண் திணிந்த நிலனும்,

நிலம் ஏந்திய விசும்பும்,

விசும்பு தைவரு வளியும்,

வளித் தலைஇய தீயும்,

தீ முரணிய நீரும், என்றாங்கு

ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்
வலியும், தெறலும், அணியும், உடையோய்!
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்
வெண்தலைப் புணரிக் குடகடல் குளிக்கும்
யாணர் வைப்பின், நன்னாட்டுப் பொருந!
வான வரம்பனை! நீயோ, பெரும!
அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ,
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது, களத்து ஒழியப்

பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!
பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்,
நாஅல் வேத நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி,
நடுக்கின்றி நிலியரோ அத்தை அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை,
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கிற், றுஞ்சும்
பொற்கோட்டு இமயமும், பொதியமும், போன்றே!

## பொருளுரை:

### பஞ்ச பூதங்கள்

மண் திணிந்த நிலனும்,
நிலம் ஏந்திய விசும்பும்,
விசும்பு தைவரு வளியும்,
வளித் தலைஇய தீயும்,
தீ முரணிய நீரும், என்றாங்கு

நிலம் போல் பொறுமை, வானம் போல் சூழ்திறன், காற்றைப் போல் வலிமை, தீயைப் போல் எரிக்கும் திறன், நீரைப் போல் அளிக்கும் கொடைத்திறன் ஆகியவற்றை உடையவன் நீ.

### கடல் போன்றவன்

ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்

போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்

வலியும், தெறலும், அணியும், உடையோய்!

நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்

வெண்தலைப் புணரிக் குடகடல் குளிக்கும்

உன் கடலிலே தோன்றிய ஞாயிறு உன் கடலிலேயே மறையும் நிலப்பரப்பை உடையவன் நீ. இப்படிப்பட்ட வானவரம்பன் நீதானா?

### மன்னனின் கொடை

யாணர் வைப்பின், நன்னாட்டுப் பொருந!

வான வரம்பனை! நீயோ, பெரும!

அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ,

நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை

ஈரைம் பதின்மரும் பொருது, களத்து ஒழியப

தும்பைப் பூ சூடி ஐவரை எதிர்த்த நூற்றுவர் மாண்ட போர்க்களத்தில் இருபாலாருக்கும் பெருஞ்சோறு கொடுத்தவன் நீ.

### மாறாத குணம் கொண்டவன்

பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!

பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்,

நாஅல் வேத நெறி திரியினும்

திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி,

நடுக்கின்றி நிலியரோ அத்தை அடுக்கத்துச்

பால் புளித்தாலும், பகல் இருளானாலும், நான்கு வேதங்களின் நெறிமுறை மாறினாலும் திரிபில்லாச் சுற்றத்தாருடன் வாழ்வாயாக.

### மலை போன்றவன்

சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை,

அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்

முத்தீ விளக்கிற், றுஞ்சும்

பொற்கோட்டு இமயமும், பொதியமும், போன்றே!

இமயம் பொதியம் ஆகிய மலை அடுக்கத்தில் அந்தணர் வளர்க்கும் முத்தீ விளக்கொளியில் நவ்வி மான்கள் உறங்குவது போல அச்சமின்றி உன் மக்கள் சுற்றம் நிலைகொள்வதாகுக.

அருஞ்சொற்பொருள்:

திணிந்த - செறிந்த. ஏந்திய - தாங்கிய. தலைஇய - தலைப்பட்ட. போற்றார் - பகைவர். சூழ்ச்சி ஆராய்ச்சி. அகலம் - விரிவு. தெறல் - செருக்கு அடக்கல். அளி அருள். யாணர் வைப்பின் - புது வருவாய்' பொருந்திய ஊர்களை உடைய. . அலங்கு உளை - அசையும் பிடரி மயிரை உடைய. தலைக்கொண்ட - தம்பாற் கொண்ட. பொலம் - பொன். மிகு பதம் - மிக்க உணவு. சுற்றம் - மந்திரச் சுற்றம் அமைச்சர், படைத்தலைவர் ஆகியோர். அடுக்கத்து - மலைச்சரிவின் கண். நவ்வி - மான் கன்று. பிணை - பெண்மான். கோடு - மலை உச்சி. துஞ்சும் - உறங்கும்

புறநானூறு: 3

வன்மையும் வண்மையும்!

பாடியவர் : இரும்பிடர்த் தலையார்.

பாடப்பட்டோன் : பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி.

திணை : பாடாண்.

துறை : செவியறிவுறூஉ வாழ்த்தியலும் ஆம்.

துறை விளக்கம் : மன்னர் போன்றோர்க்கு நல்லறிவு புகட்டுதலைக்கூறும் புறத்துறை.

பாடல்:

உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை

நிலவுக்கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற,

ஏம முரசம் இழுமென முழங்க,

நேமி யுய்த்த நேஎ நெஞ்சின்,

தவிரா ஈகைக், கவுரியர் மருக!

செயிர்தீர் கற்பின் சேயிழை கணவ!

பொன் னோடைப் புகர் அணிநுதல்

துன்னருந் திறல் கமழ்கடா அத்து

எயிரு படையாக, எயிற்கதவு இடாஅக்

கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கில்

பெருங்கை யானை இரும்பிடர்த் தலையிருந்து

மருந்தில் கூற்றத்து அருந்தொழில் சாயாக்

கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி!

நிலம் பெயரினும், நின்சொற் பெயரல்

பொலங் கழற்காற்,புலர் சாந்தின்
விலங் ககன்ற வியன் மார்ப!
ஊர் இல்ல, உயவு அரிய,
நீர் இல்ல, நீள் இடைய,
பார்வல் இருக்கைக், கவிகண் நோக்கிற்,
செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்

அம்புவிட, வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந்து உயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை,
நின்நசை வேட்கையின் இரவலர் வருவர்! அது
முன்னம் முகத்தின் உணர்ந்து, அவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே.

## பொருளுரை:

### மன்னனின் மரபு

உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற,
ஏம முரசம் இழுமென முழங்க,
நேமி யுய்த்த நேஎ நெஞ்சின்,
தவிரா ஈகைக், கவுரியர் மருக!

நீ கவுரியர் மரபில் வந்தவன். அவர்கள் முழுமதி போல் உருவம் கொண்ட வெண்கொற்றக் குடையால் ஆளும் மண்ணிலுள்ள அனைத்துக்கும் நிழல் தந்தவர்கள். முரசு முழக்கத்துடன் ஆட்சிச் சக்கரத்தை உருட்டியவர்கள். நெஞ்சில் நேயம் கொண்டு இல்லை என்று சொல்லாமல் கொடை வழங்கியவர்கள்.

### மன்னனின் சிறப்பு

செயிர்தீர் கற்பின் சேயிழை கணவ!
பொன் னோடைப் புகர் அணிநுதல்
துன்னருந் திறல் கமழ்கடா அத்து
எயிரு படையாக, எயிற்கதவு இடாஅக்

கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கில

நீ கற்புக்கரசியின் கணவன். உன்னைக் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி என்பார்கள். (ஏனென்றால்) மருந்தில் கூற்றம் என்னும் நிலப்பகுதியை வென்றாய். யானைத் தலையில் இருந்துகொண்டு போரிட்டு வென்றாய். அந்த யானை பொன்னாலான ஓடைக் கவசத்தை நெற்றியில் கொண்டது.

### மன்னனின் பலம்

பெருங்கை யானை இரும்பிடர்த் தலையிருந்து

மருந்தில் கூற்றத்து அருந்தொழில் சாயாக்

கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி!

நிலம் பெயரினும், நின்சொற் பெயரல்

பொலங் கழற்காற்,புலர் சாந்தின்

வலிமை மிக்கது. மதம் பொழிவது. கயிற்றில் கட்டிய மணி கொண்டது. அதனை உதைத்துக் கொண்டுதான் நீ அதன் தலையில் அமர்ந்திருந்தாய். உன்னை ஒன்று வேண்டுகிறேன். நிலமே மாறினாலும் நீ சொன்ன சொல் தவறாமல் வாழவேண்டும். நீ பொன்னாலான வீரக்கழலைக் காலில் அணிந்தவன்.

### மன்னனின் குணம்

விலங் ககன்ற வியன் மார்ப!

ஊர் இல்ல, உயவு அரிய,

நீர் இல்ல, நீள் இடைய,

பார்வல் இருக்கைக், கவிகண் நோக்கிற்,

செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்

ஈரச்சந்தனம் புலர்ந்த மார்பை உடையவன். உன்னை நயந்து இரவலர் வருவர். ஊர் இல்லாத, வாழ முடியாத, நீர் இல்லாத நீண்ட வழியைக் கடந்து வருவர். வன்கண் ஆடவர்.

### மன்னனின் வலிமை

அம்புவிட, வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்

திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந்து உயவும்

உன்ன மரத்த துன்னருங் கவலை,

நின்நசை வேட்கையின் இரவலர் வருவர்! அது

முன்னம் முகத்தின் உணர்ந்து, அவர்

இன்மை தீர்த்தல் வன்மை யானே.25

பதுங்கியிருந்து அம்பு விட வீழ்ந்தவர்களை உண்ணும் பருந்து உன்னமரத்தில் காத்திருக்கும் வழியில் வருவர். அவர்களின் நிலைமையை எண்ணிப்பார்த்து அவர்களின் வறுமையைப் போக்குவதுதான் உன் வலிமை.

அருஞ்சொற்பொருள்:

உவவுமதி - முழு நிலவு. ஓங்கல் வெண்குடை - உயர்ந்த வெண்கொற்றக் குடை. நிலவுக் கடல் வரைப்பின் என்றது, கடல் எல்லையாகிய தென்னெல்லையின் வேந்தர் பாண்டியர் என்பதற்கு.. நேமி - ஆட்சிச் சக்கரம். நேஎ நெஞ்சு ஈரமுள்ள நெஞ்சு. செயிர்தீர் - குற்றமற்ற. புகர் - புள்ளி. கட அம் - மணமுள்ள மதநீர். மருந்தில் கூற்றம் - தடுத்து உயிர்வாழ இயலாது கொல்லும் கூற்றம். கருங்கை - வன்மை உடைய கை. பொலங்கழல் - பொற்கழல். விலங்ககன்ற வியன் மார்பு ஊடாக அகன்றும்', முன்னாகப் பரந்தும் விளங்கும் மார்பு. பார்வல் - பார்த்தல். பதுக்கை - கற்குவியல். உன்னம் - வன்மையான ஒருவகை மரம். துன்னருங் கவலை - அணுகுதற்கரிய கவறுபட்ட பாதை. நசை - விருப்பம்.

## புறநானூறு: 4

### தாயற்ற குழந்தை!

பாடியவர் : பரணர்.

பாடப்பட்டோன் : சோழன் உருவப் பஹ்றேர் இளஞ்சேட் சென்னி.

திணை : வஞ்சி.

துறை :கொற்ற வள்ளை.

துறை விளக்கம் : போரில் வென்ற அரசனைப் புகழ்வதையும் அழிவதற்காக வருந்துவதையும் பொருளாகக் கொண்டது.

பாடல்:

வாள், வலந்தர, மறுப் பட்டன

செவ் வானத்து வனப்புப் போன்றன!

தாள், களங்கொளக், கழல் பறைந்தன

கொல் ஏற்றின் மருப்புப் போன்றன

தோல் துவைத்து அம்பின் துளைதோன்றுவ,

நிலைக்கு ஒராஅ இலக்கம் போன்றன

மாவே, எறிபதத்தான் இடங் காட்டக்,

கறுழ் பொருத செவ் வாயான்,

எருத்து வவ்விய புலி போன்றன

களிறே, கதவு எறியாச், சிவந்து, உராஅய்,

நுதி மழுங்கிய வெண் கோட்டான்,

உயிர் உண்ணும் கூற்றுப் போன்றன்

நீயே, அலங்கு உளைப் பரீஇ இவுளிப்

பொலந் தேர்மிசைப் பொலிவு தோன்றி,

மாக் கடல் நிவந் தெழுதரும்

செஞ் ஞாயிற்றுக் கவினை மாதோ!

அனையை ஆகன் மாறே,

தாயில் தூவாக் குழவி போல,

ஓவாது கூஉம், நின் உடற்றியோர் நாடே.

## பொருளுரை:

### போர்ச் சிறப்பு

வாள், வலந்தர, மறுப் பட்டன

செவ் வானத்து வனப்புப் போன்றன!

தாள், களங்கொளக், கழல் பறைந்தன

கொல் ஏற்றின் மருப்புப் போன்றன்

தோல் துவைத்து அம்பின் துனைதோன்றுவ,

வெற்றிகண்ட உன்வாள் செவ்வானம் போலக் கறைபட்டுக்கிடக்கிறது. களம்கொண்ட உன் தாளிலுள்ள வீரக்கழல் கொல்லும் களிற்றின் தந்தம் போன்றன.

### படை பலம்

நிலைக்கு ஒராஅ இலக்கம் போன்றன்

மாவே, எறிபதத்தான் இடங் காட்டக்,

கறுழ் பொருத செவ் வாயான்,

எருத்து வவ்விய புலி போன்றன்

களிறே, கதவு எறியாச், சிவந்து, உராஅய்,

மார்புக் கவசமாகிய தோல் அம்பால் துளைக்கப்பட்டு நிலையில்லாமல் மின்னும் விண்மீன் கொண்ட வானம் போன்றது. குதிரையின் வாய் கடிவாளம் கண்டியதால் காளைமாட்டைக் கடித்த புலியின் வாயைப் போன்றன.

### யானையின் படைச் சிறப்பு

நுதி மழுங்கிய வெண் கோட்டான்,

உயிர் உண்ணும் கூற்றுப் போன்றன்

நீயே, அலங்கு உளைப் பரீஇ இவுளிப்

பொலந் தேர்மிசைப் பொலிவு தோன்றி,

மாக் கடல் நிவந் தெழுதரும

யானையின் கொம்பு பகைவர் கோட்டைக் கதவைக் குத்தி நுனி மழுங்கி உயிர் உண்ணும் எமனைப் போன்று ஆயிற்று. நீ குதிரைகள் பூட்டிய தேரில் கடலில் தோன்றும் கதிரவனைப் போலக் காட்சி தருகிறாய்.

### மன்னனின் புகழ்

செஞ் ஞாயிற்றுக் கவினை மாதோ!

அனையை ஆகன் மாறே,

தாயில் தூவாக் குழவி போல,

ஓவாது கூஉம், நின் உடற்றியோர் நாடே.

இப்படியே என்றும் திகழ்வாயாக. உன்னைச் சீண்டியவர் நாடு தாய்ப்பால் குடிக்காத குழந்தை போல ஓயாமல் கூவிக்கொண்டே இருக்கட்டும்.

அருஞ்சொற்பொருள் :

வலந்தர - வெற்றியைத் தருதலால். களம்- போர் செய்யுமிடம். மருப்பு - கொம்பு இரத்தம் தோய்ந்து சிவந்திருத்தலால் அவ்வாறு சிவந்துள்ள கொல்லேற்றின் மருப்பை உவமை கூறினார். தோல் - பரிசை் கேடயம் எனப்படும். ஒராஅ தப்பாத. இலக்கம் - குறி. கறுழ் - முகக் கருவி. கதவு - பகைவரின் கோட்டை வாயிற்கதவு. அலங்குஉளை - அசைகின்ற தலையாட்டம். உளை - பிடரி மயிர் என்றுங் கூறுவர்.

## புறநானூறு: 5

### அருளும் அருமையும்!

பாடியவர் : நரிவெரூஉத்தலையார்.

பாடப்பட்டோன் : சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல்.

திணை : பாடாண்.

துறை : செவியறிவுறூஉ,

துறை விளக்கம் : மன்னர் போன்றோர்க்கு நல்லறிவு புகட்டுதலைக்கூறும் புறத்துறை.

பாடல்:

எருமை அன்ன கருங்கல் இடைதோறும்

ஆனின் பரக்கும் யானைய முன்பின்

கானக நாடனை நீயோ பெரும!

நீயோர் ஆகலின் நின் ஒன்று மொழிவல்,
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவரொடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி,
அளிதோ தானே அது பெறல் அருங்குரைத்தே

## பொருளுரை:

### நாட்டின் சிறப்பு

எருமை அன்ன கருங்கல் இடைதோறும்
ஆனின் பரக்கும் யானைய முன்பின்
கானக நாடனை நீயோ பெரும!
நீயோர் ஆகலின் நின் ஒன்று மொழிவல்,
அருளும் அன்பும் நீக்கி நீங்கா

எருமைகள் போல் தோற்றமளிக்கும் கரிய நிறமுடைய கற்கள் நிறைந்த இடமெல்லாம் மாடுகளைப் போலப் பரவியிருக்கும் யானைகள் நிறைந்த வலிமையான காடுகளைக் கொண்ட நாட்டை ஆளும் தலைவனே! நீ இவ்வாறு வளமும், சிறப்பும் பெற்றவனாக இருப்பதால் உனக்கு ஒன்று சொல்கிறேன்.

### மன்னனுக்கு அறிவுரை

நிரயம் கொள்பவரொடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி,
அளிதோ தானே அது பெறல் அருங்குரைத்தே

கேட்பாயாக! அருளும், அன்பும் இல்லாமல், தீமைகள் செய்து, நரகத்தைத் தனது இடமாகக் கொண்டு வாழும் தீயவரோடு சேராமல், உனது நாட்டை, ஒரு குழந்தையை வளர்ப்பவர்கள் அக்குழந்தையைப் பாதுகாப்பது போல் பாதுகாப்பாயாக. அளிக்கத் தக்கது அக்காவல். அத்தகைய காக்கும் வாய்ப்பைப் பெறுவது அரியதாகும்.

அருஞ்சொற்பொருள்:

ஆனின் - பசுக்கூட்டம் போல. அருள் - தொடர்பு இல்லாதார் மாட்டுத் தோன்றும் இரக்கம். அன்பு - தொடர்பு உடையார் மாட்டுத் தோன்றும் மன நெகிழ்ச்சி, நிரயம் - நரகம். மதி: முன்னிலையசை. பெறல் அருங்குரைத்து - பெறுதற்கு அரியது. குரை : அசை.

புறநானூறு: 6

## தண்ணிலவும் வெங்கதிரும்!

பாடியவர் : காரிகிழார்.

பாடப்பட்டோன் : பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

திணை : பாடாண்.

துறை : செவியறிவுறூஉ வாழ்த்தியலும் ஆம்.

துறை விளக்கம் : மன்னர் போன்றோர்க்கு நல்லறிவு புகட்டுதலைக்கூறும் புறத்துறை.

பாடல்:

வாடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்,
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்,
கீழது முப்புணர் அடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழும், மேலது
ஆனிலை உலகத் தானும், ஆனாது,
உருவும் புகழும் ஆகி, விரிசீர்த்
தெரிகோல் ஞமன்ன் போல, ஒரு திறம்
பற்றல் இலியரோ! நின் திறம் சிறக்க!

செய்வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்,
கடற்படை குளிப்ப மண்டி, அடர்ப் புகர்ச்
சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்,
பாசவற் படப்பை ஆர்எயில் பலதந்து,
அவ்வெயில் கொண்ட செய்வுறு நன்கலம்

பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப்,
பணியியர் அத்தை நின் குடையே் முனிவர்
முக்கண் செல்வர் நகர்வலஞ் செயற்கே!
இறைஞ்சுக, பெரும! நின் சென்னி சிறந்த

நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே!

வாடுக, இறைவ நின் கண்ணி! ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த லானே!
செலிஇயர் அத்தை, நின் வெகுளி வால்இழை
மங்கையர் துனித்த வாள்முகத்து எதிரே!
ஆங்க, வென்றி எல்லாம் வென்றுஅகத்துஅடக்கிய

தண்டா ஈகைத் தகைமாண் குடுமி!
தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்,
மன்னிய, பெரும! நீ நிலமிசை யா

## பொருளுரை:

### மன்னனின் சிறப்பு

வாடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்,
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்,
கீழது முப்புணர் அடுக்கிய முறைமுதற் கட்டின

உன் உருவமும், புகழும் பரவ வேண்டும். வடக்கில் இமயமலைக்கு அப்பாலும், தெற்கில் குமரிமுனைக்குத் தென்பாலும், கிழக்கில் தோண்டப்பட்ட கடலுக்கு அப்பாலும், மேற்கில் பழமையான கடலுக்கு அப்பாலும், மூன்றாக அடுக்கப்பட்டுள்ள உலகங்களில் கீழே உள்ள உலகம், மேலே உள்ள உலகம் ஆகியவற்றிற்கு அப்பாலும் பரவ வேண்டும். உன் செங்கோல் ஒருபுறமும் சாயாமல் நடுவுநிலைமை கொண்டிருக்க வேண்டும். இப்படி உன் திறமை வெளிப்பட வேண்டும்.

### படை பலம்

நீர்நிலை நிவப்பின் கீழும், மேலது
ஆனிலை உலகத் தானும், ஆனாது,
உருவும் புகழும் ஆகி, விரிசீர்த்

தெரிகோல் ஞமன்ன் போல, ஒரு திறம்

பற்றல் இலியரோ! நின் திறம் சிறக்க!

உன் செயல்பாட்டுக்கு மாறுபட்ட பகைவர் நாட்டில்மீது உன் கடற்படையையும் யானைப்படையையும் ஏவி, அவர்களது பாசி பிடித்த அகழியையும், மதிலையும் கடந்து, அவர்களின் நாட்டில் பெற்ற அணிகலன்களை உன்னிடம் பரிசில் நாடி வரும் மக்களுக்கு அவர்களின் தரம் அறிந்து வழங்க வேண்டும்.

### மன்னனின் புகழ்

செய்வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்,

கடற்படை குளிப்ப மண்டி, அடர்ப் புகர்ச்

சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்,

பாசவற் படப்பை ஆர்எயில் பலதந்து,

அவ்வெயில் கொண்ட செய்வுறு நன்கலம்

சிவபெருமான் ஊர்வலம் வரும்போது உன் குடை வணங்க வேண்டும். நான்மறை முதல்வர் உன்னிடம் கையேந்தும்போது நீ தலைவணங்க வேண்டும். நீ தலையில் சூடியுள்ள பூ நீ பகைவர் நாட்டை எரிக்கும் புகையால் மட்டுமே வாடவேண்டும்.

### மன்னனின் குணம்

பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப்,

பணியியர் அத்தை நின் குடையே முனிவர்

முக்கண் செல்வர் நகர்வலஞ் செயற்கே!

இறைஞ்சுக, பெரும! நின் சென்னி சிறந்த

நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே!

உன் சினம் உன் மனைவியர் ஊடும் முகத்தின்முன் காணாமல் போக வேண்டும். இப்படிப்பட்ட வெற்றியோடு தடையின்றி வழங்கும் தகைமை மிக்க 'குடுமி' என்னும் பெயர் கொண்ட அரசே!

### வாழ்த்து

தண்டா ஈகைத் தகைமாண் குடுமி!

தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்

ஒண்கதிர் ஞாயிறு போலவும்,

மன்னிய, பெரும! நீ நிலமிசை யா

நீ குளுமையான நிலவு போலவும் ஞாயிறு போலவும் இந்த நிலவுலகில் நிலைபெற்று வாழ்வாயாக!

அருஞ்சொற்பொருள்:

வடாஅது - வடக்கின்கண் உள்ளதாகிய. உரு - உட்கு அச்சம். முப்புணர் - நிலம், ஆகாயம், சுவர்க்கம். அன்நிலை உலகம், கோலோகம் ஆன் - உயிர்களைக் குறிப்பதால் கோலோகம் உயிர்கள் இறையடி சேரும் பேரின்ப உலகைக் கூறுவதாகும். சுவர்க்கம், போக உலகம் என உணர்க. ஞமன் - துலாக்கோலின்கண் உள்ள சமநிலையை உணர்த்தும் உறுப்பு தராசு முள் போல்வது என்பர். பாசவல் - பசுமையான விளை நிலம். குடுமி - அண்மை விளி பாண்டியனை விளித்தது.

## புறநானூறு: 7

### வளநாடும் வற்றிவிடும்!

பாடியவர் : கருங்குழல் ஆதனார்.

பாடப்பட்டோன் : சோழன் கரிகாற் பெருவளத்தான்.

திணை : வஞ்சி.

துறை : கொற்றவள்ளை.

துறை விளக்கம் : போரில் வென்ற அரசனைப் புகழ்வதையும் அழிவதற்காக வருந்துவதையும் பொருளாகக் கொண்டது.

பாடல்:

களிறு கடைஇய தாள்,

கழல் உரீஇய திருந்துஅடிக்,

கணை பொருது கவிவண் கையால்,

கண் ஒளிர்வரூஉம் கவின் சாபத்து

மா மறுத்த மலர் மார்பின்,

தோல் பெயரிய எறுழ் முன்பின்,

எல்லையும் இரவும் எண்ணாய், பகைவர்

ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலைக்

கொள்ளை மேவலை ஆகலின், நல்ல

இல்ல ஆகுபவால் இயல்தேர் வளவ!

தண்புனல் பரந்த பூசல் மண் மறுத்து

மீனின் செறுக்கும் யாணர்ப்

பயன்திகழ் வைப்பின், பிறர் அகன்றலை நாடே.

## பொருளுரை:

### படைச் சிறப்பு

களிறு கடைஇய தாள்,

கழல் உரீஇய திருந்துஅடிக்,

கணை பொருது கவிவண் கையால்,

கண் ஒளிர்வரூஉம் கவின் சாபத்து

மா மறுத்த மலர் மார்பின்,

களிற்றுப்படை, காலாள்படை ஆகியவற்றின் காலால் மிதித்தும், கை வளத்தால் அம்பு தொடுத்தும் பகைநாட்டை அழித்தாய். விரும்பி வந்த திருமகளை ஏற்க மறுத்த மலர்ந்த மார்பில் தோல் என்னும் கவசத்தை அணிந்திருக்கும் வலிமை மிக்க மார்பினை உடையவன் நீ.

### நல்லது அன்று

தோல் பெயரிய எறுழ் முன்பின்,

எல்லையும் இரவும் எண்ணாய், பகைவர்

ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலைக்

கொள்ளை மேவலை ஆகலின், நல்ல

இல்ல ஆகுபவால் இயல்தேர் வளவ!

இரவு பகல் என்று பார்க்காமல் பகைநாட்டைச் சுட்டு அது எரியும் விளக்கில் அவர் நாட்டு மக்கள் அழுகுரலைக் கேட்பவன் நீ. இயல்தேர் வளவ! இது நல்லது அன்று.

### நாட்டை காப்பாயாக

தண்புனல் பரந்த பூசல் மண் மறுத்து

மீனின் செறுக்கும் யாணர்ப்

பயன்திகழ் வைப்பின், பிறர் அகன்றலை நாடே.

புனல் பாயும் வளநாட்டைக் காப்பதை மறுத்து மீன் பாயும் நாட்டில் இப்படிச் செய்யலாமா?

## புறநானூறு: 8

### கதிர்நிகர் ஆகாக் காவலன்!

பாடியவர் : கபிலர்.

பாடப்பட்டோன் : சேரமான் கடுங்கோ வாழியாதன் - சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பவனும் இவனே.

திணை : பாடாண்.

துறை : இயன்மொழி பூவை நிலையும் ஆம்.

துறை விளக்கம் : ஒருவரின் இயல்பான குணங்களை (நல்ல குணங்கள்) எடுத்துரைத்து, அவரிடமிருந்து மேலும் நல்ல செயல்களைக் கேட்கும் ஒரு பாட்டுத் துறை ஆகும்.

பாடல்:

வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்

போகம் வேண்டிப், பொதுச் சொல் பொறாஅது,

இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப,

ஒடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகைக்

கடந்து அடு தானைச் சேரலாதனை

யாங்கனம் ஒத்தியோ வீங்கு செலல் மண்டிலம்,

பொழுது என வரைதி, புறக்கொடுத்து இறத்தி,

மாறி வருதி, மலை மறைந்து ஒளித்தி,

அகல் இரு விசும்பினானும்

பகல் விளங்குதியால் பல் கதிர் விரித்தே?

பொருளுரை:

### நீ எவ்வாறு ஒப்பு ஆகுவாய்?

வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்

போகம் வேண்டிப், பொதுச் சொல் பொறாஅது,

இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப,

ஒடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகைக்

கடந்து அடு தானைச் சேரலாதனை

விரைந்து செல்லும் கதிரவனே! உலகத்தைக் காக்கும் மன்னர்கள் தனக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்ற இன்பத்தை விரும்பி, இவ்வுலகம் யாவர்க்கும் பொது என்ற சொல் பொறுக்காமல், தன்னுடைய நாடு சிறியது என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, ஊக்கமுடைய உள்ளத்துடன் குறையாத ஈகையுடனும் பகைவரை வெல்லும் படையையுடைய சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு நீ எவ்வாறு ஒப்பு ஆகுவாய்?

### மன்னனின் குணம்

யாங்கனம் ஒத்தியோ வீங்கு செலல் மண்டிலம்,

பொழுது என வரைதி, புறக்கொடுத்து இறத்தி,

மாறி வருதி, மலை மறைந்து ஒளித்தி,

அகல் இரு விசும்பினானும்

பகல் விளங்குதியால் பல் கதிர் விரித்தே?

நீ பகற்பொழுதை உனக்கென்று கூறுபடுத்துகின்றாய். பின் புறமுதுகிட்டு போகின்றாய். மாறி மாறி வருகின்றாய். மலையின் பின் மறைந்து ஒளிகின்றாய். அகன்ற பெரிய ஆகாயத்தில் பகல் பொழுதில் பல கதிர்களை விரித்து ஒளியுடன் விளங்குகின்றாய்.

அருஞ்சொற்பொருள்:

ஒடுங்கா உள்ளம் - சோம்பல் இல்லாத உள்ளம். ஓம்பா ஈகை - பொருளைத் தன் நலனுக்காகப் பாதுகாவாது, பலருக்கும் உவப்புடன் வழங்கும் கைவண்.

## புறநானூறு: 9

### ஆற்றுமணலும் வாழ்நாளும்!

பாடியவர் : நெட்டிமையார்.

பாடப்பட்டோன் : பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

திணை : பாடாண்.

துறை : இயன்மொழி.

துறை விளக்கம் : ஒருவரின் இயல்பான குணங்களை (நல்ல குணங்கள்) எடுத்துரைத்து, அவரிடமிருந்து மேலும் நல்ல செயல்களைக் கேட்கும் ஒரு பாட்டுத் துறை ஆகும்.

பாடல்:

ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,

பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்,

எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண் சேர்மின் என

அறத்துஆறு நுவலும் பூட்கை, மறத்தின்

கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்

எங்கோ, வாழிய குடுமி! தங் கோச்

செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த,

முந்நீர் விழவின், நெடியோன்

நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே!

### பொருளுரை:

#### போர் திறன்

ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,

பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்,

எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண் சேர்மின் என

போர் அறம், பசு, பசுப் போன்ற இயல்புடைய பார்ப்பனர், பெண்டிர், மரபுநோய் உள்ளவர், இறந்த முன்னோருக்குக் கடன் செலுத்தும் குழந்தைப்பேறு இல்லாதவர் ஆகியோர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுங்கள். இங்கே என் அம்பு பாயும் போர் நிகழவிருக்கிறது - என்று அறவழி கூறியபின் போரிடும் பாங்குடையவன் இந்த அரசன். கொல்களிற்றின் மேல் கொடி தோன்ற இருந்துகொண்டு போரிடுபவன். இவன் என் அரசன்.

### கொடை சிறப்பு

அறத்துஆறு நுவலும் பூட்கை, மறத்தின்

கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்

எங்கோ, வாழிய குடுமி! தங் கோச்

செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த,

முந்நீர் விழவின், நெடியோன்

நன்னீர்ப் பறுளி மணலினும் பலவே!

பெயர் குடுமித் தங்கோ (குடுமியான் மலை அரசன்). இவன் ப∴றுளி ஆற்று மணலின் எண்ணுக்கையைக் காட்டிலும் பல்லாண்டுகள் வாழ்வானாக! ப∴றுளி ஆறு நெடியோன் நாட்டில் ஓடிய ஆறு. இந்த நெடியோன் முந்நீர் விழா நடத்தியவன். அதில் யாழ் மீட்டும் பாணர்களுக்கு தூய பொன் அணிகளை வழங்கியவன்.

அருஞ்சொற்பொருள் :

தென்புலம் வாழ்நர் - தென் திசைக்கண் வாழும் பிதிரர்கள், தம் குலத்தில் வாழ்ந்து இறந்து போன முன்னோர்கள். அருங்கடன் என்றது, அவர்க்குச் செய்யும் நினைவுக் கடன்களை, அக்கடனைப் பொன்போற் கருதிப் பாதுகாத்துச் செய்யும் இயல்புடைமை பற்றிப் பொன்போற் புதல்வர் என்றார். பூட்கை மேற் கொள்ளுதலையுடையது. பூண்கை: தொழிற்பெயர். வயிரியர் - கூத்தர்.

## புறநானூறு: 10

### குற்றமும் தண்டனையும்!

பாடியவர் : ஊன் பொதி பசுங் குடையார்.

பாடப்பட்டோன் : சோழன் நெய்தலங் கானல் இளஞ்சேட் சென்னி.

திணை : பாடாண்.

துறை : இயன்மொழி.

துறை விளக்கம் : ஒருவரின் இயல்பான குணங்களை (நல்ல குணங்கள்) எடுத்துரைத்து, அவரிடமிருந்து மேலும் நல்ல செயல்களைக் கேட்கும் ஒரு பாட்டுத் துறை ஆகும்.

பாடல்:

வழிபடு வோரை வல்லறி தீயே!
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்,
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி
வந்து, அடி பொருந்தி, முந்தை நிற்பின்,

தண்டமும் தணிதி, நீ பண்டையிற் பெரிதே
அமிழ்துஅட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்தல் அல்லது, மள்ளர்
மலைத்தல் போகிய, சிலைத்தார் மார்ப!

செய்து இரங்காவினைச், சேண்விளங் கும்புகழ்,
நெய்தருங் கானல் நெடியோய்!
எய்த வந்தனம்யாம் ஏத்துகம் பலவே!

பொருளுரை:

வாழ்த்தி வேண்டுதல்

வழிபடு வோரை வல்லறி தீயே!
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்,
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி
வந்து, அடி பொருந்தி, முந்தை நிற்பின்,

நெய்தலங்கானல் நெடியோய்! உன்னை வாழ்த்தி வேண்டுகிறேன். வழிபடுவோர் உன்னை எதற்காக வழிபடுகின்றனர் என்பதை உடனே தெரிந்துகொள். பிறன்மீது பழி கூறுபவர்களின் சொல்லை நம்பாதே. நீ ஒருவனிடம் உண்மையாகவே தீமையைக் கண்டால் ஒத்திட்டு ஆராய்ந்து தக்க தண்டனை வழங்கு.

### மன்னனின் குணம்

தண்டமும் தணிதி, நீ பண்டையிற் பெரிதே்

அமிழ்துஅட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்

வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை

மகளிர் மலைத்தல் அல்லது, மள்ளர்

மலைத்தல் போகிய, சிலைத்தார் மார்ப!

அவர் தன் தவற்றை உணர்ந்து உன் காலடியில் வணங்கி நின்றால் பண்டைய தண்டனையைக் குறை. மகளிர் அமிழ்தம் போலச் சமைத்து வந்தவர்க்கெல்லாம் வழங்கும் குற்றமற்ற வாழ்க்கையை உடையவர்கள் மகளிர். அவர்கள் தழுவுதல் அன்றி போரிடும் மள்ளர் தழுவ முடியாத கல்மலை போன்ற மார்பினை உடையவன் நீ.

### பாராட்டிப் புகழ்கிறேன்

செய்து இரங்காவினைச், சேண்விளங்கும்புகழ்,

நெய்தருங் கானல் நெடியோய்!

எய்த வந்தனம்யாம் ஏத்துகம் பலவே!

செய்துவிட்டு வருந்தாத நற்செயல்களைப் புரிபவன் நீ. அதனால் உன் புகழ் விளங்குகிறது. நெய்தலங்கானல் நிலத்தெய்வம் (நெடியான்) நீ. உன்னை நாடி வந்திருக்கிறேன். பலவாகப் பாராட்டிப் புகழ்கிறேன்.

அருஞ்சொற்பொருள்:

வல் அறிதி - விரைய அறிவாய். அத்தகப ஒருத்தி - இமைக்குத் தக்கவாறு தண்டிப்பாய். முந்தை - நின்முன். பண்டையிற் பெரிது - அவர் என் செய்வதற்குமுன் அவர்க்கு நீ. செய்யும் வதும் பின் செய்யும் அருள் பெரிதாக. அட்டு - தன் சுவையால் வென்று. அனா - உண்ண உண்ண அமையாத. குய் அடிசில் - தாளிப்பையுடைய அடில். வருநர்க்கு - வரும் விருந்தினர்க்கு. மகளிர் மலைத்தலாவது - பெண்டிர் முயக்கத்தால் மார்பணிகளை மாறுபடுத்துவது. மள்ளர் - வீரர். . சிலைத்தார் - இந்திர வில்போலும் பன்னிற மலர்களாலியற்றிய மாலை "செய்து இரங்கா வினை" யென்றது, ஒரு தொழிலைச் செய்து, பின் இவ்வாறு தவறு செய்தோமே என்று அதனை எண்ணி வருத்தம் அடையாத செயல்.

## புறநானூறு: 11

### பெற்றனர்! பெற்றிலேன்!

பாடியவர் : பேய்மகள் இளவெயினியார்.

பாடப்பட்டோன் : சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ.

திணை : பாடாண்.

துறை : பரிசில் கடாநிலை.

துறை விளக்கம் :ஒரு மன்னர் அல்லது வள்ளல் தன்னிடம் பரிசில் பெற்று வந்ததை, வேறு ஒருவரிடம் கொடுக்கும்போது, அந்த பரிசிலின் தன்மையை விவரிக்கும் ஒரு இலக்கியப் பாணியாகும்.

பாடல்:

அரி மயிர்த் திரள் முன்கை
வால் இழை, மட மங்கையர்
வரி மணற் புனை பாவைக்குக்
குலவுச் சினைப் பூக் கொய்து
தண் பொருநைப் புனல் பாயும்

விண் பொருபுகழ், விறல்வஞ்சிப்
பாடல் சான்ற விறல்வேந் தனும்மே
வெப் புடைய அரண் கடந்து,
துப்புறுவர் புறம்பெற் றிசினே:
புறம் பொற்ற வய வேந்தன்
மறம் பாடிய பாடினி யும்மே,
ஏர் உடைய விழுக் கழஞ்சின்,
சீர் உடைய இழை பெற்றிசினே!
இழை பெற்ற பாடி னிக்குக்
குரல் புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே
என ஆங்கு,
ஒள்அழல் புரிந்த தாமரை
வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே.

பொருளுரை:

### ஊர் சிறப்பு

அரி மயிர்த் திரள் முன்கை
வால் இழை, மட மங்கையர்
வரி மணற் புனை பாவைக்குக்
குலவுச் சினைப் பூக் கொய்து
தண் பொருநைப் புனல் பாயும்

பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடலால் புகழ் பெற்ற வஞ்சி நகர வேந்தன். இந்த வஞ்சி தண்பொருநை ஆறு பாயும் நகரம். வானளாவிய புகழும் வெற்றியும் உடைய நகரம்.

### மக்களின் வாழ்வு

விண் பொருபுகழ், விறல்வஞ்சிப்

பாடல் சான்ற விறல்வேந் தனும்மே

வெப் புடைய அரண் கடந்து,

துப்புறுவர் புறம்பெற் றிசினே:

புறம் பொற்ற வய வேந்தன

இந்தப் பொருநை ஆற்று மணலில் பாவை செய்து பூப் பறித்துவந்து சூட்டி மகளிர் விளையாடுவர். இவர்கள் மென்மையான மயிர் கொண்ட தம் திரண்ட கைகளையும், வெண்ணிற இழையணியும் கொண்டவர்கள்.

## செருக்கைப் பாடினாள்

மறம் பாடிய பாடினி யும்மே,

ஏர் உடைய விழுக் கழஞ்சின்,

சீர் உடைய இழை பெற்றிசினே!

இழை பெற்ற பாடி னிக்குக்

குரல் புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே

பாவைக்குப் பூச்சூட்டிய பின்னர் பொருநை ஆற்றுப் புனல்நீரில் பாய்ந்து விளையாடுவர். இவன் விரும்பிய கோட்டைகளையெல்லாம் வென்றவன். வலிமை மிக்க பெரியவர்களைப் புறங்கண்டவன். இவ்வாறு இவன் புறங்கண்ட வீரச் செருக்கைப் பாடினாள் ஒரு பாடினி.

## கொடை சிறப்பு

என ஆங்கு,

ஒள்அழல் புரிந்த தாமரை

வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே.

அதற்காக இவன் கழஞ்சு நிறைக்கு மிகுதியாக ஏரழகும், சீர்சிறப்பும் உடைய அணிகலன்களைப் பாடினிக்குப் பரிசாக வழங்கினான். பாடிய பாடினிக்கு உடன் குரல் பண் தந்த பாணனுக்கு வெள்ளி நாரால் தொடுத்த தங்கத் தாமரைப் பூவைப் பரிசாக வழங்கினான்.

## அருஞ்சொற்பொருள்:

அரி - மென்மை. மடமங்கையர் - பேதை மகளிர் வரி மணல் புனைபாவை - வண்டல் மணலால் இழைத்த சிற்றிற்கண் செய்த பாவை் பஞ்சாங்கோரைப் பாவையும் ஆம். பொருநைப் புனல் - அன் பொருந்தத்து நீர் “அன் பொருந்தம்“ என்பது, கரூரின் சமீபத்திலுள்ள ஓர் ஆறு. துப்புறுவர் வலியோடு எதிர்த்துவரும் பகைவர். புறம் பெற்றிசின் - புறமுதுகு காட்டியேர்டும் தகுதியைத் தான் பெற்றான் என்பதாம். மறம் பாடிய - வீரத்தன்மையைப் புகழ்ந்து பாடிய. கழஞ்சு - சிறிய அளவுடையது ஆகுபெயராற் பொன்னை உணர்த்திற்று. ஒள்ளழல் புரிந்த தாமரை - விளங்கிய அழலின்கண்ணே பொன்னை உருக்கி, அதனாற் செய்த தாமரை போலும் பூக்கள் அமைந்த பொன் அணி.

## புறநானூறு: 12

### அறம் இதுதானோ?

பாடியவர் : நெட்டிமையார்.

பாடப்பட்டோன் : பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

திணை : பாடாண்.

துறை : இயன்மொழி.

துறை விளக்கம் : ஒருவரின் இயல்பான குணங்களை (நல்ல குணங்கள்) எடுத்துரைத்து, அவரிடமிருந்து மேலும் நல்ல செயல்களைக் கேட்கும் ஒரு பாட்டுத் துறை ஆகும்.

பாடல்:

பாணர் தாமரை மலையவும், புலவர்

பூ நுதல் யானையோடு புனை தேர் பண்ணவும்,

அறனோ மற்று இது விறல் மாண் குடுமி,

இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு

இனிய செய்தி நின் ஆர்வலர் முகத்தே? . . . . 05

### பொருளுரை:

#### கொடை சிறப்பு

பாணர் தாமரை மலையவும், புலவர்

பூ நுதல் யானையோடு புனை தேர் பண்ணவும்,

அறனோ மற்று இது விறல் மாண் குடுமி,

முதுகுடுமிப் பெருவழுதியே! பாணர்க்குப் பொன்னால் செய்த தாமரை மாலை சூட்டியும், புலவர்க்கு அலங்கரிக்கப்பட்ட தேருடன் நெற்றியில் பொற்பட்டத்தால் அலங்கரிக்கப்பட்ட யானையையும் அளித்து,

#### மன்னனின் அறம்

இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு

இனிய செய்தி நின் ஆர்வலர் முகத்தே?

உன்னிடம் பரிசு பெறுவோர்க்கு நீ நல்லவை செய்து, மறுபுறம் உன் பகைவர்களுக்கு துன்பம் நேரும்படி அவர்களுடைய நாட்டை வெற்றி கொள்வது அறமான செயல்தானா?

### சொற்பொருள்:

மலையவும் - சூடவும். . பண்ணவும் - ஏறுதற்கு ஏற்ப அமைக்கவும்.

புறநானூறு: 13

## நோயின்றிச் செல்க!

பாடியவர் : உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

பாடப்பட்டோன் : சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி.

திணை : பாடாண்.

துறை : வாழ்த்தியல்.

பாடல்:

இவன் யார்? என்குவை ஆயின், இவனே,
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய,
எய்கணை கிழித்த பகட்டுஎழில் மார்பின்,
மறலி அன்ன களிற்றுமிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்,

பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்,
சுறவு இனத்து அன்ன வாளோர் மொய்ப்ப,
மரீஇயோர் அறியாது, மைந்துபட் டன்றே
நோயிலன் ஆகிப் பெயர்கதில் அம்ம!
பழன மஞ்ஞை உகுத்த பீலி
கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்,
கொழுமீன், விளைந்த கள்ளின்,
விழுநீர் வேலி நாடுகிழ வோனே.

## பொருளுரை:

### இவன் யார்?

இவன் யார்? என்குவை ஆயின், இவனே,
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய,
எய்கணை கிழித்த பகட்டுஎழில் மார்பின்,
மறலி அன்ன களிற்றுமிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்

இவன் யார் என்று கேட்பாயானால், சொல்கிறேன் கேள். அழகிய நெஞ்சில் புலிநிறம் பட்ட கவசம் அணிந்தவன். அந்த நிறம் பிறர் எய்த அம்புகளால் உருவானது. எமன் போன்ற களிற்றின்மேல் உள்ளான். அது கடலில் மிதக்கும் நாவாய்க் கப்பல் போல் வருகிறது. அதனைச் சூழ்ந்து சுறாமீன் கூட்டம் போல் வாள்வீரர்கள் மொய்த்துக்கொண்டு வருகின்றனர்.

### நாட்டின் சிறப்பு

பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்,

சுறவு இனத்து அன்ன வாளோர் மொய்ப்ப,

மரீஇயோர் அறியாது, மைந்துபட் டன்றே

நோயிலன் ஆகிப் பெயர்கதில் அம்ம!

பழன மஞ்ஞை உகுத்த பீல

அந்தக் களிற்றுக்கு மதம் பிடித்துவிட்டது என்பது அந்த வாள்வீரர்களுக்குத் தெரியவில்லை. அம்மம்ம! அவன் துன்பம் இல்லாமல் திரும்புவானாக! மயில் உகுத்த தோகையை உழவர் நெல் கட்டோடு சேர்த்துக் கட்டும் வயல்நாட்டை உடையவன் அவன்.

### நாட்டின் சிறப்பு

கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்,

கொழுமீன், விளைந்த கள்ளின்,

விழுநீர் வேலி நாடுகிழ வோனே.

கொழுத்த மீனில் விளைந்த கள்ளைப் பருகும் மக்கள் பருகும் நாட்டை உடையவன் அவன்.

## சொற்பொருள்:

புலிநிறக் கவசம் - தங்கினு தோலாற் - செய்யப்பட்ட கவசம். இதனை "மெய்புகு கருவி: என்பர். பூம்பொறி - பொலிவினையுடைய தோலினது இணைப்பு. . மரீஇயோர் - யானையைச் சூழ்ந்த பாகர். மைந்துபட்டன்று - மதம்பட்டது. சூட்டொடு - நெல்லரிக்க.

## புறநானூறு: 14

### மென்மையும்! வன்மையும்!

பாடியவர் : கபிலர்.

பாடப்பட்டோன் : சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன்.

திணை : பாடாண்.

துறை : இயன்மொழி.

துறை விளக்கம் : ஒருவரின் இயல்பான குணங்களை (நல்ல குணங்கள்) எடுத்துரைத்து, அவரிடமிருந்து மேலும் நல்ல செயல்களைக் கேட்கும் ஒரு பாட்டுத் துறை ஆகும்.

பாடல்:

கடுங்கண்ண கொல் களிற்றால்
காப் புடைய எழு முருக்கிப்,
பொன் இயல் புனை தோட்டியான்
முன்பு துரந்து, சமந் தாங்கவும்
பார்உடைத்த குண்டு அகழி

நீர் அழுவம் நிவப்புக் குறித்து,
நிமிர் பரிய மா தாங்கவும்
ஆவம் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும் குரிசில்!

வலிய ஆகும் நின் தாள்தோய் தடக்கை,
புலவு நாற்றத்த பைந்தடி
பூ நாற்றத்த புகை கொளீஇ, ஊன்துவை
கறிசோறு உண்டு வருந்துதொழில் அல்லது
பிறிதுதொழில் அறியா ஆகலின், நன்றும்

மெல்லிய பெரும! தாமே, நல்லவர்க்கு
ஆரணங்கு ஆகிய மார்பின், பொருநர்க்கு
இருநிலத்து அன்ன நோன்மை
செருமிகு சேஎய்! நின் பாடுநர் கையே.

## பொருளுரை:

### யானை படை சிறப்பு

கடுங்கண்ண கொல் களிற்றால்
காப் புடைய எழு முருக்கிப்,
பொன் இயல் புனை தோட்டியான்
முன்பு துரந்து, சமந் தாங்கவும்

பார்உடைத்த குண்டு அகழி

கோட்டைக்கதவுத் தடைமரத்தை முரிக்கக் கொல்களிற்றைப் பொன்பூண் போட்ட அங்குசத்தால் வலிமையுடன் குத்திப் போரிட்டுத் தாக்கவும்,

### மன்னனின் வீரம்

நீர் அழுவம் நிவப்புக் குறித்து,

நிமிர் பரிய மா தாங்கவும்

ஆவம் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்

சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்

பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும் குரிசில்!

நிலத்தைப் பிளந்து உருவாக்கிய அகழி நீரை நிவந்து தாண்டும்படிப் போர்க்குதிரைகளை இழுத்துப் பிடிக்கவும்,தேர்மீது இருந்துகொண்டு வில்லின் நாணை வலிமையாக இழுத்து எதிராளி வடுக் கொள அம்பு எய்யவும், பரிசிலர்களுக்கு அரிய அணிகலன்களை வழங்கவும்.

### கொடை சிறப்பு

வலிய ஆகும் நின் தாள்தோய் தடக்கை,

புலவு நாற்றத்த பைந்தடி

பூ நாற்றத்த புகை கொளீஇ, ஊன்துவை

கறிசோறு உண்டு வருந்துதொழில் அல்லது

பிறிதுதொழில் அறியா ஆகலின், நன்றும

வலிமையாக உள்ளது. என் கை மென்மையாக உள்ளது. ஏனென்றால்… புலால் நாறும் கறித்துண்டைப் பூமணம் கமழும் தீயில் வாட்டி, உணவும், துவையலும்.

### மெல்லிய பெரும!

மெல்லிய பெரும! தாமே, நல்லவர்க்கு

ஆரணங்கு ஆகிய மார்பின், பொருநர்க்கு

இருநிலத்து அன்ன நோன்மை

செருமிகு சேஎய்! நின் பாடுநர் கையே.

கறிச்சோறுமாக நீ வழங்கியதை உண்டு வருந்தும் தொழில் அல்லது வேறு தொழில் அறியாததால் மென்மையாக உள்ளது.

## சொற்பொருள்:

எழு - கணையமரம். பொன் - இரும்பு. தோட்டி - அங்குசம். குண்டு அகழி - குழிந்த அகழி அழமுடைய அகழி எனும் ஆம். நீர் அழுவம் - நீர்ப்பரப்பு. நிவப்பு - உயர்ச்சி. நிமிர்பரிய - துகைத்த செலவினையுடைய. ஆவம் -. அம்பறாத்தூணி. புறத்தை - முதுகை உடையாய்.. சாபம் - வில். பைந்தடி, - செவ்விய தசை. நன்றும் - பெரிதும்.

நல்லவர் - பெண்கள். ஆரணங்கு ஆகிய மார்பு - ஆற்றுதற்கு அரிய, காண்பார் அதன் பேரழகால் வருந்துமாறு செய்யும் மார்பு. இரு நிலத்து அன்ன நோன்மை - - துளக்கப்படாமையின், பெரிய நிலம் போன்ற வலிமை.

## புறநானூறு: 15

### எதனிற் சிறந்தாய்?

பாடியவர் :கபிலர்.

பாடப்பட்டோன் : சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன்.

திணை : பாடாண்.

துறை : இயன்மொழி.

துறை விளக்கம் : ஒருவரின் இயல்பான குணங்களை (நல்ல குணங்கள்) எடுத்துரைத்து, அவரிடமிருந்து மேலும் நல்ல செயல்களைக் கேட்கும் ஒரு பாட்டுத் துறை ஆகும்.

பாடல்:

கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்,

வெள்வாய்க் கழுதைப் புல்லினப் பூட்டிப்,

பாழ்செய் தனை, அவர் நனந்தலை நல்லெயில்

புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்,

வெள்ளுளைக் கலிமான் கவிகுளம்பு உகளத்

தேர்வழங் கினைநின் தெவ்வர் தேஎத்துத்

துளங்கு இயலாற், பணை எருத்தின்,

பா வடியாற், செறல் நோக்கின்,

ஒளிறு மருப்பின் களிறு அவர

காப் புடைய கயம் படியினை்

அன்ன சீற்றத்து அனையை் ஆகலின்,

விளங்கு பொன் எறிந்த நலங்கிளர் பலகையொடு

நிழல்படு நெடுவேல் ஏந்தி ஒன்னார்

ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்,

நசைதர வந்தோர் நசைபிறக்கு ஒழிய,

வசைபட வாழ்ந்தோர் பலர்கொல்? புரையில்

நற் பனுவல் நால் வேதத்து
அருஞ் சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெய்ம் மலி ஆவுதி பொங்கப், பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி,

யூபம் நட்ட வியன்களம் பலகொல்?
யாபல கொல்லோ? பெரும! வார் உற்று
விசிபிணிக் கொண்ட மண்கனை முழவின்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினோய்! நினக்கே

## பொருளுரை:

### மன்னனின் குணம்

கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்,
வெள்வாய்க் கழுதைப் புல்லினப் பூட்டிப்,
பாழ்செய் தனை, அவர் நனந்தலை நல்லெயில்
புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்,
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம்பு உகளத

நீ சினம் மிக்கவன். அதனால் பகைவர் நாட்டில் தேர் நடத்தினாய். அந்தத் தேர்க்கால் பள்ளத்தில் கழுதை ஏர் பூட்டி உழுதாய். அவரது கோட்டைகளை அழித்தாய். பறவைகள் மேயும் விளைவயல்கள் உன் குதிரைக் குளம்புகளால் மிதிபடத் தேரோட்டினாய்.

### யானை படை சிறப்பு

தேர்வழங் கினைநின் தெவ்வர் தேஎத்துத்
துளங்கு இயலாற், பணை எருத்தின்,
பா வடியாற், செறல் நோக்கின்,
ஒளிறு மருப்பின் களிறு அவர
காப் புடைய கயம் படியினை

நடை பயில்வதும், பருத்த முதுகுக் கொட்டேறியும், பரந்த காலடியும், அழிக்கும் பார்வையும், ஒளி வீசும் கொம்புகளையும் கொண்டதுமான உன் யானைகளை ஊர்மக்கள் குடிப்பதற்காகப் பாதுகாக்கப்பட்ட குளத்தில் குளித்துத் திளைக்கும்படி செய்தாய்.

### காலாள் படை சிறப்பு

அன்ன சீற்றத்து அனையை் ஆகலின்,

விளங்கு பொன் எறிந்த நலங்கிளர் பலகையொடு

நிழல்படு நெடுவேல் ஏந்தி ஒன்னார்

ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்,

நசைதர வந்தோர் நசைபிறக்கு ஒழிய,

இப்படிப்பட்ட சீற்றம் கொண்டவன் நீ. பொன் கேடயமும் வேலும் ஏந்தி பகைவர் நடத்திய காலாள் படையை வெல்லும்.

### வேள்வி சிறப்பு

வசைபட வாழ்ந்தோர் பலர்கொல்? புரையில்

நற் பனுவல் நால் வேதத்து

அருஞ் சீர்த்திப் பெருங் கண்ணுறை

நெய்ம் மலி ஆவுதி பொங்கப், பன்மாண்

வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி,

ஆசையோடு போரிட்டும், ஏமாந்தும் மக்கள் வசை பாட வாழ்ந்தவர் பலரா? அல்லது, நால்வேதச் சிறப்புக் குழியில் நெய் ஊற்றி ஆவி பொங்க வேள்வி செய்து தூண் நட்டுச் சிறப்பெய்தியவர் பலரா?

### வலிமை மிக்கவனே!

யூபம் நட்ட வியன்களம் பலகொல்?

யாபல கொல்லோ? பெரும! வார் உற்று

விசிபிணிக் கொண்ட மண்கனை முழவின்

பாடினி பாடும் வஞ்சிக்கு

நாடல் சான்ற மைந்தினோய்! நினக்கே

கனைமுழவினை முழக்கிக்கொண்டு உன்னைப் பாடும் பாடினியின் வஞ்சிப் பாடலை விரும்பும் வலிமை மிக்கவனே!

### அருஞ்சொற்பொருள்:

ஞெள்ளல் - தெரு. புல்லினம் - புல்லிய நிரையினை் அதாவது கழுதைகளை. நனந்தலை - அகன்ற இடம். அவர - அகரம் அறனுருப் பன்மைக் கண் வந்தது அவருடைய என்பது பொருள். பலகை - கிடுகு : கேடகம். தார் - தூசிப்படை, முன்செல்லும் படை. நசை தர - தம் அசை.கொடு வர. பிறக்கொழிய - பின்னொழிய. வசை - பழிப்பு. கண்ணுறை - வேள்விக்குரிய சமிதை முதலியன. யூபம் - வேள்வி செய்யுமிடத்து நடப்படும்

தூண். மண்களை மார்ச்சனை முழவின்கண் இன்னோசை உண்டாகும் பொருட்டுப் பூச்சிடும் ஒருவகைச் சாந்து. வஞ்சி - பகைமேற் செல்லுதலைக் குறித்த துறையமைந்த புறப்பாடல்.

## புறநானூறு: 16

### செவ்வானும் சுடுநெருப்பும்!

பாடியவர் : பாண்டரங் கண்ணனார்.

பாடப்பட்டோன் : சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி.

திணை : வஞ்சி.

துறை : மழபுல வஞ்சி.

துறை விளக்கம் : மழ என்ற உரிச்சொற்கு “இளமை“ என்பது பொருள். இளமை, வளமார்ந்த உடற்கட்டினை உடையதாதல். பகைவர் நாட்டு வளங்களைக் கவர்ந்து கொள்வது பற்றி மழபுல வஞ்சி என்னும் பெயரைப் பெற்றது.

பாடல்:

வினை மாட்சிய விரை புரவியொடு,

மழை யுருவின தோல் பரப்பி,

முனை முருங்கத் தலைச்சென்று, அவர்

விளை வயல் கவர்பு ஊட்டி

மனை மரம் விறகு ஆகக்

கடி துறைநீர்க் களிறு படீஇ

எல்லுப்பட இட்ட சுடுதீ விளக்கம்

செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்றப்,

புலம்கெட இறுக்கும் வரம்பில் தானைத்,

துணை வேண்டாச் செரு வென்றிப்,

புலவு வாள் புலர் சாந்தின்

முருகன் சீற்றத்து, உருகெழு குருசில்!

மயங்கு வள்ளை, மலர் ஆம்பல்,

பனிப் பகன்றைக், கனிப் பாகல்,

கரும்பு அல்லது காடு அறியாப்

பெருந் தண்பணை பாழ் ஆக,

ஏமநன் னாடு ஒள்ளெரி ஊட்டினை,

நாம நல்லமர் செய்ய,

ஓராங்கு மலைந்தன, பெரும! நின் களிறே.

**பொருளுரை:**

**படை சிறப்பு**

வினை மாட்சிய விரை புரவியொடு,

மழை யுருவின தோல் பரப்பி,

முனை முருங்கத் தலைச்சென்று, அவர்

விளை வயல் கவர்பு ஊட்டி

மனை மரம் விறகு ஆகக்

செயல்திறம் மிக்க குதிரைப்படை, மழைமேகம் போன்ற காலால் படை ஆகியவை முரியும்படி போரிட்டான். அவர்களது விளைவயல்களில் தம் குதிரைகளை மேயவிட்டான். அவர்களது வீட்டு மரங்களை எரிக்கும் விறகாக்கிக்கொண்டான்.

**ஊரை அழித்தல்**

கடி துறைநீர்க் களிறு படீஇ

எல்லுப்பட இட்ட சுடுதீ விளக்கம்

செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்றப்,

புலம்கெட இறுக்கும் வரம்பில் தானைத்,

துணை வேண்டாச் செரு வென்றிப

காவல் மிக்க அவர்களது நீர்த் துறைகளில் களிறுகளைக் குளிக்கும்படிச் செய்தான். பட்டப்பகலில் அவன் ஊரை எரிக்கும் தீ மாலையில் சூரியன் மறையும்போது தோன்றுவது போல வானத்தைச் செந்நிறம் கொள்ளச் செய்தது.

**மன்னனின் குணம்**

புலவு வாள் புலர் சாந்தின்

முருகன் சீற்றத்து, உருகெழு குருசில்!

மயங்கு வள்ளை, மலர் ஆம்பல்,

பனிப் பகன்றைக், கனிப் பாகல்,

கரும்பு அல்லது காடு அறியாப

நிலத்தில் துகள் பரக்கச்செய்யும் வரம்பில்லாத பெரும்படை கொண்டவன். யாரையும் துணைக்குச் சேர்த்துக் கொள்ளாமல் தானே வெற்றி கண்டவன். கையிலே புலால் நாறும் வாள். மார்பிலே சந்தனம். கடவுள் முருகன் போல் சீற்றமும் உருவமும் கொண்டவன்.

### யானை படை சிறப்பு

பெருந் தண்பணை பாழ் ஆக,

ஏமநன் னாடு ஒள்ளரி ஊட்டினை,

நாம நல்லமர் செய்ய,

ஓராங்கு மலைந்தன, பெரும! நின் களிறே

வள்ளை, ஆம்பல், பகன்றை, பாகல், கரும்பு ஆகியவற்றைக் கொண்ட வயல்நாடு பாழாகும்படி எரி ஊட்டினான். இதற்கு உதவியது இவனது யானை.

### சொற்பொருள்:

தோல் - பரிசை. முருங்க - கலங்க. கவர்பு ஊட்டி - கொள்ளையூட்டி கடிதுறை - காவற் பொய்கை உண்ணு நீருடையதாகலின் அதனுள் மக்கள், விலங்குகள் இறங்கிப் படிந்து மாசுபடாவண்ண காதல் மரபாகலின், இவ்வாறு கூறுவர். எல்லுப்பட - விளக்கமுண்டாக. உரு - அச்சம். நாமம் - அச்சம்.

### புறநானூறு: 17

### யானையும் வேந்தனும்!

பாடியவர் : குறுங்கோழியூர் கிழார்.

பாடப்பட்டோன் : சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.

திணை : வாகை.

துறை :இயன்மொழி.

துறை விளக்கம் : ஒருவரின் இயல்பான குணங்களை (நல்ல குணங்கள்) எடுத்துரைத்து, அவரிடமிருந்து மேலும் நல்ல செயல்களைக் கேட்கும் ஒரு பாட்டுத் துறை ஆகும்.

பாடல்:

தென் குமரி, வட பெருங்கல்,

குண குட கடலா வெல்லை,

குன்று, மலை, காடு, நாடு

ஒன்று பட்டு வழி மொழியக்,

கொடிது கடிந்து, கோல் திருத்திப், 05

படுவது உண்டு, பகல் ஆற்றி,

இனிது உருண்ட சுடர் நேமி
முழுது ஆண்டோர் வழி காவல!
குலை இறைஞ்சிய கோள் தாழை
அகல் வயல், மலை வேலி,

நிலவு மணல் வியன் கானல்,
தெண் கழிமிசைச் சுடர்ப் பூவின்,
தண் தொண்டியோர் அடு பொருந!
மாப் பயம்பின் பொறை போற்றாது,
நீடு குழி அகப் பட்ட
பீடு உடைய எறுழ் முன்பின்
கோடு முற்றிய கொல் களிறு,
நிலை கலங்கக் குழி கொன்று,
கிளை புகலத் தலைக்கூடி யாங்கு
நீ பட்ட அரு முன்பின்,

பெருந் தளர்ச்சி, பலர் உவப்பப்,
பிறிது சென்று, மலர் தாயத்துப்
பலர் நாப்பண் மீக் கூறலின்,
உண் டாகிய உயர் மண்ணும்,
சென்று பட்ட விழுக் கலனும்,
பெறல் கூடும், இவன்நெஞ்சு உறப்பெறின்எனவும்,
ஏந்து கொடி இறைப் புரிசை,
வீங்கு சிறை, வியல் அருப்பம்,
இழந்து வைகுதும், இனிநாம் இவன்
உடன்று நோக்கினன், பெரிது எனவும்,

வேற்று அரசு பணி தொடங்குநின்
ஆற்ற லொடு புகழ் ஏத்திக்,
காண்கு வந்திசின், பெரும! ஈண்டிய

மழையென மருளும் பல் தோல், மலையெனத்
தேன்இறை கொள்ளும் இரும்பல் யானை,
உடலுநர் உட்க வீங்கிக், கடலென
வான்நீர்க்கு ஊக்கும் தானை, ஆனாது
கடுஒடுங்கு எயிற்ற அரவுத்தலை பனிப்ப,
இடியென முழங்கு முரசின்,
வரையா ஈகைக் குடவர் கோவே!

## பொருளுரை:

### ஊர் சிறப்பு

தென் குமரி, வட பெருங்கல்,
குண குட கடலா வெல்லை,
குன்று, மலை, காடு, நாடு
ஒன்று பட்டு வழி மொழியக்,
கொடிது கடிந்து, கோல் திருத்திப்,
படுவது உண்டு, பகல் ஆற்றி,

இந் நாவலந்தீவு முழுவதும் ஒருகாலத்தே ஒரு குடைக் கீழ்ப் பேரரசாக ஆண்டவர் சேரர். தீத்தொழில் போக்கி அறம் பேணி ஆணை செலுத்திவந்த அரச மரபினர் அவர். அவர் மரபைக் காத்தவனே! தென்னையும்.வயலும் மலையும் கடற்கரையுமாக விளங்கும் தொண்டித் துறையின் தலைவனே!

### மன்னனின் புகழ்

இனிது உருண்ட சுடர் நேமி
முழுது ஆண்டோர் வழி காவல!
குலை இறைஞ்சிய கோள் தாழை
அகல் வயல், மலை வேலி,

யானைபடுங் குழியிலே செருக்கால் அறிவிழந்து வீழ்ந்தது ஒரு களிறு பின், அதனைத் தன் வலிய: கொம்புகளால் தார்த்துத் தானே வெளிப்பட்டுத் தன் இனத்தோடும் சேர்ந்தது. அ:.தேபோல., நீயும் உற்ற தளர்ச்சி நீங்கிச், சூழ்ச்சியாற் பலரும் மகிழ, நின் சுற்றத்தார் நடுவே உயர்வுடன் வந்து விளங்குகின்றாய்.

## ஏவல் செய்யத் தொடங்கினர்

நிலவு மணல் வியன் கானல்,

தெண் கழிமிசைச் சுடர்ப் பூவின்,

தண் தொண்டியோர் அடு பொருந!

மாப் பயம்பின் பொறை போற்றாது,

நீடு குழி அகப் பட்ட

நீ சிறைப்படு முன்னர், நின்னால் அடிமைப் படுத்தப்பட்டோர், நீ பிணிப்புண்டதும் தம்நாடும் பொருளும் மீட்டும் பெறலாம். என நினைத்தனர்... அவ்வாறு எண்ணியோர் நின் வரவறிந்ததும், தாம் எடுத்த கொடியும் பிறவும் நிறுத்தி விட்டு, மீண்டும் நின்னைப் பணிந்து ஏவல் செய்யத் தொடங்கினர்.

### படை சிறப்பு

பீடு உடைய எறுழ் முன்பின்

கோடு முற்றிய கொல் களிறு,

நிலை கலங்கக் குழி கொன்று,

கிளை புகலத் தலைக்கூடி யாங்கு

நீ பட்ட அரு முன்பின்

பெருமானே! கார்மேகம் போலத் திரண்டெழும் பரிசைப் படையினையும், மலையென விளங்கும் யானைப் படையினையும், கடலெனப் பொரும் காலாட் படையினையும், இடிபோல முழங்கும் முரசினையும் எல்லார்க்கும் எப் பொருளும் வரையாது வழங்கும் வண்மை யினையும் உடையவனே! குட நாட்டினர் வேந்தனே! நீ வாழ்க!

### சொற்பொருள்:

படுவது - ஆறில் ஒன்றாகிய இறையை ஆறாவன் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐந்தொடு, அரசர்க்குரியதும் ஆக ஆறாம். பகல் - நடுவு நிலைமை. தாழை - இங்கு, தென்னை. சுடர்ப்பூ - தீப்போலும் செந்நிற . முடையஓஒரு பூ. அருப்பம் - அரண். பல் தோல் - பல பரிசைப் படை.

## புறநானூறு: 18

### நீரும் நிலனும்!

பாடியவர் : குடபுலவியனார்.

பாடப்பட்டோன் : பாண்டியன் நெடுஞ்செழியன்.

திணை : பொதுவியல்.

துறை : முதுமொழிக் காஞ்சி. பொருண்மொழிக் காஞ்சி எனவும் பாடம்.

பாடல்:

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்

பரந்து பட்ட வியன் ஞாலம்
தாளின் தந்து, தம்புகழ் நிறீஇ
ஒருதாம் ஆகிய உரவோர் உம்பல்!
ஒன்றுபத்து அடுக்கிய கோடிகடை இரீஇய

பெருமைத்து ஆக நின் ஆயுள் தானே!
நீர்த் தாழ்ந்த குறுங் காஞ்சிப்
பூக் கதூஉம் இன வாளை,
நுண் ஆரல், பரு வரால்,
குரூஉக் கெடிற்ற, குண்டு அகழி

வான் உட்கும் வடிநீண் மதில்
மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி,
ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த

நல்இசை நிறுத்தல் வேண்டினும், மற்றதன்
தகுதி கேள், இனி, மிகுதியாள!
நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்புற்று ஆயினும், நண்ணி ஆளும்

இறைவன் தாட்குஉத வாதே அதனால்,

அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே

நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்

தட்டோர் அம்ம, இவண்தட் டோரே

தள்ளா தோர்இவண் தள்ளா தோரே

## பொருளுரை:

### குலச் சிறப்பு

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்

பரந்து பட்ட வியன் ஞாலம்

தாளின் தந்து, தம்புகழ் நிறீஇ

ஒருதாம் ஆகிய உரவோர் உம்பல்!

ஒன்றுபத்து அடுக்கிய கோடிகடை இரீஇய

ஒலி முழங்கும் கடல் சூழ்ந்த. பரந்த நாடு இந் நாவலந் தீவு. இதனைத் தம் அரிய முயற்சியால் வெற்றிகொண்டு புகழ் பெற்றுத் தாமே ஒரு குடைக்குசூழ் அரசாண்ட வலிமை உடையவர் பாண்டியர். அவர் வழி வந்தவனே!

### வலிமிக்க வேந்தனே!

பெருமைத்து ஆக நின் ஆயுள் தானே!

நீர்த் தாழ்ந்த குறுங் காஞ்சிப்

பூக் கதூஉம் இன வாளை,

நுண் ஆரல், பரு வரால்,

குரூஉக் கெடிற்ற, குண்டு அகழி

கோடியினும் மேலான அண்டுகளாக நின் வாழ்நாள் நீடிப்பதாக! வாளை மீன்களும், அரல்களும், வரால்களும், கெளிறுகளும் நிறைந்த அகழி சூழ்ந்ததும், வானம் அளாவிய மதிலைக் கொண்டதும் ஆகிய பழைய "ஊரைத் தலைநகராக உடையவனே! வலிமிக்க வேந்தனே!

### மன்னனின் புகழ்

வான் உட்கும் வடிநீண் மதில்

மல்லல் மூதூர் வய வேந்தே!

செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,

ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி,

ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த

நீ மறுமை இன்பத்தை விரும்பினாலும், உலகு முழுவதையும் வெல்ல வேண்டுமென நினைத்தாலும், நிலைபெற்ற புகழை விரும்பினாலும், அதற்குச் செய்யவேண்டுவன யாவை எனக் கேட்பாயாக, நீர்மை இன்றி வாழாது உடல். அவ்வுடலுக்கு உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவரும் ஆவர்.

### உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே

நல்இசை நிறுத்தல் வேண்டினும், மற்றதன்

தகுதி கேள், இனி, மிகுதியாள!

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே

உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உணவால் உளதாவதுதான் மனித உடல். உணவோ நிலத்தின் விளைவும், நீரும் அகும். நீரையும் நிலத்தையும் ஒருங்குகூட்டி வேளாண்மைக்கு உதவுக, அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும் உடலையும் நிலைநிறுத்தி வாழ்வித்தவராவர். புன்செய் நிலம் இடமகன்றும் "விளையுள் பெருக்காமையினால் பயன் அற்றதாகும்.

உணவெனப் படுவது நிலத்தோடு நீரே

நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு

உடம்பும் உயிரும் படைத்திசி னோரே

வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்

வைப்புற்று ஆயினும், நண்ணி ஆளும

எனவே, செழியனே! இதனை நீ எண்ணுக. நீர் தடிந்து குளம்தொட்டு நின் நாடு எங்கணும் வளம் பெருக்குவாயாக! இது செய்தோர் மூவகை. இன்பமும் பெற்றுப் புகழடை வர் அல்லாதோர் புகழ்பெறாது மடி.வர் எனவும் உணர்வாயாக! (வேளாண் பெருக்கமே மன்னர்க்கு வலுவும் புகழும் தரும் என்ற மிகவுஞ் சிறந்த உண்மையை விளக்குவது இப் பாடல்.)

### சொற்பொருள்:

பெருமைத்து - சங்கம் முதலாகிய பேரெண்ணினை யுடைத்தாக. கெளிறு - மீனின் வகை. வடி. திருத்திய. தகுதி - வேட்கைக்குத் தக்க செய்கை. தாட்கு முயற்டிக்கு, நெளி மருங்கின் - குழிந்த விடத்தே.

### புறநானூறு: 19

### எழுவரை வென்ற ஒருவன்!

பாடியவர் : குடபுலவியனார்.

பாடப்பட்டோன் : பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

திணை : வாகை.

துறை : அரசவாகை.

துறை விளக்கம் : இது அரசனது இயல்பையோ, வெற்றியையோ எடுத்துரைப்பதாகும்

பாடல்:

இமிழ்கடல் வளைஇய ஈண்டுஅகல் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து,
மன்உயிர்ப் பன்மையும், கூற்றத்து ஒருமையும்.
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய!
இரும்புலி வேட்டுவன் பொறிஅறிந்து மாட்டிய

பெருங்கல் அடாரும் போன்ம் என விரும்பி,
முயங்கினேன் அல்லனோ யானே! மயங்கிக்
குன்றத்து இறுத்த குரீஇஇனம் போல,
அம்புசென்று இறுத்த அறும்புண் யானைத்
தூம்புஉடைத் தடக்கை வாயொடு துமிந்து

நாஞ்சில் ஒப்ப, நிலமிசைப் புரள,
எறிந்துகளம் படுத்த ஏந்துவாள் வலத்தர்
எந்தையோடு கிடந்தோர் எம்புன் தலைப்புதல்வர்
இன்ன விறலும் உளகொல், நமக்கு? என,
மூதில் பெண்டிர் கசிந்து அழ, நாணிக்

கூற்றுக்கண் ஓடிய வெருவரு பறந்தலை,
எழுவர் நல்வலங் கடந்தோய்! நின்
கழூஉ விளங்கு ஆரம் கவைஇய மார்பே?

## பொருளுரை:

### வெற்றிவேற் செழியனே!

இமிழ்கடல் வளைஇய ஈண்டுஅகல் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து,

மன்உயிர்ப் பன்மையும், கூற்றத்து ஒருமையும்.

நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய!

இரும்புலி வேட்டுவன் பொறிஅறிந்து மாட்டிய

ஒலிகடலாற் சூழ்ந்தது இவ்வுலகம். தன்கை ஒரு சமயம் தலையாலங்கானத்தில் மன்னர் பலர் தம்முட் கலந்து நின்றனர்அங்கு வீழ்ந்தாரோ கணக்கற்ற வீரர். அவர் உயிர் குடித்தவன் கூற்றுவனோ, நீயோ என ஒப்பிட்டுக் காண முயன்றவர் பலர். அத்தகைய வெற்றிவேற் செழியனே! புலி வேட்டை ஆடுவார்.

### மன்னனின் வீரம்

பெருங்கல் அடாரும் போன்ம் என விரும்பி,

முயங்கினேன் அல்லனோ யானே! மயங்கிக்

குன்றத்து இறுத்த குரீஇஇனம் போல,

அம்புசென்று இறுத்த அறும்புண் யானைத்

தூம்புஉடைத் தடக்கை வாயொடு துமிந்து

எந்திரமறிந்து கொளுத்திய கல்லையுடைய அடார் போன்றது நின் திண்ணிய முத்தார மார்பு. அதனை யானும் அன்று தழுவினேன் அல்லனோ? அக்களத்தை எண்ணிப் பாராய்! இருபெரு வேந்தன் சேரலாத சோழ்டுத் ஐம்பெரு வேளிரும் தம்முள் ஒருங்குகூடி நின்னை எதிர்த்து நின்றும், முடிவில் தாமே தோற்றனர்.

### வலிமை உடையவனே!

நாஞ்சில் ஒப்ப, நிலமிசைப் புரள,

எறிந்துகளம் படுத்த ஏந்துவாள் வலத்தர்

எந்தையோடு கிடந்தோர் எம்புன் தலைப்புதல்வர்

இன்ன விறலும் உளகொல், நமக்கு? என,

மூதில் பெண்டிர் கசிந்து அழ, நாணிக்

அச்சத்தால், மலையிடத்தே காற்றைக் கிழித்து. வேகமாகச் செல்லும் பறவையினம் போன்று, நின் படைவீரர் கடுகி . விடுத்த அம்புகள் களிறுகளின் கைகளைத் துளைத்தன. துளைத்த அக் கைகளுடன் அவற்றின் வாயினையும் சேர்த்து வெட்டி வீழ்த்தினர். அவை நிலம் உழும் கலப்பைகள் போன்று தரைமேல் கிடந்தன. அத்தகைய சிறந்த வாள் வலிமை உடையவனே!

### ஆரம் கவைஇய மார்பே?

கூற்றுக்கண் ஓடிய வெருவரு பறந்தலை,

எழுவர் நல்வலங் கடந்தோய்! நின்

கழூஉ விளங்கு ஆரம் கவைஇய மார்பே?

அக் களத்துள் தம் தலைவரோடு தம் அரிய மைந்தரும் உடன் வீழ்ந்து கிடக்கக் கண்ட மறக்குடி. முதுதாயர் “இத்தகைய வெற்றியும் எமக்கு இனி உண்டோ?” எனக்

கூறி, இன்ப உவகையால் அழுதனரே! அதுகண்டு வெவ்வுயிர் வௌவிய கூற்றமும் அன்று நாணி நின்றதே! ஒருவனாய் இவ்வாறு எழுவரையும் மலைந்து நீ பெற்ற வெற்றிச் சிறப்பை என்னென்பது? (பாண்டியனின் வீரமும் ஆற்றலும் போர்க் களத்தின் கொடுமையும் பாடியது இது.)

## அருஞ்சொற்பொருள்:

ஈண்டு அகன் கிடக்கை - அணுச் செறிந்த அகன்ற உலகம். தமிழ் - தமிழ்ப்படை. தலை, அசை இடமும் ஆம். அடார் - விலங்குகளை அகப்படுத்தும் பொறி. இறுத்த தங்கிய. தூம்பு - துளை. துமிந்து - துணிக்கப்பட்டு. நாஞ்சில் கலப்பை. மூதில் பெண்டிர் - மறக்குடியிற் பிறந்த முதிய மகளிர். பறந்தலை - போர்க்களம். எழுவர் - சேரன், சோழன் என்னும் இரு பெருவேந்தரும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் எனும் ஐம்பெரு வேளிரும். கவைஇய – அகத்திடு

## புறநானூறு: 20

### மண்ணும் உண்பர்!

பாடியவர் : குறுங்கோழியூர்கிழார்.

பாடப்பட்டோன் : சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல்

இரும்பொறை மாந்தரஞ் சேரல் எனவும் குறிப்பர்.

திணை : வாகை.

துறை : அரச வாகை.

துறை விளக்கம் : இது அரசனது இயல்பையோ, வெற்றியையோ எடுத்துரைப்பதாகும்

பாடல்:

இரு முந்நீர்க் குட்டமும்,

வியன் ஞாலத்து அகலமும்,

வளி வழங்கு திசையும்,

வறிது நிலைஇய காயமும், என்றாங்கு

அவை அளந்து அறியினும், அளத்தற்கு அரியை

அறிவும், ஈரமும், பெருங்க ணோட்டமும்

சோறு படுக்கும் தீயோடு

செஞ் ஞாயிற்றுத் தெறல் அல்லது

பிறிது தெறல் அறியார் நின் நிழல்வாழ் வோரே

திருவில் அல்லது கொலைவில் அறியார்

நாஞ்சில் அல்லது படையும் அறியார்

திறனறி வயவரொடு தெவ்வர் தேய, அப்

பிறர்மண் உண்ணும் செம்மல் நின் நாட்டு

வயவுறு மகளிர் வேட்டு உணின் அல்லது,

பகைவர் உண்ணா அருமண் ணினையே்

அம்பு துஞ்சும்கடி அரணால்,

அறம் துஞ்சும் செங்கோலையே்

புதுப்புள் வரினும், பழம்புள் போகினும்,

விதுப்புற அறியா ஏமக் காப்பினை்

அனையை ஆகல் மாறே,

மன்னுயிர் எல்லாம் நின்அஞ் சும்மே.

## பொருளுரை:

### உன்னை அளக்க முடியாது.

இரு முந்நீர்க் குட்டமும்,

வியன் ஞாலத்து அகலமும்,

வளி வழங்கு திசையும்,

வறிது நிலைஇய காயமும், என்றாங்கு

அவை அளந்து அறியினும், அளத்தற்கு அரியை

கடலின் ஆழத்தையும், உலகின் பரப்பையும், காற்று வாழும் திசையையும், ஏதுமில்லாத ஆகாயத்தையும் என்று எல்லாவற்றையும் அளந்து அறிந்தாலும் உன்னை அளக்க முடியாது.

## மன்னனின் குணம்

அறிவும், ஈரமும், பெருங்க ணோட்டமும்

சோறு படுக்கும் தீயோடு

செஞ் ஞாயிற்றுத் தெறல் அல்லது

பிறிது தெறல் அறியார் நின் நிழல்வாழ் வோரே்

திருவில் அல்லது கொலைவில் அறியார்

உன் ஆட்சிக்குடை நிழலில் வாழ்பவர்கள் உன் அறிவு, இரக்கம், உதவும் எண்ணம் (கண்ணோட்டம்) ஆகியவற்றை அறிவர். அவர்களுக்குச் சோறாக்கும் தீ, வெயில்

ஆகியவற்றின் சூடு அல்லது வேறு சூடு தெரியாது. (பகைவர் ஊரைக் கொளுத்துதல் இல்லை) வானவில் அல்லது (பகைவரின்) கொலைவில் தெரியாது.

### படை சிறப்பு

நாஞ்சில் அல்லது படையும் அறியார்

திறனறி வயவரொடு தெவ்வர் தேய, அப்

பிறர்மண் உண்ணும் செம்மல் நின் நாட்டு

வயவுறு மகளிர் வேட்டு உணின் அல்லது,

பகைவர் உண்ணா அருமண் ணினையே

நிலத்தை உழும் கலப்பைப்படை அல்லது (பகைவர் தாக்கும்) கருவிப்படை தெரியாது. உன்னை எதிர்க்கும் படைத்திறம் அறிந்த வல்லாளரும், பகைவரும் தேயப் படைவர் மண்ணை நீ உண்டாய். ஆனால் உன் மண்ணைக் கருவுற்ற பெண்கள் உண்பதைத் தவிர வேறு யாரும் உண்டு அறியார்.

### நாட்டின் சிறப்பு

அம்பு துஞ்சும்கடி அரணால்,

அறம் துஞ்சும் செங்கோலையே

புதுப்புள் வரினும், பழம்புள் போகினும்,

விதுப்புற அறியா ஏமக் காப்பினை

அனையை ஆகல் மாறே,

மன்னுயிர் எல்லாம் நின்அஞ் சும்மே.

உன் கோட்டையில் அம்புகள் வேலை இல்லாமல் தூங்குகின்றன. நாட்டில் செங்கோல் அறம் தூங்குகிறது. உன் நாட்டுக்குள் புதிய பறவைகள் வந்தாலும், பழைய பறவைகள் போனாலும் மக்கள் விறுவிறுப்பு காட்டாமல் பாதுகாப்பாக வாழ்கின்றனர்.

### அருஞ்சொற்பொருள்:

குட்டம் - ஆழம். திருவில் - இந்திர வில். வயவு உறு. மகளிர் - கருப்பமுடைய பெண்டிர் அவர் ᵓ மண்ணையும் புளியையும் சாம்பரையும் சுவைத்துண்டல் இன்றும் இயல்பு என்பர்.

கொள்குறி வினா

1.பெருஞ் சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய் – என்று புகழப்பட்ட அரசன்

அ).பெரு பெயர் வழுதி

ஆ).உதியஞ் சேரலாதன்

இ).இளஞ்சேட் சென்னி

ஈ).பெருங்கடுக்கோ

2.எருமை அன்ன கடுங்கல் இடை தோறும் அனில் பாரக்கும் யானைய ” – என நாட்டை வர்ணிக்கும் புலவர்

அ). ஓதலாந்தையார்

ஆ). நரிவெரூஉத்தலையார்

இ). உறையூர் முதுகண்ணன்

ஈ). கோவூர் கிழார்

3.கழஞ்சுகளால் செய்த அணிகலனைப் பெற்றவர்

அ). பாடினி

ஆ) புலவர்

இ). பாணன்

ஈ). அறிவர்

விடைகள்

1. ஆ).உதியஞ் சேரலாதன்
2. ஆ) நரிவெரூஉத்தலையார்
3. அ). பாடினி

## குறுவினாக்கள்

1.கபிலர் சேரமான் கடுக்கோ வாழியதனை எங்ஙனம் பாடுகிறாா

2.தூங்கலோரியாா் உழவர்களின் வாழ்வியலை எங்ஙனம் விவரிக்கின்றன

## நெடுவினாக்கள்

1..மாந்தரஞ்சேரல் இரும்பொரையை குறுங்கோழியுா் கிழாா் எங்ஙனம் தம் கவிதைகளில் சிறப்பித்துள்ளாா?

(அல்லது)

குடபுலவியனாா் நெடுஞ்செழியனின் வெற்றிச்சிறப்பை விளக்கும் பாங்கை கட்டுரைக்க

பாடநூல்கள்

புறநானூறு- கழக வெளியீடு, சென்னை

சங்க இலக்கியம் - என்சிபிஎச் பதிப்பு, சென்னை

பிற பதிப்பக வெளியீடுகளாக வந்த சங்க இலக்கிய நூல்கள்

**Related Online Contents**

- **Tamil Virtual University Library – www.tamilvu.org/library**
  **http://www.virtualvu.org/library**
- **Project Madurai – www.projectmadurai.org.**
- **Chennai Library – www.chennailibrary.com**
  **http://www.chennailibrary.com**
- **Tamil Universal Digital Library- www.Ulib.prg**
  **http://www.ulib.prg**

# அலகு-2

## பதிற்றுப்பத்து - ஐந்தாம் பத்து (பரணர் பாடல்)

நோக்கம்

- சங்க இலக்கியங்களில் புறப்பொருள் பற்றி கூறும் நூல் பதிற்றுப்பத்தாகும்
- சேர மன்னர்களின் வரலாற்றுச் செய்திகளை கால ஒழுங்கின்படி விரித்துப் பேசும் நூல் பதிற்றுப்பத்தாகும்
- சங்க கால சேர மன்னர்களின் செங்கோன்மை கொடைத்திறம் படைப்பெருமை வீரம் முதலியவற்றை மற்றும் இன்றி சங்ககால சேர மக்களின் வாழ்க்கை முறையையும் ஆடல் மற்றும் இசைக்கலைஞர்களாகிய கூத்தர் பாணர் பொறுநர் விறலி முதலியவர் பற்றிய செய்திகளையும் கூறுவதால் சங்கத் தமிழ் மக்கள் பற்றிய சிறந்த நூலாக இந்நூல் விளங்குகிறது
- சேர மன்னர்கள் பற்றிய அரசியல் செய்திகளும் குறிப்பாக தம் குடிமக்கள் மீது கண்ணோட்டமும் தம் பகைவர் எடுத்து சினமும் சேர மன்னர்களின் வெற்றிக் கழிப்பும் சிறப்பித்து சுட்ட பெறுகின்றன
- ஒவ்வொரு சேர மன்னரும் 10 பாடல்கள் வீதம் 100 பாடல் அமைந்த இலக்கியமாகும்.இந் நூலில் 10 பதிகங்களில் எட்டு பதிகங்கள் மட்டுமே கிடைக்கப்பெறுகின்றன. முதல் பத்தும் இறுதி பத்தும் இல்லை.
- ஒவ்வொரு பாடலின் முடிவிலும் துறை வண்ணம் தூக்கு பெயர் ஆகிய குறிப்புகள் உள்ளன .பாடல் முழுவதும் பாடாண் திணையில் அமைந்துள்ள ஒரே நூல்.இந் நூலில் 18 துறைகள் 3 வண்ணங்கள் 3 தூக்குகள் உள்ளன பதிகம் என்னும் தொகுப்பு செய்தி அமைந்துள்ளது
- இப்பதிகங்களுக்குக் கட்டமைப்பு சிறப்பு உண்டு பதிகத்தின் முதல் பகுதி கவிதையாகவும் ஆசிரியர் நடையிலும் இரண்டாம் பகுதி உரைநடை பகுதியாகவும் உள்ளது

- இரு சேர அரச மரபினரைப் பற்றிய நூலாகப் பதிற்றுப்பத்து அமைந்துள்ளது.

## பதிற்றுப்பத்து - ஐந்தாம் பத்து

பாடியவர் :பரணர் - பாட்டுடைத் தலைவன்: கடல் பிறகு ஓட்டிய செங்குட்டுவன்

பாடல்: 1

பெயர் - சுடர் வீ வேங்கை
துறை - காட்சி வாழ்த்து
வண்ணம் - ஒழுகு வண்ணம்
தூக்கு - செந்தூக்கு

பெயர் விளக்கம்: களிறு தன் சினத்தால் செய்த செயல்கள் எல்லாம் வேங்கை காரணமாக நின்றமையால் இப்பாடலுக்கு சுடர் வீ வேங்கை என்று பெயராயிற்று

புணர் புரி நரம்பின் தீம் தொடை பழுனிய
வணர் அமை நல் யாழ் இளையர் பொறுப்ப
பண் அமை முழவும் பதலையும் பிறவும்
கண் அறுத்து இயற்றிய தூம்பொடு சுருக்கி
காவில் தகைத்த துறை கூடு கலப்பையர்
கைவல் இளையர் கடவுள் பழிச்ச
மற புலி குழூஉ குரல் செத்து வய களிறு
வரை சேர்பு எழுந்த சுடர் வீ வேங்கை
பூ உடை பெரும் சினை வாங்கி பிளந்து தன்
மா இரும் சென்னி அணிபெற மிலைச்சி
சேஎர் உற்ற செல் படை மறவர்
தண்டு உடை வலத்தர் போர் எதிர்ந்து ஆங்கு
வழை அமல் வியன் காடு சிலம்ப பிளிறும்
மழை பெயல் மாறிய கழை திரங்கு அத்தம்
ஒன்று இரண்டு அல பல கழிந்து திண் தேர்
வசை இல் நெடுந்தகை காண்கு வந்திசினே
தாவல் உய்யுமோ மற்றே தாவாது
வஞ்சினம் முடித்த ஒன்றுமொழி மறவர்
முரசு உடை பெரும் சமத்து அரசு பட கடந்து

வெவ்வர் ஓச்சம் பெருக தெவ்வர்
மிளகு எறி உலக்கையின் இரும் தலை இடித்து
வைகு ஆர்ப்பு எழுந்த மை படு பரப்பின்
எடுத்தேறு ஏய கடிப்பு புடை வியன்ஃகண்
வலம் படு சீர்த்தி ஒருங்கு உடன் இயைந்து
கால் உளை கடும் பிசிர் உடைய வால் உளைக்
கடும் பரி புரவி ஊர்ந்த நின்
படும் திரை பனி கடல் உழந்த தாளே

பாடற்பொருள்

வழியின் இயல்பு :1-16

புணர் புரி நரம்பின் தீம் தொடை பழுனிய
வணர் அமை நல் யாழ் இளையர் பொறுப்ப
பண் அமை முழவும் பதலையும் பிறவும்
கண் அறுத்து இயற்றிய தூம்பொடு சுருக்கி
காவில் தகைத்த துறை கூடு கலப்பையர்
கைவல் இளையர் கடவுள் பழிச்ச
மற புலி குழூஉ குரல் செத்து வய களிறு
வரை சேர்பு எழுந்த சுடர் வீ வேங்கை
பூ உடை பெரும் சினை வாங்கி பிளந்து தன்
மா இரும் சென்னி அணிபெற மிலைச்சி
சேஎர் உற்ற செல் படை மறவர்
தண்டு உடை வலத்தர் போர் எதிர்ந்து ஆங்கு
வழை அமல் வியன் காடு சிலம்ப பிளிறும்
மழை பெயல் மாறிய கழை திரங்கு அத்தம்
ஒன்று இரண்டு அல பல கழிந்து திண் தேர்
வசை இல் நெடுந்தகை காண்கு வந்திசினே

தாளத்தோடு கூடியதும் முறுக்கிய நரம்பின் இனிய இசை நிறைவுற்றதும் வளைந்த அமைப்பினை உடையதுமான நல்ல யாழினை இளைய மகளிர் தாங்க, தன் கண்களிலே இசை அமைந்த மத்தளமும் ஒரு கண் மாக்கினையும் பிற வாத்தியங்களும் மூங்கிலின் கணுக்களை அறுத்து ஏற்றப்பட்ட பெரு வங்கியமும் ஆகிய கருவிகளை ஒன்றாகச் சேர்த்து காவடியில் கட்டிய ஆடற்றுறைக்கு வேண்டவன எல்லாம் கட்டின முட்டுக்களை உடையவராய் யாழ் வாசித்தலில் வல்ல இளையர் கடவுளை வாழ்த்துகின்றனர் அப்பாட்டொளியை மறத்தை

உடைய புலி கூட்டத்தினது குரலென கருதி வலிமையை உடைய ஆண் யானை பக்க மழையை பொருந்தி வளர்ந்த ஒளிவிடும் பூக்களை உடைய வேங்கை மரத்தினது அழகுடைய பெரிய கிளையினை வளைத்துப் பிளந்து கரிய பெரிய தலையில் அழகு பெற சூடி வருகிறது. அது திரளுதல் பொருந்திய பகைவர் மேல் செல்கின்ற படை வீரர் தண்டை உடைய வெற்றியை உடையவராகி போரை ஏற்றுக்கொண்டு ஆரவாரித்தாற் போல இருக்கிறது. மேலும் சுரபுன்னைகள் நெருங்கி வளர்ந்த அகன்ற காடு எதிரொலி செய்யும்படி முழங்குகின்றது. மழை பெய்தல் நீங்கியதால் மூங்கில் வாடிய அரிய வழிகள் ஒன்று இரண்டு அல்லாதனவாகிய பலவற்றைக் கடந்து வந்து திண்ணிய தேரை உடைய பழியில்லாத நெடுந்தகையே நின்னை காணும் பொருட்டு வந்தேன்

செங்குட்டுவனின் வெற்றிச்சிறப்பு:17-27

தாவல் உய்யுமோ மற்றே தாவாது
வஞ்சினம் முடித்த ஒன்றுமொழி மறவர்
முரசு உடை பெரும் சமத்து அரசு பட கடந்து
வெவ்வர் ஓச்சம் பெருக தெவ்வர்
மிளகு எறி உலக்கையின் இரும் தலை இடித்து
வைகு ஆர்ப்பு எழுந்த மை படு பரப்பின்
எடுத்தேறு ஏய கடிப்பு புடை வியன்ஃகண்
வலம் படு சீர்த்தி ஒருங்கு உடன் இயைந்து
கால் உளை கடும் பிசிர் உடைய வால் உளைக்
கடும் பரி புரவி ஊர்ந்த நின்
படும் திரை பனி கடல் உழந்த தாளே

வருத்தமின்றி தாம் கூறிய சபதங்களை நிறைவேற்றிய தம் தலைவர் கூறுவதையே தாமும் கூறும் ஒன்றாகிய மொழிகளை உடைய வீரர் முரசை உடைய பெரிய போரின் கண் அரசர்கள் இறக்கும்படி வெல்ல வேண்டிய வெம்மையின் மிகுதி பெருகவும் பகைவரது கரிய தலையை உலக்கையால் இடித்த மிளகை போல இடித்து இடையறாமல் தங்கின ஆரவாரமும் எழுந்த கடுமை உண்டாகின்ற கடற்பரப்பில் எடுத்தெரித்தலை ஏவிய குறுந்தடியால் அடிக்கப்படும் அகன்ற கண்ணை உடைய முரசத்தால் வெற்றியால் உண்டான மிக்க புகழ் ஒருங்கு சேர்ந்து பொருந்திக் காற்றால் ஒலித்தலை உடைய மிக்க பிசிராக உடையும்படி வெள்ளிய தலையாட்டத்தை அணிந்த விரைந்த செலவினை உடைய குதிரைமீது ஏறிச்சென்ற உன் கால்கள் அவ்வருத்தத்தில் இன்றும் நீங்குமோ கூறுவாயாக

அருஞ்சொற்பொருள்:

பழனிய -முற்றுப்பெற்ற, பொறுப்ப -சுமந்து செல்ல ,பதிலை- ஒரு கண் உடைய மாக்கினை, தூங்கு -இசைக்கருவி ,கா- தோலின் இரு பக்கமும் அமையுமாறு சுமந்து செல்லும் காவுதடி, தகைத்த- கட்டிய ,கலப்பையர்- இசைத்துறைக்குரிய கருவிகளை உடைய

பையனை உடையவர் ,குழு குரல் -கூட்டத்தின் ஒலி, செத்து- கருதி ,மிலைச்சி-அணிந்து, தண்டு -உலக்கை தோமரம் எனும்படைக்கருவி ,வழை -சுரப்பண்ணை மரம், சிலம்ப- எதிரொலிக்க, கழை- மூங்கில் வஞ்சினம்- வீர மொழி தெவ்வர்- பகைவர் மைய்ப்படுபரப்பு -கருநிற கடல் கால் -காற்று

பாடல் : 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | தசும்பு துலங்கு இருக்கை |
| துறை | : | செந்துறை பாடாண் பாட்டு |
| வண்ணம் | : | ஒழுகு வண்ணம் |
| தூக்கு | : | செந்தூக்கு |
| பெயர் விளக்கம் | : | தன் களிப்பு மிகுதியால் தன்னை உண்டார் உடல்போல் அத்தசும்பிருந்து ஆடும்படியான இருப்பு என்ற சிறப்பான் இப்பெயராயிற்று |

இரும் பனம் புடையல் ஈகை வான் கழல்
மீன் தேர் கொட்பின் பனி கயம் மூழ்கி
சிரல் பெயர்ந்து அன்ன நெடு வெள் ஊசி
நெடு வசி பரந்த வடு வாழ் மார்பின்
அம்பு சேர் உடம்பினர்ச் சேர்ந்தோர் அல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
அன்னோர் பெரும நன்னுதல் கணவ
அண்ணல் யானை அடு போர் குட்டுவ
மைந்து உடை நல் அமர் கடந்து வலம் தரீஇ
இஞ்சி வீ விராய பைம் தார் பூட்டி
சாந்து புறத்து எறிந்த தசும்பு துளங்கு இருக்கை
தீம் சேறு விளைந்த மணி நிற மட்டம்
ஓம்பா ஈகையின் வண் மகிழ் சுரந்து
கோடியர் பெரும் கிளை வாழ ஆடு இயல்
உளை அவிர் கலிமா பொழிந்தவை எண்ணின்
மன்பதை மருள அரசு பட கடந்து
முந்து வினை எதிர்வர பெறுதல் காணியர்
ஒளிறு நிலை உயர் மருப்பு ஏந்திய களிறு ஊர்ந்து
மான மைந்தரொடு மன்னர் ஏத்த நின்
தேரொடு சுற்றம் உலகு உடன் மூய

மா இரும் தெண் கடல் மலி திரை பௌவத்து
வெண் தலை குரூஉ பிசிர் உடைய
தண் பல வரூஉம் புணரியின் பலவே

பாடற்பொருள்

வேந்தனது வெற்றிச்சிறப்பு:1-8

இரும் பனம் புடையல் ஈகை வான் கழல்
மீன் தேர் கொட்பின் பனி கயம் மூழ்கி
சிரல் பெயர்ந்து அன்ன நெடு வெள் ஊசி
நெடு வசி பரந்த வடு வாழ் மார்பின்
அம்பு சேர் உடம்பினர்ச் சேர்ந்தோர் அல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
அன்னோர் பெரும நன்நுதல் கனவ
அண்ணல் யானை அடு போர் குட்டுவ

கரிய பனந்தோட்டினால் கட்டப்பட்ட பனை மாலையினையும் பொன்னால் செய்த வீரக்கழலையும் உடைய நின் படை வீரர் இரையின் பொருட்டு மீனை ஆராயும் சுழற்சியால் குளிர்ச்சியை உடைய குளத்தில் மூழ்கி மீன் கொத்திப்பறவை மேலேவஎழுந்தாற் போன்ற நெடிய வெள்ளிய ஊசியினது நீண்ட கூர்மை தைத்ததனால் பரவிய தழும்பு ஆழ்ந்த மார்பினையும் அம்புகள் தைத்த உடம்பினையும் உடையராய்த் தம்மோடு போரிட வந்தவரோடு அன்றி ஏனையாரோடும் தும்பைசூடாமல் போர் செய்யும் பெருமை உடையவராவர் நல்ல நெற்றியை உடைய சேரமாதேவியின் கணவர் பெருமை பொருந்திய யானையினை உடைய கொல்லுகின்றபோரில் வல்ல செங்குட்டுவனை!

செங்குட்டுவனின்கொடைச்சிறப்பு :9-23

மைந்து உடை நல் அமர் கடந்து வலம் தரீஇ
இஞ்சி வீ விராய பைம் தார் பூட்டி
சாந்து புறத்து எறிந்த தசும்பு துளங்கு இருக்கை
தீம் சேறு விளைந்த மணி நிற மட்டம்
ஓம்பா ஈகையின் வண் மகிழ் சுரந்து
கோடியர் பெரும் கிளை வாழ ஆடு இயல்
உளை அவிர் கலிமா பொழிந்தவை எண்ணின்
மன்பதை மருள அரசு பட கடந்து
முந்து வினை எதிர்வர பெறுதல் காணியர்
ஒளிறு நிலை உயர் மருப்பு ஏந்திய களிறு ஊர்ந்து

மான மைந்தரொடு மன்னர் ஏத்த நின்
தேரொடு சுற்றம் உலகு உடன் மூய
மா இரும் தெண் கடல் மலி திரை பௌவத்து
வெண் தலை குரூஉ பிசிர் உடைய
தண் பல வரூஉம் புணரியின் பலவே

வலியுடைய நல்ல போரில் பகைவரை வஞ்சியாது எதிர் நின்று கொன்று வெற்றியை த்தந்தாய் இஞ்சியிணையும் பூவினையும் கலந்து தொடுத்த வாடாத மாலையைப் பூட்டி சந்தனத்தை வெளிப்புறத்தே பூசிய கட்குடங்கள் அசைகின்ற இருப்பிடங்களில் உள்ள இனிய சுவை முதிர்ந்த நீலமணியின் நிறத்தை உடைய கள்ளை தனக்கென்று எதனையும் பாதுகாவாத ஈகையால் நீ வளவிய மகிழ்ச்சியை அளிக்கின்றாய் கூத்தரது பெரிய சுற்றம் மகிழும்படி அவர்களுக்கு ஆடும் இயல்பினை உடைய தலையாட்டம் விளங்குகின்ற பல குதிரைகளை நீ வழங்கினாய் அதன் எண்ணிக்கை மக்கள் வியக்கும் படி இருந்தது வீரர்களோடு உயர்ந்த கொம்புகளைக் கொண்ட யானை மேல் ஏறி வந்தாய் . யானை மேல் நீ வருவதனை காண்பதற்காக உன் தேர் வீரரும், படைவீரரும் பிறரும் நெருங்கிச்சூழ்ந்தனர். மக்கள் நெருங்கி சூழ்ந்த பெரிய கடலாகிய அலைமிகுந்த நீர்ப்பரப்பில் வெண்மையான நுரையாகிய தலை பிசிராக உடையும் படி பல அலைகள் தோன்றும் அலைகளின் எண்ணிக்கையை விட நீ வழங்கும் குதிரைகளின் எண்ணிக்கை அதிகம

அருஞ்சொற்பொருள்:

புடையல் -மாலை ,ஈகை -பொன்,வான் -பெரிய ,கொட்பு- சுழற்சி, பனிக்கயம்- குளர்ச்சி உடைய குளம், சிரல்- மீன்கொத்தி பறவை, நெடுவசி- நீண்ட தழும்பு ,வடு- தழும்பு, மலைந்த -போர் செய்த ,அமர் -போர், வலம் -வெற்றி,வீ-மலர், தார்-மாலை, தசும்பு-கள்பானை, மட்டம்-மது, கள்,கோடியர்- கூத்தர்,உளை-தலையாட்டம்,கலிமா-செருக்குடைய குதிரை, மைந்தர் -வீரர்,புணரி- அலை.

பாடல் எண்:3

| | | |
|---|---|---|
| பெயர் | - | ஏறா ஏணி |
| துறை | - | இயல்மொழி வாழ்த்து |
| வண்ணம் | - | ஒழுகு வண்ணம் |
| தூக்கு | - | செந்தூக்கு |
| துறை விளக்கம் | : | இயன் மொழி வாழ்த்து, சேரனது வெற்றி சிறப்பும், நாட்டுச் சிறப்பும், கொடைச்சிறப்பும்,செல்வ மகிழ்ச்சி முதலியவற்றைக்கூறுவதால் இயன்மொழி வாழ்த்தாயிற்று |
| பெயர் விளக்கம் | : | கோக்காலியினை ஏணி என்று வெளிப்படுத்திய சிறப்பால் இப்பாடலுக்குஏறா ஏணிஎன்று பெயராயிற்று |

கவரி முச்சி கார் விரி கூந்தல்
ஊசல் மேவல் சே இழை மகளிர்
உரல் போல் பெரும் கால் இலங்கு வாள் மருப்பின்
பெரும் கை மதமாப் புகுதரின் அவற்றுள்
விருந்தின் வீழ் பிடி எண்ணுமுறை பெறாஅக்
கடவுள் நிலைய கல் ஓங்கு நெடு வரை
வட திசை எல்லை இமயம் ஆக
தென்னம் குமரியொடு ஆயிடை அரசர்
முரசு உடை பெரும் சமம் ததைய ஆர்ப்புஎழச்
சொல் பல நாட்டை தொல் கவின் அழித்த
போர் அடு தானை பொலம் தார் குட்டுவ
இரும்பணை திரங்கப் பெரும் பெயல் ஒளிப்ப

குன்றுவறம் கூரச் சுடர்சினம் திகழ
அருவி அற்ற பெரு வறல் காலையும்
அரும்செலல் பேர்ஆற்று இரும்கரை உடைத்துக்
கடிஏர் பூட்டிக் கடுக்கை மலைய
வரைவுஇல் அதிர்சிலை முழங்கி பெயல் சிறந்து
ஆர்கலி வானம் தளிசொரிந்து ஆங்கு
உறுவர் ஆர ஓம்பாது உண்டு
நகைவர் ஆர நன்கலம் சிதறி
ஆடுசிறை அறுத்த நரம்புசேர் இன் குரல்
பாடு விறலியர் பல்பிடி பெறுக
துய்வீ வாகை நுண் கொடி உழிஞை
வென்றி மேவல் உருகெழு சிறப்பின்
கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக
மன்றம் படர்ந்து மறுகு சிறை புக்கு
கண்டி நுண்கோல் கொண்டு களம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே என்றும்
இகல்வினை மேவலை ஆகலின் பகைவரும்
தாங்காது புகழ்ந்த தூங்குகொளை முழவின்
தொலையா கற்ப நின் நிலை கண்டிகுமே

நிணம்சுடு புகையொடு கனல் சினம் தவிராது
நிரம்புஅகல்பு அறியா ஏறாஏணி
நிறைந்து நெடிது இரா தசும்பின் வயிரியர்
உண்டு என தவாஅக் கள்ளின்
வண்கை வேந்தே நின் கலி மகிழானே

பாடற்பொருள்

வெற்றிச்சிறப்பு (1-11)

கவரி முச்சி கார் விரி கூந்தல்
ஊசல் மேவல் சே இழை மகளிர்
உரல் போல் பெரும் கால் இலங்கு வாள் மருப்பின்
பெரும் கை மதமாப் புகுதரின் அவற்றுள்
விருந்தின் வீழ் பிடி எண்ணுமுறை பெறாஅக்
கடவுள் நிலைய கல் ஓங்கு நெடு வரை
வட திசை எல்லை இமயம் ஆக
தென்னம் குமரியொடு ஆயிடை அரசர்
முரசு உடை பெரும் சமம் ததைய ஆர்ப்புஎழச்
சொல் பல நாட்டை தொல் கவின் அழித்த
போர் அடு தானை பொலம் தார் குட்டுவ

கவரி மயிர் போன்ற மென்மையான உச்சி கொண்டையையும் மேகம் போன்ற கரிய கூந்தலையும் அசைக்கின்ற அணிகலன்களையும் உடைய இளம் பெண்கள் உரல் போன்ற கால்களையும் வெண்மையான கொம்புகளையும் பெரிய கையினையும் உடைய மதயானைகள் வந்தால் அதில் புதிதாக வந்த விருப்பம் மிக்க பெண் யானைகளை எண்ண முயல்வர் .அவை எண்ணிக்கையில் அடங்க மாட்டா.அத்தகைய இயல்புடையதும் கடவுள் நிலை பெற்ற கற்கள் உயர்ந்து விளங்குவதும் ஆகிய இமயமலை முதல் தெற்கில் உள்ள குமரி வரை எல்லையாக இடைப்பட்ட நாடுகள் அனைத்தையும் வென்று வெற்றி ஆரவாரம் மிக்க படையினையும் பொன்னால் ஆகிய மாலையினையும் உடைய குட்டுவனே!

செங்குட்டுவனின் செல்வச்செழிப்பு:12-20

இரும் பணை திரங்கப் பெரும் பெயல் ஒளிப்ப
குன்று வறம் கூரச் சுடர்சினம் திகழ
அருவி அற்ற பெரு வறல் காலையும்
அரும் செலல் பேர்ஆற்று இரும்கரை உடைத்துக்
கடி ஏர் பூட்டிக் கடுக்கை மலைய

வரைவு இல் அதிர் சிலை முழங்கி பெயல் சிறந்து
ஆர் கலி வானம் தளி சொரிந்து ஆங்கு
உறுவர் ஆர ஓம்பாது உண்டு
நகைவர் ஆர நன்கலம் சிதறி

மிகுதியான வெம்மையால் மூங்கில்கள் காய்ந்து வாட ,குன்றுகள் பசுமை நீங்க வெப்ப மிகுதியால் அருவிகள் நீரற்றுக் கிடக்க அத்தகைய வறட்சி காலத்திலும் சேரன் நாட்டில் உள்ள பேரி ஆற்றின் அடைகரையில் உள்ள மக்கள் பொன்னேர் பூட்டிக் கொன்றைச்சூடி மகிழும் நிலையில் கடலிலிருந்து மேகங்கள் நீரைக் கொணர்ந்து பொழியும், அதுபோல தன்னை சார்ந்தோர் நிரம்ப பெரும்படி பொருளை பாதுகாவாமல் அவர்களுக்கு வழங்கி தானும் உண்டு பெண்களுக்குச் சிறந்த அணிகளைக் கொடுத்து விளங்குகின்றார்

கொடைச்சிறப்பு: 21-36

ஆடு சிறை அறுத்த நரம்பு சேர் இன் குரல்
பாடு விறலியர் பல் பிடி பெறுக
துய் வீ வாகை நுண் கொடி உழிஞை
வென்றி மேவல் உரு கெழு சிறப்பின்
கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக
மன்றம் படர்ந்து மறுகு சிறை புக்கு
கண்டி நுண் கோல் கொண்டு களம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே என்றும்
இகல் வினை மேவலை ஆகலின் பகைவரும்
தாங்காது புகழ்ந்த தூங்குகொளை முழவின்
தொலையா கற்ப நின் நிலை கண்டிகுமே
நிணம்சுடு புகையொடு கனல் சினம் தவிராது
நிரம்பு அகல்பு அறியா ஏறாஉஏணி
நிறைந்து நெடிது இரா தசும்பின் வயிரியர்
உண்டு என தவாஅக் கள்ளின்
வண் கை வேந்தே நின் கலி மகிழானே

இசைப்பறவையின் இசையை விட சிறப்பாக இன்குரலால் பாடும் விறலியர் பல பெண் யானைகளைப் பெறுவார்கள் .துய் பொருந்திய பூக்களை உடைய வாகையை முடியாகக் கொண்ட உழிஞையையும் வெற்றியினை விரும்புதலையும் அச்சம் பொருந்திய தலைமையையும் பகைநாட்டில் கொண்ட கொள்ளைப்பொருட்களையும் ஆற்றல் யானைகளையும் வீரர்கள் பெறுவார்களாக ஊர் மன்றங்களிலும் மருகுகளிலும் புகுந்து கணுக்கள் திரண்ட கோலினைக் கையில் கொண்டு போர்க்களத்தை வாழ்த்தி பாடும் பாடல்

குதிரைகளைப் பெறுவான் இவ்வாறு கொடுத்தலை விரும்பி அதற்காக போர் செய்தலை விரும்புகின்றவனாக உள்ளாய்.

பகைவர்கள் உம் மனம் அடங்காமல் புகழ்ந்த புகழ்ச்சியையும் ஆட்டத்திற்கேற்ற இசை பொருந்திய முரசினையும் கொண்டு, திகழும் சிறந்த கல்வியை உடையவனே! தீயின் வெப்பம் குறைதல் அறியாத இறைச்சியைச் சுடுவதால் உண்டாகும் புகை குறையாத கள் பானைகள் வைக்கும் கோக்காலி இடத்தே நிறைவும், குறைவும் அறியாப் பானைகளில் உள்ள கள்ளினைக் கூத்தர்கள் உண்பர். அவர்களுக்குக் கொடுக்கின்ற வள்ளன்மை பொருந்திய கைகளையுடைய வேந்தே! உன் ஆரவாரமிக்க திருவோலக்கத்திடத்தே( பிறந்த நாள் விழாவில்) சிறப்புகள் அனைத்தையும் கண்டோம் நீ வாழ்க!

அருஞ்சொற்பொருள்:

கார் - மேகம், இழை-ஆபரணம், சமம்-போர், ததைய- அழிய, பொலம்-பொன், திரங்க- வாட, வறல்- வறுமை, கடிஞர்- பொன்னர், கடுக்கை- கொன்றை, மலைய- அணிய, வாகை- மரம், மள்ளர்- வீரம், அகலவன்- பாணன், நிணம்- கொழுப்புடைய இறைச்சி, கனல்- தீ, ஏறா ஏணி - கோக்காலி, வயிரியர்- கூத்தர்

பாடல் எண்:4

| | | |
|---|---|---|
| பெயர் | - | நோய்தபு நோன் தொடை. |
| துறை | - | செந்துறைப் பாடாண்பாட்டு |
| வண்ணம் | - | ஒழுகு வண்ணம் |
| தூக்கு | - | செந்தூக்கு |
| பெயர் விளக்கம் | : | வலிமை உடையதும் நோய் நீங்கியதும் ஆகிய யாக்கை என சிறப்பித்து கூறினமையின் இச்செயலுக்கு நோய் தபு நோன்தொடை என்று பெயராயிற்று |

நிலம்புடைப்பு அன்ன ஆர்ப்பொடு விசும்பு துடையூ
வான்தோய் வெல்கொடி தேர்மிசை நுடங்கப்
பெரிய ஆயினும் அமர்கடந்து பெற்ற
அரிய என்னாது ஓம்பாது வீசி
கலம்செலச் சுரத்தல் அல்லது கனவினும்
களைக என அறியா கசடுஇல் நெஞ்சத்து
ஆடுநடை அண்ணல் நின் பாடுமகள் காணியர்
காணிலியரோ நின் புகழ்ந்த யாக்கை
முழு வலி துஞ்சும் நோய் தபு நோன் தொடை
நுண்கொடி உழிஞை வெல் போர் அறுகை
சேணன் ஆயினும் கேள் என மொழிந்து

புலம் பெயர்ந்து ஒளித்த களையா பூசற்கு
அரண்கள் தாவுநீஇ அணங்கு நிகழ்ந்து அன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு
நெடுமொழி பணித்து அவன் வேம்பு முதல் தடிந்து
முரசுசெய முரச்சி களிறுபல பூட்டி
ஒழுகை உய்த்தோய் கொழுஇல் பைந் துணி
வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை
கவலை கவற்றும் குராலம் பறந்தலை
முரசுடைத் தாயத்து அரசு பல ஓட்டித்
துளங்குநீர் வியலகம் ஆண்டு இனிது, கழிந்த
மன்னர் மறைத்த தாழி,
வன்னி மன்றத்து விளங்கிய காடே

பாடற்பொருள்

வேந்தனது கொடைத்திறம்: 1-9

வான்தோய் வெல்கொடி தேர்மிசை நுடங்கப்
பெரிய ஆயினும் அமர்கடந்து பெற்ற
அரிய என்னாது ஓம்பாது வீசி
கலம்செலச் சுரத்தல் அல்லது கனவினும்
களைக என அறியா கசடுஇல் நெஞ்சத்து
ஆடுநடை அண்ணல் நின் பாடுமகள் காணியர்
காணிலியரோ நின் புகழ்ந்த யாக்கை
முழு வலி துஞ்சும் நோய் தபு நோன் தொடை

நிலத்தை தாக்குவது போன்ற ஆரவாரத்தோடு வானத்தை துடைக்கும் வானளாவிய வெற்றிக் கொடியைத் தேர் மிசை அசைய போரில் எதிர்த்து அதனால் பெற்ற பொருள்கள் பெரிய ஆயினும் அருமையான ஆயினும் அவற்றை தனக்கென பாதுகாத்துக் கொள்ளாமல் பிறருக்கு கொடுத்து மகிழும் நீ, என் துன்பத்தை நீக்குங்கள் என்று கனவிலும் பிறரிடம் வேண்டுதலை அறியாதவனும் குற்றமற்ற நெஞ்சத்தை உடையவனும் வெற்றியால் பெருமித நடையை உடையவனும் ஆகிய தலைவனே!

வீரச்சிறப்பைச் கூறுதல்:10-17

நுண்கொடி உழிஞை வெல் போர் அறுகை
சேணன் ஆயினும் கேள் என மொழிந்து

புலம் பெயர்ந்து ஒளித்த களையா பூசற்கு
அரண்கள் தாவுநீஇ அணங்கு நிகழ்ந்து அன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு
நெடுமொழி பணித்து அவன் வேம்பு முதல் தடிந்து
முரசுசெய முரச்சி களிறுபல பூட்டி
ஒழுகை உய்த்தோய் கொழுஇல் பைந் துணி

உழிஞை மாலை சூடிப் போர் புரியும் அறுகை என்பவன் தனக்கு உதவி செய்ய கேட்டு குட்டுவன் நெடுந்தோரத்தில் இருந்தாலும் அவன் நண்பன் ஆவான் என்று கூறிப் பகைவன் ஆன மோகூர் மன்னனுக்கு அஞ்சி தன் நாட்டில் இருந்து ஓடி ஒழிந்தான் அவ்வாறு ஒழிந்ததால் அறுகையின் வருத்தம் நீங்க மோகூர் மன்னன் பழையன் மீது படையெடுத்துச் சென்று அவனுடைய அரண்களை அழித்தான். அவனுடைய முரசத்தைப் கைப்பற்றி அவனது வீரமொழியை அடக்கி பணியச் !செய்து அவனது காவல் மரம் ஆன வேம்பினை வெட்டினான். அதை முரசம் செய்ய வண்டியில் ஏற்றி வண்டியை யானைகளைப் பூட்டி இழுக்கச் செய்தான் அவ்வாறு வண்டியை செலுத்திய வேந்தே!

மன்னனை நெடுங்காலம் வாழ்க என வாழ்த்துதல்: 17-23

வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை
கவலை கவற்றும் குராலம் பறந்தலை
முரசுடைத் தாயத்து அரசு பல ஓட்டித்
துளங்குநீர் வியலகம் ஆண்டு இனிது, கழிந்த
மன்னர் மறைத்த தாழி,
வன்னி மன்றத்து விளங்கிய காடே

வீரர் அனைவரும் ஏத்தி புகழ்வதற்குக் காரணமானது வலிமை நிறைந்த நோயற்ற தான உன்னுடைய உடம்பினை உன்னைப் பாடுகின்ற பாண்மகள் காண்பாளாக, கொழுப்பு இல்லாத இறைச்சி துண்டினை வைத்து இடம் மறந்த உச்சி கொண்டையை உடைய ஆண் ஆந்தையைத் துன்புறுத்தும் பெண் ஆந்தை உடையது சுடுகாடு. அது பிணம் சுடும் இடத்தை முரசும் கொண்டு பழைய உரிமை உடைய ஆளும் அரசர் பலரையும் கெட்டு ஓடச் செய்து கடல் சூழ்ந்த உலகினை ஆட்சிபுரிந்து இனிதாக இறந்த அரசர்களை இட்டுக் புதைத்த பானைகளையும் வன்னிமரம் இருக்கும் மன்றத்தினைக் கொண்டு விளங்கும் தன் தொழில் சிறந்து விளங்கும் சுடுகாடு. உனது உடம்பினைக் காணாது ஒழிவதாக.

அருஞ்சொற்பொருள்:

புடைப்பு -தாக்குதல், துடையூ- துடைத்து ,நுடங்க -அசைய, ஓம்பாது -பாதுகாவாது ,கலம் -அணிகலன்கள், சுரத்தல் -கொடுத்தல் ,காணியர் -காண்பதாக, அறுகை -ஓர் அரசன் , குட்டுவனுடைய நண்பன், ஒழுகை- வண்டி ,பைந்துணி- பசிய இறைச்சித் துண்டு, தலை - இடம் ,குரால்- பெண் கூகை, தாழி -முதுமக்கள் தாழி ,வன்னி-வன்னிமரம்.

பாடல் எண் :5

பெயர் - ஊன் துவை அடிசில்.

துறை - செந்துறைப் பாடாண்பாட்டு

வண்ணம் - ஒழுகு வண்ணம்

தூக்கு - செந்தூக்கு

பெயர் விளக்கம் : அரசனுக்கு சமைக்கப்படும் சோற்றில் இச்சோறு வேறு என்று சொல்லப்படாத அடிசில் என்ற இவ்வடை ச்சிறப்பால் இப்பாடலுக்கு ஊன் துவை அடிசில் என்ற பெயராயிற்று

பொலம்பூந் தும்பை பொறிகிளர் தூணி
புற்றுஅடங்கு அரவின் ஒடுங்கிய அம்பின்
ஒசிவுடை வில்லின் ஓசியா நெஞ்சின்
களிறுஎறிந்து முரிந்த கதுவாய் எ.்கின்
விழுமியோர் துவன்றிய அகன்கண் நாட்பின்
எழுமுடி மார்பின் எய்திய சேரல்
குண்டுகண் அகழிய மதில்பல கடந்து
பண்டும் பண்டும்தாம் உள்அழித்து உண்ட
நாடுகெழு தாயத்து நனந்தலை அருப்பத்துக்
கதவம் காக்கும் கணைஎழு அன்ன
நிலம்பெறு திணிதோள் உயர ஓச்சிப்
பிணம் பிறங்கு அழுவத்து, துணங்கை ஆடிச்

சோறு வேறு என்னா ஊன் துவை அடிசில்
ஓடாப் பீடர் உள்வழி இறுத்து,
முள்இடுபு அறியா ஏணி, தெவ்வர்
சிலைவிசை அடக்கிய மூரி வெண்தோல்
அனைய பண்பின் தானை மன்னர்
இனி யார் உளரோ, நின் முன்னும் இல்லை
மழை கொளக் குறையாது புனல் புக நிறையாது
விலங்கு வளி கடவும் துளங்கு இரும் கமம் சூல்,
வயங்கு மணி இமைப்பின் வேல் இடுபு

முழங்கு திரை பனிக் கடல் மறுத்திசினோரே?

பாடற்பொருள்

வேந்தனது தோற்றச்சிறப்பு:1-6

பொலம்பூந் தும்பை பொறிகிளர் தூணி
புற்றுஅடங்கு அரவின் ஒடுங்கிய அம்பின்
ஒசிவுடை வில்லின் ஓசியா நெஞ்சின்
களிறுஎறிந்து முரிந்த கதுவாய் எ∴கின்
விழுமியோர் துவன்றிய அகன்கண் நாட்பின்
எழுமுடி மார்பின் எய்திய சேரல்

பொன்னால் ஆகிய தும்பை மாலையினையும் ஒளிபொருந்திய அம்புக் கூட்டில் புற்றில் அடங்கும் பாம்பு போல் தங்கி இருக்கும் அம்பினையும், வளைந்த வில்லினையும், ஒடுங்காத உள்ளத்தினையும் யானையைக் குத்தி கூர்மை மழுங்கிய வேலினையும், உடைய வீரர்கள் நிறைந்த இடமகன்ற போர்க்களத்தில் மார்பில் ஏழு முடிகளைக் கொண்ட ஆரம் பூண்டு விளங்கும் சேர வேந்தனே!

போர்களச்சிறப்பு:7-17

குண்டுகண் அகழிய மதில்பல கடந்து
பண்டும் பண்டும்தாம் உள்அழித்து உண்ட
நாடுகெழு தாயத்து நனந்தலை அருப்பத்துக்
கதவம் காக்கும் கணைஎழு அன்ன
நிலம்பெறு திணிதோள் உயர ஓச்சிப்
பிணம் பிறங்கு அழுவத்து, துணங்கை ஆடிச்
சோறு வேறு என்னா ஊன் துவை அடிசில்
ஓடாப் பீடர் உள்வழி இறுத்து,
முள்இடுபு அறியா ஏணி, தெவ்வர்
சிலைவிசை அடக்கிய மூரி வெண்தோல்
அனைய பண்பின் தானை மன்னர்

பகைவர் அம்பின் வேகத்தை அடக்கிய வலிமையான கேடயம் போன்ற தானை மன்னர் பலர் மிகவும் ஆழமான அகழியினையும் மதில்களையும் அழித்து உட்பகுவர் .புகுந்து அங்குள்ளோரை அழித்து அவரிடத்திலே உணவு சமைத்து உண்பர். இடமகன்ற அரண்களின் கதவுகளை காக்கும் திரண்ட கணையமரம் போன்ற கைகளை உயர வீசி பிணங்கள் உயர்ந்து கிடக்கும் போர்க்களப் பரப்பில் துணங்கை ஆடுவார் அரசுக்குரிய சோறு வேறு வீரர்களுக்குரிய சோறு வேறு என்ற வேறுபடாத ஊனையும் துவையலும் கலந்த உணவினை

உண்டப்போரில் புறம் கொடுத்து ஓடாத பெருமைமிக்க வீரர்கள் அங்கங்கே தங்குவர் முட்களை இட்டு காத்தலை அறியாத பாசறை எல்லையை உடைய பகைவர்களின் வில்லில் இருந்து வரும் அம்பின் வேகத்தை அடங்க செய்த வலிமையான தோளினால் ஆகிய கேடயம் போன்ற பண்புடையவர்களாக விளங்குவர்.

வெற்றிச் சிறப்பு: 18-22

இனி யார் உளரோ, நின் முன்னும் இல்லை
மழை கொளக் குறையாது புனல் புக நிறையாது
விலங்கு வளி கடவும் துளங்கு இரும் கமம் சூல்,
வயங்கு மணி இமைப்பின் வேல் இடுபு
முழங்கு திரை பனிக் கடல் மறுத்திசினோரே?

அத்தகைய தானை மன்னர்களுள் மேகம் முகத்தலால் குறையாதும் ஆற்று நீர் புகுவதால் மிகாதும், குறுக்காக வீசும் காற்றால் அசையும் நீர் பரப்பினை உடைய அலையோசை மிக்க குளிர்ந்த கடலிடத்தே மணியைப் போல் ஒளி வீசும் வேலினைச் செலுத்தி கடல் மறுத்தோர் உன்னை அன்றி பிறர் யார் உளர். உனக்கு முன்பு ஒருவரும் இருந்திலர்.

அருஞ்சொற்பொருள்:

பொலம் -பொன் ,தும்பை- ஒரு வகை செடி, தூணி- அம்புக்கூடு, நொசிவு- வளைவு,தளர்ச்சி, விழுமியோர்- வீரர்,துவன்றிய -நெருங்கிய, நனந்தலை- அகன்ற இடம், அருப்பம்-அரண், எழு-கணையமரம் ,அழுவம்- போர்க்களம் ,துணங்கை -போர்க்களத்தில் ஆடும் ஒரு வகை கூத்து ,அடிசில்- சோறு, பீடர் -பெருமை உடையவர் ஏணி- எல்லை ,தெவ்வர்- பகைவர், சிலை -வில் ,தோல்- கேடயம், வளி- -காற்று ,துளங்கும்- அசையும்

பாடல் எண் :6

| | | |
|---|---|---|
| பெயர் | - | கரைவாய்ப்பருதி. |
| துறை | - | செந்துறை பாடாண் பாட்டு |
| வண்ணம் | - | ஒழுகு வண்ணம். |
| தூக்கு | - | செந்தூக்கு |
| பெயர் விளக்கம் | : | பைந்தலையைத் துமித்தற்கென்று தேரை வலியச் செலுத்துவதன்றி அப்பருதிதான் ஊர்கின்ற பாடுதன்னிலே யானை செய்கின்ற போர்க்கு அஞ்சி ஓடி மடிந்தார் உடைய அளவிறந்த பைந்தலை துமிய என்ற அடைச் சிறப்பான் இதற்குக் கரைவாய் பகுதி என பெயராயிற்று. |

இழையர் ,குழையர், நறும் தண் மாலையர்
சுடர் நிமிர் அவிர் தொடி செறித்த முன்கை
திறல் விடு திருமணி இலங்கு மார்பின்
வண்டு படு கூந்தல் முடி புனை மகளிர்

தொடை படு பேரியாழ் பாலை பண்ணி
பணியா மரபின் உழிஞை பாட,
இனிது புறந்தந்து அவர்க்கு இன் மகிழ் சுரத்தலின்
சுரம் பல கடவும் கரை வாய்ப் பருதி
ஊர் பாட்டு எண்ணில் பைந் தலை துமிய
பல் செருக் கடந்த கொல் களிற்று யானை,
கோடு நரல் பௌவம் கலங்க வேல் இட்டு
உடை திரைப் பரப்பில் படு கடல் ஓட்டிய
வெல் புகழ்க் குட்டுவன் கண்டோர்
செல்குவம் என்னார் பாடுபு பெயர்ந்தே

பாடற்பொருள்

விறலியரதுவர்ணனை:1-7

இழையர் ,குழையர், நறும் தண் மாலையர்
சுடர் நிமிர் அவிர் தொடி செறித்த முன்கை
திறல் விடு திருமணி இலங்கு மார்பின்
வண்டு படு கூந்தல் முடி புனை மகளிர்
தொடை படு பேரியாழ் பாலை பண்ணி
பணியா மரபின் உழிஞை பாட,
இனிது புறந்தந்து அவர்க்கு இன் மகிழ் சுரத்தலின்

செங்குட்டுவனை வாழ்த்திப் பாடும் மகளிர் அணிகளை அணிந்திருந்தனர் தளிரை அணிந்திருந்தனர், மணம்மிக்க மாலையை அணிந்திருந்தனர், ஒளி மிக்க வளையல்களை அணிந்திருந்தனர., அப்பாடல் மகளிர் மார்பில் சிறந்து ஒளிவீசும் அணிகலன்களை அணிந்திருந்தனர், வண்டுகள் மொய்க்கும் கூந்தலை முடித்துப்புனைந்தவராய் விளங்கினர். நரம்புக் கட்டு அமைந்த பேரியாழில் பாலைப்பண்ணை அமைத்து அவன் வெற்றி கூறும்உழிஞைத்திணைச்செயல்களைப் பாடினர். அவன் அவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தான்.

வேந்தனதுவீரமும் கொடை சிறப்பும்:8-14

சுரம் பல கடவும் கரை வாய்ப் பருதி
ஊர் பாட்டு எண்ணில் பைந் தலை துமிய
பல் செருக் கடந்த கொல் களிற்று யானை,
கோடு நரல் பௌவம் கலங்க வேல் இட்டு
உடை திரைப் பரப்பில் படு கடல் ஓட்டிய
வெல் புகழ்க் குட்டுவன் கண்டோர்
செல்குவம் என்னார் பாடுபு பெயர்ந்தே

போர்க்களங்களில் செலுத்தப்படும் கரையாகிய விளிம்பினைக் கொண்ட தேர்ச்சக்கரங்கள் இயல்பாக ஊர்ந்து செல்லும் செயலால் முன்னரே இறந்துபட்ட எண்ணற்ற வீரர்களின் பசிய தலைகள் அறுபட்டுச் சிதைந்தன. அவ்வாறு பல போர்களை வென்ற கொல்களிற்று யானைகளை உடையவன் குட்டுவன். அவன் சங்குகள் ஒலிக்கும் கடல் கலக்கும்படி வேலினை செலுத்தி பிசிறாக உடையும் அலைகளைக் கொண்டு முழங்கும் கடலின் வலிமையை அழித்தவன். அத்தகைய சிறப்புடைய குட்டுவனைப் பாடிச் சென்று கண்டவர்கள் ஊருக்குத் திரும்ப விரும்ப மாட்டார்கள் அவனோடு இருக்க நினைப்பர்.

அருஞ்சொற்பொருள்:

இழையர்-அணிகளை அணிந்தவர், குழையர்-தழை ஆடைகளை அணிந்தவர் , அவிர்-ஒளி,தொடி -வளையல் ,திறல் -ஒளி ,தொடை- நரம்புக்கட்டு, பாலை- பாலைப்பண், மகிழ்-மகிழ்ச்சி, கோடு -சங்கு ,நரல்- ஒலிக்கும் ,பௌவம்- கடல் ,பாடுப -பாடி.

பாடல் எண்:7

பெயர் : நல் முதல் விறலியர்

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு

வண்ணம் : ஒழுகு வண்ணம்

தூக்கு : செந்தூக்கு

பெயர் விளக்கம் : நல் நுதல் விறலியர் என்று தமது ஆடல் பாடற்கேற்ப நூலில் சொல்லப்பட்ட அழகினையுடையார் என்றவாறு அவ்வழகினை நுதல் மேலிட்டு கூறியவாற்றான் இதற்கு நல் நுதல் விறலியர் என்பது பெயராயிற்று.

அட்டு ஆனானே, குட்டுவன், அடுதொறும்,
பெற்று ஆனாரே பரிசிலர் களிறே
வரை மிசை இழிதரும் அருவியின் மாடத்து
வளி முனை அவிர்வரும் கொடிநுடங்கு தெருவில்,
சொரி சுரை கவரும் நெய் வழிபு உராலின்
பாண்டில் விளக்கு பரூஉச் சுடர் அழல,
நன் நுதல் விறலியர் ஆடும்
தொல் நகர் வரைப்பின் அவன் உரை ஆனாவே

பாடற்பொருள்

வேந்தனது கொடையினையும் கொடைக்கு வருவாயாகிய பகைவரை கோறலையும் கூறுவது:1-8

அட்டு ஆனானே, குட்டுவன், அடுதொறும்,
பெற்று ஆனாரே பரிசிலர் களிறே
வரை மிசை இழிதரும் அருவியின் மாடத்து
வளி முனை அவிர்வரும் கொடிநுடங்கு தெருவில்,
சொரி சுரை கவரும் நெய் வழிபு உராலின்
பாண்டில் விளக்கு பரூஉச் சுடர் அழல,
நன் நுதல் விறலியர் ஆடும்
தொல் நகர் வரைப்பின் அவன் உரை ஆனாவே

செங்குட்டுவன் பகைவர்களைக் கொன்று அழித்து. அழிக்கும்தோறும் அவன் வென்ற நாட்டிலுள்ள களிறுகளை அவனைச் சார்ந்தோர் பரிசிலாகப் பெறுவர் மலையிலிருந்து விழும் அருவியைப் போன்று உயர்ந்த மாடங்களில் காற்று வீசிக் கொடிகள் அசைகின்ற தெருவில் நெய் ஊற்றப்பெற்ற விளக்கின் திரிக்குழாயில் நெய் பரவி வழிந்தால் கால்களைக் கொண்ட விளக்கில் தீச்சுடர் ஒளி வீச, அவ்வொளியில் நல்ல நெற்றியினை உடைய விறலியர் ஆடுவார். விறலியர் ஆடும் பழமையான நகர எல்லைகளில் குட்டுவனைப் பற்றிய புகழ்ச்சி மொழிகள் நீங்காதன வாய் விளங்கின.

அருஞ்சொற்பொருள்:

அடுதல் -கொல்லுதல், வரை- மழை ,வழி- காற்று, சொரிதல்-ஊற்றுதல்,சுரை- திரிக்குழாய், வரைப்பு -எல்லை, உரை -புகழ் மொழிகள்,பாண்டில் விளக்கு-காலினையுடைய விளக்கு

பாடல் எண் :8

பெயர் : பேர் எழில் வாழ்க்கை

துறை : இயல் மொழி வாழ்த்து

வண்ணம் : ஒழுகு வண்ணம்

தூக்கு : செந்தூக்கு

பெயர் விளக்கம் : வேனில் காலத்து மனையில் வைகாது பொழில்களிலே வதியும் பெரிய செல்வ அழகினை உடைய இல்வாழ்க்கை என்றவாறு இச்சிறப்பானே இதற்கு பேர் எழில் வாழ்க்கை என்பது பெயராயிற்று.

பைம் பொன் தாமரை பாணர்ச் சூட்டி,
ஒள் நுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டி,
கெடல் அரும் பல் புகழ் நிலைஇ நீர் புக்கு
கடலொடு உழந்த பனித் துறைப் பரதவ
ஆண்டு நீர்ப் பெற்ற தாரம், ஈண்டு, இவர்
கொள்ளாப் பாடற்கு எளிதினின் ஈயும்
கல்லா வாய்மையன் இவன் என தத்தம்
கைவல் இளையர் நேர் கை நிரைப்ப
வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை
முனை சுடு கனை எரி எரித்தலின் பெரிதும்
இதழ் கவின் அழிந்த மாலையொடு சாந்து புலர்
பல் பொறி மார்ப நின் பெயர் வாழியரோ
நின் மலை பிறந்து நின் கடல் மண்டும்
மலி புனல் நிகழ்தரும் தீம் நீர் விழவின்

பொழில் வதி வேனில் பேர் எழில் வாழ்க்கை
மேவரு சுற்றமோடு உண்டு இனிது நுகரும்
தீம் புனல் ஆயம் ஆடும்
காஞ்சி அம் பெருந் துறை மணலினும் பலவே

பாடற்பொருள்

வேந்தனது வள்ளல் தன்மை: 1-12

பைம் பொன் தாமரை பாணர்ச் சூட்டி,
ஒள் நுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டி,
கெடல் அரும் பல் புகழ் நிலைஇ நீர் புக்கு
கடலொடு உழந்த பனித் துறைப் பரதவ
ஆண்டு நீர்ப் பெற்ற தாரம், ஈண்டு, இவர்
கொள்ளாப் பாடற்கு எளிதினின் ஈயும்
கல்லா வாய்மையன் இவன் என தத்தம்
கைவல் இளையர் நேர் கை நிரைப்ப
வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை
முனை சுடு கனை எரி எரித்தலின் பெரிதும்
இதழ் கவின் அழிந்த மாலையொடு சாந்து புலர்
பல் பொறி மார்ப நின் பெயர் வாழியரோ

பசுமையான பொன்னால் செய்த தாமரைப் பூவைப் பாணர்க்குச் சூட்டி ஒள்ளிய நெற்றியினை உடைய விறலியருக்குப்பொன்னரிமாலைகளைப் பூணும்படி கொடுத்து, கெடுதற்கரிய பல வகையான புகழை நிலைபெறச் செய்து ,கடல் நீரிலே புகுந்து அதன் கண்ணே வருந்தி முயன்ற குளிர்ச்சியான துறையையுடைய பரதவனே !அவ்விடத்தில் நீரில் பெற்ற அரிய பொருள்களை இங்கு இவருடைய மனம் கொள்ளாப் பாடலுக்கு எளிதிலே ஈகின்ற கொடுத்தற்றொழிலை அன்றி பிற தொழிலைக் கல்லாத வாய்மையுடையவன் இவன் என்று பாராட்டித் தங்கள் தங்களுடைய ஒத்த கைகளை தம்யாழ் வாசிப்பு தொழிலில் வல்ல இளையர் வரிசையாக நீட்டுவர், மகளிரிடத்து வணங்கிய மென்மையும் பகைவரிடத்தில் வணங்காத ஆண்மையும் உடைய பகைவர் நாடுகளைச் சுடுகின்ற மிக்க நெருப்புத் தீய்த்தலினால் மிகவும் இதழ்கள் அழகு அழிய பெற்ற மாலை அணிதலோடு பூசிய சந்தனமும் புலர்ந்த உத்தம இலக்கணம் பொருந்திய மார்பினை உடையவனே நின் பெயர் வாழ்வதாக.

மன்னனை நீடு வாழ்க என வாழ்த்துதல்:12-18

நின் மலை பிறந்து நின் கடல் மண்டும்
மலி புனல் நிகழ்தரும் தீம் நீர் விழவின்

பொழில் வதி வேனில் பேர் எழில் வாழ்க்கை
மேவரு சுற்றமோடு உண்டு இனிது நுகரும்
தீம் புனல் ஆயம் ஆடும்
காஞ்சி அம் பெருந் துறை மணலினும் பலவே

உனது நாட்டில் மலையில் தோன்றிய ஆறு மேலைக் கடலில் விரைந்து பாயும் வெள்ள நீர் மிகுதியான காலத்தில் நீராட்டு எடுக்கும் விழா அமையும் அந்த இனிய நீர் விழாவையும் வேனிற் காலத்தில் குளிர்ச்சியான சோலைகளில் வாழும் பெரிய அழகிய இல்வாழ்க்கையையும் விரும்பும் சுற்றத்தினரோடு உண்டு மக்கள் கூட்டம் இனிதாக நுகரும் அவ்வாறு மக்கள் கூட்டம் மகிழ்ந்தாடும் நீர் பொருந்திய காஞ்சி ஆற்றின் பெரிய துறையில் உள்ள மணலை காட்டிலும் உன்னுடைய புகழ் வாழ்வதாக.

அருஞ்சொற்பொருள்: ஒண்ணுதல்- ஒலி பொருந்திய நெற்றி, தாரம் -பொருள்கள் ,முனை- போர்க்களம் ,கனை -மிகுதி, தீநீர் விழவு -இனிய நீர் விளையாட்டு ஆறாட்டு, பொழில்-சோலை.

பாடல் எண் :9

| | | |
|---|---|---|
| பெயர் | : | செங்கை மறவர் |
| துறை | : | விறலியாற்றுப்படை |
| வண்ணம் | : | ஒழுகு வண்ணம் |
| தூக்கு | : | செந்தூக்கு |
| பெயர் விளக்கம் | : | பகைவர் உடலில் தாங்கள் எறிந்த வேல் முதலிய கருவிகளைப் பறிக்கின்ற காலத்து அவருடைய உடலுக்கு குருதியை அளைந்து சிவந்த கையையுடைய மறவர் என்றவாறு இச்சிறப்பால் இதற்கு செங்கை மறவர் என்ற பெயராயிற்று. |

யாமும் சேறுகம் நீயிரும் வம்மின்
துயலும் கோதை துளங்கு இயல் விறலியர்
கொளை வல் வாழ்க்கை நும் கிளை இனிது உணீஇய
களிறு பரந்து இயல கடு மா தாங்க
ஒளிறு கொடி நுடங்க தேர் திரிந்து கொட்ப
எஃகு துரந்து எழுதரும் கை கவர் கடுந் தார்
வெல் போர் வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
மொய் வளம் செருக்கி மொசிந்து வரும் மோகூர்
வலம் படு குழூஉ நிலை அதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செம் கை மறவர்
நிறம் படு குருதி நிலம் படர்ந்து ஓடி

மழை நாட் புனலின் அவல் பரந்து ஒழுக,
படு பிணம் பிறங்க பாழ் பல செய்து
படு கண் முரசம் நடுவண் சிலைப்ப
வளன் அற, நிகழ்ந்து வாழுநர் பலர் பட,
கரும் சினை விறல் வேம்பு அறுத்த
பெருஞ் சினக் குட்டுவன் கண்டனம் வரற்கே.

பாடற்பொருள்

போர்க்களக் காட்சி: 4-17

களிறு பரந்து இயல கடு மா தாங்க
ஒளிறு கொடி நுடங்க தேர் திரிந்து கொட்ப
எ.்.கு துரந்து எழுதரும் கை கவர் கடுந் தார்
வெல் போர் வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
மொய் வளம் செருக்கி மொசிந்து வரும் மோகூர்
வலம் படு குழூஉ நிலை அதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செம் கை மறவர்
நிறம் படு குருதி நிலம் படர்ந்து ஓடி
மழை நாட் புனலின் அவல் பரந்து ஒழுக,
படு பிணம் பிறங்க பாழ் பல செய்து
படு கண் முரசம் நடுவண் சிலைப்ப
வளன் அற, நிகழ்ந்து வாழுநர் பலர் பட,
கரும் சினை விறல் வேம்பு அறுத்த
பெருஞ் சினக் குட்டுவன் கண்டனம் வரற்கே

போர்க்களத்தில் களிறுகள் பறந்து செல்லவும் குதிரைகள் விரைவாகச் செல்லவும் ஒளிவீசும் கொடியில் அசையும் தேர்கள் சுழன்று இயங்கவும், வேலினை உடைய வீரர்கள் தூசிப்படையாக முன்பு வரவும், வேந்தரும் வேளிர்களும் ஒன்றுபட்டு வஞ்சினம் கூறி மோகூர் மன்னனுக்குத் துணையாக வந்தனர்.அத்துணைவர்களோடு மோகூர் மன்னன் போருக்கு வந்தான். அவனுடைய படைகளை நடுங்கும்படி மேற்சென்று வேலைப் பகைவரின் மார்பில் செலுத்தி, வரும் ரத்தம் நிலத்தில் ஓடி மழைக்கால நீர் போல பள்ளங்களில் பரவி பாய்மாறு குட்டுவன் போர் புரிந்தான். போர்க்களத்தில் வீரர்களை அழித்துப் பாழ்படுத்தியும், ஒலிக்கும் போர் முரசங்கள் அழியும்படிச் செய்தும் அங்கு வாழ்வோர் பலர் இறக்கும்படி போர் புரிந்தான் அதோடு மோகூர் மன்னனாகிய பழையனின் வலிமைமிக்க காவல் மரம் ஆகிய வேம்பினை அறுத்து வென்றான் செங்குட்டுவன்.

மன்னனது வரையா ஈகை:1-3

யாமும் சேறுகம் நீயிரும் வம்மின்
துயலும் கோதை துளங்கு இயல் விறலியர்
கொளை வல் வாழ்க்கை நும் கிளை இனிது உணீஇய

அத்தகைய பேராற்றலை உடைய செங்குட்டுவனைக் காண்பதற்காக நாங்கள் செல்கின்றோம் பாடல் திற மிகுந்த வாழ்க்கையையும் அசையும் மாலையினையும் ஒல்கித் தளரும் இயல்பினை உடைய விறலியர்களே நீங்களும் வாருங்கள் உங்கள் சுற்றம் இனிதாக உண்ணலாம்.

அருஞ்சொற்பொருள்:

வம்மின்- வாருங்கள், துயலும்- அசையும், கோதை -மாலை, கொலை- இசை, உணீஇயர்-உண்ண, கடுமா- விரைவாக செல்லும் குதிரை எ∴கு-வேல், தார்- தூசிப்படை, மொய்- வலிமை, மொசிந்து- நெருங்கி, நிறம்- மார்பு, அவல்- பள்ளம், சிலைப்ப- முழங்க ,விறல் -வலிமை

பாடல் எண் 10

பெயர் : வெருவரு புணல் தார்

துறை : வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு

வண்ணம் : ஒழுகு வண்ணமும் சொற்சீர்வண்ணமும்.

தூக்கு : செந்தூக்கு

பெயர் விளக்கம் : தன்னை அடைந்தார் வெருவரத் தக்க புனல்தார் என்றவாறு இச்சிறப்பால்

இதற்கு வேறு ஒரு புனல் தார் என்று பெயராயிற்று.

மா மலை முழக்கின் மான் கணம் பனிப்ப
கால் மயங்கு கதழ் உறை ஆலியொடு சிதறி
கரும்பு அமல் கழனிய நாடு வளம் பொழிய
வளம் கெழு சிறப்பின் உலகம் புரைஇ
செங்குணக்கு ஒழுகும் கலுழி மலிர் நிறை
காவிரி அன்றியும் பூ விரி புனல் ஒரு
மூன்று உடன் கூடிய கூடல் அனையை
கொல் களிற்று உரவுத் திரை பிறழ, அவ்வில் பிசிர
புரை தோல் வரைப்பின் எ∴கு மீன் அவிர்வர
விரவுப் பணை முழங்கு ஒலி வெரீஇய வேந்தர்க்கு
அரணம் ஆகிய வெருவரு புனல் தார்
கல் மிசையவ்வும், கடலவும், பிறவும்

அருப்பம் அமைஇய அமர் கடந்து உருத்த
ஆள் மலி மருங்கின் நாடு அகப்படுத்து
நல் இசை நனந் தலை இரிய, ஒன்னார்
உருப்பு அற நிரப்பினை ஆதலின், சாந்து புலர்பு,
வண்ணம் நீவி, வகை வனப்புற்ற,
வரி ஞிமிறு இமிரும் மார்பு பிணி மகளிர்
விரி மென் கூந்தல் மெல் அணை வதிந்து,

கொல் பிணி திருகிய மார்பு கவர் முயக்கத்து,
பொழுது கொள் மரபின் மென் பிணி அவிழ
எவன் பல கழியுமோ- பெரும! பல் நாள்
பகை வெம்மையின் பாசறை மரீஇ
பாடு அரிது இயைந்த சிறு துயில் இயலாது
கோடு முழங்கு இமிழ் இசை எடுப்பும்
பீடு கெழு செல்வம் மரீஇய கண்ணே

பாடற்பொருள்

மன்னனை நீருடன் ஒப்பிடுதல்: 1-7

மா மலை முழக்கின் மான் கணம் பனிப்ப
கால் மயங்கு கதழ் உறை ஆலியொடு சிதறி
கரும்பு அமல் கழனிய நாடு வளம் பொழிய
வளம் கெழு சிறப்பின் உலகம் புரைஇ
செங்குணக்கு ஒழுகும் கலுழி மலிர் நிறை
காவிரி அன்றியும் பூ விரி புனல் ஒரு
மூன்று உடன் கூடிய கூடல் அனையை

மழையோடு கூடிய இடி முழக்கத்தால் மழை எடுத்துள்ள விலங்குகள் ஒடுங்கி நடுங்கின மழைத்துளிகள் ஆலங்கட்டியோடு சிதறி பெய்தன. கரும்பு நெருங்கிய வயல்களை கொண்ட நாடு மழை மிகுதியாகப்பெய்ததால் நீர்வளம் மிக்கு உலகினைப் பாதுகாக்க புதுவெள்ளத்தால் கலங்கிய காவிரி ஆற்றினை நீ ஒத்து விளங்குகின்றாய் ஆற்றில் பூக்கள் பரவி செல்லும் மூன்று ஆறுகள் ஒன்று கூடிய முக்கூடலையும் ஒத்து விளங்குகின்றாய்

வேந்தனது படைச்சிறப்பு:8-16

கொல் களிற்று உரவுத் திரை பிறழ, அவ்வில் பிசிர
புரை தோல் வரைப்பின் எ.்கு மீன் அவிர்வர

விரவுப் பணை முழங்கு ஒலி வெரீஇய வேந்தர்க்கு
அரணம் ஆகிய வெருவரு புனல் தார்
கல் மிசையவ்வும், கடலவும், பிறவும்
அருப்பம் அமைஇய அமர் கடந்து உருத்த

ஆள் மலி மருங்கின் நாடு அகப்படுத்து
நல் இசை நனந் தலை இரிய, ஒன்னார்
உருப்பு அற நிரப்பினை ஆதலின், சாந்து புலர்பு,

செங்குட்டுவன் முன்னே செல்லும் பூசிப்படை கடல் போன்று இருந்தது களிறுகள் அலைகள் போன்று உயர்ந்தும் பிறழ்ந்தும் மலைத்தன. அலைகளில் தோன்றும் துளிகள் போன்று விழிகள் தோன்றின பகைவரின் கடையில் புகுந்த வீடுகள் மீன்கள் போன்று தோன்றின போர்க்களத்தில் முரசொலி கடல் முழக்கம் போன்ற தோன்றியது அத்தகைய போர்க்களத்தில் ஓசையை கேட்டு பகை அரசர் அஞ்சினர் பின்னர் அவர்கள் உன்னோடு நட்பு கொண்டு அவர்களுக்கு பாதுகாப்பை அமைத்துக் கொண்டனர் பகைவர் அஞ்சும் ஆற்றல் உடையது உன் தூசிப்படையாகிய வெள்ளம் மலையிலும் கடலிலும் பிற இடங்களிலும் அரன்களை அமைத்து எதிர் நின்று போர் புரிந்த சினமிக்க வீரர்களுடைய பகையை அளித்து அவ்விடம் அவ்விடங்களை எல்லாம் நீ கைப்பற்றினாய் அவர்கள் புகழ் உலகத்தின் இன்றும் நீங்கும் படியும் அவர் சினம் அறியும்படியும் உன் தூசி படையை நிரப்பினாய்.

மன்னரின் வெற்றிச்சிறப்பு: 17-26

வண்ணம் நீவி, வகை வனப்புற்ற,
வரி ஞிமிறு இமிரும் மார்பு பிணி மகளிர்
விரி மென் கூந்தல் மெல் அணை வதிந்து,
கொல் பிணி திருகிய மார்பு கவர் முயக்கத்து,
பொழுது கொள் மரபின் மென் பிணி அவிழ
எவன் பல கழியுமோ- பெரும! பல் நாள்
பகை வெம்மையின் பாசறை மரீஇ
பாடு அரிது இயைந்த சிறு துயில் இயலாது
கோடு முழங்கு இமிழ் இசை எடுப்பும்
பீடு கெழு செல்வம் மரீஇய கண்ணே

பெருமை பொருந்திய வேந்தே உன்னை ஒன்று கேட்கிறேன் பகைவர்களின் கொடுமையால் பல நாட்கள் படை வீட்டில் தங்கி இருப்பதினால் சிறிது கூட உறக்கம் இல்லாமல் இடையிடையே ஒலிக்கும் சங்குகளும் பிற கருவிகளின் ஓசைகளும் உன்னை இழுக்கும் அது உன் கண்களுக்கு பழக்கமாகிவிட்டன, அவ்வாறு பழகிய உன் கண்களுக்கும்

சந்தனம் பூசியும் பலவகை மாலைகளையும் அணிந்த உன் மார்பு இணைக்கப்பெற்ற பெண்களுடைய விரிந்த மெலிந்த கூந்தல் படுக்கையில் தங்கி வருத்தும் காவல் நோயை நீக்கும் பொருட்டு பெண்களின் மார்புகளோடு இணைந்து இறா பொழுது நீ பயன் கொண்ட முறையில் உண்டாக்கிய சிறு துயிலில் இருந்து நீங்குவதற்கு எத்தனை நாட்கள் செல்லுமோ கூறுவாயாக!

அருஞ்சொற்பொருள்

முழக்கு- இடி ஓசை, மான்கணம் -விலங்கின் கூட்டம் ,பனிப்ப-நடுங்க, ஆலி -ஆலங்கட்டி ,செங்குணக்கு- நேர் கிழக்கு, திரை -அலை ,தோல் -கேடயம் ,பணை-முரசம், அரணம் -பாதுகாப்பு ,புனல்தார் தூசிப்படையாகிய வெள்ளம், கல்- மலை, ஆள்-வீரர், ஒன்னார் பகைவர், வனப்பு- அழகு, அணை- படுக்கை, முயக்கம்- புணர்ச்சி,பாசறை- படைவீடு, கோடு- இசைக்கும் கொம்பு, பீடு -பெருமை, மரீஇய- பழகிய.

ஐந்தாம் பத்தின் பதிகம்

அவை தான் சுடர்வி வேங்கை, தசம்பு துலங்க இருக்கை, ஏறா ஏணி, நோய் தபு நோன் தொடை, ஊன் துவை அடிசில் ,கரை வாய் பருதி, நல் நுதல் விறலியர், பேரெழில் வாழ்க்கை, செங்கை மறவர், வெருவரு புனல் தார்:

| | | |
|---|---|---|
| பாடிய புலவர் | : | பரணர் |
| பாட்டுடைத் தலைவன் | : | கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் |
| பாடிப்பெற்ற பரிசில் | : | உப்பர் காட்டு வாரியையும் தன்மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான் அக்கோ |

ஐந்தாம் பத்து பதிகம்

வடவர் உட்கும் வான் தோய்கொடிக்
குடவர் கோமான் நெடுங் சேரலாதர்க்குச்
சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்
கடவுள் பத்தினிக் கற்கோள் வேண்டி,
கான்நவில் கானும் கணையின் போகி.
ஆரிய அண்ணலை வீட்டி,பேரிசை
இன் பல் அருவி கங்கை மண்ணி
இனம் தெரி பல் ஆன் கன்றோடு கொண்டு
மாறா வல்வில் இடுப்பிற் புறத்து இறுத்து
உறு புலி அன்ன வயவர் வீழ,
சிறு குரல் நெய்தல் வியலூர் நூறி
அக்கரை நண்ணீக் கொடுகூர் எறிந்து

பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழு முதல் துமியப் பண்ணி,
வால் இழை கழித்த நறும்பல் பெண்டீர்
பல் இருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சரற ஒழுகை பூட்டி வெந்திறல்
ஆராச் செருவின் சோழர் குடிக்கு உரியோர்
ஒன்பதின்மர் வீழ, வாயில் புறத்திருத்து
நிலைச் செருவின்ஆற்றலை அறுத்து
கெடலருந்தானையோடு
கடல் பிறகோட்டிய செங்குட்டுவனை,
கரணம் அமைந்த காசு அறு செய்யுள்
பரணர் பாடினர் பத்துப்பாட்டு

இப்பத்தின் பதிகம் தரும் செய்திகள்

- கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவன்
- ஆரியரை வணக்கினான்
- கண்ணகி கோட்டம் அமைத்தான்
- கவர்ந்துவந்த ஆனிரைகளைத் தன் இடும்பில் நகர மக்களுக்குப் பகிர்ந்து அளித்தான்
- வியலூரை அழித்து வெற்றி கண்டான்
- கொடுகூரை எறிந்தான்
- மோகூர் மன்னன் பழையனை வென்று அவனது காவல்மரம் வேம்பினை வெட்டிச் சாய்த்தான்
- கூந்தல் முரற்சியால் குஞ்சர ஒழுகை பூட்டினான்
- சோழர் ஒன்பதின்மரை வென்றான்
- படை நடத்திக் கடல் பிறக்கு ஓட்டினான்

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் ஐம்பத்தையாண்டு வீற்றிருந்தான்

பாடல் எண் 1-24

வடநாட்டு மன்னர் வந்ததற்கு காரணமான வாழ்நாவிய வெற்றிக் கொடியையும் உடைய குடல் நாட்டிற்கு மன்னனும் ஆகிய நெடுஞ்சரலாதனுக்கு சோழன் நலங்கி மனதில் மகள் பெற்றெடுத்த மைந்தன் கடன் பெறக் கூடிய செங்குட்டுவன் அவன் கண்ணகி தெய்வத்திற்கு சிலை எடுக்க இமயமலையில் கல்லெடுக்க வடநாட்டிற்கு அம்பு போல் விரைந்து சென்றான் கலை எடுத்து கங்கை நீராட்டி வடநாட்டு அரசர்களை தூண்டி ஒரு செய்து அந்நாட்டு பசுக்களையும் கண்டு களையும் கைப்பற்றி விடும் ஆதவனத்தில்

தங்கினான் எதிர்த்த போர் வீரர்கள் அழியும்படி என்று வியலூரினை அழித்தான் கொடுங்கோர் என்ற ஊரினையும் அளித்தான் பழைய எண் என்னும் மன்னனுடைய காவலர் ஆகிய வேம்பினை அடியோடு வெட்டி அந்நாட்டில் கணவனை இழந்த பெண்களின் கூந்தலால் செய்யப்பட்ட கயிற்றினால் பகைவரின் யானைகளைக் கட்டி இழுத்து வரச் செய்தான்

அறிஞ்சொற்பொருள்:

உட்கும்- அஞ்சும், குடவர்- மேற்கு நாட்டு மக்கள், கல்கோள்- கல்லைக்கொல்ல மண்ணில் நீராடி இடும்பில் இடும் பாத வனம் வயவர் வீரர் கொடுங்கோர் ஊர் வால் இலை புனித அணிகலன்

கொள் குறி வினா

1.பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தின் ஆசிரியர்.

அ) பாலைக் கௌதமனார்

ஆ) பரணர்

இ) குமட்டூர்க் கண்ணனார்

ஈ) கபிலர்

2.பதிற்றுப்பத்து ——---- அரசர்கள் பற்றிய பாடல்களின் தொகுப்பு

அ) பாண்டியர்

ஆ) சோழர்

இ) சேரர்

ஈ) பல்லவர்

3.பதிற்றுப்பத்தில் இடம் பெறும் ஆற்றுப்படை

அ) திருமுருகாற்றுப்படை

ஆ) சிறுபாணாற்றுப்படை

இ) பொருநராற்றுப்படை

ஈ) விறலியாற்றுப்படை

4.கண்ணகிக்குக் கோவில் கட்டிய சேர மன்னன்

அ) நெடுஞ்சேரலாதன்

ஆ) கடல் பிறர்க்கோட்டிய செங்குட்டுவன்

இ) செல்வக்கடங்கோவாலியாதன

ஈ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

5.எட்டுத்தொகையில் பதிகம் இடம்பெறும் நூல்

அ) பரிபாடல்

ஆ) பதிற்றுப்பத்து

இ) கலித்தொகை

ஈ) புறநானூறு

6.மோகூரை ஆண்ட மன்னன் யார்?

அ.எயினன் ஆ. பழையன் இ. குமணன் ஈ. நள்ளி

விடைகள்

1.ஆ) பரணர்

2.இ) சேரர்

3.ஈ) விறலியாற்றுப்படை

4.ஆ) கடல் பிறர்க்கோட்டிய செங்குட்டுவன்

5.ஆ) பதிற்றுப்பத்து

6. ஆ) பழையன்

குறுவினாக்கள்

1.போர்களத்தில் ஆடும் ஆட்டம் குறித்து எழுதுக.
2.செங்குட்டுவனைக் காண இரவலர் வந்த வழியின் இயல்பைக் எடுத்துரைக்க.
3.செங்குட்டுவனின் செல்வச்செழிப்பை இயம்புக

நெடுவினாக்கள்

1.கடல் பிறர்க்கோட்டிய செங்குட்டுவனின் வென்றிச் சிறப்பினை விளக்குக.

. (அல்லது)

செங்குட்டுவனின் கொடைச் சிறப்பினை எடுத்தியம்புக.

2.விறலியாற்றுப்படைக் குறித்துக் கட்டுரை வரைக.

.(அல்லது)

விறலியின் வர்ணனையைப் பதிற்றுப்பத்து பாடல் வழி விவரிக்க.

பாடநூல்கள்

பதிற்றுப்பத்து - கழக வெளியீடு, சென்னை

சங்க இலக்கியம் - என்சிபிஎச் பதிப்பு, சென்னை

பிற பதிப்பக வெளியீடுகளாக வந்த சங்க இலக்கிய நூல்கள்

**Related Online Contents**

- **Tamil Virtual University Library – www.tamilvu.org/library http://www.virtualvu.org/library**
- **Project Madurai – www.projectmadurai.org.**
- **Chennai Library – www.chennailibrary.com http://www.chennailibrary.com**
- **Tamil Universal Digital Library- www.Ulib.prg http://www.ulib.prg**

# அலகு-3

## அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு

### அகநானூறு:

### நோக்கம்:

- எட்டுத்தொகை இலக்கியவகைகளில் ஒன்றுஅகநானூறு
- அகநானூறு என்பது 400 என்றபெயரிலேயே 400 பாடல்களைக் கொண்டது் இப்பாடல்கள் அகவாழ்வியல் உணர்வுகளை விவரிக்கின்றன
- நெடுந்நொகை என்ற மற்றொரு பெயர் உண்டு 13 அடிசிற்றிலையும் 31 அடிபேரெல்லையும் கொண்டது
- அகநானூறு களிற்றியானைநிறை 1 முதல் 120 வரை மணிமிடைபவளம் 121 முதல் 300 நித்திலகோவை 301 முதல் 400 என மூன்றுபெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது தொகுத்தவர் மதுரைபூரிகுடிக் கிழார் மகனார் உருத்திரசமனார் தொகுப்பித்தவன் உக்கிரபெருவழுதியார்
- அகநானூற்றில் வரலாறு பற்றிய செய்திகளும் அரசியல், வாணிபம், வாழ்க்கைமுறை மற்றும் பண்பாடு பற்றிய செய்திகளும் அறிந்துகொள்ளமுடியும்

| | | |
|---|---|---|
| அகநானூறு | – | (நெய்தல்திணைப்பாடல்கள் 10) |
| | | 210, 220, 230, 240, 250, 260, 270, |
| | | 280, 290, 300 |
| நற்றிணை | – | (மருதத்திணைப் பாடல்கள் 10) |
| | | 20,30,40,50,60,70,80,90,100,120 |
| குறுந்தொகை | – | (முல்லைத்திணைப் பாடல்கள்6) |
| | | 188, 190, 191, 192, 193, 194 |
| ஐங்குறுநூறு | – | (குறிஞ்சித் திணைப்பாடல்கள்) |
| | | குன்றகுறவன் பத்து |

அகநானூறு – (நெய்தல்திணைப்பாடல்கள் 10)

210, 220, 230, 240, 250, 260, 270,

280, 290, 300

பாடல் : 210. பல கேட்டனம் தோழி!

பாடியவர்: உலோச்சனார்.

திணை: நெய்தல்.

துறை: தோழி, தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

பாடல்:

குறியிறைக். குரம்பைக் கொலைவெம் பரதவர்
எறியுளி பொருத ஏமுறு பெருமீன்
புண்ணுமிழ் குருதி புலவுக்கடல் மறுப்பட
விசும்பணி வில்லின் போகி, பசும்பிசிர்த
திரைபயில் அழுவம் உழக்கி, உரனழிந்து,

நிரைதிமில் மருங்கில் படர்தரும் துறைவன்,
பானாள் இரவில்நம், பணைத்தோள் உள்ளி,
தானிவண் வந்த காலை, நம்ஊர்க
கானலம் பெருந்துறைக் கவின்பா ராட்டி, :
ஆனாது புகழ்ந்திசி னோனே இனித்தன்,
சாயல் மார்பின் பாயல் மாற்றிக், "கைதைஅம் படுசினைக்
கடுந்தேர் விலங்கச் செலவுஅரிது என்னும்" என்பது
பலகேட் டனமால்-தோழி!-நாமே "

பொருளுரை:

குறியிறைக். குரம்பைக் கொலைவெம் பரதவர்
எறியுளி பொருத ஏமுறு பெருமீன்
புண்ணுமிழ் குருதி புலவுக்கடல் மறுப்பட
விசும்பணி வில்லின் போகி, பசும்பிசிர்த

திரைபயில் அழுவம் உழக்கி, உரனழிந்து,

கொலைத் தொழிலினை உடையவரான கொடிய பரதவர்கள் குறுகிய இறைப்பினையுடைய குடிசையிலே வாழ்பவர்கள். அவர்களால் எறியப்பட்ட உளியினால் தாக்கப்பட்ட "களிப்புப் பொருந்திய பெரிய மீன், வானத்தை அழகு செய்யும் வானவில்லைப்போல உயரே தாவித் துள்ளும்.அதன் புண்ணினின்றும் ஒழுகும் குருதியினால் புலால் நாற்றமுடைய கடலின் நிறமும் நெந்நிறமாக மாறுபடும்.

நிரைதிமில் மருங்கில் படர்தரும் துறைவன்,

பானாள் இரவில்நம், பணைத்தோள் உள்ளி,

தானிவண் வந்த காலை, நம்ஊர்க

கானலம் பெருந்துறைக் கவின்பா ராட்டி, :

ஆனாது புகழ்ந்திசி னோனே் இனித்தன்,

திவலைகளையுடைய அலைகள் . செறிந்த .கடற்பரப்பை எல்லாம் அம்மீன் கலக்கிவிட்டுப், பின் தன்னுடைய வலியனைத்தும் அழிந்து போக, வரிசையாக இருக்கும் படகுகளின் பக்கத்திலே வந்து சேரும். அத்தகைய துறையினை உடையவன் நம் தலைவன். நள்ளிரவிலே, நம்முடைய பணைத்த தோள்களைத் தழுவுதலை நினைத்து, இவ்விடத்தே வந்த அந்நாளிலே, அவன் நம் ஊர்க் கானற் சோலையினையுடைய பெருந்துறையின் "அழகினைப் பாராட்டி, அளவில்லாமல் புகழ்ந்தனன்.

சாயல் மார்பின் பாயல் மாற்றிக், "கைதைஅம் படுசினைக்

கடுந்தேர் விலங்கச் செலவுஅரிது என்னும்" என்பது

பலகேட் டனமால்-தோழி!-நாமே "

இப்பொழுதோ, தன்னுடைய வனப்புடைய மார்பிலே யாம் கண்துயிலும் அந்த உறவினை அவன் மாற்றிவிட்டனன். .. "தாழைகள் தாழ்ந்து கிடக்க, அதன்கிளைகள் தேரின் செலவைத் தடுக்க, நாம் அவ்விடத்தே செல்வதும் அரிது" என்றும் சொல்லுகிறான் என்பார்கள். அதனை நாமும் பலமுறை கேட்டுவிட்டோம்.என்று, தோழி தலைமகன் சிறைப்புறமாக இருக்கத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொன்னாள் என்க.

## அருஞ்சொற்பொருள்:

.குறியிறை - தாழ்வான இறைப்பு. குரம்பை - குடிசை. உளி - மீன் எறியும் கருவி. ஏமுறு - களிப்புப் பொருந்திய. மறுப்பட - நிறம் வேறுபட. விசும் பணி வில் - வானவில். பிதிர் - திவலைகள். அழுவம் - நெருங்கிய கடற்பரப்பு.

### 220. நல் எழில் சிதையா ஏமம்!

பாடல்:220

பாடியவர்: மதுரை மருதனிளநாகனார். திணை: நெய்தல்.

துறை: இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனை எதிர்ப்பட்டுத் தோழி சொல்லியது.

பாடல்:

ஊருஞ் சேரியும் உடன்இயைந்து அலர்எழத்,
தேரொடு மறுகியும், பணிமொழி பயிற்றியும்,
கெடா அத் தீயின் உருகெழு செல்லூர்க்,
கடாஅ யானைக குழுஉச சமம் ததைய,
மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்

முன்முயன்று அரிதினின் முடித்த வேள்வி,
கயிறுஅரை யாத்த காண்தகு வனப்பின்,
அருங்கடி நெடுந்தூண் போல, யாவரும்
காண லாகா மாண் எழில் ஆகம்
உள்ளுதொறும் பனிக்கும் நெடுஞ்சினை, நீயே

நெடும்புற நிலையினை, வருந்தினை
ஆயின், முழங்குகடல் ஓதம் காலைக் கொட்கும்,
பழம்பல் நெல்லின் ஊணுர் ஆங்கண்
நோலா இரும்புள் போல, நெஞ்சு அமர்ந்து
காதல் மாறாக் காமர் புணர்ச்சியின்,

இருங்கழி முகந்த செங்கோல் அவ்வலை
முடங்குபுற இறவோடு இனமீன் செறிக்கும்
நெடுங்கதிர்க் கழனித் தண்சாய்க் கானத்து
யாணர்த் தண்பணை உறும் எனக் கானல்
ஆயம் ஆய்ந்த சாய்இறைப் புணைத்தோள்
நல்எழில் சிதையா ஏமம்
சொல்லினித் தெய்ய, யாம் தெளிய மாறே.

## பொருளுரை:

ஊருஞ் சேரியும் உடன்இயைந்து அலர்எழத்,

தேரொடு மறுகியும், பணிமொழி பயிற்றியும்,

கெடா அத் தீயின் உருகெழு செல்லூர்க்,

கடாஅ யானைக குழுஉச சமம் ததைய,

மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன

ஊரும் சேரியும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, பழிச் சொற்கள் மேலெழுந்து நிற்குமாறு தேரோடுவந்து சுற்றியும், பணிவான சொற்கள் பலவற்றைக் கூறியும் வருகின்றனை, தலைவனே! என்றும் அவியாத வேள்வித் தீயினை உடையது அழகு வளப் செல்லூர்.

முன்முயன்று அரிதினின் முடித்த வேள்வி,

கயிறுஅரை யாத்த காண்தகு வனப்பின்,

அருங்கடி நெடுந்தூண் போல, யாவரும்

காண லாகா மாண் எழில் ஆகம்

உள்ளுதொறும் பனிக்கும் நெடுஞ்சினை, நீயே

அதன்கண் —மதம் பொருந்திய யானையின் கூட்டம் எல்லாம் போர் முனையிலே அழியுமாறு, மன்னர்களின் பரம்பரைகளையே வேருடன் அறுத்த பரசாகிய வாளினையுடைய பரசுராமன், மூன் காலத்திலே முயற்சியுடன் அரிதான முறையிலே செய்து முடிதீத வேள்வியினிடத்தே, கயிற்றினை அரையிலே.

நெடும்புற நிலையினை, வருந்தினை

ஆயின், முழங்குகடல் ஓதம் காலைக் கொட்கும்,

பழம்பல் நெல்லின் ஊனூர் ஆங்கண்

நோலா இரும்புள் போல, நெஞ்சு அமர்ந்து

காதல் மாறாக் காமர் புணர்ச்சியின்,

நல்எழில் சிதையா ஏமம்

சொல்லினித் தெய்ய, யாம் தெளிய மாறே.

கட்டியிருந்த காணத்தகுந்த வனப்பினையுடைய அரிய காவலைக் கொண்ட உயரமான வேள்வித் தாணைப்போல, யாவரும் காண்பதற்கும் இயலாத மாண்புற்ற எழிலினையுடைய எம் தலைவியின் மார்பினை நினையுந்தோம், நடுங்கும் உள்ளம் உடையவனாகிய, நீயும், நினது நெடி தான புறநிலையினைக் கருதி வருந்தினையானால் முழக்கமிடும் கடலின் ஓதமானது, காலை வேளையிலேயும் அலைந்துகொண்டிருக்கும் மிகுதியான பழைய நெல்லையுடைய ஊஎனூர் என்னும் அவ்விடத்திலே, ஒன்றைவிட்டு மற்றொன்று பிரிந்து இருத்தலைப் பெறாது கூடியேயிருக்கும் பெரிய பறவையாகிய மகன்றிலைப்போல நெஞ்சம் பொருந்தி, என்றும் காதல் மாறாத விருப்பமுடைய புணர்ச்சியினாலே பெரிய கழியிலேயிருந்தும் முகந்த நேரிய கோல்களையுடைய அழகிய வலையானது, வளைந்த புறத்தினையடைய இறாமீனுடன் ஏனைய மீனினங்களையும் குவித்துக் கொண்டிருக்கும்.

இருங்கழி முகந்த செங்கோல் அவ்வலை

முடங்குபுற இறவோடு இனமீன் செறிக்கும்

நெடுங்கதிர்க் கழனித் தண்சாய்க் கானத்து

யாணர்த் தண்பணை உறும் எனக் கானல்

ஆயம் ஆய்ந்த சாய்இறைப் புணைத்தோள

நீண்ட கதிர்களையுடைய வயல்கள் நிறைந்த, தண்ணிய சாய்க்கானம் என்னும் இடத்திலயுள்ள, அழகிய குளிர்ந்த மூங்கிலை ஒப்பாகும் என்று, கடற்சோலையிலே தோழிமார்கள் ஆராய்ந்து பாராட்டிய வளைந்த முன்கையினையுடைய இவளது பணைத் தோள்களின், நல்ல அழகானது சிதையாதிருப்பதற்குரிய அரணாகிய ஒரு செய்தியை, யாம் தெளிவு கொள்ளுமாறு இனிச் சொல்வாயாக. என்று, இரவுக்குறி வந்து நீங்குந் தலைமகனை எதிர்ப்பட்டுத் தோழி சொன்னாள் என்க.

## அருஞ்சொற்பொருள்:

ஊர் - பெருங்குடி யினர்வாழ்வது, சேரி- சிறு குடியினர் வாழ்வது. தேரொடு இகுதல் - தேருடன் வந்து சுற்றித்திரிதல், பணிமொழி - பணிவான வேண்டுதற் சொற்கள். உருகெழு - அழகு கெழுமிய. . சமம் - போர் முனை. ததைய அழிய. மன்மருங்கு - மன்னர் பரம்பரை. மழு - முரசு. மழுவாள் - பரசாகிய வாள்நெடியோன் - பரசுராமன் அவன் திருமாலின் அவதாரமாதலினால்அவனையே திருமால் என்றனர் இக்கதை வழக்கு அந்நாள் தமிழகத்தில் நிலைவியதனை இது காட்டும்.

பாடல்:230

பாடியவர்: மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார். .

திணை: நெய்தல்.

துறை: தலைமகளைச் கண்ணுற்று நீங்கும் தலைமகள்,

தன் நெஞ்சிற்குச் சொல்லியது,

பாடல்:

உறுகழி மருங்கின் ஓதமொடு மலர்ந்த

சிறுகரு நெய்தற் கண்போல் மாமலர்ப்

பெருந்தண் மாத்தழை இருந்த அல்குல்,

ஐய அரும்பிய சுணங்கின் வைஊயிற்று,

மைஎஈர்ஓதி, வாள் நுதல் குறுமகள்! 5

விளையாட்டு ஆயமொடு வெண்மணல் உதிர்த்த

புன்னை நுண்தாது பொன்னின் நொண்டு

மனைபுறந் தருதி ஆயின், . எனையதூஉம்,

இம்மனைக் கிழமை எம்மொடு புணரின்

தீதும் உண்டோ, மாத ராய்?” எனக்

கடும்பரி நல்மான், கொடிஞ்சி நெடுந்தேர்

கைவல் பாகன் பையென இயக்க

யாம்தற் குறுகினமாக ஏந்தெழில்

அரிவேய் உண்கண் பனிவரல் ஒடுக்கிச்

சிறிய இறைஞ்சினள், தலையே-

பெரிய எவ்வம் யாமிவண் உறவே

பொருளுரை:

உறுகழி மருங்கின் ஓதமொடு மலர்ந்த

சிறுகரு நெய்தற் கண்போல் மாமலர்ப்

பெருந்தண் மாத்தழை இருந்த அல்குல்,

ஐய அரும்பிய சுணங்கின் வைஎஈயிற்று,

மைஎஈர்ஓதி, வாள் நுதல் குறுமகள்!

பெரிய உப்பங்கழியின் பக்கங்களிலே, நீர்ப்பசையுடன் மலர்ந்துள்ள சிறிய கருநெய்தலின் கண்போன்ற கரிய மலர்கள், பெரிய தண்ணிய சிறந்த தழையுடையிலே பொருந்தியிருக்க, அதனை அணிந்திருக்கும் அல்குல் தடத்தை உடையவளே! மென்மையாக அரும்பிய சுணங்கினையும், கூர்மையான பற்களையும், கருமையான நீண்ட கூந்தலையும், ஒளியுடைய நெற்றியையும் கொண்டவளே!

விளையாட்டு ஆயமொடு வெண்மணல் உதிர்த்த

புன்னை நுண்தாது பொன்னின் நொண்டு

மனைபுறந் தருதி ஆயின், . எனையதூஉம்,

இம்மனைக் கிழமை எம்மொடு புணரின்

தீதும் உண்டோ, மாத ராய்?” எனக்

இளம் பெண்ணே! மாதரசியே! நின்னுடைய விளையாட்டுத் தோழியர்களுடனே, புன்னைமரமானது வெண்மணலிலே உதிர்த்துள்ள நுண்மையான பூந்தாதினைப் பொன்னாகப். பாவித்துக் கொண்டு முகந்து வழங்கி நீ இல்லறம் நடத்துவாயானால், அந்த இல்லறக் கிழமை எம்முடனும் கூடி எவ்வளவும் சேர்ந்து நடப்பதாயின், அதனால் எத்தகைய தீதும் நினக்கு உண்டாகுமோ? என்றேன். கடுமையாகச் செல்லும் நல்ல குதிரைகள் பூட்டிய, நீண்ட தேர் மொட்டுக்களையுடைய, நெடுந்தேரினைச் செலுத்துவதிலே வல்லவனான பாகன் மெல்லென நடத்திச்செல்ல, யான் அவ்வாறு சொல்லிக்கொண்டே அவளை நெருங்கினேன்.

கடும்பரி நல்மான், கொடிஞ்சி நெடுந்தேர்

கைவல் பாகன் பையென இயக்க

யாம்தற் குறுகினமாக ஏந்தெழில்

அரிவேய் உண்கண் பனிவரல் ஒடுக்கிச்

சிறிய இறைஞ்சினள், தலையே

பெரிய எவ்வம் யாமிவண் உறவே!

அப்போது, யான் இவ்விடத்தே காமநோயினாலே பெரிய வருத்தத்தை அடையுமாறு, அழகு மிகுந்த செவ்வரிகள் படர்ந்த மையுண்ட தன் கண்களிலே துளிர்த்த கண்ணீர் வெளிப்பட்டு வருதலையும் மறைத்துத், தன் தலையினைச் சிறிதே கவிழ்த்துக் கொண்டனள் அவள்என்று, தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொன்னான் என்க.

### அருஞ்சொற்பொருள்:

உறுகழி - பெரிய உப்பங்கழி. ஓதம் நீர்ப்பசை மாறாத நிலப்பகுதி. மாமலர் - கரிய மலர், ஐய - : மென்மையாக: நுண்ணிதாக. நொண்டு - முகந்து. மனைபுறந்தருதல் - குடும்ப வாழ்வினை நடத்துதல்.

### 240. புன்னைச் சோலைக்கு வருக!

பாடல்:240 !

பாடியவர்: எழூஉப்பன்றி நாகன் குமரனார்.

திணை: பாலை.

துறை: தோழி, இரவுக்குறி வந்த தலைமகற்குப் பகற்குறி நேர்ந்தது.

பாடல்:

செவ்வீ ஞாழற் கருங்கோட்டு இருஞ்சினைத்

தனிப்பார்ப்பு உள்ளிய தண்பறை நாரை

மணிப்பூ நெய்தல் மாக்கழி நிவப்ப,

இனிப்புலம் பின்றே கானலும், நளிகடல்

திரைச்சுரம் உழந்த திண்திமில் விளக்கில்

பன்மீன் கூட்டம் என்னையார்க் காட்டிய

எந்தையும் செல்லுமார் இரவே அந்தில்

அணங்குடைப் பனித்துறை கைதொழுது ஏத்தி,

யாயும் ஆயமோடு அயரும் நீயும்,

தேம்பாய் ஓதி திருநுதல் நீவிக்,

கோங்குமுகைத் தன்ன குவிமுலை ஆகத்து,
இன்துயில் அமர்ந்தனை ஆயின், வண்டுபட
விரிந்த செருந்தி வெண்மணல் முடுக்காப்,
பூவேய் புன்னை அம் தண்பொழில்,
வாவே தெய்ய, மணந்தனை செலற்கே,

## பொருளுரை:

செவ்வீ ஞாழற் கருங்கோட்டு இருஞ்சினைத்
தனிப்பார்ப்பு உள்ளிய தண்பறை நாரை
மணிப்பூ நெய்தல் மாக்கழி நிவப்ப,
இனிப்புலம் பின்றே கானலும், நளிகடல்
திரைச்சுரம் உழந்த திண்திமில் விளக்கில்

சிவந்த பூவினையுடைய கொன்றையின் கருமையான கிளையிலேயுள்ள பெரிய கொம்பிலே, தனித்திருக்கும் தன்னுடைய குஞ்சினை நினைத்துக்கொண்ட, தணிவாகப் பறத்தலையுடைய நாரையானது, நீலமணிபோலும் நெய்தல் மலர்களையுடைய பெரிய கழியினின்றும் மேலே எழுந்து பறந்து போகக் கடற்கரைச் சோலையும் இப்போது தனிமை உடையதாயிற்று.

பன்மீன் கூட்டம் என்னையார்க் காட்டிய
எந்தையும் செல்லுமார் இரவே அந்தில்
அணங்குடைப் பனித்துறை கைதொழுது ஏத்தி,
யாயும் ஆயமோடு அயரும் நீயும்,
தேம்பாய் ஓதி திருநுதல் நீவிக்,

செறிந்த கடலின் அலைகளாகிய சுரத்திலே சிக்கி வருந்திய, திண்ணிய படகின் விளக்கொளியிலே, பிடித்த பலவாகிய மீன் கூட்டங்களை, என் அண்ணன்மார் தமக்குக் காட்டுவதற்காக, என் தந்தையும், இரவிலே கடற்கரைக்குச் செல்வாராயினர். என் தாயும், ஆயமகளிருடன், தெய்வத்தையுடைய குளிர்ந்த நீர்த்துறையிலே, அத் தெய்வத்தைக் கைகுவித்து வணங்கிப் போற்றி, அதற்குச் சிறப்பும் செய்தவளாயிருப்பாள்.

கோங்குமுகைத் தன்ன குவிமுலை ஆகத்து,
இன்துயில் அமர்ந்தனை ஆயின், வண்டுபட
விரிந்த செருந்தி வெண்மணல் முடுக்காப்,
பூவேய் புன்னை அம் தண்பொழில்,

வாவே தெய்ய, மணந்தனை செலற்கே,

நீயும், தேனொழுகும் கூந்தலையுடைய தலைவியினது அழகிய நெற்றியைத் தடவிவிட்டுக், கோங்கு அரும்பினாற் போன்று குவிந்திருக்கும் முலைகளையுடைய மார்பகத்தே, இனிய துயில் கொள்ளுதலை விரும்பினாயானால், அவளை மணந்து கூடிச் செல்லுதற்கு, வண்டு மொய்க்க விரிந்த செருந்திப்பூக்களையுடைய வெண்மணலிடத்து முடுக்கரிடத்தே பூக்கள் நிறைந்திருக்கும் புன்னை மரங்களையுடைய அழகிய குளிர்ந்த பொழிலினிடத்தே, இனிய பகற்போதிலேயே வருவாயாக,என்று, இரவுக்குறிவந்த தலைமகற்குத் தோழி பகற்குறி நேர்ந்தனள் என்க.

## அருஞ்சொற்பொருள்:

செவ்வீ - சிவந்த மலர். தனிப் பார்ப்பு தனித்திருக்கும் குஞ்சு. தண்பறை நாரை - தணிவாக்வே பறக்கின்ற இயல்புடைய நாரை. மணிப்பூ - நீலமணி போன்ற நீலப்பூ. திரைச்சுரம் - அலைகளாகிய சுரம், சுரம் - பாலைநிரம். அந்தில் - அவ்விடத்தே் அசையுமாகும்.

250. உறங்காத கடல் துறை

பாடல்: 250

பாடியவர்: செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங்

கொற்றனார்.

திணை: நெய்தல்.

துறை: தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி தலைமகட்குக்

குறைநயப்பக் கூறியது.

பாடல்:

எவன்கொல்?-வாழி,தோழி!-மயங்குபிசிர்

மல்குதிரை உழந்த ஒல்குநிலைப் புன்னை

வண்டிமிர் இணர நுண்தாது வரிப்ப

மணம்கமழ் இளமணல் எக்கர்க் காண்வரக்,

கணம்கொள் ஆயமொடு புணர்ந்து விளையாடக்,

கொடுஞ்சி நெடுந்தேர் இளையரொடு நீக்கித்,

தாரன், கண்ணியன், சேரவந்து, ஒருவன்,

வரிமனை புகழ்ந்த கிளவியன் யாவதும்

மறுமொழி பெறாஅன் பெயர்ந்தனன் அதற்கொண்டு

அரும்படர் எவ்வமொடு பெருந்தோள் சாஅய்,

அவ்வலைப் பரதவர் கானலஞ் சிறுகுடி

செவ்வாய்ப் பெண்டிர் கவ்வையின் கலங்கி,

இறைவளை நெகிழ்ந்த நம்மொடு

துறையும் துஞ்சாது, கங்கு லானே!

## பொருளுரை:

எவன்கொல்?-வாழி,தோழி!-மயங்குபிசிர்

மல்குதிரை உழந்த ஒல்குநிலைப் புன்னை

வண்டிமிர் இணர நுண்தாது வரிப்ப

மணம்கமழ் இளமணல் எக்கர்க் காண்வரக்,

கணம்கொள் ஆயமொடு புணர்ந்து விளையாடக்,

தோழி! நீ வாழ்க! மிகுந்த அலைகளினின்றும் தெறிக்கும் நெருங்கிய நீர்த்துளிகளால் வருந்திய உயர்ந்த நிலையினையுடைய புன்னையின், வண்டினம் மொய்க்கின்ற பூங்கொத்துக்களிலிருந்து நுண்மையான பொடிகள் உதிர்ந்து அழகு செய்ய, அதன் மணம் கமழ்ந்து கொண்டிருக்கின்ற மென்மையான மணல்மேட்டிலே, கூட்டமான ஆயத்தாரோடும் கலந்து, யாம் அழகுபொருந்த ஒருநாள் விளையாடியிருந்தோம்.

கொடுஞ்சி நெடுந்தேர் இளையரொடு நீக்கித்,

தாரன், கண்ணியன், சேரவந்து, ஒருவன்,

வரிமனை புகழ்ந்த கிளவியன் யாவதும்

மறுமொழி பெறாஅன் பெயர்ந்தனன் அதற்கொண்டு

அரும்படர் எவ்வமொடு பெருந்தோள் சாஅய்,

அவ்வேளையிலே, மொட்டினையுடைய நீண்ட தேரினை, ஏவலிளையரோடு நீக்கி நிறுத்திவிட்டு, மார்பிலே தாரும் தலையிலே கண்ணியும் உடையவனாக, ஒருவன் எம் அருகே வண்டல் மனையைப் புகழ்ந்தும் பேசினான். எவ்விதமான மறுமொழியும் எம்மிடமிருந்து பெறாதவனாகப் போயும் விட்டான். அது முதற்கொண்டு, அரிதாகப் படர்கின்ற துன்பத்தோடு பெரிதான தோள்களும் மெலிய, அழகிய வலைகளை உடைய வரான பரதவர்களது கானற்சோலையிலேயுள்ள அழகிய சிற்றூரிலேயிருக்கும் கொடிய வாயினரான பெண்களின் பழிச்சொற்களாலும் கலங்கி, முன்கை வளைகளும் கழன்றனம் ஆயினோம் யாம்.

அவ்வலைப் பரதவர் கானலஞ் சிறுகுடி

செவ்வாய்ப் பெண்டிர் கவ்வையின் கலங்கி,

இறைவளை நெகிழ்ந்த நம்மொடு

துறையும் துஞ்சாது, கங்கு லானே!

நம்முடனே, இரவுப்பொழுதிலே, இக்கடற்றுறையும் உறங்காதிருக்கின்றதே! அதுதான் என்ன காரணமோ? என்று, தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி, தலைமகட்குக் குறைநயப்பக் கூறினாள் என்க.

### அருஞ்சொற்பொருள்:

மயங்குபிசிர் - நெருங்கிய துளிகள். மல்குதிரை - மிகுதியான அலைகள். வரிப்ப - அழகுசெய்ய, இளமணல் - பூமணல் என்னும் நுண் மணல். காண்வர காட்சிக்கு இனிதாக. வரிமனை - இழைத்த வண்டல் மனை. சாஅய் - மெலிந்துபோக.

260. அன்பிலாளன் அறிவு!

பாடல்:260

பாடியவர்: மோசிக் கரையனார்.

திணை: நெய்தல்.

துறை: இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத்

தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியது.

பாடல்:

மண்டிலம் மழுக, மலைநிறம் கிளர,
வண்டினம் மலர்பாய்ந்து ஊத, மீமிசைக்
கண்டற் கானல் குருகினம் ஒலிப்பக்,
கரைஆடு அலவன் அளைவயின் செறியத்,
திரைபாடு அவியத், திமில் தொழில் மறப்பச்,
செக்கர் தோன்றத், துணைபுணர் அன்றில்,
எக்கர்ப் பெண்ணை அகமடல் சேரக்,
கழிமலர் கமழ்முகம் கரப்பப், பொழில்மனைப்
புன்னை நறுவீ பொன்நிறம் கொளாஅ,
எல்லை பைப்பயக் கழிப்பி எல்உற,

யாங்குஆ குவள்கொல்? யானே நீங்காது,
முதுரத்து உறையும், முரவுவாய் முதுபுள்
கதுமெனக் குழறும், கழுதுவழங்கு, அரைநாள்,
நெஞ்சுநெகிழ் பருவரல் செய்த
அன்பி லாளன் அறிவுநயந் தேனே.

பொருளுரை:

மண்டிலம் மழுக, மலைநிறம் கிளர,

வண்டினம் மலர்பாய்ந்து ஊத, மீமிசைக்

கண்டற் கானல் குருகினம் ஒலிப்பக்,

கரைஆடு அலவன் அளைவயின் செறியத்,

திரைபாடு அவியத், திமில் தொழில் மறப்பச்,

மலைகள் நிறம் பெற்றன. வண்டினம் மலர்களிலே பாய்ந்து ஊதிக் கொண்டிருக்கின்றன. சோலையிலுள்ள தாழைகளின் மேலேயிருந்து நாரையினங்கள் ஒலிக்கின்றன. கரையோரத்தில் விளையாடும் நண்டு வளையினுள்ளே செல்கின்றது. கடல் அலைகள் தம்முடைய முழக்கத்தைக் கைவிட்டன. மீன்பிடி படகுகள் தம் தொழிலை மறந்து கரையிலேயே கிடந்தன.

செக்கர் தோன்றத், துணைபுணர் அன்றில்,

எக்கர்ப் பெண்ணை அகமடல் சேரக்,

கழிமலர் கமழ்முகம் கரப்பப், பொழில்மனைப்

புன்னை நறுவீ பொன்நிறம் கொளாஅ,

எல்லை பைப்பயக் கழிப்பி எல்உற,

துணையைப் பிரியாது சேர்ந்திருக்கின்ற அன்றிற் பறவையானது, மணல் மேட்டிலேயுள்ள பனையினது உள்மடலிலே சென்று அடைந்தது. கழியிலேயுள்ள பூக்கள் மணங்கமழும் இதழ்கள் குவியப் பெற்றனவாக விளங்கின. பொழிலிலேயுள்ள வீட்டுப் புன்னையின் நறுமலர்கள், பொன்னிறத்தைக் கொண்டனவாகத் தம் இதழ்கள் விரிந்தன. பகல் நேரத்தைப் பையப்பையக் . கழியச்செய்து, ஞாயிற்று மண்டிலமும், தன் ஒளி மழுங்கி, மேற்றிசையிலே சென்று சேர்ந்தது. இனி, இரவும் வந்தவிடத்து, இவள் எந்த நிலையினை அடைவாளோ? (இவ்வாறு தோழி தலைவியிடத்திலே சொல்லுகிறாள் அதற்கு அவள் பின்வருமாறு மறுமொழி சொல்லுகிறாள்)

யாங்குஆ குவள்கொல்? யானே நீங்காது,

முதுரத்து உறையும், முரவுவாய் முதுபுள்

கதுமெனக் குழறும், கழுதுவழங்கு, அரைநாள்,

நெஞ்சுநெகிழ் பருவரல் செய்த

அன்பி லாளன் அறிவுநயந் தேனே.

முதுமரப் பொந்தினை விட்டு நீங்காது இருந்துவருகின்ற, முழங்கும் வாயினையுடைய முதுமையுற்ற பேராந்தையானது கதுமெனத் தன் குரலெடுத்துக் குழறும். பேய்கள் நடமாடும் அத்தகைய நள்ளிரவு வேளையிலே, நெஞ்சத்தை நெகிழ்விக்கின்ற துன்பத்தை நமக்குச் செய்த அந்த அன்பில்லாதவனுடைய அறிவுடைமையை உண்மையென எண்ணி, யானும் அன்று விதும்பினேனே! (அதுதான் இன்று துயருற்றேன் தவறு என்மீதுதான் என்கிறாள் தலைவி.) என்று, இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழியாற் சொல்லெடுக்கப் பட்டுத் தலைமகள் சொன்னாள் என்க,

சொற்பொருள்:

.மண்டிலம் - ஞாயிற்று மண்டிலம். மலர் பாய்ந்து - மலர்களில் விரைந்து சென்று, கண்டல் - தாழை. பாடு - ஒலித்தல். திமில் - மீன்பிடி. படகு

270. நும் ஊர் நினைப்பீர்!

பாடியவர்: சாகலாசனார்.

திணை: நெய்தல்.

துறை: பகற் குறிக்கண் வந்து நீங்கும் தலைமகனைத்

தோழி வரைவுகடாயது.

பாடல்:

இருங்கழி மலர்ந்த வள்ளிதழ் நீலம்,
புலாஅல் மறுகின் சிறுகுடிப் பாக்கத்து
இனமீன் வேட்டுவர், ஞாழலொடு மிலையும்
மெல்லம் புலம்ப! நெகிழ்ந்தன, தோளே,
சேயிறாத் துழந்த நுரைபிதிர்ப் படுதிரை

பராஅரைப் புன்னை வாங்குசினைத் தோயும்
கானல் பெருந்துறை நோக்கி, இவளே,
கொய்சுவற் புரவிக் கைவண் கோமான் .
நல்தேர்க் குட்டுவன் கழுமலத்து அன்ன,
அம்மா மேனி தொல்நலம் தொலைய,

துஞ்சாக் கண்ணள் அலமரும், நீயே,
கடவுள் மரத்த முள்மிடை குடம்பைச்
சேவலொடு புணராச் சிறுகரும் பேடை
இன்னாது உயங்கும் கங்குலும்,
நும்னர் உள்ளுவை நோகோ, யானே.

பொருளுரை:

இருங்கழி மலர்ந்த வள்ளிதழ் நீலம்,
புலாஅல் மறுகின் சிறுகுடிப் பாக்கத்து

இனமீன் வேட்டுவர், ஞாழலொடு மிலையும்

மெல்லம் புலம்ப! நெகிழ்ந்தன, தோளே,

சேயிறாத் துழந்த நுரைபிதிர்ப் படுதிரை

சிறிய குடியிருப்புகளை உடையது பாக்கம். அங்குப் புலால் நாற்றமும் நிறைந்திருக்கும். அங்குள்ள மீனினத்தை வேட்டையாடுவோரான பரதவர்கள், பெரிய உப்பங்கழியிலே மலர்ந்திருக்கும் வளம்வாய்ந்த இதழ்களையுடைய நீலப் பூக்களைப், புலிநகக் கொன்றையின் பூக்களுடனே கலந்து சூட்டிக்கொண்டிருப்பார்கள். அத்தகைய மென்னிலத்திற்கு உரியவனான தலைவனே!

பராஅரைப் புன்னை வாங்குசினைத் தோயும்

கானல் பெருந்துறை நோக்கி, இவளே,

கொய்சுவற் புரவிக் கைவண் கோமான் .

நல்தேர்க் குட்டுவன் கழுமலத்து அன்ன,

அம்மா மேனி தொல்நலம் தொலைய,

இவளுடைய தோள்களோ மெலிந்தன! சிவந்த இறாமீன் கலக்கிய பிதிர்பட்டு மோதும் அலைகளின் நுரைகள், பெரியஅடிமரத்தினையுடைய புன்னையின் வளைந்த கிளைகளிலே தங்கியிருக்கும், கானற்சோலையை அடுத்துள்ள அழகிய பெரிய துறையினையே இவள் நோக்குவாளாயினள். கொய்யப் பெற்ற பிடரிமயிரினையடைய குதிரைகளை உடையவனும், கைவண்மை உடையவனும், பெரிய தலைவனுமாகிய, நல்ல தேனினையுடைய குட்டுவனது கழுமலத்தைப் போன்ற, தன் மேனியின் சிறந்த நலம் எல்லாம் அழிந்து போகுமாறு, உறக்கமற்ற கண்ணிளாகவும் கலங்கியிருப்பாளாயினள்.

துஞ்சாக் கண்ணள் அலமரும், நீயே,

கடவுள் மரத்த முள்மிடை குடம்பைச்

சேவலொடு புணராச் சிறுகரும் பேடை

இன்னாது உயங்கும் கங்குலும்,

நும்னர் உள்ளுவை நோகோ, யானே.

நீயோ வென்றால், கடவுள் மரத்தினையுடைய முள்ளால் மிடையப் பெற்றிருக்கின்ற கூட்டிலே, தன் சேவலோடுங் கூடற் வாயாத சிறிய கரிய அன்றிற் பேடையானது, துன்பமுற்றுக் கிடந்து வருந்துகின்ற இரவுவேளையும், நின்னுடைய ஊருக்குப்போய்விடவே எண்ணுகின்றனை. யான்தான் இங்கே நோக்கின்றேன்! என்று, பகற்குறிக்கண் வந்து நிற்கும் தலைமகனைத் தோழி - வரைவு கடாயினாள் என்க.

அருஞ்சொற்பொருள்:

வள்ளிதழ் நீலம் - வளவிய இதழ்களையுடையவான நீலமலர். பாக்கம் - கடற்கரையூர். ஞாழல் புலிநகக் கொன்றை. சேயிறா - சிவப்பான இறாமீன்கள். துழந்த - கலக்கிய, குட்டுவன் - சேரன். கழுமலர் - நென்மலி என வழங்கும் கொங்கு நாட்டு இடத்தாகிய பழைய பேரூர். சோழன் செங்கணானுக்கும் சேரமான் கணைக்காலிரும் பொறைக்கும் நடந்த கழுமலப் போரினை நினைக்க) கரிகாலன் இவ்வூரிலிருந்தான் எனவும், களிறு இங்கு வந்து இவனைத் தூக்கிச் சென்றது எனவும் உரைப்பர். கடவுள் மரத்த - கடவுள் வீற்றிருப்பதாகத்

தொழப்படும் மரத்தையுடைய் கடவுள் மரங்களில் வீற்றிருந்து அருள்:புரிவதாகத் தொழுவது தமிழரின் பழங்கொள்கை. இதன் விளக்கமாக, இன்றும் தென்னாட்டுக் கோயில்களில் தல விருட்சங்களைக் காணலாம்.

280. தந்தை வருவானோ!

பாடியவர்: அம்மூவனார்.

திணை: நெய்தல்

துறை: 1. தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகன்

தன் நெஞ்சிற்குச் சொல்லியது. 2. அல்லகுறிப்பட்டுப்

போகா நின்றவன் சொல்லியது.

பாடல்:

பொன் அடர்ந் தன்ன ஒள்ளிணர்ச் செருந்திப்

பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையள்.

திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி அசையினள்

இருந்த ஆய்தொடிக் குறுமகள்,

நலம்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்,

பெறல்அருங் குரையள் ஆயின், அறம்தெரிந்து,

நாம்உறை தேஎம் மரூஉப்பெயர்ந்து, அவனொடு .

இருநீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழுதும்,

பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்,

படுத்தனம், பணிந்தனம் அடுத்தனம், இருப்பின்,

தருகுவன் கொல்லோ தானே - விரிதிரைக்

கண்திரள் முத்தம் கொண்டு ஞாங்கர்த்

தேனிமிர் அகன்கரைப் பகுக்கும்

கானலம் பெருந்துறைப் பரதவன் எமக்கே?

பொருளுரை:

பொன் அடர்ந் தன்ன ஒள்ளிணர்ச் செருந்திப்

பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையள்.

திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி அசையினள்

இருந்த ஆய்தொடிக் குறுமகள்,

நலம்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்,

> நெஞ்சமே! பொன் அடர்ந்திருப்பது போன்ற ஒளியுடைய கொத்துக்களாக விளங்கும் செருந்தியின் பலவான பூக்களைச் சூடியுள்ள, அழகு பொருந்திய கூந்தலை உடையவள் மணல் செறிந்துள்ள கடற்கரையிலேயுள்ள நண்டினை ஓட்டி விளையாடி அதனால் களைத்தவளாக இளைப்பாறி இருப்பவள் ஆய்ந்த தொடியினை அணிந்துள்ள இளையவள். நலம் மிகுந்த சிறந்த பொருள்களை எல்லாம் மரக்கலம் நிறையக் கொணர்ந்து முலைவிலையாக நாம் கொடுத்தாலுங்கூட, நம் மால் அடையப் பெறுவதற்கு அவள் அரியவளே!

பெறல்அருங் குரையள் ஆயின், அறம்தெரிந்து,

நாம்உறை தேஎம் மரூஉப்பெயர்ந்து, அவனொடு .

இருநீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழுதும்,

பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்,

படுத்தனம், பணிந்தனம் அடுத்தனம், இருப்பின்,

> விரிந்த கடலின் கண்ணே இருந்து, திரண்ட முத்துக்களை எடுத்துக்கொண்டு வந்து, தேனுண்ணும் வண்டினம் ஒலித்துக் கொண்டிருக்கும் அகன்ற கரையினிடத்தே அவற்றைப் பகுத்துக் கொண்டிருக்கும், அழகிய கானற்சோலைகளையுடைய பெருந்துறைக்கு உரியவனாகிய தலைவன் அவளுடைய தந்தை. நாம் வாழ்ந்திருக்கும் நாட்டினைவிட்டு நீங்கி இவ்விடத்தே வந்து, அவனோடும் கூடி, பெரிய கடற்கரையின் இடத்தேயுள்ள உப்புபாத்திகளிலே அவனுக்காகப் பணிசெய்து வருந்தியும் .

தருகுவன் கொல்லோ தானே - விரிதிரைக்

கண்திரள் முத்தம் கொண்டு ஞாங்கர்த்

தேனிமிர் அகன்கரைப் பகுக்கும்

கானலம் பெருந்துறைப் பரதவன் எமக்கே?

> பெருங்கடலினிடத்தே அழத்தில் புணையோடு புகுந்தும், அவன் வயமாகியும், அவனைப் பணிந்தனமாகியும், அவனைச் சார்ந்தனமாகியும் இருப்போமானால், ஒருவேளை, அவன் அறத்தின் கூறு பாடுகளைத் தெரிந்தவனாக, அவனாகவே அவளை எமக்கு மணஞ்செய்து தருவானோ? (நெஞ்சமே! என் செய்வோம்?) என்று, தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொன்னான் என்க. :

சொற்பொருள்:

அடர்ந்தன்ன- செறிந்திருந்தாற் போன்ற மலர் வேய்ந்த கூந்தல் மறையுமாறு மலர் சூடிய, திணி மணல் செறிந்த மணல். அடைகரை - கடற்கரை. அசையினள் தளர்ந்தவளாக. மதுஉப் பெயர்ந்து - தங்குதலினின்றும் . நீங்கிவந்து. பெருநீர்க் குட்டம் - கடலின் கண்ணுள்ள அழமிகுந்த இடம். கண்திரள் முத்தம் - கண்கள் திரட்சியுள்ள முத்துக்கள் நன்குவிளைந்த நீரோட்டம் உடைய முத்துக்கள். பரதவன் - நெய்தல் நிலத்தின் தலைவன்.

290. நீலம் பொன்னாயிற்றே!

பாடியவர்: நக்கீரர்.

திணை: நெய்தல்.

துறை: இரவுக்குறிக் கண் தலைமகன்

சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லு வாளாய்த்

தலைமகள் சொல்லியது

பாடல்:

குடுமிக் கொக்கின் பைங்காற் பேடை
இருஞ்சேற்று அள்ளல் நாட்புலம் போகிய
கொழுமீன் வல்சிப் புன்தலைச் சிறாஅர்
நுண்ஞாண் அவ்வலைச் சேவல் பட்டென,
அல்குகு பொழுதின் மெல்குஇரை மிசையாது,
பைதல் பிள்ளை தழீஇ, ஒய்யென,
அம்கண் பெண்ணை அன்புற நரலும்
சிறுபல் தொல்குடிப் பெருநீர்ச் சேர்ப்பன்.
கழிசேர் புன்னை அழிபூங் கானல்,
தணவா நெஞ்சமொடு தமியன் வந்து நம்

மணவா முன்னும் எவனோ, தோழி?
வெண்கோட்டு யானை விறற்போர்க் குட்டுவன் .
தென்திரைப் பரப்பின் தொண்டி முன்துறைக்,
கரும்புஉண மலர்ந்த பெருந்தண் நெய்தல்
மணிஏர் மாண்நலம் ஒரீஇப்,
பொன்நேர் வண்ணம் கொண்டஎன் கண்ணே?

பொருளுரை:

குடுமிக் கொக்கின் பைங்காற் பேடை
இருஞ்சேற்று அள்ளல் நாட்புலம் போகிய
கொழுமீன் வல்சிப் புன்தலைச் சிறாஅர்
நுண்ஞாண் அவ்வலைச் சேவல் பட்டென,
அல்குகு பொழுதின் மெல்குஇரை மிசையாது,

தோழி! கருமையான சேற்றுக் குழம்பினைக் கொண்ட வயலினிடத்தே, நாட்காலையிலே சென்ற, கொழுமீன் உணவைக் கொண்டவராகிய புற்கென்ற தலைமயிரையுடைய சிறுவர்களின் நுண்ணிய கறிற்றினாலாகிய அழகிய வலையிலே தன் சேவல் அகப்பட்டதாகத், தலையிற் கொண்டையினை யுடைய அக் கொக்கின் பசுமையான கால்களையுடைய பேடையானது, தனித்துத் தான் மிகவும் வருந்தும்.

பைதல் பிள்ளை தழீஇ, ஒய்யென,

அம்கண் பெண்ணை அன்புற நரலும்

சிறுபல் தொல்குடிப் பெருநீர்ச் சேர்ப்பன்.

கழிசேர் புன்னை அழிபூங் கானல்,

தணவா நெஞ்சமொடு தமியன் வந்து நம்

அப்படி அது வருந்தும் பொழுதிலே, மெல்லும் இரையினையும் தின்னாது துன்புறும் தன் குஞ்சினைத் தழுவியவாறே, "ஓய் என்று, அழகிய இடத்தையுடைய பனை மரத்தின்கண் சென்று அமர்ந்து, தன் அன்பு தோன்ற ஒலித்துக்கொண்டே இருக்கும். அத்தகைய, சிறிய பலவாகிய பழங்குடியினர்களைக் கொண்ட, கடற்கரை நாட்டின் தலைவன் நம் காதலன். அவன். கழியினைச் சேர்ந்துள்ள புன்னையின் உதிர்ந்த பூக்களையுடைய கானற்சோலையிலே, அன்பு நீங்காத நெஞ்சத்துடனே.

மணவா முன்னும் எவனோ, தோழி?

வெண்கோட்டு யானை விறற்போர்க் குட்டுவன் .

தென்திரைப் பரப்பின் தொண்டி முன்துறைக்,

கரும்புஉண மலர்ந்த பெருந்தண் நெய்தல்

மணிஏர் மாண்நலம் ஒரீஇப், 15

பொன்நேர் வண்ணம் கொண்டஎன் கண்ணே?

தனிமையாளனாக வந்து நம்மைக் கூடி இன்புறுத்தாதற்கு முன்பாகவும், என் கண்கள், வெண்மையான கொம்புகளையுடைய யானையினைப் போன்ற போர் வெற்றினையுடைய குட்டுவனது, தெளிந்த அலைகள் பொருந்திய பரப்பினிடத்தேயுள்ள தொண்டியின் முன்துறையிலே, வண்டு உண்ணலால் மலர்ந்த பெரிய குளிர்ச்சியான நெய்தற்பூவின் நீலமணி போன்ற அழகு மாட்சிமையினை உடைய நலத்தினைக் கைவிட்டுப், "பொன்போலும் நிறத்தனைக் கொண்டனவே! இ∴து என்னவோ? என்று, இரவுக் குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொன்னாள் என்க.

அருஞ்சொற்பொருள்:

குடுமி - கொண்டை ஆண் கொக்கின் தலையுச்சியிலேயுள்ள இறகுகள். அள்ளல் - குழம்பு போன்ற தன்மை அளல் எனவும் வழங்குவர். வல்சி - உணவு. அல்குறு பொழுது - தனித்த பொழுது. பைதல் - வருத்தம். அழிபூ உதிர்ந்த பூ மிகுந்த பூக்களும் ஆம். தணவா - அன்பு நீங்காத. பொன்னேர் வண்ணம் கொளல் - பசலை பாய்தல்.

300. விருந்தும் செய்வோம்!

பாடியவர்: உலோச்சனார்.

திணை: நெய்தல்.

துறை: பகற்குறி வந்து நீங்கும் தலைமகற்குச்

சொல்லியது.

பாடல்:

நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்
நுணங்குமணல் ஆங்கண் உணங்கப் பெய்ம்மார்,
பறிகொள் கொள்ளையர், மறுக உக்க
மீன்ஆர் குருகின் கானலம் பெருந்துறை,
எல்லை தண்பொழில் சென்றெனச் செலீஇயர்,

தோர்பூட்டு அயர ஏஎய், வார்கோல்
செறிதொடி திருத்திப் பாறுமயிர் நீவிச்,
“செல்இனி, மடந்தை! நின் தோழியொடு,மனை” எனச்
சொல்லிய அளவை, தான்பெரிது கலுழ்ந்து,
தீங்குஆ யினள்இவள் ஆயின் தாங்காது,

நொதுமலர் போலப் பிரியின் கதுமெனப்
பிறிதுஒன்று ஆகலும் அஞ்சுவல் அதனால்,
சேணின் வருநர் போலப் பேணா,
இருங்கலி யாணார்எம் சிறுகுடித் தோன்றின்,
வல்லெதிர் கொண்டு, மெல்லிதின் வினைஇத்,

துறையும் மான்றன்று பொழுதே்
சுறவும் ஓதம் மல்கலின், மறு ஆயினவே
எல்லின்று தோன்றல்! செல்லாதீம்” என,
எமர்குறை கூறத் தங்கி, ஏமுற,
இளையரும் புரவியும் இன்புற, நீயும்
இல்லுறை நல்விருந்து அயர்தல்
ஓல்லுதும், பெரும! நீ நல்குதல் பெறினே.

பெருமானே!

பொருளுரை:

நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்

நுணங்குமணல் ஆங்கண் உணங்கப் பெய்ம்மார்,

பறிகொள் கொள்ளையர், மறுக உக்க

மீன்ஆர் குருகின் கானலம் பெருந்துறை,

எல்லை தண்பொழில் சென்றெனச் செலீஇயர்,

நாட்காலையிலேயே வலையால் மீனை முகந்து கொணர்ந்த, கொள்ளுந் தொழிலிலே வல்லவரான பரதவர்கள், பின், பறியினாலே கொண்ட கொள்ளையினையும் உடையவராக, நுண்ணிய மணல் செறிந்துள்ள இடத்திலே அந்த மீன்கொள்ளை காயுமாறு அவற்றைப் பெய்திருப்பார்கள். அவர்கள் வருந்துமாறு மீன்களைத் தின்னும் பறவையினம் வந்து வீழும்.

தோர்பூட்டு அயர ஏஎய், வார்கோல்

செறிதொடி திருத்திப் பாறுமயிர் நீவிச்,

“செல்இனி, மடந்தை! நின் தோழியொடு,மனை” எனச்

சொல்லிய அளவை, தான்பெரிது கலுழ்ந்து,

தீங்குஆ யினள்இவள் ஆயின் தாங்காது

அத்தகைய கானற் சோலையினை யுடையது கடற்றுறை. அதன் கண் குளிர்ச்சியான சோலையிடத்திலே, பகற்பொழுதும் கழிந்ததாக, நின் ஊருக்குச் செல்வாயாகத் தேரினைப் பூட்டு மாறு ஏவியவனாயினை! நின் தலைவியின் மிகுந்த கோற் றொழிலினையுடைய வளைகளைத் திருத்தியவனாசவும், சிதறிக் கலைந்த கூந்தலைத் தடவி ஒழுங்கு செய்தவனாகவும், “மடந்தையே! நின் தோழியோடும் .இனி நின் மனைக்குச் செல்வாயாக!” என்றனை.

நொதுமலர் போலப் பிரியின் கதுமெனப்

பிறிதுஒன்று ஆகலும் அஞ்சுவல் அதனால்,

சேணின் வருநர் போலப் பேணா,

இருங்கலி யாணர்எம் சிறுகுடித் தோன்றின்,

வல்லெதிர் கொண்டு, மெல்லிதின் வினைஇத

அப்படி நீ சொல்லிய அளவானே இவள் பெரிதும் கலங்கியவளாகத் தீங்குற்றனள் என்றால், அதனைத் தாங்கி அவளைப் பேணி நிற்காது, ஏதிலார் போல நீயும் பிரிந்து செல்வாயானால், அதனால் திடுமெனப் பிரிதொன்று நிகழ்வதனைக் (அவள் பிரிவாற்றாது இரந்துபடு தலைக்) கருதியும் யான் அச்சம் கொள்வேன். அதனால், நீயும் என் பேச்சைக் கேட்டு அருளுதலாகிய எண்ணம் கொண்டனையானால், தொலைவினின்றும் வரும் ஏதிலார் போல, “எம்மோடு உறவில்லாதவனாகக் காட்டிக்கொண்டு, எதனையும் கருதாயாக, மிக்க அரவாரத்தையுடைய அழகிய எம்முடைய சிற்றூரிடத்தே, நீயாக வருவதுபோல வந்து சேர்வாயாக.

துறையும் மான்றன்று பொழுதே்

சுறவும் ஓதம் மல்கலின், மறு ஆயினவே்

எல்லின்று் தோன்றல்! செல்லாதீம்" என,

எமர்குறை கூறத் தங்கி, ஏமுற,

இளையரும் புரவியும் இன்புற, நீயும

வந்தால், எங்கள் சுற்றத்தார், விரைவிலே நின்னை எதிர்கொள்வர். நின் வருகைபற்றியும் மெல்லென வினவுவர்."பொழுதும் மயங்கிவிட்டது. நீர்த்துறையும் அலை மிகுதியாகி ஏறுதலால் செல்வதற்கு ஏற்றதன்று. அவ்விடத்தே கிடக்கும் சுறாமீன்களும் செல்வார்க்கு மிகவும் பகையாயிருப்பன. இரவும் வந்தது.

இல்லுறை நல்விருந்து அயர்தல்

ஓல்லுதும், பெரும! நீ நல்குதல் பெறினே.

பெருமானே!

இளைஞனே! நீ இவ்வேளையிற் செல்லுதல் வேண்டா" எனக் குறையிரந்து, நின்னைத் தங்கிச் செல்லுமாறும் வேண்டுவர். அப்போது, ஏவலரும் குதிரைகளும் நீயும் அங்கே தங்கி, மிகுதியான இன்பத்தினை அடையுமாறு, எம் இல்லத்திலே நின்னை நல்ல விருந்தாக ஏற்றுப் பேணுதலையும் யாங்கள் செய்வோம். என்று, பகற்குறி வந்து நீங்கும் தலைமகற்குத் தோழி சொன்னாள்

கொள்குறி வினா:

1. நெய்தல் நில மக்கள் எங்ஙனம் அழைக்கப்படுவர்?

   அ. பரதவர் ஆ.உழவர் இ.வேடர் ஈ.எயினர்

2. கடம்பரி என்பது

   அ.யானைக்கூட்டம் ஆ.உப்பங்கழி இ.விரைந்தகுதிரை ஈ.அன்றில்

3. அன்பிலாளன் அறிவு நயந்தேனே – என்று பாடிய புலவர்

   அ.கயமனார் ஆ.மோசிகரையனார் இ.பரணர் ஈ. நக்கீரர்

விடைகள்:

1. பரதவர்
2. விரைந்தகுதிரை
3. மோசிகரையனார்

குறுவினாக்கள்

1.நெய்தல் நிலக் கருப்பொருட்களைக் குறிப்பிடுக.

2.நும்பாடப்பகுயில் இடம்பெறும் அம்மூவனார் பாடற்கருத்தை எடுத்துரைக்க.

நெடுவினா:

1. நெய்தல் நில மக்களின் வாழ்வியலை ஆராய்க

அல்லது

அகநானூற்று நெய்தல்திணைப்பாடல்களில் தோழி கூற்றுப்பாடற்கருத்தை விளக்குக.

பாடநூல்கள்

அகநானூறு- கழக வெளியீடு, சென்னை

சங்க இலக்கியம் - என்சிபிஎச் பதிப்பு, சென்னை

பிற பதிப்பக வெளியீடுகளாக வந்த சங்க இலக்கிய நூல்கள்

## நற்றிணை

நற்றிணை – (மருதத்திணைப் பாடல்கள் 10)

20,30,40,50,60,70,80,90,100,120

### நற்றிணை: 20

பாடியவர்: ஓரம்போகியார்

திணை: மருதம்

கூற்று : பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகன், "யாரையும் அறியேன்" என்றாற்குத் தலைவி சொல்லியது வாயிலாகப் புக்க தோழிதலைவிக்குச் சொல்லியதூஉம் ஆம்.

.

பாடல்:20

ஐய! குறுமகட் கண்டிகும்: வைகி,
மகிழ்நன் மார்பில் துஞ்சி, அவிழ் இணர்த்
தேம் பாய் மராஅம் கமழும் கூந்தல்
துளங்குஇயல் அசைவர, கலிங்கம் துயல்வர,
செறிதொடி தெளிர்ப்ப வீசி, மறுகில்

பூப் போல் உண்கண் பெயர்ப்ப நோக்கி,
சென்றனள்- வாழிய, மடந்தை!- நுண் பல்

சுணங்கு அணிவுற்ற விளங்கு பூணள்

மார்புறு முயக்கிடை ஞெமிர்ந்த சோர் குழை,

பழம் பிணி வைகிய தோள் இணைக்

குழைந்த கோதை, கொடி முயங்கலளே.

பொருளுரை:

ஐய! குறுமகட் கண்டிகும்: வைகி,

மகிழ்நன் மார்பில் துஞ்சி, அவிழ் இணர்த்

தேம் பாய் மராஅம் கமழும் கூந்தல்

துளங்குஇயல் அசைவர, கலிங்கம் துயல்வர,

செறிதொடி தெளர்ப்ப வீசி, மறுகில

ஐயனே! நின் காதற் பரத்தை நேற்றைப் பொழுதில் அவள் மகிழ்ந்தனாகிய நின்னிடத்துத் தங்கி நின் மார்பிற் கிடந்து உறங்கி வண்டுகள் பாயப்பெற்ற வெண்கடப்ப மரத்தின் விரிந்த பூங்கொத்துக் கமழும் கூந்தல் துளங்கிய துவட்சியோடு சிறுபுறத்து வீழ்ந்து. அசையா நிற்ப் இடையிற் கட்டிய உடை சரிந்து அசையாநிற்ப நெருங்கிய வளைகள் ஒலிக்கும்படி கைகளை வீசிக்கொண்டு நீலமலர் போன்ற மையுண்ட கண்கள் நிலைபெயர்ந்து சுழலும்படி நோக்கி எமது மறுகின்கட் சென்றனள்.

பூப் போல் உண்கண் பெயர்ப்ப நோக்கி,

சென்றனள்- வாழிய, மடந்தை!- நுண் பல்

சுணங்கு அணிவுற்ற விளங்கு பூணள்

மார்புறு முயக்கிடை ஞெமிர்ந்த சோர் குழை,

பழம் பிணி வைகிய தோள் இணைக

குழைந்த கோதை, கொடி முயங்கலளே.

நின்னைப் பிரிதலாலே விளங்கிய பூண்களுடனே நுண்ணிய பலவாய சுணங்கு அணியப் பெற்றவளாய். முன்பு நின் மார்பினுற்ற முயக்கத்தில் நெரிந்த சோர்கின்ற குழையையும் நீட்டித்த பிணியுற்ற இரண்டு தோள்களையும் துவண்ட மாலையையுமுடைய கொடிபோன்று நின் முயக்கம் நீங்கினவளாகி எமது மறுகின்கட் சென்றனள் அத்தகைய இளம் பிராயத்தளாகிய பரத்தையை யாம் கண்டேம் அவள் நின்னோடு நீடூழி வாழ்வாயாக

நற்றிணை: 030

மருதம்

பாடியவர்: கொற்றனார்.

கூற்று: பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன், “யாரையும் அறியேன்“ என்றாற்குத் தோழி சொல்லியது.

பாடல்: 30

கண்டனென்- மகிழ்ந!- கண்டு எவன்செய்கோ?-
பாணன் கையது பண்புடைச் சீறியாழ்
யாணர் வண்டின் இம்மென இமிரும்,
ஏர்தரு தெருவின், எதிர்ச்சி நோக்கி, நின்
மார்பு தலைக்கொண்ட மாணிழை மகளிர்
கவல் ஏமுற்ற வெய்து வீழ் அரிப் பனி-
கால் ஏமுற்ற பைதரு காலை,
கடல்மரம் கவிழ்ந்தெனக் கலங்கி, உடன் வீழ்பு,
பலர் கொள் பலகை போல-
வாங்கவாங்க நின்று ஊங்கு அஞர் நிலையே

பொருளுரை:

கண்டனென்- மகிழ்ந!- கண்டு எவன்செய்கோ?-
பாணன் கையது பண்புடைச் சீறியாழ்
யாணர் வண்டின் இம்மென இமிரும்,
ஏர்தரு தெருவின், எதிர்ச்சி நோக்கி, நின்
மார்பு தலைக்கொண்ட மாணிழை மகளிர்

மகிழ்ந! பாணன் கையிடத்ததாகிய பண்பமைந்த சிறிய யாழ் அழகிய வண்டுபோல இம்மென ஒலியாநின்ற நீ எழுந்து வருகின்ற தெருவிலே நீ வருதலை எதிர்பார்த்து நின்மார்பை முன்பு தமக்குடையராய்ப் பற்றிக்கொண்டிருந்த மாட்சிமைப் பட்ட இழையை யணிந்த பரத்தையர் பலரும்:

கவல் ஏமுற்ற வெய்து வீழ் அரிப் பனி-
கால் ஏமுற்ற பைதரு காலை,
கடல்மரம் கவிழ்ந்தெனக் கலங்கி, உடன் வீழ்பு,
பலர் கொள் பலகை போல-
வாங்கவாங்க நின்று ஊங்கு அஞர் நிலையே

கவல் ஏமுற்ற வெய்து வீழ் அரிப்பனி நீ பிரிந்ததனாலுண்டாகிய கவற்சி மிகுதலாலே கண்களினின்று வெப்பமாய் வடிகின்ற கண்ணீருடனே கடிய புயற்காற்று வீசிச் சுழற்றுதலாலே துன்புற்ற காலத்துக் கடலிலே தாம் ஏறியிருக்கும் மரக்கலங் கவிழ்ந்து விட்டதாக, அங்ஙனம் கவிழ்தலும் கலக்கமுற்றுத் தாமும் ஒருசேர வீழ்ந்து அவ்வழி விழுந்த பலரும் ஆண்டு மிதந்து வந்த ஒரு பலகையைப் பற்றிக்கொண்டு தாம் தாம் தனித்தனி இழுப்பதுபோல் நின் கைகளைப் பற்றி அவரவர் தம் தம் கருத்து முற்றுமாறு

இழுத்தலாலே நீ அவரிடைப்பட்டு மிக வருந்துகின்ற நிலைமையை யான் கண்கூடாகக் கண்டேன், கண்டும் நின்னை யாது செய்யற்பாலேன் காண்? ஆதலின் நீ யாரையும் அறியேனென்றதெவ்வண்ணங் கொல்?

நற்றிணை: 040

மருதம்

தலைமகட்குப் பாங்கு ஆயினார் கேட்பப் பரத்தை சொல்லியது.

பாடியவர்: கோண்மா நெடுங்கோட்டனார்.

பாடல்:

நெடு நா ஒள் மணி கடி மனை இரட்ட,

குரை இலைப் போகிய விரவு மணற் பந்தர்,

பெரும்பாண் காவல் பூண்டென, ஒரு சார்,

திருந்துஇழை மகளிர் விரிச்சி நிற்ப,

வெறி உற விரிந்த அறுவை மெல் அணைப்

புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச,

ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்

பசு நெய் கூர்ந்த மென்மை யாக்கைச்

சீர்கெழு மடந்தை ஈர்- இமை பொருந்த,

நள்ளென் கங்குல், கள்வன் போல,

அகன் துறை ஊரனும் வந்தனன்-

சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே.

பொருளுரை:

நெடு நா ஒள் மணி கடி மனை இரட்ட,

குரை இலைப் போகிய விரவு மணற் பந்தர்,

பெரும்பாண் காவல் பூண்டென, ஒரு சார்,

திருந்துஇழை மகளிர் விரிச்சி நிற்ப,

வெறி உற விரிந்த அறுவை மெல் அணைப

காவலையுடைய மாளிகையிடத்து நெடிய நாவையுடைய ஒள்ளிய மணி ஒலியா நிற்ப ஒலிக்கின்ற தெங்கங் கீற்றான் மிடைந்து புனைந்த மணல் பரப்பிய பந்தரின்கண்ணே

முன்பு பரத்தையிற் சென்ற வழிப் பெரிய பாணர் தலைவனைச் சூழ்ந்து காவலை மேற்கொண்டாற் போலத் திருந்திய கலனணிந்த மகளிர் இப்பொழுது நன்னிமித்தமாக நிற்ப் நறுமணமிக்க விரிப்பு விரித்த மெல்லிய அணையின்மீது செவிலியுடனே ஈன்ற அணுமை விளங்கிய புதல்வன்.

புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச,

ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்

பசு நெய் கூர்ந்த மென்மை யாக்கைச்

சீர்கெழு மடந்தை ஈர்- இமை பொருந்த,

நள்ளென் கங்குல், கள்வன் போல,

துயிலா நிற்ப வெண்கடுகை யப்பிய எண்ணெய் தேய்த்து ஆடும் நீராட்டினால் ஈரிய அணியையுடைய குளிர்ந்த நெய்பூசிய மிக்க மென்மையாகிய உடம்பினையுடைய அழகு விளங்கிய மனைவிதான் தன் ஈரிமையும் ஒன்றோடொன்று பொருந்த வுறங்கா நிற்ப அகன்ற நீர்த்துறையையுடைய வூரனும் சிறந்த தந்தையின்பெயரனாகிய தன் மைந்தன் பிறந்ததனால் இடையாமத் திருளிலே கள்வனைப் போல வந்துற்றான்

நற்றிணை: 050

மருதம்

தோழி பாணற்கு வாயில்மறுத்தது.

பாடியவர்: மருதம் பாடிய இளங்கடுங்கோ.

பாடல்

அறியாமையின், அன்னை! அஞ்சி,

குழையன் கோதையன் குறும் பைந் தொடியன்

விழவு அயர் துணங்கை தழூஉகம் செல்ல,

நெடு நிமிர் தெருவில் கைபுகு கொடு மிடை

நொதுமலாளன் கதுமெனத் தாக்கலின்,

கேட்போர் உளர்கொல், இல்லைகொல்? போற்று என,

யாணது பசலை என்றனன் அதன் எதிர்,

நாண் இலை, எலுவ! என்று வந்திசினே-

செறுநரும் விழையும் செம்மலோன் என,

நறு நுதல் அரிவை! போற்றேன்,

சிறுமை பெருமையின் காணாது துணிந்தே.

பொருளுரை:

அறியாமையின், அன்னை! அஞ்சி,

குழையன் கோதையன் குறும் பைந் தொடியன்

விழவு அயர் துணங்கை தழூஉ உகம் செல்ல,

நெடு நிமிர் தெருவில் கைபுகு கொடு மிடை

நொதுமலாளன் கதுமெனத் தாக்கலின்,

அன்னாய்! நறிய நுதலையுடைய தலைவி! என் அறியாமையாலே நின்னை அஞ்சி குழை பெய்து மாலைசூடிக் குறிய பசிய தொடியணிந்தவனாகி விழாக் களத்து அவன் துணங்கையாடுதலைக் கையகப்படுப்பேமாகி யாங்கள் செல்லா நிற்கையில், நொதுமலாளன் நெடு நிமிர் தெருவின் கைபுகு கொடு மிடை கதுமெனத் தாக்கலின் நமக்கு அயலானாகிய அவன்தான் அவ்வணிகளையுடையனாய் நெடிய நிமிர்ந்த தெருமுடிந்த வேறொரு வழி வந்து புகுந்த வளைந்த விடத்தே விரைவின் வந்து எதிர்ப்பட்டானாக.

கேட்போர் உளர்கொல், இல்லைகொல்? போற்று என,

யாணது பசலை என்றனன் அதன் எதிர்,

நாண் இலை, எலுவ! என்று வந்திசினே-

செறுநரும் விழையும் செம்மலோன் என,

நறு நுதல் அரிவை! போற்றேன்,

சிறுமை பெருமையின் காணாது துணிந்தே.

இங்ஙனம் செய்யும் நின்னைக் கேட்பார் உண்டோ? இல்லையோ? அறிந்துகொள் என்று யான் கூற அவனும் அவ்வறியாமையுடையான் போல என்கட ் பசலை அழகுடையது என்றனன் அதனுக் கெதிர்மொழி கொடுத்தற்காக அவன் பகைவராலும் விரும்பப்படும் செம்மாப்புடையான் எனக் கொண்டு வணங்கிச் செல்லாது, சிறுமை பெருமையின் என் சிறுமை பெரிதாகலான் ஆராயாதே துணிந்து “எலுவ நீ நாணுடையை அல்லை” என்று கூறி வந்தேன்

நற்றிணை: 060

மருதம்

சிறைப்புறமாக உழவர்க்குச் சொல்லுவாளாய்த் தோழி செறிப்பு அறிவுறீஇயது.

பாடியவர்: தூங்கலோரியார்.

பாடல்:

மலை கண்டன்ன நிலை புணர்நிவப்பின்

பெரு நெற் பல் கூட்டு எருமை உழவ!

கண்படை பெறாஅது, தண் புலர் விடியல்,

கருங் கண் வராஅல் பெருந் தடி மிளிர்வையொடு
புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ் சோறு

கவர் படு கையை கழுமி மாந்தி,
நீர் உறு செறுவின் நாறு முடி அழுத்த, நின்
நடுநரொடு சேறிஆயின், அவண்
சாயும் நெய்தலும் ஓம்புமதி எம்மில்
மா இருங் கூந்தல் மடந்தை
ஆய் வளை கூட்டும் அணியுமார் அவையே.

பொருளுரை:

மலை கண்டன்ன நிலை புணர்நிவப்பின்
பெரு நெற் பல் கூட்டு எருமை உழவ!
கண்படை பெறாஅது, தண் புலர் விடியல்,
கருங் கண் வராஅல் பெருந் தடி மிளிர்வையொடு
புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ் சோறு

மலையைச் செய்து வைத்தாற் போன்ற நிலை பொருந்திய உயர்ச்சியையுடைய மிக்க நெற்களையுடைய பல பெரிய சேர்களைக் கட்டி வைத்திருக்கின்ற எருமையைப் பூட்டி உழுகின்ற உழவனே! நீ இரவிலே தூங்காது குளிர்ச்சியையுடைய இருள் நீங்கும் வைகறைப் பொழுதிலே கரிய கண்களையுடைய வரால் மீனைப் பெரியனவாகத் தடிந்த தசையாகிய ஆணத்திலே பிறழவிட்ட மிளிர்வையுடனே உணவுக்குரிய அரிசியாலாக்கிய மிக்க சோற்றுத்திரளைைய் விருப்பமிக்க கையையுடையையாய் நிறைய மயக்கமேறவுண்டு நீர்மிக்க சேற்றிலே நாற்றுமுடிகளை நடுதற்கு நின் உழத்தியரோடு உடன் செல்லுவையாயின்

கவர் படு கையை கழுமி மாந்தி,
நீர் உறு செறுவின் நாறு முடி அழுத்த, நின்
நடுநரொடு சேறிஆயின், அவண்
சாயும் நெய்தலும் ஓம்புமதி எம்மில்
மா இருங் கூந்தல் மடந்தை
ஆய் வளை கூட்டும் அணியுமார் அவையே.

நீ உழுகின்ற வயலிலுள்ள வளமிக்க கோரைகளையும் நெய்தல்களையும் களையெனக் களையாது பாதுகாப்பாய் அங்ஙனம் பாதுகாத்து வைப்பது தான் எற்றிற்கோ எனக் கேட்டியாயின், எங்களுடைய மிக்க கரிய கூந்தலையுடைய தலைவி இப்பொழுது இற்செறிக்கப்பட்டாள், மற்றொரு பொழுது காப்புச்சிறை நீக்கப் பெறுவளேல் அவள்

அவற்றுள் அழகிய கோரையை வளையமாகப் பூண்டுகொள்ளுவாள், நெய்தலந்தழையை உடையாக அணிந்து கொள்ளுவள் காண்

நற்றிணை: 070

மருதம்

காமம் மிக்க கழிபடர்கிளவி.

பாடியவர்: வெள்ளி வீதியார்.

பாடல்:

சிறு வெள்ளாங்குருகே! சிறு வெள்ளாங்குருகே!

துறை போகு அறுவைத் தூ மடி அன்ன

நிறம் கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே!

எம் ஊர் வந்து, எம் உண்துறைத் துழைஇ,

சினைக் கெளிற்று ஆர்கையை அவர் ஊர்ப் பெயர்தி, 05

அனைய அன்பினையோ, பெரு மறவியையோ-

ஆங்கண் தீம் புனல் ஈங்கண் பரக்கும்

கழனி நல் ஊர் மகிழ்நர்க்கு என்

இழை நெகிழ் பருவரல் செப்பாதோயே!

பொருளுரை:

சிறு வெள்ளாங்குருகே! சிறு வெள்ளாங்குருகே!

துறை போகு அறுவைத் தூ மடி அன்ன

நிறம் கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே!

எம் ஊர் வந்து, எம் உண்துறைத் துழைஇ,

சினைக் கெளிற்று ஆர்கையை அவர் ஊர்ப் பெயர்தி

சிறிய வெளிய குருகே! சிறிய வெளிய குருகே! நீர்த்துறையிலே கழுவிய வெள்ளாடையின் மாசற்ற மடிபோன்ற நன்னிறம் விளங்கிய சிறகினையுடைய சிறிய வெளிய குருகே! அவ்விடத்துள்ள இனிய புனல் இவ்வூரின்கண்ணே வந்து பரக்கின்ற கழனியையுடைய நல்ல ஊரினையுடைய என் காதலர் .

அனைய அன்பினையோ, பெரு மறவியையோ-

ஆங்கண் தீம் புனல் ஈங்கண் பரக்கும்

கழனி நல் ஊர் மகிழ்நர்க்கு என்

இழை நெகிழ் பருவரல் செப்பாதோயே!

என்னுடைய கலன்கள் கழலுகின்ற துன்பத்தை இதுகாறுஞ் சொல்லாதோய் நீ எம்மூரினையடைந்து எமது ஒள்ளிய பொய்கையினது துறையிலே புகுந்து துழாவிச் சினையுள்ள கெளுற்றுமீனைத் தின்றனையாகி அப்பால் அவருடைய ஊர்க்குச் செல்வாயாக் எம்மூர் வந்துண்ட நன்றி மறவாமல் இனி அவரிடம் கூறுதற்குத்தக்க அனைய அன்பினையுடையையோ? அன்றேல் பெருமறதியையோ? ஒன்றினை ஆராய்ந்து கூறிக்காண்!

நற்றிணை: 080

மருதம்

சேட்படுக்கப்பட்டு ஆற்றானாய தலைவன், தோழி கேட்ப, தன் நெஞ்சிற்கு உரைத்தது.

பாடியவர்: பூதன்தேவனார்.

பாடல்:

மன்ற எருமை மலர் தலைக் காரான்

இன் தீம் பாற்பயம் கொண்மார், கன்று விட்டு,

ஊர்க் குறுமாக்கள் மேற்கொண்டு கழியும்

பெரும் புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து,

தழையும் தாரும் தந்தனன், இவன் என, 05

இழை அணி ஆயமொடு தகு நாண் தடைஇ,

தைஇத் திங்கள் தண் கயம் படியும்

பெருந் தோட் குறுமகள் அல்லது,

மருந்து பிறிது இல்லை, யான் உற்ற நோய்க்கே.

பொருளுரை:

மன்ற எருமை மலர் தலைக் காரான்

இன் தீம் பாற்பயம் கொண்மார், கன்று விட்டு,

ஊர்க் குறுமாக்கள் மேற்கொண்டு கழியும்

பெரும் புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து,

தழையும் தாரும் தந்தனன், இவன் என,

தொழுவத்துள்ள அகன்ற தலையையுடைய கார் எருமையின் மிக இனிய பால் நிரம்பக் கறந்துகொள்ளும் பொருட்டு அவற்றின் கன்றுகளைத் தொழுவத்து நிறுத்திவிட்டு ஊரிலுள்ள மாடு மேய்க்கும் இளஞ் சிறுவர்கள் அவ் வெருமைகளின் மீதேறிக்கொண்டு தனியே மேய்த்து வருதற் கேகாநிற்கும் பெரிய இருள் நீங்கும்

விடியற் காலத்து, விரும்பிப் போத்தந்து தழையும் தாரும் இவன் தந்தனன் என விருப்பத்தோடு வந்து உடுக்குந் தழையும் சூடுமாலையும் இவன் தந்தான் என்று.

இழை அணி ஆயமொடு தகு நாண் தடைஇ,

தைஇத் திங்கள் தண் கயம் படியும்

பெருந் தோட் குறுமகள் அல்லது,

மருந்து பிறிது இல்லை, யான் உற்ற நோய்க்கே.

கலன் அணிந்த ஆயத்தொடு தகுதியுடைய நாணம் தன்னை வளைக்கப்பட்டு என்னைப் பெறுமாறு தான் எடுத்துக்கொண்ட நோன்பின் பயனாகத் தைத்திங்களிலே தண்ணிய நீரில் ஆடுகின்ற பெரிய தோளையுடைய அவ்விளமகளே யான் உற்ற நோயை நீக்கும் மருந்தாயமைந்துள்ளாள் அவளல்லது பிறிதொரு மருந்து இல்லைகாண்!

நற்றிணை: 090

மருதம்

தோழி, தலைமகளுக்கு உரைப்பாளாய், பாணனை நெருங்கி வாயில்மறுத்தது.

பாடியவர்: அஞ்சில்.

பாடல்:

ஆடு இயல் விழவின் அழுங்கல் மூதூர்,

உடையோர் பன்மையின் பெருங் கை தூவா,

வறன் இல் புலைத்தி எல்லித் தோய்த்த

புகாப் புகர் கொண்ட புன் பூங் கலிங்கமொடு

வாடா மாலை துயல்வர, ஓடி,

பெருங் கயிறு நாலும் இரும் பனம் பிணையல்

பூங் கண் ஆயம் ஊக்க, ஊங்காள்,

அழுதனள் பெயரும் அம் சில் ஓதி,

நல்கூர் பெண்டின், சில் வளைக் குறுமகள்

ஊசல் உறு தொழில் பூசல் கூட்டா

நயன் இல் மாக்களொடு கெழீஇ,

பயன் இன்று அம்ம, இவ் வேந்துடை அவையே!

பொருளுரை:

ஆடு இயல் விழவின் அழுங்கல் மூதூர்,

உடையோர் பன்மையின் பெருங் கை தூவா,

வறன் இல் புலைத்தி எல்லித் தோய்த்த

புகாப் புகர் கொண்ட புன் பூங் கலிங்கமொடு

வாடா மாலை துயல்வர, ஓடி,

கூத்தயர்கின்ற விழாவின் ஒலியையுடைய இம்மூதூரின்கண்ணே ஆடைகளை ஆராய்ந்து கழுவுந்தன்மையிற் பெரிதும் தன் கை ஒழியாத வறுமையில்லாத ஆடையொலிப்பவள் இரவிலே தோய்த்த சோற்றின் கஞ்சியிட்டுப் புலர்த்திய சிறிய பூத்தொழிலையுடைய ஆடையுடனே பொன்னரி மாலையும் அசைந்தாட ஓடிச்சென்று கரிய பனைநாரினாலே திரித்த கயிற்றைப் பிணித்துத் தொங்கவிட்ட உசலிலேறிப் பூப்போல் உண்கண்களையுடைய தன் ஆயத்தார் அதனை ஆட்டவுந் தான் ஆடாளாய், அழுதனள் பெயரும் அஞ்சில் ஓதி நல்கூர் பெண்டின் சில்வளைக் குறுமகள் அழுது மீளுகின்ற அழகிய சிலவாகிய கூந்தலையுடைய பெண்தன்மையிற் குறைவுபட்ட சிலவாய வளைகளை யணிந்த பரத்தையாகிய பெதும்பைப் பருவத்தாள் ஓரிளமகளைமீட்டும்.

பெருங் கயிறு நாலும் இரும் பனம் பிணையல்

பூங் கண் ஆயம் ஊக்க, ஊங்காள்,

அழுதனள் பெயரும் அம் சில் ஓதி,

நல்கூர் பெண்டின், சில் வளைக் குறுமகள்

ஊசல் உறு தொழில் பூசல் கூட்டா

நயன் இல் மாக்களொடு கெழீஇ,

பயன் இன்று அம்ம, இவ் வேந்துடை அவையே!

ஊசலாடுகிற மிக்க தொழிலின் ஆரவாரத்திற் செய்யாத் விருப்பமற்ற மக்களொடு சேர்ந்து இவ்வேந்தனது அவைக்களந்தான் பயனின்மையுடையதாயிரா நின்றது இது மிக்க வியப்பு அவளை ஆடச் செய்திருந்தால் அவள் ஊடாள் தலைமகனும் அவளை நீங்கான் ஆண்டு அவள் ஊடினமையால் இறைமகன் இங்கு வந்தான் போலும் இனி இங்கு வாரா தொழிவானாக!

நற்றிணை: 110

திணை: பாலை

கூற்று: மனைமருட்சி மகள்நிலை உரைத்ததூஉம் ஆம்.

பாடியவர்: போதனார்.

பாடல்:

பிரசம் கலந்த வெண் சுவைத் தீம்பால்

விரி கதிர்ப் பொற்கலத்து ஒரு கை ஏந்தி,

புடைப்பின் சுற்றும் பூந் தலைச் சிறு கோல்,

உண் என்று ஓக்குபு பிழைப்ப, தெண் நீர்

முத்து அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று,

அரி நரைக் கூந்தற் செம் முது செவிலியர்
பரி மெலிந்து ஒழிய, பந்தர் ஓடி,
ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடி வறன் உற்றென,

கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்,
ஒழுகு நீர் நுணங்கு அறல் போல,
பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே!

பொருளுரை:

பிரசம் கலந்த வெண் சுவைத் தீம்பால்
விரி கதிர்ப் பொற்கலத்து ஒரு கை ஏந்தி,
புடைப்பின் சுற்றும் பூந் தலைச் சிறு கோல்,
உண் என்று ஓக்குபு பிழைப்ப, தெண் நீர்
முத்து அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று,

> தேன் கலந்தாலொத்த நல்ல சுவையையுடைய இனிய வெளிய பாலுணவை விரிந்த ஒளியையுடைய பொன்னாலாகிய கலத்திலிட்டு அதனை ஒரு கையிலேந்தி நின்று புடைப்பாகச் சுற்றிய பூவொத்த மெல்லிய நுனியையுடைய சிறிய கோலை ஓச்சி நீ உண்ணுவாய் என்று எறிதலும். தெளிந்த ஒளியையுடைய முத்துக்களை உள்ளே பரலாகப் போடப்பட்ட பொன்னாலாகிய சிலம்பு ஒலிக்குமாறு பாய்ந்து மெல்லியவாய நரைத்த கூந்தலையுடைய செவ்விய முதுமையடைந்த செவிலியர் பின்தொடர்ந்து பற்ற முடியாமல் மெலிந்தொழியுமாறு தான் முன்றிலின்கணுள்ள பந்தரின் கீழோடி நீ உண்ணுவாய் என்றதன் விடையாக் யான் உண்ணேன் காண்!” என்று மறுத்து.

அரி நரைக் கூந்தற் செம் முது செவிலியர்
பரி மெலிந்து ஒழிய, பந்தர் ஓடி,
ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடி வறன் உற்றென
கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்,

ஒழுகு நீர் நுணங்கு அறல் போல,

பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே!

உரையாடும் சிறிய விளையாட்டினையுடைய என் மகள் நல்ல அறிவும் ஆசாரமும் எப்படி உணர்ந்தனளோ? கொண்டகொழுநன் குடி வறன் உற்றென கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள் தன்கை பற்றிய கொழுநன் குடி வறுமையுற்றதாகத் தன்னை ஈன்றுதவிய தந்தையினது செல்வமிக்க உணவை நினைகிலளாகி ஓடுகின்ற நீரிலே இடையீடுற்றுக் கிடக்கும் நுண்ணிய மணல் போல ஒரு பொழுதின்றி யொருபொழுதுண்ணும் சிறிய வன்மையுடையளாயினாளே, இ∴தென்ன வியப்பும். அரி பருக்கைக்கல். அரிநரை மெல்லியநரை. பரிதல் ஓடுதல். உவகைக் கலுழ்ச்சி. பயன் ஆற்றாமை நீங்குதல். இ∴து உரிப் பொருளாற் பாலை. உவகை. பயன் மகிழ்தல்.(பெரு ரை.) பிரசம் தேன். தேன் கலந்த சுவைமிக்க வெளிய இனிய பால் எனலே சாலும். தேன் கலந்தா லொத்த எனல் வேண்டா கூறலாம். புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல் என்பதற்குப் புடைத்துழிப் புடைக்கப்படுவோரைச் சுற்றிக்கொள்ளும் இயல்பு.

## நற்றிணை

நற்றிணை :120

திணை: மருதம்

கூற்று: விருந்து வாயிலாகப்புக்க தலைவன் சொல்லியது.

பாடியவர்: மாங்குடி கிழார்.

பாடல்:120

தட மருப்பு எருமை மட நடைக் குழவி

தூண் தொறும் யாத்த காண்தகு நல் இல்,

கொடுங் குழை பெய்த செழுஞ் செய் பேதை

சிறு தாழ் செறித்த மெல் விரல் சேப்ப,

வாளை ஈர்ந் தடி வல்லிதின் வகைஇ,

புகை உண்டு அமர்த்த கண்ணள், தகை பெறப்

பிறை நுதல் பொறித்த சிறு நுண் பல் வியர்

அம் துகில் தலையில் துடையினள், நப் புலந்து,

அட்டிலோளே அம் மா அரிவை-

எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பாள் அன்று,

சிறு முள் எயிறு தோன்ற

முறுவல் கொண்ட முகம் காண்கம்மே.

பொருளுரை:

தட மருப்பு எருமை மட நடைக் குழவி

தூண் தொறும் யாத்த காண்தகு நல் இல்,

கொடுங் குழை பெய்த செழுஞ் செய் பேதை

சிறு தாழ் செறித்த மெல் விரல் சேப்ப,

வாளை ஈர்ந் தடி வல்லிதின் வகைஇ

வளைந்த கொம்பினையுடைய எருமையின் இளநடையையுடைய கன்றுகளைத் தூண்கள்தோறும் கட்டியிருக்கின்ற காட்சி மிகுதியால் யாவரும் காணத்தக்க நல்ல மனையின்கண் வளைந்த குண்டலத்தைக் காதிலணிந்த செழுவிய செய்ய பேதைமையையுடைய காதலி சிறிய மோதிரஞ் செறித்த மெல்லிய விரல் சிவக்கும்படியாக.

புகை உண்டு அமர்த்த கண்ணள், தகை பெறப்

பிறை நுதல் பொறித்த சிறு நுண் பல் வியர்

அம் துகில் தலையில் துடையினள், நப் புலந்து,

அட்டிலோளே அம் மா அரிவை-

எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பாள் அன்று

வாழையிலையைக் கொய்து வந்து அடிக்காம்பு பருத்திருத்தலின் அதனை வகிர்ந்து பரிகலமமைத்து அடிசிலாக்குதலாலே புகைபடிந்து அமர்த்த கண்களையுடையளாய். அழகுபெறப் பிறை போன்ற நுதலினுண்டாகிய சிறிய நுணுகிய பலவாய வியர்வை நீரை அழகிய முன்றானையினுனியாலே துடைத்துக்கொண்டு நம்மீது புலவி மிக்கு அடிசிற்சாலையிடத்திராநின்றாள் இப்பொழுது விருந்தினராய் வருபவர் எம்முடன் வருவாராக!

சிறு முள் எயிறு தோன்ற

முறுவல் கொண்ட முகம் காண்கம்மே.

அங்ஙனம் வரின் இந்த அழகிய மாமைநிறத்தையுடைய அரிவை சினங்கொண்டு ஒருபொழுதும் கண் சிவப்பதில்லை, அன்றியும் குறுமுறுவல் கொண்ட முகத்தினளாய் இருப்பள் ஆதலின் நமது முயக்கத்துக்கு இன்றியமையாத இவளது சிறிய முட்போன்ற எயிறு சிறிது தோன்றுமாறு நகை கொண்ட முகத்தை யாம் காண்பேமாகி நிற்போம்.

கொள்குறி வினா:

1.பலர் கொள் பலகை போல- என்ற உவமையைப் பயன்படுத்திய புலவர்
அ.கொற்றனார் ஆ.ஓரம்போகியார் இ.நெடுங்கோட்டனார் ஈ.இளங்கடுங்கோ

2.பொய்கை எந்நிலத்திற்குரிய கருப்பொருள்
அ.குறிஞ்சி ஆ.முல்லை இ.மருதம் ஈ.நெய்தல்

3.குண்டலம் என்பது
அ.காதணி ஆ.உணவுவகை இ.இடப்பெயர் ஈ.மலர் வகை

விடைகள்:

1. கொற்றனார்
2. மருதம்
3. காதணி

குறுவினா:

1. உழவர் வாழ்வியலை தூங்கலோரியார் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்

நெடுவினா:

1.மருந்து பிறிது இல்லை யான் உற்ற நோய்கே- என்ற பாடல் உணர்த்தும் கருத்தை ஆய்க.

பாடநூல்கள்

நற்றிணை - கழக வெளியீடு, சென்னை

சங்க இலக்கியம் - என்சிபிஎச் பதிப்பு, சென்னை

பிற பதிப்பக வெளியீடுகளாக வந்த சங்க இலக்கிய நூல்கள்

# குறுந்தொகை

குறுந்தொகை – (முல்லைத்திணைப் பாடல்கள் 6) 188, 190, 191, 192, 193, 194

நோக்கம்:

- குறுந்தொகை என்பது எட்டுத்தொகை இலக்கியத் தொகுப்பில் உள்ள சங்க நூலில் ஒன்று
- என்னுள் காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் பெரும்பாலான பாடல்கள் காதல் சார்ந்தவை காதலர் இடையிலான உணர்வுகளை நயமுடன் வெளிப்படுத்துகின்றன
- ஐந்திணை குறிஞ்சி,முல்லை.மருதம், நெய்தல். பாலைஅடிப்படையில் வாழ்க்கை நடைமுறைகளை இயற்கையுடன் இணைந்துவெளிப்படும்
- சங்ககால மக்களின் வாழ்க்கை. பழக்கவழக்கங்கள், நட்பு,ஒழுக்கம் தன்னம்பிக்கை ஆகியவற்றை பற்றிய பாடல்களை குறுந்தொகை கொண்டுள்ளது

குறுந்தொகை

188. முல்லை

பாடியவர்: மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்

கூற்று: பருவம் கண்டு அழிந்த கிழத்தி தோழிக்கு உரைத்தது.

பாடல்:

முகை முற்றினவே முல்லை முல்லையொடு

தகை முற்றினவே, தண் கார் (படம்) வியன் புனம்

வால் இழை நெகிழ்த்தோர் வாரார்

மாலை வந்தன்று, என் மாண் நலம் குறித்தே.

பொருளுரை:

வீட்டில்) முல்லைப்பூ முற்றிப் பூக்கப்போகிறது. காட்டில் கார்த்திகைப் பூவும் முற்றிவிட்டன. மாலைக் காலமும் வந்துவிட்டது. என் மகிழ்வை அவை கொல்லப் போகின்றன. என் அணிகலன்களைப் கழலச் செய்த அவர் மட்டும் இன்னும் வரவில்லை.

190. முல்லை

பாடல் 190. முல்லை

பாடியவர்: பூதம்புல்லன்

கூற்று: பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பாடல்:

நெறி இருங் கதுப்பொடு பெருந் தோள் நீவி,

செறிவளை நெகிழ, செய்பொருட்கு அகன்றோர்

அறிவர்கொல் வாழி தோழி! பொறி வரி

வெஞ் சின அரவின் பைந் தலை துமிய

நரை உரும் உரறும் அரை இருள் நடுநாள்,

நல் ஏறு இயங்குதொறு இயம்பும்

பல் ஆன் தொழுவத்து ஒரு மணிக் (படம்) குரலே?

பொருளுரை:

தோழி! நள்ளிரவில் இடி முழங்கும்போது காட்டில் சினங்கொண்டு படமெடுத்தாடும் பாம்பின் தலை துமியும். வீட்டுத் தொழுவத்தில் மாடு ஆட்டும் கழுத்துமணி ஒலிக்கும். (நான் நடுங்குவேன்) பொருள் தேடச் சென்றவர் என் கூந்தல் சாயும் தோளில் செறிந்திருந்த வளையல் நெகிழ்ந்து கழல்வதை அறிவாரோ மாட்டாரோ?

191. முல்லை

கூற்று: பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

பாடியவர்:

பாடல்:

உதுக்காண் அதுவே: இது என மொழிகோ?

நோன் சினை இருந்த இருந் தோட்டுப் புள்ளினம்

தாம் புணர்ந்தமையின், பிரிந்தோர் உள்ளத்

தீம் குரல் அகவக் கேட்டும், நீங்கிய

ஏதிலாளர் இவண் வரின், போதின்

பொம்மல் ஓதியும் புனையல் (ஓவியம்)

எம்மும் தொடாஅல் என்குவெம் மன்னே.

பொருளுரை:

அங்கே பார். தாங்கும் கிளைகளில் இருந்துகொண்டு பறவைகள் தம்மைப் புணர்ந்த பறவைகளை அழைக்கும் குரலை எழுப்புகின்றன. என்னைப் பிரிந்த அந்தக் குற்றமற்றவன் வந்தவுடன் “நீ (தோழி) என் கூந்தலை முடிக்க வேண்டாம். என்னைத் தொடவும் வேண்டாம்” என்று சொல்லுவேன். – என்கிறாள் தலைவி.

193. முல்லை

193. முல்லை

பாடியவர்: அரிசில் கிழார்

கூற்று: தோழி கடிநகர் புக்கு, நலம் தொலையாமே நன்கு ஆற்றினாய்! என்றாட்குக் கிழத்தி உரைத்தது

பாடல்:

மட்டம் பெய்த மணிக் கலத்தன்ன

இட்டு வாய்ச் சுனைய பகுவாய்த் தேரை (படம்)

தட்டைப் பறையின் (படம்), கறங்கும் நாடன்

தொல்லைத் திங்கள் நெடு வெண்ணிலவின்

மணந்தனன்மன் எம் தோளே

இன்றும், முல்லை முகை நாறும்மே.

பொருளுரை:

உன் மேனி மணக்கிறதே! – இது தோழியின் பாராட்டு. சென்ற மாதம் முழுநிலா நாளில் நாடன் என்னைத் தழுவினான். அவன் அணிந்திருந்த முல்லைமாலை மணம் இன்னும் என் தோளில் வீசுகிறது. இது தலைவியின் விடை.நாடன் கள் வைத்திருக்கும் சிறு மொந்தை போலக் குழி இருக்கும் சுனையில் இருக்கும் பெரிய வாயை உடைய தேரை தட்டைப்பறை போல ஒலி எழுப்பும் நாட்டை உடையவன் அந்த நாடன்.

194. முல்லை

பாடல் :194

பாடியவர்: கோவர்த்தனார்

கூற்று: பருவ வரவின்கண், ஆற்றாளாம் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

பாடல்:

என் எனப்படுங்கொல் தோழி! மின்னு வர

வான் ஏர்பு இரங்கும் ஒன்றோ? அதன் எதிர்

கான மஞ்ஞை கடிய ஏங்கும் (இயங்கு படம்)

ஏதில கலந்த இரண்டற்கு என்

பேதை நெஞ்சம் பெரு மலக்குறுமே?

பொருளுரை:

ஒரு பக்கம் வானம் இடி முழங்குகிறது. இன்னொரு பக்கம் மயில் மழைக்காக ஏக்கம் கொண்டு ஆடுகிறது. இவை என்ன சொல்கின்றன எனத் தெரியாமல் என் நெஞ்சம் கலங்குகிறது. (கார் காலம் வருமுன் திரும்பிவிடுவேன் என்று அவர் சொல்லிச் சென்றாரே)

## கொள்குறி வினா:

1.முல்லையின் உரிப்பொருள்

அ.இரங்கள் ஆ.பிரிதல் இ.இருத்தல் ஈ.ஊடல்

2.முகை என்பது

அ.அழகு ஆ.அரும்பு இ.மலை ஈ.காற்று

3.காடும் காடு சார்ந்த பகுதியும்

அ.குறிஞ்சி ஆ.மருதம் இ.முல்லை ஈ.நெய்தல்

## விடைகள்

1. இருத்தல்
2. .அரும்பு
3. முல்லை

## குறுவினா

1.முல்லை நிலக் கருப்பொருட்கள் குறித்து ஆய்க

**நெடுவினா:**

1.முல்லைத்திணைப் பாடல்களில் தலைவி கூற்றுப்பாடற்கருத்தை விவரிக்க.

**பாடநூல்கள்**

குறுந்தொகை- கழக வெளியீடு, சென்னை

சங்க இலக்கியம் - என்சிபிஎச் பதிப்பு, சென்னை.

பிற பதிப்பக வெளியீடுகளாக வந்த சங்க இலக்கிய நூல்கள்

## ஐங்குறுநூறு

### நோக்கம்:

- சங்க இலக்கிய நூலில் ஒன்று ஐங்குறுநூறு
- ஐந்திணை ஒவ்வொன்றுக்கும் நூறு பாடல்கள் வீதம் பெற்ற 500 பாடல்கள் கொண்டநூலாகும்
- ஐங்குறுநூற்றில் ஐந்திணைபாடல்கள் காதல், வாழ்க்கைபிரிவு, நட்பு ,சமூகப்பண்பாடு ஆகியவற்றை உணவுப்பூர்வமாக வெளிப்படுத்துகின்றன
- தமிழர் வாழ்க்கைமுறையும் பண்பாட்டையும் நூலில் அறிய ஐங்குறுநூறு உதவுகிறது
- இந்நூலில் பழமையான சொற்கள் இலக்கண ஒழுங்குகள் உவமைகள் ஆகியவை காணப்படுகின்றன
- ஐங்குறுநூறு ஒழுக்கம் பொறுமை பரிவு , கண்ணியம், காதலில் உள்ள நெஞ்சுபட்டபாடுகள் மனித நேயம் ஆகியவைகளை இந்நூலில் விவரிக்கின்றது

**ஐங்குறுநூறு – (குறிஞ்சித் திணைப் பாடல்கள்)**

குன்ற குறவன் பத்து

ஐங்குறுநூறு

குறிஞ்சி - குன்றக் குறவன் பத்து (கபிலர்)

பாடல் : 251

கூற்று: தோழி தலைவனுக்குக் கூறியது

குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி
நுன்பல் அழிதுளி பொழியும் நாட
நெடுவரைப் படப்பை நும்மூர்க்
கடுவரல் அருவி காணினும் அழுமே.

பொருளுரை:

தோழி தலைவனுக்குக் கூறியது... குன்றக் குறவன் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்வது போல நுண்ணிய பல மழைத்துளிகள் பொழியும் நாட்டின் தலைவன் நீ. உன் உயர்ந்த மலையையும், அதில் தோன்றும் வயல் படப்பையையும் இங்கிருந்து கண்ணால் காணும்போதெல்லாம் உன் நினைத்துக்கொண்டு என் தோழி உன்னை நினைத்துக்கொண்டு அழுகிறாள்.

பாடல் : 252

கூற்று: தோழி தலைவிக்குக் கூறியது

குன்றக் குறவன் புல்வேய்க் குரம்பை

மன்றாடு இளமழை மறைக்கும் நாடன்

புரையோன் வாழி தோழி விரைபெயல்

அரும்பனி அளைஇய கூதிர்ப்

பெருந்தண் வாடையின் முந்துவந் தனனே.

பொருளுரை:

குன்றக் குறவன் வாழும் புல்லால் வேயப்பட்ட குடிசையை மன்றத்தில் நகரும் மூடுபனி மறைக்கும். இப்படி மூடுபனி மறைக்கும் நாட்டின் தலைவன் உன் காதலன். அவன் மிகவும் உயர்ந்த பண்புள்ளவன். மணத்துடன் கூடிய பனி மூட்டம் கலந்து குளிர் மிகும் கூதிர் காலம் வருவதற்கு முன்பே திருமணம் செய்துகொள்ள உன்னைத் தேடி வந்துவிட்டான்.

பாடல் : 253

கூற்று : தோழி சொல்லியதைக் கேட்ட தலைவி சொல்லியது

குன்றக் குறவன் சார்ந்த நறும்புகை

தேஙகமழ் சிலம்பின் வரையகம் கமழும்

கானக நாடன் வரையின்

மன்றலும் உடையள்கொல் தோழி யாயே.

பொருளுரை:

குன்றக் குறவன் புகைக்கும் சந்தனக் கட்டையின் புகை மலையிலுள்ள சோலை முழுவதும் கமழும். அத்தகைய கானக நாட்டின் தலைவன் என் காதலன். அவன் திருமணம் செய்துகொள்ள வந்தால் என் தாயும் ஒப்பி மணம் முடித்துத் தருவாளா?

பாடல் : 254

கூற்று : தோழி தலைவிக்கு உடன்போக்கு பற்றிக் கூறுகிறாள்...

குன்றக் குறவன் ஆரம் அறுத்தென

நறும்புகை சூழ்ந்து காந்தள் நாறும்

வண்ட்மிர் சுடர்நுதல் குறுமகள்

கொண்டனர் செல்வர்தம் குன்றுகெழு நாட்டே.

பொருளுரை:

குன்றக் குறவன் சந்தன மரத்தை வாளால் அறுப்பான். அப்போது அதில் தோன்றும் துகள்-புகை காந்தள் மலரில் கொட்டி இரண்டும் சேர்ந்து மணக்கும். அத்தகைய மலைநாட்டின் தலைவி நீ. நீ வண்டு மொய்க்கும் மணம் மிக்க நெற்றியை உடைய குறுமகள். உன் காதலன் உன்னைத் தன் ஊருக்குக் கூட்டிச் சொல்வதற்காக வந்துள்ளான்.

பாடல் : 255

கூற்று : தலைவன் தன் காதலியைப் பற்றித் தன் தோழனுக்குத் தெரிவிக்கிறான்

குன்றக் குறவன் காதல் மடமகள்

வரையர மகளிர்ப் புரையுஞ் சாயலள்

ஐயள் அரும்பிய முலையள்

செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே.

பொருளுரை:

குன்றக் குறவன் அன்பில் வளரும் மடப்பக் குணம் கொண்டவள் அவள். மலையில் வாழும் தெய்வ மகளிர் போல மேனித் தோற்றம் கொண்டவள். மென்மையானவள். அரும்பும் முலை கொண்டவள். சிவந்த வாயினை உடையவள். மார்பில் சுணங்கு பூத்த அழகினை உடையவள்.

பாடல் : 256

கூற்று : தோழனுக்குத் தலைவன் மேலும் கூறுதல்...

குன்றக் குறவன் காதல் மடமகள்

வண்படு கூந்தல் தந்தழைக் கொடிச்சி

வளையள் முளைவாள் எயிற்றள்

இளையள் ஆயினும் ஆரணங் கினளே.

பொருளுரை:

குன்றக் குறவன் அன்பில் வளரும் அவள் வண்டு மொய்க்கும் கூந்தலை உடையவள். குளுமையான தழையாடை அணிந்திருக்கும் கொடிச்சி. (மலைமகள்) கையில் வளையல் அணிந்தவள். பயிர் முளை போன்ற பற்களுடன் கூடிய வாயிலை உடையவள். இளையவள்-தான் என்றாலும் என்னை வருத்துகிறாள்.

பாடல் : 257

கூற்று : தோழி தலைவனிடம் சொல்லுதல்

குன்றக் குறவன் கடவுட் பேணி

இரந்தனன் பெற்ற வெள்வளைக் குறுமகள்

ஆயரி நெடுங்கள் கலிழச்

சேயதால் தெய்யநீ பிரியும் நாடே.

பொருளுரை:

குன்றக் குறவன் கடவுளைப் பேணித் தவம் செய்து, கடவுளிடம் வேண்டி இவளைப் பெற்றான். இவள் ஒளி வீசும் வளையல் அணிந்த இளம்பெண். இவள் ஆய்ந்த செவ்வரி பரந்த கண்ணை உடையவள். இவள் கண் கசியும்படி விட்டுவிட்டுத் தொலைநாட்டுக்குச் செல்லலாமா?

பாடல் : 258

கூற்று : செவிலி அறத்தொடு நிலை

குன்றக் குறுவன் காதல் மடமகள்

அணிமயில் அன்ன அசைநடைக் கொடிச்சியைப்

பெருவரை நாடன் வரையும் ஆயின்

கொடுத்தனெம் ஆயினோம் நன்றே

இன்னும் ஆனாது நன்னுதல் துயிரே.

பொருளுரை:

இவள் குன்றக் குறவனின் அன்பு மகள். மடப்பத் தன்மை உடையவள் அழகிய மயில் போலவும் அன்னம் போலவும் நடப்பவள். கொடி போன்ற மலைக் குறத்தி வெருவரை நாடன் திருமணம் செய்துகொள்ள வந்தால் நாம் அவனுக்கு மணம் முடித்துத் தருவது நன்று. இல்லாவிட்டால், இவள் இன்னும் துன்புறுவாள்.

பாடல் : 259

கூற்று : தலைவன் தலைவியைப் பற்றி நினைக்கிறான்...

குன்றக் குறவன் காதல் மடமகள்

மன்ற வேங்கை மலர்சில கொண்டு

மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்

தேம்பலிச் செய்த ஈர்நறுங் கையள்

மலர்ந்த காந்தள் நாறிக்

கவிழ்ந்த கண்ணள்எம் அணங்கி யோளே.

பொருளுரை:

இவள் குன்றக் குறவனின் அன்பு மகள். மன்றத்தில் பூத்த வேங்கை மலர்கள் சிலவற்றைக் கொண்டு மலையில் வாழும் தன் குலமுதலான தெய்வம் முருகனுக்குப் பூசனை செய்து முருகனை வாழ்த்துகிறாள். தேனோடு கூடிய மலரைப் போட்டாள் அவளது ஈரமான கையில் காந்தள் மலரும் மணக்கிறது. அவள்தான் என்னை வருத்துகிறாள்.

பாடல் : 260

கூற்று : தலைவன் நினைக்கிறான்

குன்றக் குறவன் காதல் மடமகள்

மெந்தோள் கொடிச்சியைப் பெறற்கரிது தில்ல

பைம்புறப் பைங்கிளி ஒப்பலர்

புன்புல மயக்கத்து விளைந்தன தினையே.

பொருளுரை:

இவள் குன்றக் குறவனின் அன்பு மகள். மென்மையான தோளை உடைய கொடிச்சி. இனி இவளை நான் அடைய முடியாது போல் இருக்கிறதே. தினை விளைந்து விளைந்துவிட்டது. கொய்துவிடுவர். நிவள் தினைப்புனம் காக்க வரமாட்டாளே!

## கொள்குறி வினா:

1.ஐங்குறுநூறு குறுஞ்சித்திணைப் பாடியவர்

அ. ஓரம்போகியார் ஆ. ஓதலாந்கையார் இ. கபிலர் ஈ. அம்மூவனார்

2.திணைப்புனக்காவல் எந்நிலத்திற்குரியது?

அ.மருதம் ஆ.குறிஞ்சி இ.முருகன் ஈ.கொற்றவை

3.குறிஞ்சிக்குரிய தெய்வவழிபாடு

அ.இந்திரன் ஆ.வருணன் இ.முருகன் ஈ.பாலை

விடைகள்:

1.கபிலர்

2.குறிஞ்சி

3.முருகன்

## குறுவினா:

1.ஐங்குறுநூற்று தலைவன் கூற்றுப் பாடற்கருத்தை ஆய்க.

## நெடுவினா:

1. குறுஞ்சித்திணைகள் கூறும் வாழ்வியல் செய்திகளை ஆராய்க

## பாடநூல்கள்

ஐங்குறுநூறு- கழக வெளியீடு, சென்னை

சங்க இலக்கியம் - என்சிபிஎச் பதிப்பு, சென்னை

பிற பதிப்பக வெளியீடுகளாக வந்த சங்க இலக்கிய நூல்கள்

**Related Online Contents**

- **Tamil Virtual University Library – www.tamilvu.org/library**
  **http://www.virtualvu.org/library**
- **Project Madurai – www.projectmadurai.org.**
- **Chennai Library – www.chennailibrary.com**
  **http://www.chennailibrary.com**
- **Tamil Universal Digital Library- www.Ulib.prg**

# அலகு : 4 . கலித்தொகை

## பரிபாடல்

கலித்தொகை – பாலைக்கலி 7,8,9,10,11 (5 பாடல்கள்)

பரிபாடல் – திருமால் - 1, 4 (2 பாடல்கள்)

வையை - 7 (1 பாட்டு)

செவ்வேள் - 8, 5 (2 பாடல்கள்)

- சங்க இலக்கியங்களில் அகப்பொருள் (அகத்திணை) பற்றி கூறும் நூல் கலித்தொகையாகும்.
- ஐந்து புலவர்கள் ஐந்திணைபாடல்கள் அடக்கிய தொகுப்பு நூலாகும்."கற்றறிந்தோர் ஏத்தும் கலி" என்ற பெயர் பெற்றது கலித்தொகைஆகும்.
- பாலைக்கலியில் 35 பாடல்கள் உள்ளது பெருங்கடுகோ பாலைக்கலி பாடியுள்ளார்.
- எட்டுத்தொகை இலக்கியங்களிலேயே நாடகப்பங்கோடு அமைந்து இசையுடன் பாடல்களை எடுத்துக் கூறும் நூல் கலித்தொகையாகும்.
- சங்கத்தமிழ் வழி சொற்கள் இயல்புகள் பாவனைகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு மொழி அறிவை வளர்த்துக் கொள்ளலாம்
- அக்காலத்து வாழ்க்கை முறைகள் சமூகஅமைப்பு ,காதல் மற்றும் வீரக்கதைகள் ஆகியவற்றை ஆழமாக அறியலாம்
- கலிப்பா என்பது ஒரு தனித்துவமான செய்யுள் வகை என்பதால் அதன் வரையறைகள் பண்புகள் மற்றும் இசையை புரிந்துகொண்டு சொல் விளையாட்டுக்கள் மற்றும் கவிதை திறனை வளர்த்துக் கொள்ளலாம்

கலித்தொகை – பாலைக்கலி 7,8,9,10,11 (5 பாடல்கள்)

கலித்தொகை: 7

பாலைக் கலி

கலித்தொகை: 7

கூற்று: பிரிவு உணர்த்தப்பட்ட தோழி தலைமகற்கு, நீர் பிரிகின்றீர் என்று யான் கூறத் தலைவி கேட்பின், அவட்கு அக்காலத்து நிகழ்வனவற்றை நும்மோடு ஆராய்வதுடையேன்˙ நீர் செய்யும் பொருள் இவள் உயிரையும் தருகிற்குமோ எனச் செலவு அழுங்கக் கூறியது.

"உடன் சேறல் செய்கையொடு அன்னவை பிறவும், மடம்பட வந்த தோழி கண்ணும்' என்பதனுள் செய்கை கூறுகின்றது.

கூற்று விளக்கம் :

தலைவன் தான் பிரிந்து செல்ல இருப்பதைத் தோழிக்கு உணர்த்தினான்` அவள், தலைவியிடத்துக் கூறின் தலைவிக்கு முன்னர் நிகழ்ந்தவற்றை நும்மோடு ஆராய்ந்து பார்த்தேன் நீர் ஈட்டும் பொருள் இவள் உயிரைக் கொண்டுவருமோ ? எனக் கூறிச் செலவைத் தடுத்தாள் தோழி

பாடல் :

வேனில் உழந்த வறிது உயங்கும் ஒய் களிறு

வான் நீங்கு வைப்பின் வழங்காத் தேர் நீர்க்கு அவாஅம்

கானம் கடத்திர், எனக் கேட்பின், யான் ஒன்று

உசாவுகோ-ஐய! சிறிது-

நீயே, செய் வினை மருங்கில் செலவு, அயர்ந்து, யாழ நின்

கை புனை வல் வில் ஞாண் உளர்தீயே

இவட்கே, செய்வு உறு மண்டிலம் மையாப்பது போல்,

மை இல் வாண் முகம் பசப்பு ஊரும்மே

நீயே, வினை மாண் காழகம் வீங்கக் கட்டி,

புனை மாண் மரீஇய அம்பு தெரிதியே

இவட்கே, சுனை மாண் நீலம் கார் எதிர்பவை போல்,

இனை நோக்கு உண்கண் நீர் நில்லாவே

நீயே, புலம்பு இல் உள்ளமொடு பொருள்வயிற் செலீஇய,

வலம் படு திகிரி வாய் நீவுதியே

இவட்கே, அலங்கு இதழ்க் கோடல் வீ உகுபவை போல்,

இலங்கு ஏர் எல் வளை இறை ஊரும்மே

என நின்,

செல் நவை அரவத்தும் இனையவள் நீ நீப்பின்,

தன் நலம் கடைகொளப்படுதலின், மற்று இவள்

இன் உயிர் தருதலும் ஆற்றுமோ

முன்னிய தேஎத்து முயன்று செய் பொருளே?

பொருளுரை:

வேனில் உழந்த வறிது உயங்கும் ஒய் களிறு

வான் நீங்கு வைப்பின் வழங்காத் தேர் நீர்க்கு அவாஅம்

கானம் கடத்திர், எனக் கேட்பின், யான் ஒன்று

உசாவுகோ-ஐய! சிறிது-

நீயே, செய் வினை மருங்கில் செலவு, அயர்ந்து, யாழ நின்

வேனில்காலத்து வெம்மையால் துன்பமடைந்து உடல் சுருங்கி வருந்தி ஓய்ந்துபோன களிறுகள்
மழை வற்றிப்போன பாலைக் காட்டில் கானல் நீரைப் பார்த்து ஏக்கத்துடன் நோக்கும்
காட்டுவழியைக் கடந்து செல்கிறீர் என்று கேள்வியுற்றதால், நான் ஒன்று கேட்கிறேன், ஐயனே, கொஞ்சம்
நீயோ, இங்கு பொருளீட்டும் காரியத்திற்காகப் பயணம் மேற்கொள்வதை விரும்பி, உன்னுடைய

கை புனை வல் வில் ஞாண் உளர்தீயே

இவட்கே, செய்வு உறு மண்டிலம் மையாப்பது போல்,

மை இல் வாண் முகம் பசப்பு ஊரும்மே

நீயே, வினை மாண் காழகம் வீங்கக் கட்டி,

புனை மாண் மரீஇய அம்பு தெரிதியே

கையால் செய்த வலிமையான வில்லின் நாணை நீவிவிட்டுப் பார்க்கிறாய்ஆனால் இவளுக்கோ, செம்மையாகச் செய்யப்பட்டது போன்ற முழுநிலவில் மேகம் படர்வது போல்மறு இல்லாத ஒளியையுடைய முகத்தில் பசப்பு பரவத் தொடங்கிற்றுநீயோ, சிறப்பாகச் செய்யப்பட்ட கையுறையை இறுகக்கட்டி,பூவும் சாந்தும் பூசிச் சிறந்த அம்புகளை ஆராய்ந்து தெரிகின்றாய்

இவட்கே, சுனை மாண் நீலம் கார் எதிர்பவை போல்,

இனை நோக்கு உண்கண் நீர் நில்லாவே

நீயே, புலம்பு இல் உள்ளமொடு பொருள்வயிற் செலீஇய,

வலம் படு திகிரி வாய் நீவுதியே

இவட்கே, அலங்கு இதழ்க் கோடல் வீ உகுபவை போல

ஆனால் இவளுக்கோ, சுனையில் சிறப்பாக வளர்ந்த கருநீல மலர்கள் மழைநீரை ஏற்று வடிப்பதைப் போல,துயரப் பார்வை கொண்ட மையுண்ட கண்களில் கண்ணீர் நிற்காமல் வடியத் தொடங்கிற்று நீயோ, பிரிவின் தனிமையைப் பற்றி நினைக்காத நெஞ்சத்தோடு, பொருள் தேடப் புறப்பட்டுப்போக வெற்றியைத் தரும் சக்கர ஆயுதத்தின் ஓரங்களின் கூர்மையைத் தடவிப்பார்க்கிறாய்ஆனால் இவளுக்கோ, அசைகின்ற இதழ்கள் கோடல் பூவினின்றும் வாடி உதிர்வன போல

என நின்,

செல் நவை அரவத்தும் இனையவள் நீ நீப்பின்,

தன் நலம் கடைகொளப்படுதலின், மற்று இவள்

இன் உயிர் தருதலும் ஆற்றுமோ

முன்னிய தேஎத்து முயன்று செய் பொருளே?

> ஒளிவிடும் அழகினையுடைய பளபளப்பான வளையல்கள் முன்கையிலிருந்து கழன்றுவிழத் தொடங்கின்
> இவ்வாறாக, உனது பிரிந்து செல்வது என்ற தவறான செய்கைக்கான ஏற்பாடுகளின்போதே இவ்வாறு வருந்துபவள், நீ சென்றுவிட்டால்
> இவளுடைய நலம் அனைத்தும் அழிந்துவிடுமாதலால், போய்விட்ட இவளின்
> இனிய உயிரை மீட்டுத் தர இயலுமோ, முனைந்து செல்லும் நாட்டில் நீ முயன்று ஈட்டும் பொருளால்?

அருஞ்சொற்பொருள்:

வேனில்-கோடை,உழந்த-வருந்திய,வான்-மழை,வைப்பு- ஊர்கள்,அயர்ந்த-விரும்பி,காழகம்-கையுறை,திகிரி-ஆழிப்படை,கோடல்-வெண்காந்தள்,வீ-இதழ்கள்,ஏர்-அழகு,எல்-ஒளி,இறை-முன்கை

## கலித்தொகை: 08

## பாலைக் கலி

கலித்தொகை: 8

கூற்று: சொல்லாது பிரியலுற்ற தலைவன் குறிப்பு அறிந்து, தோழி பொருளது நிலையாமை கூறி, 'அவளோடு கூடிச் செல்கின்ற இல்வாழ்க்கைச் செலவே, பொருள்' என, அவன் செலவு அழுங்கக் கூறியது.

கூற்று விளக்கம் :

சொல்லாது பிரியக் கருதிய தலைவனின் குறிப்பறிந்து தோழி, பொருளினது நிலையாமையை எடுத்துக் கூறினள் இல்வாழ்க்கைச் செலவே பொருளாகும் என்று கூறி, அவனைச் செலவு தவிர்க்குமாறு கூறினள்.

பாடல் :

நடுவு இகந்து ஒரீஇ நயன் இல்லான் வினை வாங்க,

கொடிது ஓர்த்த மன்னவன் கோல் போல, ஞாயிறு

கடுகுபு கதிர் மூட்டிக் காய் சினம் தெறுதலின்,

உறல் ஊறு கமழ் கடாஅத்து ஒல்கிய எழில் வேழம்,

வறன் உழு நாஞ்சில் போல், மருப்பு ஊன்றி நிலம் சேர்

விறன் மலை வெம்பிய போக்கு அரு வெஞ் சுரம்

சொல்லாது இறப்பத் துணிந்தனிர்க்கு ஒரு பொருள்

சொல்லுவது உடையேன் கேண்மின், மற்று ஐஇய!

வீழுநர்க்கு இறைச்சியாய் விரல் கவர்பு இசைக்கும் கோல்
ஏழும் தம் பயன் கெட, இடை நின்ற நரம்பு அறூஉம்

யாழினும் நிலை இல்லாப் பொருளையும் நச்சுபவோ?
மரீஇத் தாம் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது,
பிரியுங்கால் பிறர் எள்ள, பீடு இன்றிப் புறம் மாறும்
திருவினும் நிலை இல்லாப் பொருளையும் நச்சுபவோ?
புரை தவப் பயன் நோக்கார் தம் ஆக்கம் முயல்வாரை

வரைவு இன்றிச் செறும் பொழுதில், கண் ஓடாது உயிர் வௌவும்
அரைசினும் நிலை இல்லாப் பொருளையும் நச்சுபவோ?
எனவாங்கு
நச்சல் கூடாது பெரும! இச் செலவு
ஒழிதல் வேண்டுவல், சூழின், பழி இன்று

மன்னவன் புறந்தர, வரு விருந்து ஓம்பி,
தன் நகர் விழையக் கூடின்,
இன் உறல் வியன் மார்ப! அது மனும் பொருளே.

பொருளுரை:

நடுவு இகந்து ஒரீஇ நயன் இல்லான் வினை வாங்க,
கொடிது ஓர்த்த மன்னவன் கோல் போல, ஞாயிறு
கடுகுபு கதிர் மூட்டிக் காய் சினம் தெறுதலின்,
உறல் ஊறு கமழ் கடாஅத்து ஒல்கிய எழில் வேழம்,
வறன் உழு நாஞ்சில் போல், மருப்பு ஊன்றி நிலம் சேர

நடுவுநிலைமையைத் துறந்து, அதனை அகற்றிப்போட்ட அருளற்ற அமைச்சன் வழிகாட்ட,கொடுமை செய்வதையே மேற்கொண்ட மன்னனின் கொடுங்கோலாட்சியைப் போல, ஞாயிறு மிகுந்த அனல் பரக்கும் கதிர்களைச் செலுத்திக் காய்கின்ற வெப்பத்தால் சுடுதலால் வண்டுகள் நெருங்கிச் சேர, ஒழுகுகின்ற கமழும் மதநீரையுடைய, இப்பொழுது கெட்டுப்போன அழகையுடைய யானை,வறண்ட நிலத்தை உழுகின்ற கலப்பையைப் போல் தன் கொம்புகளை ஊன்றி நிலத்தில் கிடக்க,

விறன் மலை வெம்பிய போக்கு அரு வெஞ் சுரம்

சொல்லாது இறப்பத் துணிந்தனிர்க்கு ஒரு பொருள்

சொல்லுவது உடையேன் கேண்மின், மற்று ஐஇய!

வீழுநர்க்கு இறைச்சியாய் விரல் கவர்பு இசைக்கும் கோல்

ஏழும் தம் பயன் கெட, இடை நின்ற நரம்பு அறூஉம்

> எதற்கும் நிலை கலங்காத மலைகளும் மிகுந்த சூடாகி வெதும்பிநிற்க, செல்வதற்கு அரிய கொடிய காட்டு வழியில்,என்னிடம் சொல்லாமல் போகத் துணிந்த உமக்கு ஒரு மொழி சொல்வதற்கு உள்ளேன், கேளுங்கள், ஐயனே!கேட்பவர்க்கு இன்பம் பயப்பதாய், விரலால் இயக்கப்பெற்று இசைக்கும் யாழ்த்தண்டின் ஏழு நரம்புகளும் தம்முடைய பயன் கெட்டுப்போகுமாறு இடையிலிருக்கும் ஒரு நரம்பு அறுந்துபோகும்

யாழினும் நிலை இல்லாப் பொருளையும் நச்சுபவோ?

மரீஇத் தாம் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது,

பிரியுங்கால் பிறர் எள்ள, பீடு இன்றிப் புறம் மாறும்

திருவினும் நிலை இல்லாப் பொருளையும் நச்சுபவோ?

புரை தவப் பயன் நோக்கார் தம் ஆக்கம் முயல்வாரை

> யாழின் இசையைக்காட்டிலும் விரைந்து அழியும் நிலையற்ற பொருளையா விரும்பிச் செல்கிறாய்? விரும்பித் தான் சேர்ந்தாரைச் சேர்ந்திருக்கும்போது இன்புறச் செய்வதைப் போலல்லாமல்,அவரை விட்டுச் செல்லும்போது மற்றவர் அவரை இகழ்ந்துபேசும்படி, தமக்கும் ஒரு பெருமையின்றிக் கைமாறிச் செல்லும் செல்வத்தைக்காட்டிலும் விரைந்து அழியும் நிலையற்ற பொருளையா விரும்பிச் செல்கிறாய்? தமக்கு உயர்ச்சி மிகும்படியாகத் தாம் பெறும் பயனைப் பாராமல், அரசரின் ஆக்கத்திற்காகவே முயலும் அமைச்சரை

வரைவு இன்றிச் செறும் பொழுதில், கண் ஓடாது உயிர் வௌவும்

அரைசினும் நிலை இல்லாப் பொருளையும் நச்சுபவோ?

எனவாங்க்

நச்சல் கூடாது பெரும! இச் செலவு

ஒழிதல் வேண்டுவல், சூழின், பழி இன்று

> ஒரு வரையின்றிக் கோபிக்கும் பொழுதில் கருணையின்றி அவரின் உயிரைப் பறிக்கும்அரசனின் வாழ்வு அழிந்துபோவதைக்காட்டிலும் விரைந்து அழியும் நிலையற்ற பொருளையா விரும்பிச் செல்கிறாய்?என்று நான் சொல்ல,பொருள் மீது ஆசை கூடாது பெருமானே!, இந்தப் பயணத்தைக் கைவிடும்படி வேண்டுகிறேன், ஆராய்ந்து பார்த்தால் இது தவறல்ல,

மன்னவன் புறந்தர, வரு விருந்து ஓம்பி,

தன் நகர் விழையக் கூடின்,

இன் உறல் வியன் மார்ப! அது மனும் பொருளே.

மன்னவன் பேணிப்பாதுகாக்க, வீட்டுக்கு வரும் விருந்தினரை உபசரித்துதன் மனைவி மக்கள் விரும்பும்படி, அவருடன் சேர்ந்திருப்பது,இனிய நெருக்கமான உறவினுக்குரிய அகன்ற மார்பினையுடையவனே! அதுவே நிலைத்த பொருளும் ஆகும்.

அருஞ்சொற்பொருள்:

சினம்-வெப்பம்,தெறுதல்-சுடுதல்,உறல்-வண்டுகள்,ஒல்கிய-தளர்ந்த,நாஞ்சில்-கலப்பை,விறல்-வெற்றி,வீழுநர்-விரும்புவார்,இறைச்சி-இன்பம்,கோல்-யாழின் கோல்,பீடு-பற்றுக்கோடு

## கலித்தொகை: 9

### பாலைக்கலி

கலித்தொகை: 9

கூற்று : உடன் போய தலைவி பின் சென்ற செவிலி, இடைச்சுரத்து, முக்கோற்பகவரைக் கண்டு, 'இவ்வகைப்பட்டாரை ஆண்டுக் காணீரோ என விளவியாட்கு, அவரைக் கண்டு, அஃது அறம் எனவே கருதிப் போந் தேம் நீரும் அவர் திறத்து எவ்வம்படவேண்டா' என எடுத்துக் காட்டி, அவர் தெருட்டியது.

கூற்று விளக்கம் :

தலைவனும் தலைவியும் உடன் போக்கில் சென்று விட்டனர் செவிலி தேடிச் சென்றனள் வழியிடை முக்கோற்பகவரைக் கண்டு, உடன் போக்கில் சென்ற இவர்களைக் கண்டீரோ என வினவினள் அவர், வழியிடைக் கண்டேம், அஃது அறமெனக் கருதினேம், நீரும் அவள் திறத்து, துன்பப்பட வேண்டாம் என எடுத்துக் காட்டிச் செவிலியைத் தெளிவடையச் செய்தனர்.

பாடல் :

எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்,

உறித் தாழ்ந்த கரகமும், உரை சான்ற முக்கோலும்,

நெறிப்படச் சுவல் அசைஇ, வேறு ஓரா நெஞ்சத்துக்

குறிப்பு ஏவல் செயல் மாலைக் கொளை நடை அந்தணீர்!-

வெவ் இடைச் செலல் மாலை ஒழுக்கத்தீர் இவ் இடை,

என் மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும்,

தம்முள்ளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்

அன்னார் இருவரைக் காணிரோ? பெரும!"

"காணேம் அல்லேம் கண்டனம், கடத்திடை

ஆண் எழில் அண்ணலோடு அருஞ் சுரம் முன்னிய

மாண் இழை மடவரல் தாயிர் நீர் போறிர்

பல உறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,

மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என் செய்யும்?

நினையுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

சீர் கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு அல்லதை

நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என் செய்யும்?

தேருங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

ஏழ் புணர் இன் இசை முரல்பவர்க்கு அல்லதை,

யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவைதாம் என் செய்யும்?

சூழுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

எனவாங்கு,

இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்

சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்

அறம் தலைபிரியா ஆறும் மற்று அதுவே.

பொருளுரை:

எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்,

உறித் தாழ்ந்த கரகமும், உரை சான்ற முக்கோலும்,

நெறிப்படச் சுவல் அசைஇ, வேறு ஓரா நெஞ்சத்துக்

குறிப்பு ஏவல் செயல் மாலைக் கொளை நடை அந்தணீர்!-

வெவ் இடைச் செலல் மாலை ஒழுக்கத்தீர் இவ் இடை

எறிக்கின்ற ஞாயிற்றின் கதிர்களைத் தாங்கும் ஏந்திய குடையின் நிழலில்,உறியில் தொங்கும் கமண்டலத்தையும், புகழ் பெற்ற முக்கோலினையும்,முறையாகத் தோளில் சுமந்து, நன்மையைத் தவிரே வேறு ஒன்றனையும் நினைக்காத நெஞ்சத்துடன்,ஐம்பொறிகளும் தமக்கு ஏவல் செய்தலை இயல்பாக உடைய கொள்கையையும் ஒழுக்கத்தையும் உடைய அந்தணர்களே!வெப்பம் மிக்க இந்தக் காட்டு வழியில் செல்வதை இயல்பாகக் கொண்டு ஒழுகிநடப்பவர்களே! இந்த வழியில்

என் மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும்,

தம்முள்ளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்

அன்னார் இருவரைக் காணிரோ? பெரும!

காணேம் அல்லேம் கண்டனம், கடத்திடை

ஆண் எழில் அண்ணலோடு அருஞ் சுரம் முன்னிய

என் மகள் ஒருத்தியும், வேறொருத்தியின் மகன் ஒருவனும்தமக்குத்தாமே காதல் கொண்டு, இப்போது பிறர் அறியும்படி ஒன்றுசேர்ந்தனர்,அன்னார் இருவரைக் கண்டீரோ

பெருமக்களே!நாங்கள் காணாதிருக்கவில்லை, கண்டோம், காட்டு வழியில்ஆணழகனான ஒரு சிறந்தவனோடு, கடப்பதற்கு அரிய காட்டு வழியில் செல்லத் துணிந்த

மாண் இழை மடவரல் தாயிர் நீர் போறிர்

பல உறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,

மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என் செய்யும்?

நினையுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

சீர் கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு அல்லதை

மாட்சிமைபெற்ற குணத்தை அணிகலனாகப் பெற்ற இளம்பெண்ணின் தாய்தான் நீர் போலும்! பற்பல வகைகளில் பயன்படும் நறிய சந்தனக் கட்டைகள் தன்னை அரைத்துப் பூசிக்கொள்பவர்க்கன்றி,அவை மலையிலே பிறந்தாலும் மலைக்கு அவை தாம் என்ன செய்யும்?நினைத்துப்பார்த்தால் உமது மகள் உமக்கும் அதனைப் போன்றவள்தான் சிறப்புப் பொருந்திய வெண்மையான முத்துக்கள் அவற்றை அணிபவர்க்கன்றி,

நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என் செய்யும்?

தேருங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

ஏழ் புணர் இன் இசை முரல்பவர்க்கு அல்லதை,

யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவைதாம் என் செய்யும்?

சூழுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

அவை நீருக்குள்ளே பிறந்தாலும் நீருக்கு அவை தாம் என்ன செய்யும்?ஆராய்ந்துபார்த்தால் உமது மகள் உமக்கும் அதனைப் போன்றவள்தான் ஏழு நரம்பால் கூட்டி எழுப்பிய இனிய ஓசைகள், இசைப்பவர்க்கன்றி அவை யாழினுள்ளே பிறந்தாலும் யாழுக்கு அவை தாம் என்ன செய்யும்?எண்ணிப்பார்த்தால் உமது மகள் உமக்கும் அதனைப் போன்றவள்தான்

எனவாங்கு,

இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்

சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்

அறம் தலைபிரியா ஆறும் மற்று அதுவே.

என்று நாங்கள் சொல்லண மிக உயர்ந்த கற்பினையுடையவளுக்காக வருத்தம் கொள்ளாதீர்!தலைசிறந்தவனைப் பின்பற்றிச் சென்றாள்,அறநெறி தவறாத ஒழுக்கமும் அதுவேயாம்.

அருஞ்சொற்பொருள்:

எறித்தல்-தாக்குதல்,கரகம்-கமண்டலம்,முக்கோல்-முனிவர்ஏந்தும் முத்தலைக்கோல்,நடை-ஒழுக்கம்,சீர்-சிறப்பு,தேருங்கால்-ஆராயும்,எவ்வம்-வருத்தம்

கலித்தொகை: 10

## பாலைக்கலி

கலித்தொகை: 10

கூற்று: தலைமகனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி, 'இவ்வகைப்பட்ட சுரத்தைப் பொருள் காரணமாகப் பிரிகின்றீர் எனக் கேட்பின், இவ்வகை ஆகற்பாலள்' எனச் சொல்லி, செலவு அழுங்குவித்தமை தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் :

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி, தலைவனிடத்து, நீர் இத்தன்மையவாய் பாலை நிலத்தைப் பொருள் காரணமாகப் பிரிய இருக்கின்றீர் என்று கேட்ட அளவிலே, தலைவி இத்தன்மையள் ஆகிவிடுகின்றாள் எனக் கூறி, அவனுடைய செலவைத் தவிர்த்தாள் இதனைத் தலைமகளிடத்தே கூறினாள்.

பாடல் :

வறியவன் இளமை போல், வாடிய சினையவாய்,

சிறியவன் செல்வம் போல், சேர்ந்தார்க்கு நிழல் இன்றி,

யார்கண்ணும் இகந்து செய்து இசை கெட்டான் இறுதி போல்,

வேரொடு மரம் வெம்ப, விரி கதிர் தெறுதலின்,

அலவுற்றுக் குடி கூவ, ஆறு இன்றிப் பொருள் வெ.்.கி,

கொலை அஞ்சா வினைவரால், கோல் கோடியவன் நிழல்

உலகு போல், உலறிய உயர் மர வெஞ் சுரம்

இடை கொண்டு பொருள்வயின் இறத்தி நீ எனக் கேட்பின்,

உடைபு நெஞ்சு உக, ஆங்கே ஒளிஓடற்பாள்மன்னோ-

படை அமை சேக்கையுள் பாயலின் அறியாய் நீ

புடைபெயர்வாய்ஆயினும், புலம்பு கொண்டு இனைபவள்?

முனிவு இன்றி முயல் பொருட்கு இறத்தி நீ எனக் கேட்பின்,

பனிய கண் படல் ஒல்லா படர் கூர்கிற்பாள்மன்னோ-

நனி கொண்ட சாயலாள் நயந்து நீ நகையாகத்

துனி செய்து நீடினும், துறப்பு அஞ்சிக் கலுழ்பவள்?

பொருள் நோக்கிப் பிரிந்து நீ போகுதி எனக் கேட்பின்,

மருள் நோக்கம் மடிந்து ஆங்கே மயல் கூர்கிற்பாள்மன்னோ

இருள் நோக்கம் இடையின்றி, ஈரத்தின் இயன்ற நின்

அருள் நோக்கம் அழியினும், அவலம் கொண்டு அழிபவள்?

எனவாங்கு 20

வினை வெ.ஃகி நீ செலின், விடும் இவள் உயிர் எனப்,

புனையிழாய்! நின் நிலை யான் கூறப், பையென,

நிலவு வேல் நெடுந் தகை நீள் இடைச்

செலவு ஒழிந்தனனால் செறிக, நின் வளையே!

பொருளுரை:

வறியவன் இளமை போல், வாடிய சினையவாய்,

சிறியவன் செல்வம் போல், சேர்ந்தார்க்கு நிழல் இன்றி,

யார்கண்ணும் இகந்து செய்து இசை கெட்டான் இறுதி போல்,

வேரொடு மரம் வெம்ப, விரி கதிர் தெறுதலின்,

அலவுற்றுக் குடி கூவ, ஆறு இன்றிப் பொருள் வெ.ஃகி

வறுமைப்பட்டவனின் இளமை வீணே கழிவதுபோல, வாட்டும் கோடையால் மரக்கிளைகள் வெறுமையுற்றுக் கிடக்க, அறிவற்ற ஒருவனின் செல்வம் பிறர்க்குப் பயன்படாதது போல, தம்மை அண்டினோர்க்கு நிழலைத் தரமுடியாமல்,யாரையும் மதியாமல் நடந்து தன் நல்ல பெயரைக் கெடுத்துக்கொண்டவனின் இறுதிக்காலம் போல,வேரோடு மரம் வாடிப்போகுமாறு ஞாயிற்றின் விரிந்த கதிர்கள்சுடுதலால்,வருத்தமுற்றுக் குடிமக்கள் கூக்குரலிட, அறநெறி கெட்டுப் பொருளின்மேல் ஆசைகொண்டு,

கொலை அஞ்சா வினைவரால், கோல் கோடியவன் நிழல்

உலகு போல், உலறிய உயர் மர வெஞ் சுரம்

இடை கொண்டு பொருள்வயின் இறத்தி நீ எனக் கேட்பின்,

உடைபு நெஞ்சு உக, ஆங்கே ஒளிஓடற்பாள்மன்னோ-

படை அமை சேக்கையுள் பாயலின் அறியாய் நீ

கொலைக்கு அஞ்சாத கொடிய அமைச்சரால் தனது நல்லாட்சியில் பிறழ்ந்த அரசனின் ஆட்சியின் கீழ் வாழும் நாட்டு மக்களின் உள்ளங்களைப் போல் வற்றிக் காய்ந்துபோன உயர்ந்த மரங்களைக் கொண்ட கொடிய பாலை வழியில்பிரிவினை மேற்கொண்டு, பொருளுக்காகப் போகிறாய் நீ என்று கேள்விப்பட்டால் உடைந்த நெஞ்சம் வருந்திச் சோர்வுற, தன் அழகு கெடுவாள் அன்றோ!சீராகப் பரப்பப்பெற்ற படுக்கையில் உறங்கும்போது உன்னை அறியாமல் நீ

புடைபெயர்வாய்ஆயினும், புலம்பு கொண்டு இனைபவள்?

முனிவு இன்றி முயல் பொருட்கு இறத்தி நீ எனக் கேட்பின்,

பனிய கண் படல் ஒல்லா படர் கூர்கிற்பாள்மன்னோ-

நனி கொண்ட சாயலாள் நயந்து நீ நகையாகத்

துனி செய்து நீடினும், துறப்பு அஞ்சிக் கலுழ்பவள்?

> சற்று விலகிப் படுத்தாலும் தனிமையுணர்வுகொண்டு தவித்துப்போகின்றவள் மிக்க வருத்தமின்றி ஈட்டமுடிகின்ற பொருளுக்காகப் போகிறாய் நீ என்று கேள்விப்பட்டால்நீர் நிறைந்த கண்கள் உறக்கம் கொள்ளாமல் துன்பம் மிகுவாள் அன்றோ!மிகவும் அதிமான மெல்லியல்பு கொண்டவளான இவள், விருப்பத்துடன் நீவிளையாட்டாகப்பொய்க்கோபம் கொண்டு மறைந்திருந்தாலும், அந்தச் சிறு பிரிவிற்கே அஞ்சி நடுங்குகின்றவளாயிற்றே

பொருள் நோக்கிப் பிரிந்து நீ போகுதி எனக் கேட்பின்,

மருள் நோக்கம் மடிந்து ஆங்கே மயல் கூர்கிற்பாள்மன்னோ

இருள் நோக்கம் இடையின்றி, ஈரத்தின் இயன்ற நின்

அருள் நோக்கம் அழியினும், அவலம் கொண்டு அழிபவள்?

எனவாங்கு

> பொருளின் மீது நோக்கம்கொண்டு இவளை விட்டுப் பிரிந்து நீ போகிறாய் என்று கேள்விப்பட்டால் மருண்ட தன் பார்வை மடிந்துபோக, மயக்கம் கொண்டுவிடுவாள் அன்றோ? வெறுப்பான பார்வை இடையே இல்லாமல், அன்பின் வயப்பட்ட உன அருட்பார்வை சிறிதளவு அழிந்து போனாலும் அவலம் கொண்டு நெஞ்சழிகின்றவளான இவள் என்று நான் கூற,

வினை வெ.்.கி நீ செலின், விடும் இவள் உயிர் எனப்,

புனையிழாய்! நின் நிலை யான் கூறப், பையென,

நிலவு வேல் நெடுந் தகை நீள் இடைச்

செலவு ஒழிந்தனனால் செறிக, நின் வளையே!

> பொருள்தேடும் தொழிலை நாடி நீ பிரிந்து சென்றால் இவள் உயிரை விட்டுவிடுவாள் என்று,சிறப்பாகச் செய்த அணிகலன்களைச் சூடியவளே! உன்னுடைய நிலையை நான் எடுத்துக்கூற, நன்கு சிந்தித்து ஒளிவீசும் வேலையுடைய நெடுந்தகையாளர், நீண்ட அந்தப் பாலைவழியில் பயணம் செய்வதைத் தவிர்த்துவிட்டார், கழன்றுபோகாமல் செறிந்து நிற்கட்டும் உன் வளையல்கள்.

அருஞ்சொற்பொருள்:

சினை-கிளை,இகந்து-வரம்பு,இசை-புகழ்,தெறுதல்- காய்தல்,வினைவர்-அரசியல் அலுவலர், ஒளி ஓடர்பாள்- அழகுகெடுவாள்,பனிய கண்- நீர் நிறைந்த கண்கள், படர்- துன்பம்,துனி- பிரிவு,ஈரம்-அன்பு

## கலித்தொகை: 11

### பாலைக்கலி

கலித்தொகை: 11

கூற்று: தலைவி, மூன்றன் பகுதி தலைவன் கூறிப் பொருள்வயிற் பிரிகின்ற காலத்து, 'காடுகடியவாயினும், இவ்வகைப்பட்டனவும் உள ! என்று கூறினார் அவை காண்டலின் வருவர்' எனத் தோழிக்குக் கூறி, அதற்கு நிமித்தமும் கூறி, ஆற்றுவித்தது.

மூன்றன் பகுதி கூறுதலாவது ' 'அறத்தினால் பொருள் ஆக்கி, அப்பொருளால் காமம் நுகர் வேன் ' என்றலாம். 'உடைமையது உயர்ச்சி கூறிப் பிரிந்தான்' எனக் கிளவி கூறின், பொருள் வயிற்பிரிதல் இன்றாம், அது பொருள் வயிற்பிரிவை விலக்கும் என்றலின்.

கூற்று விளக்கம் :

தலைவன் பொருள் வயிற் பிரிகின்றகாலத்து, காடு கடத்தற்குக் கடிதாக இருப்பினும், இயல்பான காட்சிகளும் உள என்று கூறினான் அவை கண்ட தலைவன், மேற் செல்லாது திரும்பி வருவன் எனத் தோழிக்குக் கூறி எடுத்துரைத்தனள் அதற்கு நிமித்தமும் கூறித் தோழியை ஆற்றுவித்தாள் தலைவி.

பாடல்: 11

அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்,
பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்,
புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும்' என,
பிரிவு எண்ணிப் பொருள்வயிற் சென்ற நம் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய்! வலிப்பல், யான் கேஎள், இனி:

'அடி தாங்கும் அளவு இன்றி, அழல் அன்ன வெம்மையால்,
கடியவே' கனங் குழாஅய்! 'காடு' என்றார் 'அக் காட்டுள்,
துடி அடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடி ஊட்டி, பின் உண்ணும், களிறு' எனவும் உரைத்தனரே
'இன்பத்தின் இகந்து ஒரீஇ, இலை தீந்த உலவையால்,

துன்புறூஉம் தகையவே காடு' என்றார் 'அக் காட்டுள்,
அன்பு கொள் மடப் பெடை அசைஇய வருத்தத்தை
மென் சிறகரால் ஆற்றும், புறவு' எனவும் உரைத்தனரே
'கல் மிசை வேய் வாடக் கனை கதிர் தெறுதலான்,
துன்னரூஉம் தகையவே காடு' என்றார் 'அக் காட்டுள்,

இன் நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்து அளிக்கும், கலை' எனவும் உரைத்தனரே
என ஆங்கு
இனை நலம் உடைய கானம் சென்றோர்
புனை நலம் வாட்டுநர்அல்லர் மனைவயின்

பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன்

நல் எழில் உண்கணும் ஆடுமால், இடனே.

பொருளுரை :

அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்,

பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்,

புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும்' என,

பிரிவு எண்ணிப் பொருள்வயிற் சென்ற நம் காதலர்

வருவர்கொல் வயங்கிழாஅய்! வலிப்பல், யான் கேளள், இனி:

"அற ஒழுக்கத்தை முழுவதும் ஏற்றுத் தவறாது நடப்பது என்பது, மிகமிக அருமையான செயலே. அந்த அருமையான அறநெறியினை உடையவர்களாக உள்ளவர்களே நம்மைத் தேடி வருவர் நமக்கு அருள் புரிந்து உதவுவர். அவர்களுக்கு ஏற்ற வசதிகளைச் செய்து நாம் உதவ வேண்டாமா? வாழ்வுக்குப் பெரிய பகை வறுமை அந்த வறுமைப் பெரும்பகையை வெல்வதற்குப் பொருளைத் தேடிச் சேமிக்க வேண்டாமா? தாம் கொண்ட ஆணவத்தால் நம் தகுதியை மதியாது இகழ்ந்து திரிவர் சிலர்அவரது செருக்கை அழித்தால்தானே நம் வாழ்வு நிலைக்கும்? அதனைச் செய்துமுடிக்க வேண்டாமோ? இவை எல்லாமும் செய்தால்தானே, காதல் வாழ்வில் நிலையான கூட்டமும் இன்பமும் பெற்று, நாம் அமைதியுடன் வாழலாம்? இவ்வாறு பலவும் எல்லாம் எண்ணிப் பிரிந்து, பொருள் தேடச் சென்றவர் நம் காதலர். அவர் வரவேண்டிய நாளும் நெருங்குகின்றது.

அடி தாங்கும் அளவு இன்றி, அழல் அன்ன வெம்மையால்,

கடியவே' கனங் குழாஅய்! 'காடு' என்றார் 'அக் காட்டுள்,

துடி அடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்

பிடி ஊட்டி, பின் உண்ணும், களிறு' எனவும் உரைத்தனரே

'இன்பத்தின் இகந்து ஒரீஇ, இலை தீந்த உலவையால்

அவர் தவறாது வந்துவிடுவாரோ?" என்று, தன் தோழியைக் கவலையுடன் கேட்கிறாள் ஒரு தலைவி. 'கட்டாயம் வருவான்' என அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள் அந்தத் தோழி.விளங்கும் பூண்கள் பலவும் அணிந்துள்ளவளே! அவன் உறுதியாகச் சென்னபடியே, சொன்ன நாள் தவறாது வருவான். எப்படித் துணிந்தேன் என்பாயாயின் கேள்: நான் சொல்வனவற்றை நன்றாகக் கேள்: பாதங்கள் தாங்கும் அளவிலே நிலத்தின் வெம்மை இல்லை் நெருப்புக் கங்குகள் போன்று நிலம் வெம்மை கொண்டதாவுள்ளது அக் காட்டு வழியைக் கடந்து செல்வது மிகக் கடினம்" என்று அவன் சொன்னதை நினைந்து நீ வருந்துகின்றாய். கனவிய குழையை உடையவளே! 'அக் காட்டினுள், துடி போன்ற பாதங்களையுடைய யானைக்கன்று,

துன்புறூஉம் தகையவே காடு’ என்றார் ‘அக் காட்டுள்,

அன்பு கொள் மடப் பெடை அசைஇய வருத்தத்தை

மென் சிறகரால் ஆற்றும், புறவு’ எனவும் உரைத்தனரே

‘கல் மிசை வேய் வாடக் கனை கதிர் தெறுதலான்,

துன்னரூஉம் தகையவே காடு’ என்றார் ‘அக் காட்டுள்

மிகக் கொஞ்சமாகக் கிடந்த நீரையும் கலக்கிவிடும். வேட்கை மிகுந்த களிறு அதற்கு ஒருபோதும் வருந்துவதில்லை. தன் வேட்கையை முதலில் தீர்க்கவும் அது முயல்வதில்லை. பிடியானைக்கு முதலில் நீர் ஊட்டிவிட்டுத் தான் அதன் பின்னரே எஞ்சிக் கிடப்பதை உண்ணும்’ என்றும் அவன் சொன்னதை நீ கேட்டதில்லையோ? இல்வாழும் இன்பத்தைவிட்டு நீங்கிச் சென்றவர் காதலர். இலைகள் காய்ந்து உதிர்ந்துபோகத், தாமும் பட்டு விட்டன மரங்கள். நிற்பதற்கும் நிழல் தராது அவரைத் துன்புறுத்தும் தகைமை உடையதாயிற்று அக்காடு” என்று அவன் சொன்னதை நினைந்து நீ கவலைப்படுகிறாய். ஆனாலும் “அக்காட்டினுள், தன்பால் அன்பு கொண்ட மடப்பெடையானது வெம்மைக்கு ஆற்றாது வருந்திய வருத்தத்தைத் தன் மென்மையான இறகுகளால் வீசியபடி, ஆண்புறா ஆற்றிக் கொண்டிருக்கவும் காணலாம்” என்று, அவர் தாமே சொன்னதையும் நீ கேட்டாயல்லவோ?

இன் நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்

தன் நிழலைக் கொடுத்து அளிக்கும், கலை’ எனவும் உரைத்தனரே

என ஆங்கு

இனை நலம் உடைய கானம் சென்றோர்

புனை நலம் வாட்டுநர்அல்லர் மனைவயின் . . . .ஜ20ஸ

பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன்

நல் எழில் உண்கணும் ஆடுமால், இடனே

“மலை முகட்டிலே மூங்கில்கள் வாடி வறண்டு போயின. அவ்வளவு கொடிதாகக் கதிரவனின் கதிர்கள் தாக்கி வருத்தும் அக் காட்டுப் பாதை மிகவும் துன்பந்தருவதாயிற்றே?” என்றவரின் சொற்களைக் கேட்டு, நீ வருந்துகின்றாய். ஆனால், “அக்காட்டினுள், இனிமைதரும் நிழல் இல்லாததால் வருத்தங்கொண்ட தன் மடப்பிணைக்குத், தன் நிழலையே கொடுத்து, அன்புடன் கலைமான் பேணுவதும் உண்டு” என்றனரே, அதனையும் நீ கேட்டாயில்லையோ? கொடுமையுடைய கானல் வழி தான் அது என்றாலும், அங்கு யானையும், புறாவும், மானும் தத்தம் காதலியரை அன்புடன் பேணக் காணும் நம் காதலர், புனைந்து போற்றும் அழகு கெடுமாறு நின்னையும் வாடச் செய்வாரோ? அதோ! வீட்டினுள்ளே பல்லியும் நான் சொல்வதை ஆமோதிப்பது போல ஒலி செய்கிறது அதனையும் கேள். நின் இடக்கண்ணும் துடிக்கிறது அதனையும் பார். மனந்தேறியிரு. ஆகவே, அவர் நம்மை நினைந்து விரைவில் திரும்பிவிடுவார் நீ அது வரை ஆற்றியிருப்பாயாக.”

அருஞ்சொற்பொருள்:

பேணார் – பேணாதார் காப்பாற்றாதார்.தெறுதல் – அழித்தல். புரிவு அமர் – உள்ளம் ஒன்றுபட்ட.

வலிப்பல் – உறுதியாகக் கூறுவேன்.. துடிஅடி – துடி போலும்அடி. கயந்தலை யானைக்கன்று. சின்னீர் – சிறிதளவான நீர்.இகந்து – நீங்கி. ஓரீஇ – நீங்கி. தீந்த – தீய்ந்து உலர்ந்த. உலவை கொம்பு. அசைஇய வருந்திய. சிறகர் – சிறகு. புறவு – புறா.வேய் – மூங்கில். கனை கதிர் -ஞாயிற்றின் அடர்ந்த கதிர்கள்.துன்அரும் தகைய செல்வதற்கு அருமையான தன்மை.துன்னுதல் – அடைதல். இன்னிழல் – இனிய நிழல். பிணைபெண்மான். கலை – ஆண்மான். . இனைநலம் – இத்தகையதன்மைகள். புனைநலம் – புனைந்து பண்ணிய அழகு. பாங்குஒத்து இசைத்தன என் சொல்லுக்கு இசைய ஒலித்தன.

கொள்குறிவினா

1.நடுவு இகந்து ஒரியிய நயன் இல்லன் வினை வாங்க கொடிது ஓர்த்த மன்னவன் கோல் போல் - என்ற வரிகள் எதற்கு உவமை

அ).வேழம்

ஆ).வேங்கை

இ).ஞாயிறு

ஈ).யாழ்

2.சீர் கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு அல்லாத , நீருள்ளே பிறப்பினுபம் --------- என் செய்யும் நிரப்புக

அ).யாழ்க்கு அவைதாம்

ஆ).தீக்கு அவைதாம்

இ).நுமக்கு அவைதாம்

ஈ).நீர்க்கு அவைதாம்

3.இருள் நோக்கும் இடையின்றி ஈரத்தின் இயன்ற நின் அருள் நோக்கம் ஆயினும்.. என்ற வரிகளில் இடம் பெற்ற ‘ஈரம்’ என்ற சொல்லின் பொருள்

அ).வீரம்

ஆ).செல்வம்

இ).புகழ்

ஈ).அன்பு

4.பாலைக்கலியை பாடியவர்

அ).கபிலர்

ஆ).பெருங்கடுக்கோ

இ).ஓதலந்தையார்

ஈ).அம்மூவனார்

விடைகள்

1.இ).ஞாயிறு

2.ஈ).நீர்க்கு அவைதாம்

3.ஈ).அன்பு

4.ஆ).பெருங்கடுக்கோ

பகுப்பாய்வு வினாக்கள்

1.அருஞ்சுரத்தில் நிகழும் அன்புக்காட்சிகள் குறித்து பாடல் வரிக்கொண்டு எடுத்துரைக்க

2.தூங்கலோலியர் உழவர்களின் வாழ்வியலை எங்ஙனம் விவரிக்கின்றனர்

3.கபிலர் சேரமான் கடுக்கோ வாழியதனை எங்ஙனம் பாடுகிறார்

நெடுவினாக்கள்

1.அ)பாலையின் வழியின் கொடுமையைக் கலித்தொகையில் கடுங்கோ எங்கனம் விவரிக்கின்றார்

(அல்லது)

ஆ).மாந்தரஞ்சேரல் இரும்பொரையை குறுங்கோழியுர் கிழார் எங்ஙனம் தம் கவிதைகளில் சிறப்பித்துள்ளார்

## பரிபாடல்

திருமால் - 1, 4 (2 பாடல்கள்)

வையை - 7 (1 பாட்டு)

செவ்வேள் - 8, 5 (2 பாடல்கள்)

நோக்கம்:

- எட்டுத்தொகை நூல்களுள் அகமும் புறமும் கலந்த நூல் பரிபாடல்
- இசை பொருந்திய பாடல்களே பரிபாடல் இதனை ‘ஓங்குபரிபாடல்’ என்றும் அழைப்பர்
- பரிபாடலில் உள்ள பாடல்கள் அனைத்தும் மதுரையும் பாண்டிய நாட்டையும் அதன் பலத்தையும் முருகன் திருமால் ஆகியோரின் சிறப்புகளையும் வைகை ஆற்றையுமே பாடுகின்றனர்
- பாடல்கள் அனைத்தும் முழுமையாக கிடைக்கவில்லை தற்பொழுது 22 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன அவற்றுள் திருமால் பற்றிய பாடல்கள் ஆறு (1,2,3,4,13,15) முருகன் பற்றிய பாடல்கள் எட்டு(5,8,9,14,17,18,19,21) வைகையை பற்றிய பாடல்கள் எட்டு (6,7,10,11,12,16,20,22)

கிடைத்துள்ளது இந்த 22 பாடலில் முதல் பாடலையும் இறுதி பாடலையும் பாடியபுலவர் யார் என்று தெரியவில்லை மீதமுள்ள 20 பாடல்களை 13 புலவர்கள் பாடியுள்ளனர்

- பரிபாடலின் சிற்றெல்லை 25 அடிகள் என்றும் பேரில்லை 400 அடிகள் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது
- பரிபாடல் நூல் தமிழ் இலக்கியத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும் சங்ககால வாழ்க்கை,கலாச்சாரம், சமுதாய அமைப்புகளை பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வழங்குகிறது இந்நூலை படிப்பதன் மூலம் தமிழ் இலக்கியம் மற்றும் வரலாற்றை ஆராய்வதில் பயனுள்ளதாக இருக்கும

## திருமால் வாழ்த்து - 1

பாடல் :

நாஞ்சிலோனே!

ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை “

தீயுமிழ் திறனொடு முடிமிசை அணவர

மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனிச்

சேயுயர் பணைமிசை எழில்வேழம் ஏந்திய

வாய்விளங்கும் வளைநாஞ்சில் ஒருகுழை ஒருவனை

பொருளுரை:

பாற்கடலின் நடுவே, பரந்தாமனாகிய நீ, அரவுப்பாயலிலே பள்ளி மேற்கொண்டவனாக, அறிதுயில் பூண்டிருக்கின்றனை! . காண்பாரை அச்சமுறச் செய்யும் அரிய அமைப்பைக் கொண்டவனான, ஆயிரம் தலைகளை உடையவன் ஆதிஅவள், நஞ்சாகிய நெருப்பைக் கக்கும். அத்தலைகளை. எல்லாம் பாடமாக விரித்து, ஆற்றல் பொருந்த, நின் திருமுடியின் மேலாக் குடைகளைப்போலக் கவித்து, அவற்றை மெல்ல அசைத்தபடியே நினக்கு நிழல் செய்துகொண்டிருக்கின்றான். திருமகளை எப்போதும் நீங்காதே கொண்டிருக்கும் பரந்த மார்பினை உடையாய்! குற்றமற்ற ஒனியினைப் பரப்பியபடியிருக்கின்ற, வெண்சங்கைப்போன்ற திருமேனி வண்ணத்தினை. உடையாய்! மிக் உயர்ந்த மூங்கிற்கம்பத்தின் மேலாக எழில்மிக்க வேழக் கொடியினை உயர்த்திருப்பவனே! வளைந்த முகப்பினைக் கொண்ட கலப்பைப் படையினை ஏந்தியுள்ளவனே! ஒப்பற்ற. காதணிகள் விளங்கத் தகழி ஒப்பற்ற பெருமானே!

அருஞ்சொற்பொருள் :

அணங்கும்- காண்பாரை அச்சமுறச் செய்யும் தெய்வத் தகைமை. அருந்தலை- அரிதான அமைப்பைக் கொண்ட தலை் பிறரால் நெருங்குதற்கரிய தலையும் அம். தீ கொடிய- நஞ்சு. திறன் - ஆற்றல், அணவர - அசைந் தாட. மா திருமகள். வால் வளை - வெண்சங்கு. சேயுயர் பணை - மிக . உயரத்துக்கு. உயர்ந்த மூங்கிற் கம்பம். வேழம் --வேழக் கொடி. நாஞ்சில் - கலப்பை. குழை - காதணி ஒரு குழை ஒருவனை ஒப்பற்ற காதணிகளைக் கொண்ட சிறந்தோனே் ஒற்றைக் குழையினான சிவபிரானே எனவும் இதற்குப் பொருள் கொள்வர் திருமால் சிவசக்தியின்! அண்கோலம் என்னும் தத்துவ உண்மையைக் கருதினால்,“ சிவசக்தியைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

மறைப் பொருளே!

பாடல் :

எரிமலர் சினைஇய கண்ணை பூவை

விரிமலர் புரையும் மேனியை மேனித்

திரு ஜெமர்ந்து அமர்ந்த மார்பினை மார்பில்

தெரிமணி பிறக்கும் பூணினை மால்வரை

எரிதிரிந் தன்ன பொன்புனை உடுக்கையை

சேவலங் கொடியோய்! நின் வலவயின் நிறுத்தும்

ஏவலுள் பணிந்தமை கூறும்

நாவல் அந்தணர் அருமறைப் பொருளே

பொருளுரை:

எரிநெருப்பை விளங்கும் செந்தாமரை மலரினைப் போன்ற கண்களைக் கொண்டோனே! காயாவின் இதழ் விரிந்த மலரைப்போன்று விளங்கும் கார்வண்ணத் திருமேனியை. உடையோனே! அம் மேனிக்கண்ணே திருமகள் நீங்காது உறையும் மார்பினைக் கொண்டோனே! அம் மார்பினிடத்தே தெரிந்தெடுத்துத் தொடுத்த மணிகள் ஒளிவீசிக் கொண்டிருக்இன்ற பூணாரத்தைப் பூண்டிருப்பவனே! நீலமலையினை எரியானது சூழ்ந்தாற்போல் விளங்கும், செம்பொன் புனைந்த உடுக்கையை உடுத்திருப்போனே! கருடச்சேவலை வெற்றிக் கொடியாக உடையவனே! நின் ஆற்றலுக்கு உள்ளாகவே அனைத்தையும் நிறுத்துகின்ற நின் ஆணைக்குள்ளாகவே அனைத்துயிரும் பணிந்து தொழில்கேட்கின்ற, அந்தச் செவ்வியை எடுத்துரைக்கின்ற நாவன்மைபெற்ற அந்தணரின் அரியவான நான்மறைகட்கும், மூலப்பொருளாக இலங்குகின்ற பெருமானே!

அருஞ்சொற்பொருள் :

எரி - எரி நெருப்பு. பூவை - காயா மலர். திரு- திருமகள். தெரிமணி - தெரிந்தெடுத்த மணி இது செம்மணி. மால் வரை - நீலமலை. பொன் - செம்பொன். உடுக்கை - உடை. சேவல் - கருடச்சேவல். வலம் - வெற்றி ஆற்றல். ஏவல் - ஆணைச் : சக்கரம் - ஆக்ஞாசக்கரம். நாவல் - நாவன்மை கொண்டவர். அந்தணர் - அருளாளர். நிறுத்தல் – நிலைபெறுமா

தானவரை வென்றனை! -.

பாடல் :

இணைபிரி யணிதுணி பிணிமணி எரிபுரை ..

விடரிடு சுடர்படர் பொலம்புனை வினைமலர்

தெரிதிரள் எரியுரை மிகுதன .முரண்மிகு

கடல்தரு மணியொடு முத்தியா கத்தோன்றி

நெறிசெறி வெறியுறு முரல்விறல் அணங்குவில்

தாரணி துணிமணி வெயிலுறு மெழில்புகம் மலர்மார்பின்

எரிவயிர் நுதியெறி படையெருத்து மலையிவர் நவையில்

துணிபட வினமணி வெயிலுற எழில்தனச்

சிமையிருள் கலமுறு சிறுபுரி யொருபுரி நாண்மலர்

மலரில சினவளர் பருதியின் ஒளிமணி மார்பணி

மிக நாறுரு வினவிரை வளிமிகு கடுவிசை

உடுவுறு தலைநிரை இதழணி வயிறிரிய வமரரைப்

போரெழுந் துடன்றிரைத் துரைஇய தானவர்

சிரமுமிழ் புனலல்பொழி பிழிந்தூ

முதிர்பதிர் பலதொட வமர்வென்ற கணை!

பொருளுரை:

இப்பகுதி உறுப்புப் பெரிதும் சிதைவுற்றுக் காணப்படுவது இதன் பொருள் அதனால் இல்லை! அதனால் பொருளும் தரப்படவில்லை.

அறிதல் அரிது

பாடல் :

பொருவேம் என்றவர் மதம்தபக் கடந்து

செருமேம் பட்ட செயிர்தீர் அண்ணல்

இருவர் தாதை! இலங்குபூண் மாஅல்!

தெருள நின் வரவு அறிதல்

மறுளறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே.

பொருளுரை:

நின்னை எதிர்த்துப் போரிடுவோம்” எனக் கூறி எதிர்த்து வந்தாரது. செருக்கழிய, அவரை அழித்து. வெற்றி கொண் டோனே! போர்க்களத்தே பகைவரினும் மேம்பட்டோனாக விளங்கும் குற்றமற்ற தலைவனே! நான்முகன், மதனன் ஆகிய . இருவருக்கும் தாதையாகியவனே! ஒளியிலங்கும் பூண்களைப் பூண்டோனாகிய திருமாலே! நீ வந்து அருளுகின்ற அந்தச் செவ்வியை அறிதலானது, மயக்கற்ற தேர்ச்சியையுடைய அறிவிற் சிறந்தார்க்கும் அரிதாகும் பெருமானே!

அருஞ்சொற்பொருள் :

மதம் - செருக்கு. கடந்து - வெற்றி கொண்டு. “செரு - - போர். செயிர் - குற்றம். இருவர் - மதனனும் நான்முகனுமாகிய இருவர். மருள். - மயக்கம். தேர்ச்சி - தெளிந்த முடிவு. முனைவன் - முற்றிய அறிவன் பா கண்டது முதனூலாகும்“ என்பதைக் கருதுக.

எவன் எளிது?

பாடல் :

அன்ன மரபின் அனையோய்! நின்னை

இன்னன் என்று உரைத்தல் எமக்கெவன் எளிது? 35.

பொருளுரை:

மேற்கூறியவும் பிறவுமாகிய் அத்தகைய் முறைமையினை - உடையோனே! நின்னை "இன்ன தன்மையன்" என்று வரையறை செய்து கூறுதல், எமக்கு. எவ்வாறு எளிதாகும்?

அருஞ்சொற்பொருள் :

மரபு - முறைமை. அனையோய் , எவன் – எவ்வாறு

அருளல் வேண்டும்!

பாடல் :

அருமைநற் கறியினும் ஆர்வம் நின்வயின்

பெருமையின் வல்லாய் யாமிவண் மொழிபவை

மெல்லிய எனாஅ வெறாஅது அல்லியந்

திருமறு மார்ப நீ அருளல் வேண்டும்!

பொருளுரை:

நின் தகைமைகளை அறிந்து நின்னைப் போற்றுதல் அரிய செயலாகும். அதனை நன்கு அறிந்தபோதிலும். எம் ஆர்வம் நின்னடத்தாகவே உள்ளது. பெருமைகளுள் வல்லவனே! யாம் இவ்விடத்தே கூறுபவை எல்லாம் பொருள்வளமற்ற புன் சொற்கள் என்று கருதி வெறுத்துவிடாது, அகவிதழ்களுடன் பொருந்திய செந்தாமரை மலரிலே வீற்றிருப்பவளான திருமகள் விளங்கும் மார்பினனாகிய நீயும், எமக்கு இரங்கியவனாக அருளிச் செய்தல் வேண்டும், பெருமானே!

அருஞ்சொற்பொருள் :

அருமை - அவனை முற்றவும் அறிந்து கூறுதற்கு இயலாத அருமைப்பாடு. ஆர்வம் - விருப்பம். மெல்லிய - வன்மையற்றவை, பொருட் செறிவற்றவை. அல்லி – அகவி

அனைத்தும் நீ!

விறல்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும் 40

அறனும், ஆர்வலர்க்கு அளியும் நீ!

திறனிலோர்த் திருத்திய தீதுதீர் சிறப்பின்

மறனும், மாற்றலர்க்கு அணங்கும் நீ!

அங்கண்ஏர் வானத்து அணிநிலாத் திகழ்தரும்

திங்களும், தெறுகதிர்க் கனலியும் நீ!

ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்

மைந்துடை ஒருவனும், மடங்கலும் நீ!

நலமுழுது அளைஇய புகரறு காட்சிப்

புலமும், பூவனும், நாற்றமும் நீ.

வலனுயர் எழிலியும், மாசு விசும்பும்

நிலனும், நீடிய இமயமும் நீ!

பொருளுரை:

ஆற்றல் மிகுந்த, தூய சிறப்பை உடையவர்கள் அந்தணர்கள். அவர்கள் பேணிக் காக்கின்ற அறவொழுக்கமும் நீயே! நின்பால் அன்பு உடையோருக்கு, அவர்க்கருளும் அருளாக அமைந்து . நின்று உதவுபவனும் நீயே! திறனற்றோரைத் திருத்திய, குற்றத்தின் நீங்கிய ப்பினை யுடைய மறமாண்பு என்பதும் நீயே! நின்னைப் பகைத்தோர்க்கு காட்சியளவாலேயே அச்சத்தை உண்டாக்கும் அணங்கும் நீயே! . அழகிய இடத்தை உடையது வானம் அதனிடத்தே அழகான நிலவொளியைப் பரப்பியதாக விளங்கி வருகின்ற திங்களும் நீயே! அனைத்தையும் எரித்துப் பொசுக்கவல்ல சுடுகதிர்களையுடைய கதிரவனும் நீயே! ஐந்து தலைகளை உயர்த்துள்ள நாகம் கவிந்து நிழல்செய்ய விளங்கும், அச்சத்தைப் பகைவர்க்குத் தருதலையுடைய அரிய ஆற்றலைக் கொண்ட பெருவலி உடையோனாகிய ஒப்பற்றவனும் நீயே! அனைத்தையும், அழிக்கும் ஊழிக்காலக் கூற்றமும் நீயே! நலம் எனக் கூறப்படுவன அனைத்தும் ஒருங்கே பொருந்திய, குற்றமற்ற தெளிந்த அறிவைத் தருகின்ற வேதமும், வெள்ளைத் தாமரைப் பூவின் மேலோனாகிய நான்முகனும், அவனிடத்தாகப் பிறக்கின்ற படைப்பு என்னும் தோற்றமும் நீயே!உலகிற்கு வெற்றியுண்டாக எழுகின்ற மேகமும், அம்மேகம் பரந்து திரிகின்ற இடமான அகன்ற விசும்பும், அதன் பயனைப் பெறுவதான இப்பூவுலகமும், இதன்கண் நெடிது உயர்ந்து விளங்கும் இமயமாகிய பெருமலையும், அனைத்தும் நீயே யாவாய்

அருஞ்சொற்பொருள்:

விறல் - வெற்றி மேம்பாடு விழுச்ச் - மிக்க சிறப்பு. அந்த்ணர் - அருளாளர். அறன் - ஒழுக்கம் நன்மை தீமை களைப் பகுத்து ஆய்ந்து, இமைகளை அறுத்து நன்மைகளை மட்டுமே செய்தொழுகும் ஒழுக்கமாதலின், “அறன்” ஆயிற்று இத்னைப் பேணுவோரே அந்தணாளர். மறன் - மறச் செவ்வி மாற்றாரை எதிர்த்தழிக்கும் வலிமை. கனலி - கதிரவன். மைந்து மிக்க வலிமை. ஒருவன் - ஒப்பற்றவன். மடங்கல் - கூற்றம். நலம் - “ நன்மை. புகர் - குற்றம். வலன் -“வெற்றி. எழிலி - மேகம். மாக வசம்பு - அகன்ற வானம். நிலன் - நிலவுலகம்.

## உயிர் முதல்வன்

பாடல் :

அதனால்,

இன்னோர் அனையை இனையை யரலென

அன்னோர் யாம்இவண் காணா மையின்

பொன்னணி நேமி வலங்கொண்டு ஏந்திய

மன்னுயிர் முதல்வனை ஆதலின் 55.

நின்னோர் அனையை நின் புகழொடும் பொயிலிந்தே:

பொருளுரை:

நீதான் மேற்கூறியவாறு அனைத்துக்கும் "அதியாகவும், . அனைத்தையும் படைத்தும் காத்தும அழித்தும் விளங்கும் முத்தொழிற்கு இறையாகவும் விளங்குகின்றனை! அதனாலே, இவ்வாறாக, அனைத்துமாக நீயே அமைந்துள்ளனை ஆதலின், நீதான் "இத்தன்மையை" என ஒப்பிட்டுக் கூறுதற்கு, அத்தன்மையாளர் எவரையும் யாம் இவ்விடத்தே கண்டிலேம். அங்ஙனம் காணாமையினால், அதுவும் எமக்கு :இயல்வதில்லை. பொன்மயமான சக்கரப்படையினை வலக்கையிலே தாங்கி உயர்ந்தவனாக, இவ்வுலகத்து உயிர்களுக்கெல்லாம் காவலாக. விளங்குபவனே! அதலினாலே, நின் பெரும் புகழோடும் ப அழகுற் று விளங்கியபடி,, நினக்கு நீயே ஒலுப்பானவனாக, நீதான் உயர்ந்து விளங்குகின்றனை!

அருஞ்சொற்பொருள் :

இனையை - இத்தன்றம்கள் பொன் . பொன்னிறம். நேமி - சக்கரம். வலம் - வலக்கரம். முதல்வன் - தலைவன், ஆதிகாரணன்.

புகழ் எழில்

பாடல் :

நின்னொக்கும் புகழ் நிழலவை

பொன்னொக்கும் உடையவை

புள்ளின் கொடியவை புரிவளையினவை

எள்ளுநர்க் கடந்தட்ட இகல் நேமியவை60

மண்ணுறு. மணிபாய் உருவினவை

எண்ணிறந்த புகழவை எழில் மார்பினவை

பொருளுரை:

திருமாலே! நின் புகழாகிய "ஒளியும் நின்னைப் போன்றே பெருஞ்சிறப்பு உடையதாகும். நின் உடை. பொன்னைப் போன்று .. ஒளிவீசுவதாகும். நின் வெற்றிக்கொடி கருடப் புள்ளினைக் கொண்டதாகும். உள்நோக்கிச் சுரிந்த வெற்றிச் சங்கினையும், .. இகழ்ந்தாரைக் கொன்று வெற்றிபெற்ற வலிமை கொண்ட . சக்கரப்படையினையும் உடையோனே! கழுவப் பெற்ற நீலமணியைப் போன்று ஒளிபரப்பும் நீல மேனியனே! எண்ணிறந்த புகழினை உடையோனே! எழில் அமைந்த கொண்டோனே!

அருஞ்சொற்பொருள்:

புகழ் நிழல் - பதனம் அருள் நிழல், புள் - கருடப்புள். மண்ணுதல் - கழுவுதல் சாணை பிடித்தல்.

பரவுதும் யாமே!

பாடல் :

ஆங்கு,

காமரு சுற்றமோ டொருங்குநின் அடியுறை

யாமியைந்து ஒன்றுபு வைகலும் பொலிகென

ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்

வாய்மொழிப் புலவ! நின் தாள்நிழல் தொழுதே

பொருளுரை:

மெய்ப்பொருள் உரைப்பவான வேதங்களை உரைத் தருளிய புலவனே! நின் தாழ் நிழற்கண்ணே வாழ்பவர்யாங்கள். நின்னை விரும்பும் அடியார்களாகிய அத்தொண்டர் குழத்தின ரோடும் யாங்களும் ஒருங்கே கூடியவராக அமைதல் வேண்டும். இன்பம் நிறைந்த உள்ளத்தேமாக. நின்தாள் நிழலாகிய அக் கருணைவெள்ளத்தைத். தொழுது போற்றியவராக விளங்கல் வேண்டும். யாம் நின்னடிக்கண்ணே பொருந்தி ஒன்றுபட்டு நாளும் நல்வாழ்வு பெற்றுத் திகழ்வேமாக, இவ்வாறு வேண்டிய வராக, நின்னைப் பரவுவேம்! பெருமானே! எமக்கும் அதனைத் தந்து அருள்வாயாக!

அருஞ்சொற்பொருள்

காமரு. சுற்றம் - விரும்பத் தகுந்த சுற்றம் அடியவர் கூட்டம். அடியுறை - அடிக்கண் வாழ்வார் அடி மைகள். வைகலும் - நாள்தோறும், ஏம் - இன்பம்.

திருமால் வாழ்த்து (4)

பாடியவர் : கடுவன் இளவெயினனார்

பண் வகுத்தவர் : பெட்டகனாரி

பண் : பண்ணுப் பாலையாழ்.

பாடல் :

நன்கு அறிந்தோம்

ஐந்திருள் அறநீக்கி, நான்கினுள் துடைத்துத் தம்

ஒன்றாற்றுப் படுத்த நின் ஆர்வலர் தொழுதேத்தி

நின்புகழ் விரித்தனர் கிளக்குங்கால் அவை நினக்கு

இறும்பூது அன்மைநன்கு அறிந்தேம்.........

பொருளுரை:

ஐம்பொறிகளாலும் உண்டாகின்ற மயக்கமாகிய அஞ்ஞான இருளை முற்றவும் . அறப்போக்கி, நான்கு குணங்களாகிய அவற்றை மேற்கொள்ளலினாலே உள்ளத்தின் அழுக்கைத் துடைத்துத், தம்மைத் தியானமாகிய ஒப்பற்ற நெறியினிடத்தே. ஒன்றுபடுத்தியவர்"

நின் அன்பர். அவர், நின் திருவடி.களைத் தொழுது போற்றி, நின் பதம் பலவாக விரித்துச் சொல்லியுள்ளனர். அவற்றை யாமும் எடுத்துச் சொல்லுங் காலத்தே ஒரு. தலையன் நன்றாக அறிந்தேம்.

அருஞ்சொற்பொருள் :

ஐந்து - ஐம்பொறிகள் மெய், வாய், கண், மூக்குச், செவி என்பன் இவை. ஆசைகளை எழுப்பி அறிவை மழுங்கச் செய்வன் ஆதலின், இருள்" என்றனர். நான்கு - நான்கு குணங்கள் இவை மைத்திரி, கருணை, முதிதை, உபேட்சை என்பன் அனைத்துயிரிடத்தும் நட்புக் கோடல் மைத்திரி அனைத்துயிருக்கும் இரங்கி அருளுதல் கருணை் அனைத்திலும் இன்பங்காணல் முதிதைத் பொருள்களிடத்துப் பற்றற்றிருப்பது " உபேட்சை. இவற்றை மேற்கொள்ள, உள்ளத்திருள், தானே அகலும் என்பது சான்றோர் கண்ட தெளிவு. ஒன்று - கடவுள் - தியானம், மனத்தைத் தியான நிலையில் ஒருவழிப்படுத்தல் இது இறைடியார் இயல்பு.

செங்கண் செல்வ!

பாடல் :

......... ஆயினும்

நகுதலும் குதியீங்கு ஊங்குநின் கிளப்பத்

திருமணி, திரைபா டவிந்த முந்நீர்,

வருமழை யிருஞ்சூல் மூன்றும் புரையு மாமெய்

மாஅ மெய்யொடு முரணிய .உடுக்கையை

நோனார் உயிரொடு முரணிய நேமியை

செயிர்தீர் செங்கண் செல்வ!...................

பொருளுரை:

நின் புகழின் விரிவு அத்தன்மை உடையது என்றாலும், யாமும் நின் புகழைச் சொல்லுகின்றேம். நின்னை முற்றவும் அறிந்து போற்றும் தகுதி எமக்கு இல்லை. அதனால், நீதான் நகுதலும் கூடும். ஆயினும், எம் ஆர்வத்தை மட்டுமே மனங் . கொண்டு, எமக்கும் நீ அருளிச் செய்தல் வேண்டும். அழகான நீலமணியையும், அலை முழக்கம் ஓய்நீத கடலினையும், சூல்கொண்டெழுந்த கரிய மழை மேகத்தையும் ஒப்பாக. விளங்கும் திருமேனியை உடையோனே! அக் கரிய உடலோடும் மாறுபட்டுத் தோன்றும் பொன், வண்ண - உடையைக் கொண்டோனே! பகைவரின் உடலோடு மாறுபட்டு, .அதனை-அழிக்கச். செல்லும் சக்கரப் படையை உடையோனே! குற்றம் தீர்ந்த சிவந்த கண்களைக் கொண்ட செல்வனே!

சொற்பொருள் :

இருமணி- - நீலமணி. பாடு - ஒலி. இருஞ்சூல் - தரிய சூல். மாமெய் - கரிய(திருமேனி. உடுக்கை - உடை. நோனார் பகைவர். செயிர் - குற்றம். செங்கண் - சிவந்த.கண்: செல்வன் . செல்வியாகிய திருமகளின் நாய்கன் செல்வத்திற்கு தானே செல்வமாக விளங்குபவன்.

வாய்த்த உகிரினை!

…….நிற் புகழப்

புகைந்த நெஞ்சின் புலர்ந்த சாந்தின் .

பிருங்க லாதன் பலபல பிணிபட

வலந்துழி, மலர்ந்த நோய்கூர் கூம்பிய நடுக்கத்து:

அலர்ந்த புகழோன் தாதை ஆகலின்

இகழ்வோன், இகழா நெஞ்சினனாக, நீஇகழா

நன்றா நட்ட அவன் நன்மார்பு முயங்கி

ஒன்றா நட்ட அவன் உ றுவரை மார்பில்

படிமதம் சாம்ப ஒதுங்கி

இன்னல் இன்னரொடு இடிமுரசு இயம்ப

வெடிபடா ஒடிதூண் தடியொடு

தடிதடி பலபட வகிர்வாய்த்த உகிரினை்

பொருளுரை:

பிரகலாதன் நின்னைப் புகழ்ந்தான். அதனைக் கேட்டான் இரணியன் மார்பிடத்துக் காய்ந்த சந்தனச் சாந்தோனும் ஆயினான். தன் மகனாகிய பிரகலா தனைப் பலவாறாகப் பிணிபடுமாறு கட்டியும் போட்டான். மனமும் உடலும் மிகவும் ஒடுங்குதற்குக் காரணமான பெருந்துன் -பத்தைப் பிரகலாதன் அப்போது அடைந்தான்அவ்வாறு துன்பமிழைத்த இகழ்தற்குரியோன் தன் தந்தையாதலின், அவனை இகழ்தற்குரியவனாகிய பிரகலாதனும், இகழ்தற்கு மனமற்ற வனாகத் தன் துயரைப் பொறுத்திருந்தான் நீயோ, இரணியனின் செயலை இகழ்ந்தனை. நின்னிடத்தே நல்ல நட்புக் கொண்டோனாகிய பிரகலாதனின், நல்ல : மார்பிடத்தே சென்று பொருந்தினை. , நின்னோடு மனம் பொருந்தாது, நின்னை இகழ்தலையே மேற்கொண்டோனாகிய இரணியனின், பெருமலை போன்ற மார்பின்மேற் பாய்ந்தனை! அவன்பாற் படிந்திருந்த செருக்கு அழியும்படியாக, அவன் மீது. மோதினை! அவ்வேளையிலே மிக்க உற்பாதங்களோடு இடியாகிய முரசமும் வானத்தே எழுந்து ஒலிக்கத் தொடங்கிற்று. வெடி பட்டுத் துண்டாய்ப்போன தூணின் துண்டங்களோடு, இரணியனின் தசைத் துண்டங்களும் பலவாகக் கலந்து வீழுமாறு, அவன் மார்பைப் பிளந்தனை! அவ்வாறு. வகிர்தலைச் செய்த வலியமைந்த நகத்தினை உடையோனே! நரசிங்கப் பெருமானே

அருஞ்சொற்பொருள் :

புலர்ந்த சாந்து - காய்ந்த சந்தனச் சாந்து சாந்து கார்ய்தற்குக் காரணம் சினத்தால் உண்மான மன வெப்பம். வலந்துழி - கட்டியவிடத்து. நோய் - துன்பம். கூம்பிய - ஒடுங்கிய. - அலர்ந்த புகழ் - இகழ்தற்குரிய புகழ். உறுவரை மார்பு - பெருமலை போன்ற மார்பு. ஒதுங்கி - பாய்ந்து பற்றி. சாம்ப - கெட. இன்னர் - “ உற்பாதம் கெட்டகுறிகள். தடி - மாமிசத் துண்டங்கள்

குன்றினோடு ஒக்கும்

பாடல் :

புருவத்துக் கருவல் கந்தத்தால்

தாங்கியிவ் வுலகம் தந்தடிப் படுத்ததை நடுவண்

ஓங்கிய பலர்புகழ் குன்றினோ டொக்கும்

பொருளுரை:

இவ்வுலகின் நடுவிடத்தாக ஓங்கியிருப்பது, பலரும் புகழ்தற்கு. உரியதாக. விளங்கும் மேருமலையாகும். அதுதான் உலகை நிலைபெறுத்தி நிற்கச்செய்வது என்பர். பழங்காலத்தே நீதான் நின் கருமையான வலிய கழுத்தால், கடலடியிலே. மறைந்திருந்த இவ்வுலகினைச் சுமந்து வெளிக்கொணர்ந்து நிலைநிற்கச் செய்தனை! அச் செயலது தன்மை கட மேருமலையின் செயலுக்குச் சமானமாகும்.

அருஞ்சொற்பொருள் :

புருவத்து - பழங்காலத்து பூருவத்து என்பது குறுக்கல் விகாரம் பெற்றது. கந்தம் - கழுத்து. பலர் புகழ் குன்று - மேருமலை அது உலகைச் சாயவிடாது நிறுத்திக் காத்து நிற்கின்றது

பிரிந்து சார்வன

பாடல் :

நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள்

நின், தண்மையும் சாயலும் திங்களுள்

நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள்

நின், புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள்

நின், நாற்றமும் ஒண்மையும் பூவையுள்

நின், தோற்றமும் அகலமும் நீரிலுள்

நின், உருவமும் ஒலியும் ஆகாயத்துள்

நின், வருதலும், ஒடுக்கமும் மருத்தினுள்

அதனால், இவ்வும் உவ்வும் அவ்வும்மனம்

ஏம மார்ந்த நிற் பிரிந்து

மேவல் சான்றன எல்லாம்

பொருளுரை:

அனைத்தையும் அழிக்கின்ற நின் வெம்மையும், அனைத்தையும் விளக்கமுறச் செய்யும் நின் விளக்கமும் ஞாயிற்றிடத்தே பொருந்தியுள்ளன. அனைவருக்கும் அருளுகின்ற நின் குளிர்ந்த நோக்கும்,மென்மைப் பண்பும் திங்களிடத்தே அமைந்துள்ளன. அனைவர். பாலும் ஒப்பாக அருள்சுரக்கும் நின்னியல்பும், நின் கொடைக் குணமும் மழையினிடத்தே பொருந்தியுள்ளன. நின் காக்கும் தன்மையும், பொறுமைப் பண்பும் பூமியினிடத்தே விளங்குகின்றன நின் மணமும் ஒளியும் காயாம்பூவிடத்தே விளங்குகின்றன நின் தோற்றமும் பரப்பும் கடலிடத்தே அமைந்துள்ளன. “நின் நுண்ணுருவமும், ஒலியும் ஆகாயத்திடத்தே பொருந்தியுள்ளன. நின் பிறப்பும் ஒடுக்கமும் காற்றிடத்தே அமைந்துள்ளன் இவ்வாறு. அமைந்துள்ளதனாலே, இவையும் உவையும் அவையுமாகிய எல்லாப் பொருள்களும், தமக்குக்

காவலாகப் பொருந்திய “நின்னிடத்திருந்து பிரிந்து, மீளவும் நின்னை வந்தே அடைவனவாக உள்ளன்.

அருஞ்சொற்பொருள் :

விளக்கம் - ஒளிப்பாடு. தண்மை - குளிர் நோக்கம். சாயல் - மென்மை.. புரத்தல் - காத்தல். நோன்மை - பொறுமை. ஒண்மை- ஒளியாம் தகைமை. தோற்றம் - வெளிப்பட்டுத் தோன்றுதல். வருதல் - பிறப்பு. ஒடுக்கம் – இறப்பு

ஒப்பற்ற கருடக்கொடி!

பாடல் :

சேவ லோங்கு உயர்கொடி யோயே!

சேவ லோங்கு உயர் கொடி

நின் னொன்று உயர்கொடி பனை

நின்னொன்று உயர்கொடி நாஞ்சில்

நின்னொன்று உயர்கொடி யானை

நின், ஒன்றா உயர்கொடி ஒன்றின்று

பொருளுரை:

கருடச் சேவலோடு உயர்ந்து விளங்கும் வெற்றிக் கொடி யோனே! கருடச்சேவலுடன் உயரப் பறக்கும் நின் கொடியோடு, நினக்கு உரியதாகச் சிறந்த பனைக்கொடியும் உயரப் பறந்தபடி, இருக்கும். நின்னுடைய உயர்ந்த கொடிகளுள் மற்றொன்று கலப்பைக் கொடியாகும். நின். கொடிகளுள் மற்றொன்று உயரப்பறக்கும் யானைக்கொடியாகும். இவ்வாறு பலவான. கொடிகளைக் கொண்டவன் நீ! எனினும் இவற்றுள் கருடச்சேவற் கொடியே ஒப்பற்றதாக உயர்ந்து விளங்குவதாகும்.

அருஞ்சொற்பொருள் :

ஒன்றின்று - ஒப்பற்றது. நாஞ்சில் - கலப்பை. சேவல் - கருடச் சேவல்.

பாம்பு! பாம்பு!

பாடல் :

விடமுடை அரவினுடல் உயிரொருங்கு உவணம்

அவன், மடிமேல் வலந்தது பாம்பு

பாம்பு தொழ் பாம்பு முடிமேலன்

பாம்பு பூண் பாம்பு தலைமேலது

பாம்பு சிறை தலையன்

பாம்பு, படிமதம் சாய்ந்தோய்! பசும்பூணவை

கொடிமேல் இருந்தவன் தாக்கிரை யதுபாம்பு

பொருளுரை:

நஞ்சைக் கொண்ட பாம்பின் உடலையும் உயிரையும் ஒருங்கே உண்ணும் கருடன் அக் கொடியின்கண் விளங்குவான். அவனது இடையிற் கச்சாகக் கட்டப்பெற்றிருப்ப தும் ஒரு பாம்பு. . அவன் தோள்வளையாக விளங்குவதும் பாம்பு. அவன் முடிமேல் விளங்கும் தலைமாலையும்!பாம்புகளால் ஆயது. பிற அணிகலன்களும் யாவும் பாம்புகளே! அவன் தலைமேலாக விளங்கும் சூட்டு என்னும் அணியும் பாம்பு. அவன் சிறகுகளின்: மீது அணிந்திருக்கும் அணிகளும் பாம்புகள். பாம்பினது பகையின் செருக்கை அழித்தோனே! பசிய பொன் அணிகலன் அணிந்த நின் இருக்கையாகும் கருடன், தனக்கு. இரையாகத் கொள்ளுவதும் பாம்பே யாகும்.

அருஞ்சொற்பொருள் :

விடம் - நஞ்சு. உவணம் - கருடன். வலந்தது - கட்டியிருப்பது, மடி - வயிறு. தொடி - தோள்வளை. படிமதம் - பகையாகிய. வலிமை. பசும்பூண் - பசும் பொன்னாலாகிய அணிகள்.

வேறு வடிவு இல்லையே!

பாடல் :

கடுநவை அணங்கும் கடும்பும், நல்கலும்.

கொடுமையும் செம்மையும் வெம்மையும் தண்மையும்

உள்வழி உடையை இல்வழி இலையே்

போற்றோர் உயிரினும் போற்றுநர் உயிரினும்

மாற்றேம் ஆற்றல் இலையே் நினக்கு

மாற்றோரும் இலர், கேளிரும் இலர் எனும்

வேற்றுமை இன்று அது போற்றுநர்ப் பெறினே்

மனக்கோள். நினக்கென வடிவுவே றிலையே

பொருளுரை:

மிகத் துன்பமுண்டாகுமாறு தாக்கி வருத் தும் சினமும், எளியோர்க்கு அருளும் இரக்கமும், கொடுமையும், செம்மையும், . வெம்மையும், தண்மையுமாகிய இக்குணங்களை உடையவரிடத்தே, நீயும் அவ்வக் குணங்களை உடையோனாக விளங்குவாய். இவை யாதும் அற்றவரிடத்து, நீயும் அவ்வாறே யாதும் அற்றவனாக விளங்குவாய். நின்னைப் போற்றாத பகைவரின் உயிரை நீ போக்குதல் என்பதும் இல்லை. நின்னைப் போற்றும் அன்பரின் உயிரை நீ காப்பதென்பதும் இல்லை. .ஏனெனில், நினக்கு மாற்றார் என்பாரும் யாருமிலர் நினக்கு உறவானவரும் யாரும் இலர். யாவரிடத்தும் ஒரு தன்மைத்தாகவே விளங்கும் நின்னிடத்து அவ்வேற்றுமையும் இல்லை. இந்த உண்மையை உணர்ந்து நின்னைப் போற்றும் அடியார்கள், நின்னை நினைத் தலைப் பெற்றால், அவரவர் மனக்கோட்பாட்டின்படியே, அவ்வவ் வடிவாக நின்று, நீயும் தோற்றமளித்து விளங்குவாய். இ∴தன்றி, குறிப்பிட்டதும். வேறாக யாதுமில்லை.

அருஞ்சொற்பொருள் :

கடு நவை - துன்பம். அணங்கு - தாங்கி வருத்தும் தன்மை. கடும்பு - சினம். நல்கல் - அருளல். கொடுமை - கொடியவே பிறர் மாட்டுச் செய்தலாம் தன்மை. செம்மை - செவ்வியவே செய்துஒழுகுதல். வெம்மை - அழிக்கும் தன்மை. தண்மை - அருளும் தன்மை. மனக்கோள் - மனத்துக்கண் “ கொள்ளும் கொள்கை, அதன் சார்பான, வடிவு. ஏம் - காத்தல்

### அருமறைப் பொருளே!

பாடல் :

கோளிருள் இருக்கை ஆய்மணி மேனி
நக்கலர் துழா அய் நாறிணர்க் கண்ணியை!
பொன்னின் தோன்றிய புனைமறு மார்ப!
நின்னின் தோன்றிய நிரையிதழ்த் தாமரை
அன்ன நாட்டத்து அளப்பரி யவை!
நின்னின் சிறந்த தாளிணை யவை!
நின்னின் சிறந்த நிறை கடவுளவை!
அன்னோர் அல்லா வேறும் உள அவை
நின்னோர் அன்னோர் அந்தணர் அருமறை

பொருளுரை:

அள்ளிக் கொள்ளலாம்படியான செறிந்த இருளுக்கு இருப்பிடம் போல்வதான, அழகிய நீலமணியை நிகர்த்த மேனி வண்ணத்தை உடையோனே! அதன்கண். மலர்ந்த பூங்கொத்துக்களோடுங் கூடிய துளசியினது மனங்கமழுகின்ற கண்ணியைச் சூடியுள்ளோனே! பொன்னைப்போலப் பொலிவுடன் தோன்றுகின்ற, திருமகளாகிய அழகிய மன கொண்ட மார்பை உடையோனே நின்னிடத்திருந்து தோன்றிய அடுக்கமைந்த இதழ்களைக் கொண்ட தாமரை மலரினைப்போன்று விளங்கும் சிவந்த கண்களோடு அளப்பரிய சிரிப்பினையும் உடையோனே! நின்னைக் காட்டினும் சிறப்புடையன நின் திருவடிகள். நின்னிடத்தே சிறந்து விளங்கும் நிறைந்த கடவுள் தன்மையினையும் நீ உடையை! அக்கடவள் தன்மைகளே அல்லாமலும், வேறான சிறந்த தன்மைகளும் நின்னிடத்தே பலவாக உள்ளன. அவை: எல்லாம் நின்னையொத்த தேவவிருடிகள் மட்டுமே உணரும் அருமறைப் பொருள்களாகும்.

சொற்பொருள் :

கோள் - கொள்ளல், மணி - நீலமணி. நக்கலர் - அலர்ந்த பூவிதழ். இணர் – பூங்கொத்து, பொன்னின் பொன்னையொப்ப- அழகெலாம் ஒருருக் கொண்ட. தென்னுமாறு. நிரையிதழ் - அடுக்கிய இதழ். கடவுள். - கடவுள் தன்மை.

### எல்லாம் நீயே!

பாடல் :

அழல்புரை குழைகொழு நிழல்தரும் பலசினை
ஆலமும். கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக்கு அறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்!
எவ்வயி னோயும் நீயே! நின் ஆர்வலர் ு-
தொழுதகை அமைதியின் அமர்ந்தோயும் நீயே

அவரவர் ஏவ லாளனும் நீயே

அவரவர் செய்பொருட்கு அரணமும் நீயே!

பொருளுரை:

செந்தீயையொத்த தழைகளையும், கொழுவிய நிழலைத்: தரும் பல கிளைகளையும் கொண்ட ஆலமரமும், கடப்ப மரமும், நல்ல ஆற்றிடைக் குறைகளும், காற்று வழங்குதலைத் தடுக்கும் " தன்மையுடைய குன்றங்களும், பிறவிடங்களுமாகிய அவ்வவ் விடங்களிற் பொருந்திய வேறுவேறான பெயர்களைக் கொண் டோனே! அவ்விடங்களன்றியும், மற்றையவான எவ்விடத்தினும் விளங்குவோனும். நீயே ஆவாய். நின் அன்பர்கள் நின்னைத் தொழுகின்ற அவ்வத்தன்மைகளின் அமைதிகளோடு அவ்வவ்வாறே பொருந்தியிருப்பவனும் நீயே யாவாய். அவரவர்களால் தேடப்படுகின்ற அறம் பொருள் இன்பம் வீடாகிய, மெய்ப்பொருள்களுக்குப் பாதுகாவலனாக விளங்குவோனும் நீயே.யாவாய். :

அருஞ்சொற்பொருள்:

அழல் - செந்தீ குழை-தழை.சினை-கிளை. ஆற்றுநடு - ஆற்றிடைக் குறை ˙ ஆற்று நடுவிலே விளங்கும் மேடு,கால் - காற்று. ஆர்வலர்: - அன்பர். தொழுதகை அமைதி - ..தொழுது போற்றும் தகைமையாகிய அமைதி தொழும் கையிடத்தே பொருந்திருயிருக்கும் தன்மையுமாம். அரணம் - காவல்.

## செவ்வேள் (5)

பாடியவர் : கடுவன் இளவெயினனார்

பண் வகுத்தவர் : கண்ணனாகனார்,

பண் : பாலையாழ்

## வெற்றி வேல்

பாடல் :

பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்குச்

சேயுயர் பிணிமுகம் ஊர்ந்தமர் உழக்கித்:

தீயழல் துவைப்பத் திரியவிட் டெறிந்து

நோயுடை நுடங்குளூர் மாமுதல் தடிந்து

வென்றியின் மக்களுள் ஒருமையொடு பெயரிய.5

கொன்றுணல் அஞ்சாக் கொடுவினைக் கொல்தகை

மாய அவுணர் மருங்கறத் தபுத்த வேல்

பொருளுரை:

மாயப் போரில் வல்லவர் அவுணர். அவர்கள் ஆற்றிய - போர்களுள் எல்லாம் அவர்களே வெற்றி பெற்று வந்தனர். . அதனால், “வென்றியின் மக்கள்” - வெற்றியே பெறுகின்ற - புண்ணியப் பயனைக்கொண்ட மக்கள் - என்று பலரும் அவரைக் கருதினர். ஒன்றுபட்டு அவரைப் போற்றியும் வந்தனர். இத்தகைய - பெரும் புகழைப் பெற்றவர் அவுணர்கள். இவர்கள் எவ்வகைப்பட்ட உயிரையும் கொன்று போக்கி, அதனுடலைத் தின்பதற்குத் துணிந்தவர்கள் எத்தகையவொரு கொடிய செயலையும் பழிபாவத்திற்கு

அஞ்சாராய்ச் செய்பவர்கள் எதிர்த்தாரைக் கொல்லும் பண்பினர்கள் அவர்களை மன்னிக்கும் இயல்பற்றவர்கள்.-இத்தகையோராகிய அவுணர் தம் சுற்றமே அற்றுப்போகும்படியாக, முற்றவும் அவர்களை அழித்த - திறப்புடையது நின்கை வேல்! பரந்ததும், குளிர்ச்சியுடைய துமான, கடலிடத்தே சென்று, அவுணர் கோமானாகிய சூரன் நினக்கஞ்சி ஒளிந்து கொண்டான். - அவனைக் கொல்லக் கருதிய நீதான், மிகவுயர்ந்த பிணிமுகம் என்றும் போர்க் களிற்றினை ஊர்ந்தவனாகப், பாரெல்லாம் துகள்படும்படியாக, அவனை நோக்கிச் சென்றனை. அவனோடு கடும்போர் செய்தனை. தீயின் கொழுநது அக் கடலையே வற்றச் செய்தல் அழுமாறு, நின் வேலைச் அழத் ஒலியோடு விட்டெறிந்தனை. அனைவருக்கும் துன்பத்தையே செய்தலை .இயல்பாகக் கொண்ட சூரன், தன் அச்சந்தரும் உருக்கரந்து, அசையும் மாமரமாகி நின்றான். அம் மாமரம் வேரோடும் வெட்டுப்பட்டு வீழ்ந்தொழியும்படியாக, பலன் வேலினை அந்நாளிலே எறிந்தனை!

அருஞ்சொற்பொருள் :

பாய் - பரந்த.பனி - குளிர்ந்த. புக்கு - புகுந்து சென்று. சேயுயர் - மிகவுயர்ந்த. பிணிமுகம் - முருகனூர்ந்த களிற்றின் பெயர் பகைவர்க்கு .நோய் செய்யும் முகத்தோற்றத்தைக் கொண்டது என்பது கருத்து. துவைப்ப : ஒலிக்க: திரிய - சுழன்று செல்லுமாறு. “தீயழல் துவைப்ப“ என்றது. தீக் கொழுந்து: விட்டுவிட்டு ஒளி செய்தபடி, வேல் கடுவிரைவுடன் சென்றது என்பதாம். நோய் -. துன்பம். நுடங்கல் - அசைதல்.

வரை உடைத்தோய்!

பாடல் :

நாவலந் தண்பொழில் வடபொமில். ஆயிடைக்:

குருகொடு பெயர்பெற்ற. மால்வரை யுடைத்து

மலையாற்றுப் படுத்த மூவிரு கயந்தலை!

மூவிரு கயந்தலை,முந்நான்கு முழவுத் தோள்

ஞாயிற்றேர் நிறத்தகை நளினத்துப் பிறவியை!

பொருளுரை:

நாவலந்தீவு. என்னும் பெயரைக். கொண்டது, குளிர்ந்த சோலைகளைக் கொண்டது, இந்நிலப்பகுதி: இதன் வடக்கின் கண்ணதாகிய பொழிலொன்றினிடத்தே, “கிரவுஞ்சம்“ என்கின்ற பறவையின் பெயரினைப் பெற்றதாக . உயர்ந்து நின்றது ஒரு பெருமலை. அப் பெருமலையினை உடைத்து, அதனிடையே. வழியினை அமைத்த ஆறுமுகங்களை உடையோனே! மென்மை கொண்ட ஆறு தலைகளையும், முழவனைய பன்னிரு தோள்களையும், இளஞாயிற்றின் செவ்விய அழகைப் போன்ற நிறவழகையும் கொண்டோனே! தாமரை மலரிடத்தே பிறந்தே: பிறப்பினைக் கொண்ட பெருமானே!

சொற்பொருள்

நாவல் - நாவன்மரம். குருகு – கிரவுஞ்சம், நளினம் - தாமரை. :

எல்லாம் நின் ஆணையே!

பாடல் :

காஅய் கடவுள் சேஎய்! செவ்வேள்!

சால்வ! தலைவ! எனப் பேஎ விழவினுள்

வேலவன் ஏத்தும் வெறியும்: உளவே

அவை. வாயும் அல்ல பொய்யும் அல்ல

நீயே வரம்பிற்றில் உலகம் ஆதலின்

சிறப்போய்! சிறப்பின்றிப் பெயர்குவை

சிறப்பினுள் உயர்பாகலும்

பிறப்பினுள் இழிபாகலும்

ஏனோர் நின் வலத்தினதே

பொருளுரை:

பெருமானே! ஊழிக்காலத்தின் முடிவிலே அனைத்தையும் அழித்துத் தானே தனியனாக நிற்கும் கடவுளாகிய சிவபெரு மானின் குமாரனே! செம்மை வண்ணத்தோடு அனைவராலும் விரும்பப்படும் சிறப்பைக் கொண்ட செவ்வேளே! சிறந்த குணங்களின் உருவாக விளங்குவோனே! எம் தலைவனே! எனவெல்லாம் நின்னை அழைப்போனாகிய பூசாரியானவன், நின்னைப் போற்றித் துதித்து அழைத்து இயற்றும் வெறியயர் களத்துள், அச்சத்தை உண்டாகும் அவ் துவ வ ஆம நீ அவன்பால் தோன்றிவருதலும் உண்மையே! அவ் வெறியயர்தலும், அதன்கண் நீ தோன்றுதலும் அகிய இவையெல்லாம் உண்மையானவையும் அல்ல, ஏனெனில் நீதான் அவற்றைக் கடந்து எங்கும் விளங்கும் பரம்பொருள் ஆதலின். ஆனால், நீதான் அங்கும் தோன்றி அவர்க்கும் அருளுதலின், அவைதாம் பொய்யானவையும் அல்ல. எல்லையற்று விளங்கும் இவவுலகினுள் காணப்படுவன அனைத்தும் நீயே. அதலின், அவ்வேலனின் பாட்டால் நீ சிறப்படைவாய் எனினும், அதுதான் நின் : உண்மைப் புகழுக்கு மிகவும் குறைப்பட்டதே யாகலின், அப்பெருஞ் சிறப்பினின்றும் நீ நீங்கிவிடுவாய்! நல்வினைச் சிறப்பால் உயர்நிலை பெறுதலும், தீவினை மிகுதியால் இழிபிறப்பினை அடைதலும் என்பது பிறர்க்கெல்லாம் உளதாம். அவராகிய அப் பிறரும் நின் அணைக் கேற்பவே அவற்றை அடைகின்றனர். அகவே, நீதான் மிக்க சிறப்பினை உடையை என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

காஅய்தல் - கோபித்தல் காஅய்கடவுள் சிவபிரான். செவ்வேள் -முருகன் சிவந்த வேள். கருநிறத்து வேள், காமன், அவன் மால்மகள். சால்வ - சால்புடையோய். பேஎ விழவு . - அச்சந்தரும் விழுவுக்களம்.

உருவு திரித்தோன்!

பாடல் :

ஆதி யந்தணன் அறிந்துபரி கொளுவ,

வேத மாபூண் வையத் தேர் ஊர்ந்து

நாகம் நாணா, மலை வில்லாக,

மூவகை ஆரெயில். ஓரழல் அம்பின் மயஇ

மாதிரம் அழல வெய்து, அமரர் வேள்விப்

பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்

உமையோடு புணர்ந்த காம வதுவையுள்,

அமையாப் புணர்ச்சி அமைய, நெற்றி

இமையா நாட்டத்து ஒருவரம் கொண்டு

விலங்கென விண்ணோர் வேள்வி முதல்வன்

விரிகதிர் மணிப்பூண் அவற்குத்தான் ஈத்தது

அரிதென மாற்றான் வாய்மையன் ஆதலில்.

எரிகனன் நானாக் குடாரிகொண் டவன்உருவு

திரிந்திட் டோனிவ் வுலகேழும் மருளக்

பொருளுரை:

ஆதி அந்தணனாகிய பிரமதேவன் செலுத்தும் முறை யறிந்தோனாய்ச் செலுத்த, வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பெற்ற வையகமாகிய தேரிலேறிச் சென்றான் சிவபிரான். மேரு மலையினை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பினை நாணாகவும் கொண்ட. வில்லினை, அவன் கைக்கொண்டான். பொன் வெள்ளி ”இரும்பு என்னும் மூவகைப்பட்ட உலோகங்களால் அமைந்த கடத்தற்கரிய திரிபுரக் கோட்டைகளைக் குறித்து ஓர் அழல் அம்பினை ஏவினான். திக்கெல்லாம் பற்றி எரியச் சென்ற அவ்வம்பினால், அக் கோட்டைகள் மூன்றும் எரிந்து அழிந்தன. அவன் வெற்றியைப் போற்ற நினைத்தனர் அமரர்கள். அவனைக் குறித்த வேள்வியை அவர்கள் செய்தனர். அதன் கண், அவர்கள் அளித்த அவிர்ப்பாகத்தை உண்ட சிவபிரான் தன் சீற்றம் தணிந்தான். பசுமையான சண்களைக் கொண்டவனானான். உமையம்மையை மணந்து, அவளோடுங் கூடிக கலந்த இன்பக் கலவியுள், அடங்குதலற்ற புணர்ச்சியுள் பொருந்திக் களிப்பவனும் ஆயினான். ஒளிபரப்பும் மணிகள் பதித்த அணிகளைப் பூண்டோனும், தேவர்கள் செய்த வேள்விக்கு முதல்வனாகத் திகழ்ந்தோனுமாகிய தேவர் கோமானான இந்திரன், இமைத்தலற்ற நெற்றிக்கண்ணைக் கொண்டோனான அச் சிவபிரானிடம் உங்கள் கூட்டத்தால் உண்டாகும் கருவைச் சிதைக்க வேண்டும்” என்கின்ற ஒரு வரத்தை வேண்டிப் பெற்றான். அவ் விந்திரனுக்குத் தான் தந்தருளிய வரத்தினை மாற்றுதற்கு அரிது எனத், தான் வாய்மையாளன் அதலினாலே, சிவபிரான் சிந்தித்தான். நெருப்புக் கனன்று தணியாதே கொழுந்துவிட்டு எரியும் தன் மழுப்படை யைக் கொண்டு, அக் கருவின் உருவத்தை, மூவேழுலகங்களும் மருட்சி கொள்ளும்படியாகச் சிதைத்து, அழித்து விட்டான்.

அருஞ்சொற்பொருள் :

ஆதி அந்தணன் - பிரமன் அந்தணர் ப மரபுக்கு இவனே ஆதியாதலின், இவ்வா று பெயர் பெற்றனன். பறி -- குதிரை. கொளுவ - செலுத்த. நாகம் - பாம்பு இது வாசுகி. மலை முளிதல் - வெந்தழிதல். மாதிரம் - திசை. பாகம் அவிர்ப்பாகம். வதுவை - மணம். விலங்கு - சிதைப்பர்யாக. குடாரி - மழு. உருவு - கர. திரித்தல் - ண் சிதைத்தல். மருள வியப்பால் மயங்க.

மாதவர் மனைவியர் பெற்றனர்!

பாடல் :

எடப்பெத்துக் கொண்டோர் கழிந்தசேய் யாக்கை

நொசிப்பின் ஏழுறு முனிவர் நனியுணர்ந்து

வசித்ததைக் கண்ட மாக மாதவர்

மனைவியர் நிறைவயின் வசிதடி னலிப்பின்

சாலார், தானே தரிக்கென அவரவி

உடன்பெய் தோரே அழல்வேட்டு அவ்வவித்

தடவுநிமிர் முத்தீப் பேணியமன் எச்சில்

வடவயின் விளங்கால்“உறையெழு மகளிருள்”

கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய

அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றனர் .

மறுவறு கற்பின் மாதவர் மனைவியர்

நிறைவயின் வழாஅது நிற் சூலினரே.

நிவந்தோங்கு இமையத்து நீலப் பரு களைய்

பயந்தோர் என்ப பதுமத்துப் பாயல்

பொருளுரை:

சிதைவுற்று வெளிப்போந்த அச் சிவ கருவை ஏழு முனிவர்களும் பெற்றுக் கொண்டனர். சிவகுமரனின் உடலின் சிதைவுற்ற “ கூறுகள் அவை என்பதனை தம் நுண்ணிய ஞானத்தால் அவர்கள் அறிந்தனர். வெட்டுப்பட்டுக்கிடந்த அதனைக்கண்ட அந்தப் பெருந்தவமுனிவர்கள், அவற்றைத் தம் மனைவியர் அப்படியே தம்முள் ஏற்று வளர்த்தனராயின், தம் கற்புநெறியில் நிறைவோடு திகழார் எனக் கருதினர். அதனால், அவர் யாகத்தியை விரும்பி வளர்த்து, அத்த தானே அதனைத் தரிப்பதாக என, அதனுள் அவியோடு.சேர்த்து இட்டனர். அங்ஙனம் அவியோடு சேர்த்து இடப்பட்ட அக்கருச்சிதைவும், யாககுண்டத்துள் ஓங்கி எழுந்த-அம் முத்தீக்களாலும் உண்ணப்பட்டு, எச்சிலாக எஞ்சி நின்றது. வானத்து வடதிசைக்கண் வீற்றிருக்கின்ற ஏழு கற்புடை மகளிருள்ளும், கடவுள் தன்மைபெற்ற ஒப்பற்ற நட்சத்திரமாகிய அருந்ததி ஒருத்திமட்டும் நீங்கலாகக், கார்த்திகைப் பெண்கள் என விளங்கும் அறுவரும், அக் கருத்துண்டுகளைப் அசித்தாந்தாம் அந்நிலையே உண்டனர். குற்றமற்ற கற்பினை உடையவர், மகா தவசிகளின். மனைவியராகிய. அவர்கள். அவர்கள் தம் நிறையடைமை யினின்றும் வழுவாதவராக, அச் சிவகருவைத் தம் தாங்கினர். மிகவும். உயர்ந்து விளங்குவது இமயம், அதனக உள்ளதான நீலநிறமான பசிய சுனையிடத்தே மலர்ந்திருந்த தாமரை மலர்களாகிய படுக்கைகளில், அவர்கள் தனித்தனியாக ஆறு குழந்தைகளைப் பெற்றனர்.

சொற்பொருள் :

நொப்பு – நுண்ணுணர்வு. நிறை - கற்பு. தடவு - யாககுண்டம். முத்தீ - ஆகவனயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி. ஆல் - கார்த்திகை மகளிர் ஆரல் ”இடைக்குறைந்து நின்றது, சாலினி - அருந்ததி. நீலம் - நீலநிறம் நீலநிறத் தருப்பைப்,புல்லும் ஆம்.

ஒப்பற்றவனே வாழ்க!

பாடல் :

பெரும்பெயர் முருக! நின் பயந்த ஞான்றே

அரிதமர் சிறப்பின் அமரர் செல்வன்

எரியுமிழ் வச்சிரங்கொண் டிகந்துவ்ந் தெறிந்தென

அறுவேறு துணியும் அறுவ ராகி

ஒருவனை வாழி! ஓங்குவிறல் சேஎய்

பொருளுரை:

பெரும் புகழையுடைய முருகப் பெருமானே! நின்னை “அவர்கள் அவ்வாறு பெற்றெடுத்த அந்நாளிலேயே, அரிதாகப் பொருந்திய சிறப்பினை உடையோனாகிய தேவர் கோமான், தன் நிலையைக் .கடந்துவந்து, அக் குழந்தைகளைத் தாக்கினான். நெருப்பைக் கக்கும் வச்சிரப்படையைக் கொண்டு, ஆறாக இருந்த நின்னைத் தாக்கினான். வேறாகத் துண்டுபட்ட ஆது துண்டுகளும் அறுவராகத் தோன்றிப், பின் அனைத்தும் ஒன்று . பட்டு ஒருவனாக நீயும் விளங்கினை. அத்தகைய சிவகுமாரனே! நீ வாழ்க! உயர்ந்த வெற்றியை உடைய செம்மேனியனே, நீ வாழ்க!

அருஞ்சொற்பொருள் :

அமர் - பொருந்திய. வச்சிரம் - வச்சிரப். படை. துணி - துண்டு. விறல் - வெற்றி

அனைவரும் கொடுத்தனர்!

பாடல் :

ஆரா உடம்பின்நீ அமர்ந்து விளை யாடிய

போரால் வறுங்கைக்குப் புரந்தரன் உடைய

அல்லலில் அனலன் தன்மெய்யின் பிரித்துச்

செல்வ வாரணம் கொடுத்தோன் வானத்து

வளங்கெழு செல்வன்தன் மெய்யின் பிரித்துத்

திகழ்பொறிப் பீலி யணிமயில் கொடுத்தோன்

திருந்துகோல் ஞமன்தன் மெய்யின் பிரிவித்து

இருங்கண் வெள்யாட்டு எழில்மறி கொடுத்தோன்

பொருளுரை:

வளர்ச்சி பெறாத உடம்பினோடு நீ விருப்பமுடன் விளை யாட்டாகச் செய்த போரினிடத்தே, நின் வெறுங்கை களின் வலிமைக்கே எதிர்நிற்க இயலாதவனாக, இந்திரன் தோற்றான். . அவன் தோல்வியுற்றதும், தேவர்கள் நின்னைப் கரன் நினக்குத் திறையாகப் பலவற்றையும் வழங்கினர். நின்னால் துன்புறாத போதினும், தீக்கடவுளானவன் தன் உடம்பினின்றும் ஒரு கூற்றைப் பிரித்தெடுத்து, அதனைச் சிறந்த - கோழிச்சேவலாக்கி நினக்குரிய கொடியாகத் திகழுமாறு தந்தனன். வானத்துச் செல்வங்களுக்கு உரியோனாகிய இந்திரன், தன்னுடம்பின் ஒரு கூற்றைப் பிரித்துப் புள்ளிகளோடு விளங்கும் தோகை கொண்ட அழகிய மயிலாக நினக்குரிய ஊர்தியாகத் தந்தான். திருத்தமான செங்கோன்மையை உடைய்வனான எமன், தன் உடம்பினின்றும். ஒரு கூற்றைப். பிரியச்செய்து, அதனைக் கரிய கண்களை உடைய வெள்ளாட்டுக் கட் நினக்குக் கொடுத்தான்

அருஞ்சொற்பொருள் :

ஆராஉடம்பு திடல் குழந்தைப் பருவத்து உடல். ஆர்தல் - நிறைதல். புரந்தரன் - இந்திரன் தேவரைக் காப்பவன். அல்லல் - துன்பம். வாரணம் - கோழிச் சேவல். பொறி.- புள்ளி. ஞமன் - எமன்.

எல்லைகடந்த புகழோய்!

பாடல் :

ஆஅங்கு, அவரும். பிறரும் அமர்ந்துபடை அளித்த

மறியும் மஞ்ளையும் வாரணச் சேவலும்

பொறிவரிச் சாபமும் மானும் வாளும் 65.

செறியிலை ஈட்டியும் குடாரியும் கணிச்சியும்

தெறுகதிர்க் கனலியும் மாலையும் மணியும்

வேறுவேறு உருவின்இவ் வாறிரு கைக்கொண்டு

மறுவில் துறக்கத்து அமரர் செல்வன்றன். .

பொறிவரிக் கொட்டையொடு புகழ்வரம்பு இகந்தோய் 70

பொருளுரை:

அவ்வாறாக, முற்கூறிய தீக்கடவுள் அகியோரும், மற்றைத் தேவரும் விருப்போடுங் கூடியவராகப் படைகளை அளித்தனர். ஆட்டுக்குட்டியும், மயிலும், கோழிச்சேவலும், முத்திரையோடுங் கூடியதான கட்டமைந்த வில்லும், தோமரமும், வாளும், தழைமாலை அணியப்பெற்ற ஈட்டியும், குடாரியும், கணிச்சி என்னும் மழுவும், எரிக்கும் கதிர்களைச் சொரியும் கனலியும், வெவ்வேறு உருவினவாகிய l இவற்றை நின் பன்னிருகைகளிலும் நீயும் ஏந்திக் கொண்டனை. குற்றமற்ற தேவருலகுக்கு உரியோனாகிய இந்திரனது புகழின் எல்லையையும், தாமரைக் கொட்டையை விட்டு நீங்காதே கிடந்த அந்தக் குழவிப் பருவத்திலேயே கடந்து நின்ற புகழுடையோனே!

அருஞ்சொற்பொருள் :

அமர்ந்து - விரும்பி. சாபம் - வில். மரன் - தோமரம். குடாரி - கோடரியும் ஆம்.

### சேரார் சிலர்

பாடல் :

நின்குணம் எதிர்கொண்டோர் அறங்கொண்டோர் அல்லதை

மன்குணம் உடையோர் மாதவர் வணங்கியோர் அல்லதை

செறுதீ நெஞ்சத்துச் சினம் நீடி னரம்

சேரா வறத்துச் சீரி லோரும்

அழிதவப் படிவத்து அயரி யோரும்

மதுபிறப்பு இல்லெனும் மடவோரும் சேரார்

பொருளுரை:

நின் குணமாகிய அருளைத் தம்பால் ஏற்றிருப்போரும், நின் பண்பாகிய அறத்தைத் தாமும் மேற்கொண்டோரும், நிலைபெற்ற நற்குணங்களை உடையோரும், பெருந்தவத்தினை உடையோரும், நின்னை வணங்கி நின்னை, வந்து.அடைபவர் ஆவர். இவரன்றி, உயிர்களைக் கொல்லும். சினம் கொடிய நெஞ்சத்திடத்தே நீடித்திருக்கப் பெற்றோரும், அறநெறியின்கண் பொருந்தாது நிற்கும் சீர்மையில்லாதவரும் அழிந்த தவவடி,வோடு“ நின்னை மறந்தவர்களும், மறுபிறப்பு என்பதே இல்லையென்று வாதிடும் அறிவற்றோரும் ஆகிய இவர்கள், அடையவே மாட்டார்கள்.

அருஞ்சொற்பொருள் :

நின் குணம் - நின் குணமாகிய அருளுதல். அறம் - அறநெறி. செறுதீ - கொல்லும் தீத்தன்மை. சீர் - சிறப்பு. அயரியோர் - மறந்தோர்.

### யாம் இரப்பவை

பாடல் :

நின்னிழல் அன்னோர் அல்லது இன்னோர்

சேர்வார்: ஆதலின், யாஅம் இரப்பவை

பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்

அருளும் அன்பும் அறனும் மூன்றும்

உருளிணாக் கடம்பின் ஒலிதா ரோயே!

பொருளுரை:

நின் திருவடி. நீழலை முற்கூறிய தீயோரை அல்லாரான பிறர் சேர்பவராவர். அதலினாலே, உருளாகப் பூக்கும் கொத்துக் களைக் கொண்ட கடம்பினது தழைத்த மாலையினை அணிந் தோனே! யாம் நின்னிடம் இரப்பவை, பொருளும், பொன்னும், போகமும் அல்ல. அருளும், அன்பும், அறனுமாகிய மூன்றையுமே யாம் இரக்கின்றோம். அவற்றைத் தந்தருளி “ மையும் காப்பாயாக!

அருஞ்சொற்பொருள்:

உருள் - உருண்டைத் தன்மை. ஓலித்தல் - தீழைத்தல்.

வையை (7)

பாடியவர்: மையோடக் கோவனார்

பண் வகுத்தவர்: பித்தாமத்தர்

பண் : பாலையாழ்.

வந்தது புனல்!

பாடல் :

திரையிரும் பனிப்பௌவம் செவ்விதா அறமுகந்து
உரவுரும் உடன்றார்ப்ப ஊர்பொறை கொள்ளாது
கரையடை குளமெனக் கழன்றுவான் வயிறழிபு
வரைவரை தொடுத்த வயங்குவெள் ளருவி :
இரவிருள் பகலாக யிடமரிது செலவென்னாது ..
வலனிரங்கு முரசின் தென்னவர் உள்ளிய .
நிலனுற நிமிர்தானை நெடுநிறை நிவப்பன்ன
பெயலால் பொலிந்து பெரும்புனல் பலநந்த
நலனந்த நாடணி நந்தப் புலனந்த
வந்தன்று வையைப்புனல்

பொருளுரை:

அலைகளைக் கொண்டதும் பெரியதுமான குளிர்ச்சி கொண்ட கடலினை, முறையாக முற்றவும் முகந்து கொண்டதாக, வலிய இடியேறுகள் சினத்தோடு முழங்கத், தம்மேல் ஏறியுள்ள சுமையைத் தாங்கமாட்டாவான மேகங்கள், கரையுடைந்த குளத்து நீரையொப்பத் தம் கட்டுக்குலைந்த வாய், தம் வயிறு கிழியப் பெற்றவாய்ப், பெருமழையினைப். பொழியலாயின. இவ்வாறு வீழ்ந்த மழை நீரால் மலைப்பகுதிகள் எல்லாம் விளங்கும் வெள்ளிய அருவிகளைத் தொடுத்தாற்போல. விளங்கின. இரவின் இருட்போதிலும் பகற் போதிலும், செல்லுதற்கான இடம் போதற்கரிது என்று கருதாவாய், அவ்வருவி நீர் சென்று பாய்ந்து சென்றது. வெற்றி வெற்றியென: முழங்கும் முரசத்தைக் கொண்ட வரான பாண்டியர். பகைநாட்டைக் கொள்ளக் கருதிய செயலைச் செய்து முடிப்பதற்கு, நிமிர்ந்து செல்லும் படை வரிசைகளது .. தோற்றத்தைப். போன்று, சமநிலத்தை அடைந்து செல்லும் மழைநீரின் தோற்றமும் விளங்கியது. இவ்வாறு வீழ்ந்த . புதுமழையினாலே நிலப்பகுதி அழகுபெற்றது. பெருகிய நீர்த் தேக்கங்கள் பலவும் பெருக்கத்தை அடைந்தன. நாட்டிலே நன்மை. உண்டாகுமாறு, நாட்டுப் பகுதிகளில் எங்கணும் அழகும் வளமும் பெருகின. வயற்பகுதிகளுள் உழவரின் முயற்சிகள் எழுந்தன..இவ்வாறு பலப்பல எழுச்சிகளையும் ஏற்படுத்தியபடி, வந்த மழை வெள்ளமானது, வையையாற்றினும் புதுப்புனலாகப் பெருகி வந்தது.

அருஞ்சொற்பொருள் :

இரும்பனிப் பௌவம் - பெரிய குளிர்ந்த . கடல் கரிய குளிர்ந்த கடலும் ஆம். செவ்விதா - முறையாக. உரவு - வலிமை. உடன்று - சினந்து. கழன்று - பொறை நீங்கி..வயிறழிபு ”வயிறு கிழிந்து வீழ்வதாய். வலன் - வெற்றி. நிலன் - பகை நாடு. நிமிர்தானை -. தோல்வியே அறியாமையாற் செருக்கி நிமிர்ந்து செல்லும் படை வரிசை. நிவப்பு-- உயர்ச்சி. நந்துதல் - பெருகுதல்.

புது நாற்றம் பெற்ற புனல்

பாடல் :

நளியிருஞ் சோலை நரந்தம் தாஅய்

ஒளிர்சினை வேங்கை விரிந்ததண ருதிரலொடு

துளியி லுழந்த தோய்வருஞ் சிமைதொறும்

வளிவாங்கு சினைய மாமரம்வேர்கீண்டு

உயர்ந்துழி யுள்ளன பயம்பிடைப் பரப்பி

உழவர் களிதூங்க முழவு பணைமுரல

ஆட லறியா அரிவை போலவும்

ஊட லறியா உவகையள் போலவும்

வேண்டுவழி நடந்து தாங்குதடை பொருது.

விதியாற்றா ணாக்கிய மெய்க்கலவை போலப் 20.

பொதுநாற்ற முள்ளுட். கரந்து,புதுநாற்றம்

செய்கின்றே செம்பூம்!புனல்

பொருளுரை:

செறிந்த பெருஞ்சேரலைகளிடத் துள்ள நரந்தம் புற்களின் மீது வெள்ளம் பரவி வந்த்து. ஒளிரும் களைகளைக் கொண்ட . வேங்கை மரங்களின் மலர்ந்த பூங்கொத்துக்களின் உதிரல் களோடு கலந்து வந்தது. மழைத் துளிகளால் வருத்தமுற்ற அடைதற்கரியவான மலைமுடிகள் தோறும், காற்றால் வளைக்கப்பட்டு முறிந்தபோன மாமரங்களை வேறொடும் பெயர்த்துக்கொண்டு வந்தது. உயரமான இடங்களிலுள்ள பலவற்றையும், பள்ளமான இடங்களிலே பரப்பியபடி வந்தது! உழவர்கள் களிப்பினாலே ஆடி மகிழவும், முழவுகளும் பறைகளும் ஒலிக்கவுமாகப் புதுப்புனல் விழாப் பொலிவோடு வந்தது. அடற்கலையை முறைப்படத். தெரியாதவளான. ஓர் அரிவையாள் தாறுமாறாக அடிவருவ்தைப் போலவும், ஊடற்கலையினை: உணர்ந்தறியாதாளான ஒரு பெண், உவகை மிக்காளாய்ச் செருக்கோடு செல்வதுபோலவும், புதுவெள்ளம் தன் போக்கிற் செருக்குடன் சென்றது. தான் விரும்பிய வழியாகச் . சென்று, தன்னைத் தடுத்த தடைகளைப் பொருதி உடைத்த படியே அது சென்றது. விதிமுறைக்கு இணங்காதவன் ஒருவன் . ஆக்கிய, உடலிற்குப் பூசுதற்குரிய

கலவைச் சாந்தினைப் போலப், பொதுவான மணமொன்றைத் தனக்குள்ளே மறைத்துக் கொண்டதாகவும், புதுமையான ஒரு மணத்தைச் செய்த படியாகவும், சிவந்த அழகிய புதுப்புனலும் வையைக்கண். பெருக்கெடுத்து வந்தது.

அருஞ்சொற்பொருள்:

நளி - செறிந்த. தன்க்ளோலல்- பெரிய சோலை இருளடர்ந்த சோலையுமாம். நரந்தம் - ஒருவகை மணங்கொண்ட புல். சிமை - மலையுச்சி. வளி - காற்று. வேர் ண்டு - வேரினைத் தோண்டிப் பறித்து. பயம்பு - பள்ளம். களி களியாட்டு. பணை - பறை. விதியாறு - செய்யும் நூல் முறைமை. - செம்பூம் புனல் - செம்மண் நிலத்துத் தோய்ந்து வருதலால் சிவப்பு நிறமும், பல மலர்களையும் தளிர்களையும் சுமந்து வருதலால் அழகையும் கொண்ட புதுப்புனல். புது நாற்றம் - புது வகையான மணம்.

பாய்புனல் பரந்தது!

பாடல் :

கவிழ்ந்த புனலிற் கயந்தண் கழுநீர்

அவிழ்ந்த மலர்மீ துற்றென ஒருசார்

மாதர் மடநல்லார் மணலின் எழுதிய 25

பாவை சினத்த தெனவழ ஒருசார்

அகவய லிளநெல் அரிகாற் சூடு

தொகுபுனல் பரந்தெனத் துடிபட ஒருசார்

பொருளுரை:

பெண்களின் கைவளைகள், ஆழிகள், தொய்யகங்கள், அணிந்துள்ள துகில்கள், மேகலைகள், காஞ்சிகள் ஆகியவற்றையும், ஆண்களின் !தோள்வளைகளையும், மற்றும் அவர்கள் அணிந்தவை அனைத்தையும் கவர்ந்து செல்லும் தன்மை கொண்டதாயும் வெள்ளம் கட்டுமீறிச் சென்றது. பகைவரை அழித்த தானையை உடையவனும், தென்னவனுமாகிய பாண்டியன் தன்னை எதிர்த்துத். தோற்றழிந்த பகைவரது நாட்டிடத்தே புகுந்த காலத்து, அங்குள்ள பல வற்றையும் கவர்ந்து கொள்வதைப்போல, வையையாறு தன்பாற் புகுந்து. நீராடுவாரின் பல. பொருட்களையும் தான் கவர்ந்து கொண்டதும் அழகுடையதாகவே விளங்கும்

அருஞ்சொற்பொருள் :

ஏமம் - காவல். துனைந்து - விரைந்து. கோதை - பெண்கள் தலைமாலை. கண்ணி - ஆடவர் தலைமாலை. தண்தார் - மார்பிடத்துக் குளிர்ந்த மாலை் இருவருக்கும் பொது. அழி - மோதிரம். வாகுவலயம் -- தோள்வளை. மாறுஅட்ட -பகையைக் கொன்றொழித்த. தானை- படை.

பெருக்கிம் வடிவு

பாடல் :

புரிந்த தகையினான் யாறாடு வாருள்

துரந்து புனல்தூவத் தூமலர்க் கண்கள்

அமைந்தன் ஆங்கண் அவரு ளொருத்தி

கைபுதைஇ யவளை

ஏக்கழுத்து நாணாற் கரும்பின் அணைமென்றோள்

போக்கிச் சிறைப்பிடித்தாள்! ஓர் பொன்னங் கொம்பு

பரிந்தவளைக் கைப்பிணை நீக்குவான் பாய்வாள் "

இரும்பீர் வடியொத்து மைவிளங்கும் கண்ணொளியாற்

செம்மைப் புதுப்புனல் சென்றிரு ளாயிற்றே

வையைப் பெருக்கு வடிவு

பொருளுரை:

அனைவரும் விரும்பத்தகுந்த குணங்களை உடையவன் பாண்டியன். அவனுக்கு உரியது வையையாறு, அவ்வாற்றுப் புதுப்புனலுள் பலரும் குதித்து ஆடி மகிழ்ந்தனர். அவர்களுள் ஒருத்தி பீச்சுங்குழலுள் நீரையேற்றி மற்றொருத்தியின் கண்களை நோக்கித் தூவினாள். தூவப்பெற்ற அந் நீரை ஏற்றபடி நின்றவளின் . தூய தாமரை மலரைப்போன்ற கண்கள், இமைத்தலின் அந்நிலையே அழைத்திருக்க அவ்விடத்துப் புனல் தூவப்பெற்ற மற்றொருத்தியோ, தன் க்ண்களைக் கையால் மூடிக்கொண்டாள். அங்ஙனம் மூடினாளைத் தோற்றாளாகக் கொண்டனர். நீரைத் தூவியவள் இறுமாப்போடு தன் கழுத்திலிருந்த பொற்கயிற்றால், குங்குமக் குழம்பால் எழுதப் பெற்ற கரும்பையுடைய மூங்கிலைப் போன்ற மென்மையான தோள்களைக் கட்டி, அவளைச் சிறைப்படுத்தினாள். அதைக் கண்ட பொற்கொம்புபோன்ற மற்றொருத்தி, அவ்வாறு சிறைப்பட்டவளுக்காக இரக்கங் கொண்டாள். அவளுடைய கைக்கட்டை நீக்குவதற்காகத் தானும் பாய்ந்து. சென்றாள். அவள் கண்கள் இரும்புவாளால் துண்டாக்கப் பெற்ற மாவடுவைப் போலவும், மையுண்ணப் பெற்றும். விளங்கின. அவளுடைய அக் கருங்கண்களின் ஒளி செந்நிறத்தோடு காணப்பெற்ற புதுப்புனலிற் பட்டது. அதனால் அப் புதுப்புனல் தன் நிறங்கெட்டுத் தானும் கருநிறத்தைக் . கொண்டதாக ஆயிற்று.

அருஞ்சொற்பொருள் :

புரிதல்- விரும்புதல். தகை- குணம். துரத்தல் - செலுத்தல். தூமலர் - தாமரை மலர், கண் .சிவந்தது நீராடியதனால் என்க. ஏக்கழுத்தல் - இறுமாத்தல். நாண் பொற்கயிறு. பரிந்து - அன்புற்று. வடி - மாவடி. வடிவு

நறா ஆர்ந்தவள் கண்

பாடல் :

விரும்பிய ஈரணி மெய்யீரந் தீரச்

சுரும்பார்க்கும் சூர்நறா ஏந்தினாள் கண்ணெய்தல்

பேர்மகிழ் செய்யும் பெருநறாப் பேணியவே

கூர்நறா ஆர்ந்தவள் கண்

பொருளுரை:

விரும்பத்தகுந்த ஈரமான அணிகளைக் கொண்ட ஈரமானது தீரும்பொருட்டு, ஒருத்தி, வண்டு மொய்க்கும் போதைகொண்ட கள்ளைத் தன் கையில் ஏந்தி நின்றாள்அவ்வேளையில்

அவள் கண்கள் கரிய நெய்தல் மலரைப்போலத் தோற்றின. அவள் பெருமகிழ்ச்சியை உண்டாக்கும் போதை மிக்க கள்ளைக் குடித்தாள். குடித்ததும், அவளுடைய கருநிறக் கண்கள், பெரிய நறவம் பூவைப்போலச் செந் நிறத்தை அடைந்தன.

அருஞ்சொற்பொருள் :

ஈரணி - ஈரமான அணிகள். சுரும்பு - வண்டு. சூர்நறா - போதைமிக்ககள். பெருநறா - பெரிய நறவம் பூ. நறவு என்றது கள்ளுக்கும் நறவம் பூவுக்கும் வந்தது.

ஊருடன் ஆடும்

பாடல் :

கண்ணியல் கண்டேத்திக் காரிகைநீர் நோக்கினை

பாணா தரித்துப் பலபாட, அப் பாட்டுப்

பேணா தொருத்தி பேதுற ஆயிடை.

என்னை வருவ தெனக்கென் றினையா

நன்ஞெமர் மார்பன் நடுக்குற, நண்ணிச்

சிகைகிடந்த-ஊடலிற் செங்கண் சேப்பூர,

வகை தொடர்ந்த ஆடலுள் நல்லவர் தம்முள்,

பகை தொடர்ந்து, கோதை பரியூஉ, சன்வெகுண்டு.

யாறாடு மேனி அணிகண்ட தன்னன்பன்

சேறாடு மேனி திருநிலத் துய்ப்பச், சிரமிதித்துத் தீர்வில

தாகச் செருவுற்றாள்! செம்புனலல்

ஊருடன் ஆடும்

பொருளுரை:

அவளுடைய கண்களின் அந்தச் வந்த இயல்பினைக் கண்ட அவள் தலைவன் அவளைப் புகழ்ந்தான். அவளுடைய அழகிய நோக்கினைப் பாட்டிலே அமைத்துப் பலவாறாகப் : பாடினான். அப் பாட்டுக்களைத் தலைவியைக் குறித்ததெனத் தெளியாத மற்றொருத்தி, தன்னைக் குறித்ததென கருதியவளாக : மயங்கினாள். அவ்விடத்தே, “எனக்கு என்ன துன்பம் வருவதாகுமோ?” என்று வருந்தினான் தலைவன். நன்றாகப் .பரந்த மார்பின “னான அவன் நடுக்கங்கொண்டான். காதலியை நெருங்கிச் சென்றான். தன் காதலனை மற்றொருத்தியை காதலுடன் நோக்கியதைக் கண்டாள் அவள். மதுப்போதையாற் சிவந்திருந்த அவள் கண்கள், ஊடற்சினத்தால் மேலும் சிவப்பேறின. முறையோடு நிகழ்ந்து கொண்டிருந்த நீர்விளையாட்டுள் கலந்துகொண்ட பெண்கள் கூட்டத்துள், தன் தலைவனைக் காதலித்து நோக்கிய . அவள்மீது பகை கொண்டாள். தன் கோதையை அறுத்துப், பெரிதும் வெகுண்டவளாக, அவன்மீது மோதினாள். அவள் சினங்கொண்டதைக் கண்ட அவன், சந்தனச்சேறு பூசிய தன் திருமேனி அழகிய நிலத்திடத்தே பொருந்துமாறு பணிந்து, .அவளை வேண்டியவனாக இரந்தான். அவளோ, அவன் ,தலைமீது தன் பாதத்தால் உதைத்தாள்

அவன் பணிந்தும் . தீர்வில்லாததான பெரும்பகையை அவள் மேற்கொண்டாள். இவையெல்லாம் செம்புனலிடத்தே ஊரவருடன் கூடி நீராடிய காலத்து நிகழ்ந்தனவே யாம்.

அருஞ்சொற்பொருள் :

கண்ணியல் - கண்ணின் அழகு. காரிகை நீர் -- அழகுத் தன்மை. பண் - பாட்டு பண்ணமைந்தது. பேணாது அது தன்னைக் குறித்ததன்றென்று தெளிந்து அறியாது. சிகை குறை. பரியூஉ - அறுத்து. சேறு - சந்தனக் குழம்பு.

இன்புற அருள்க

பாடல் :

புரிநரம் பின்கொளைப் புகல்பாலை யேழும்

எழூப்புணர் யாழும்.இசையும். கூடக்

குழலளந்து நிற்ப முழவெழுந் தார்ப்ப:

மன்மகளிர் சென்னியர் ஆடல் தொடங்கப்

பொருதிழி வார்புனற் பொற் ப.ீ.து

உருமிடி சேர்ந்த முழக்கம் புரையும்

திருமருத முன்றுறை சேர்புனற்கண் துய்ப்பார்

தாமந் தலைபுனை பேஎநீர் வையை

நிற்பயம் பாடி விடிவுற் றேமாக்க

நிற்படிந்து நீங்காமை யின்றுபுணர்ந் தெனவே.

பொருளுரை:

முறுக்குண்ட நரம்பினை இசைத்துக் கொள்ளப்படுவனவாகிய, சொல்லப்பட்ட பாலைப்பண்கள் ஏழினையும் எழுப்ப, தாள அமைதியோடு பொருந்தி நிற்கும் அவையும், அவற்றோடு பொருந்திய இசைப்பாட்டும் ஒன்றுகலந்து எழுந்தன. குழலின் இசையோ அவற்றின் இசையளவை ஒத்து நின்று இசைக்கப்பட்டது. அவற்றோடு கலந்து முழவொலியும் மிகுதியாக ஒலித்தது. அரசனாற் சிறப்புப்பெற்ற அரங்கக்கூத்தியரும் . பாணரும் அடலைத் தொடங்கினர் கரைகளை மோதியபடி செல்லும் புதுப்புனலின் அழகிதான ஒலியோ, சினத்தோடு முழங்கும் இடிமுழக்கைப்போல விளங்கும். இவ்வாறான ஒலிகளோடும் கூடிய திருமருதமுன்றுறையிடத்துப் பொருந்திய நீரிடத்தே, மூழ்கித்திளைப்பவர் மாலைகளைத் தலைமீதாகப் புனைந்தபடி செல்லும், அச்சந்தரும் கொண்ட வையைப் பேராறே! இன்று கூடினாற்போலவே, நின்னிடத்தே மூழ்கிப் பெறுகின்ற இந்த இன்பம் எம்மிடத்திருந்து என்றும் நீங்காதே நிலைப்பதாக! நின்னாற் பெறுகின்ற பயன்களைப் பாடிப்பாடி, எம் துன்பம் பெற்றேமாக, யாமும் இன்புற்று மகிழ்வேமாக!

சொற்பொருள் :

புரி - முறுக்கு, கொளை - கொள்ளுதல் தாள அமைதியுமாம். பாலை ஏழு - செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப் பாலை, மேற்செம்பாலை என்ப

செவ்வேள் (8)

பாடியவர் : நல்லந்துவனார்

பண் வகுத்தவர் மருத்துவன் நல்லச்சுதனார்

பண் : பாலையாழ்.

பரங்குன்றமும் இமயமும்

பாடல் :

மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
புள்மிசைக் கொடியோனும் புங்கவம் ஊர்வோனும்
மலர்மிசை முதல்வனும் மற்றவ னிடைத் தோன்றி
உலகிருள். அகற்றிய பதின்மரும் இருவரும்
மருந்துரை இருவரும் திருந்துநூல் எண்மரும்

ஆதிரை முதல்வனிற் கிளந்த
நாதர்பன் னொருவரும் நன்திசை காப்போரும்
யாவரும் பிறரும் அமரரும் அவுணரும்
மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
பற்றாகின்று நின்காணமாகப்
பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்

பொருளுரை:

நிலத்திடத்தே. தோன்றி மலர்கின்றதான் திருத்துழாய் மலரினையும், செந்தாமரை. மலரானது தந்த செல்வத்துக்கு உரியவளான. திருமகளையும், புட்களிற் சிறந்ததான கருடனுருவம் எழுதப்பெற்ற கொடியையும் உடையவன் திருமால். அவனும், இடபஊர்தியை உடையவனாகிய . சிவபிரானும், தாமரை. மலர்மீது இருப்போனாகிய நான்முகனும், அவனிடத் திருந்தும் தோன்றி, உலகத்தின் இருளைப் போக்கியவரான். அதித்தர் .பன்னிருவரும், தேவ மருத்துவர்கள் இருவரும், சிறந்த நூற்புலமை கொண்டோரான வசுக்கள் எண்மரும், ஆதிரை முதல்வனாகிய சிவபிரானது “பெயராலேயே சொல்ல படுகின்றவரான பதினொரு உருத்திரரும், நல்ல திசைகளைக் காப்போராகிய . இந்திரன், நிருதி, இயமன், அக்கினி, வருணன், வாயு, குபேரன்,ஈசானனாகிய எண்மரும், மற்றுமுள்ள தேவர்கள் யாவரும், இவரொழிந்த அமரரும் அவுணரும் ஆகிய பிறருமாகிய எல்லாரும், விரும்பத்தக்க. வேதங்களைக் கற்ற சிறந்த தவமுதல்வர்களாகிய எழுவரும், நின்னைக் கண்டு போற்றும் .. பொருட்டாக இத் திருப்பரங்குன்றத்திற்கு வருபவராகின்றனர். ஆதலினாலே, இப் பரங்குன்றமானது எம் பெருமானாகிய - சிவபிரான் குடிகொண்டிருக்கும் இமயக்குன்றமாகிய திருக் கயிலாயத்தையே ஒப்புடையதாக விளங்குவதாகும்.

அருஞ்சொற்பொருள்

மண் - நிலவுலகம். மலர்தரு செல்வம் - பரந்த செல்வமும் ஆம்! புங்கவம் – ஆனேறு

மாலைச் சுனை

பாடல் :

இமயக் குன்றினிற் சிறந்து
நின்னீன்ற நிரையிதழ்த் தாமரை
மின் னீன்ற விளங்கிணர் ஊழா
ஒருநிலைப் பொய்கையோ டொக்கும் நின்குன்றின்
அருவிதாழ் மாலைச் சுனை

பொருளுரை:

இமயப் பொய்கைகளுட் சிறந்து விளங்குவதும், நின்னை ஈன்ற காலத்துப் பாயலாகத் தாங்கிய நிறைந்த இதழ்களைக் கொண்ட தாமரை மலர்களைக் கொண்டி ருப்பதும், மின்னலிடத்திருந்தும் தோன்றினாற்போன்ற ஒளி விளங்கும் பூங்கொத்துக்களைத் தோற்றுவித்திருப்பதுமான, ஒப்பற்ற நிலையைக் கொண்டதான சரவணப் பொய்கையோடு, நின் பரங்குன்றிடத்துள்ள, அருவி வீழ்ந்தபடியிருக்கும் மயக்கந் தரும் சுனையும் ஒப்புடையதாக விளங்கும்

மலைமுழை அதிரும்.

பாடல் :

முதல்வ! நின் யானை முழக்கம் கேட்ட
கதியிற்றே காரின் குரல்
குரல் கேட்ட கோழி குன்றதிரக் கூவ.
மதநனி வாரணம் மாறுமாறு அதிர்ப்ப
எதிர்குதி ராகின்று அதிர்பு மலைமுழை

பொருளுரை:

முதல்வனே! நினக்குரிய யானையாகிய பிணிமுகத்தின் முழக்கினைக் கேட்டாற்போன்ற தன்மைகொண்டது கார் மேகத்தின் இடிக்குரல் ஆகும். அக்காரின் முழக்கைக் கேட்டதும், நின் கோழிச் சேவலானது, தானும் அதற்கெதிராகக் குன்றமே அதிரும்படியாகக் கூவும்.. அக் குரலைக் கேட்டதும் மிக்க மதத்தைக் கொண்ட. யானையும் முழங்கும். இவை மாறிமாறி முழக்கமிட, அம் முழக்கங்கள் மலைக்குகைகளுட் சென்று மோதி எதிரொலிகளாக எழுகின்றன. இவ்வாறு ஒலியும் எதிரொலியு . மாக ஓயா முழக்கை உடைத்தாயிருப்ப து நின் பரங்குன்றம்.

சொற்பொருள் :

முருகனின் யானை - பிணிமுகம் என்னும் களிறு. கதி - ஓசையின் தன்மை. கோழி - சேவற் கோழி. வாரணம் - யானை.

கூடல் வரவு

பாடல் :

ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த்தன்ன இனம்

வீழ்தும்பி வண்டொடு மிஞீரார்ப்பச் சுனைமலரக்

கொன்றை கொடியிணர் ஊழ்ப்பக் கொடிமலர்

மன்றல் மலர மலர்க்காந்தள் வாய்நாற

நன்றவிழ் பன்மலர் நாற நறைபனிப்பத்

தென்றல் அசைவரூஉம்

செம்மற்றே, அம்ம!நின் குன்றத்தால் கூடல் வரவு

பொருளுரை:

ஏழுதுளைகளையும், ஐந்துதுளைகளையும் கொண்ட குழலிசையினையும், யாழிசையினையும் ஒத்தாற்போல முரலுகின்ற, தம்-இனத்தை விரும்புகின்றவான .வண்டுகளோடு, தும்பி யினமும் ஆரவாரிக்கும்படியாகச் சுனையிடத்துள்ள நீர்ப்பூக்கள் மலர்ந்திருக்கும். கொன்றையிடத்தே கொடிபோல விளங்கும் பூங்கொத்துக்கள் விளங்கும். மலர்க் கொடிகளிடத்தே மணமுள்ள மலர்கள் மலர்ந்திருக்கும். காந்தளின் மலர்ந்த மலர்கள் இடமெங்கணும் மலர்ந்திருக்கும். இவ்வாறு, நன்றாக இதழவிழ்ந்த பலவகை மலர்களும். மணத்தைப் பரப்பியும், தேன்துளிகளைச்.சிந்தியும் விளங்கத், தென்றலானது. அசைந்து வந்தபடியிருக்கும் சிறந்த தன்மையுடையதாயிருப்பது, நின் பரங்குன்றத்திற்குக் கூடலிலிருந்து வருகின்ற வழியாகும்!

சொற்பொருள் :

புழை - துளை. கேழ் - நிறம். வீழ் - விரும்பும். ॰ மினிறு - வண்டின் ஒரு வகை. நறை - தேன். செம்மல் - தலைமை. வரவு - வழி. கூடல் - மதுரை. :

குமுறிய உரை

பாடல் :

குன்றம் உடைத்த ஒளிர்வேலோய்! கூடல்

மன்றல் கலந்த மணிமுரசின் ஆர்ப்பெழக்

காலொடு மயங்கிய கலிழ்கட் லென

மால்கடல் குடிக்கும் மழைக் குரலென

ஏறதிர்க்கும் இந்திரன் இரும் உருமென

மன்றல்அதிரதிர மாறுமாறு அதிர்க்கும்நின்

குன்றம் குமுறிய உரை

பொருளுரை:

சிரவுஞ்சமாகிய குன்றத்தை உடைத்த ஒளிரும் வேற் படையினை உடையாய்! கூடலிடத்தே மணவிழாக்களிற் பொருந்திய அழகிய முரசங்களின் ஆரவாரம் எழும்.“ காற்றோடு பொருதி மயங்கிய கடலின் கலக்கத்தைப் போலவும், பெருங்கடலைக் குடிக்கும் மேகங்களின் இடி.முழக்கைப் போலவும், இந்திரனது படையாகிய இடியானது இரும்உரும் என முழக்குமாறு , போலவும், அம் முரம்சங்களின் ஒலியானது மாறி மாறி எழுந்தொலிக்கும். மணமுரசங்கள்

கூடலில் அதிரவதிர, அதற்கு ஒலிமுழக்கமும், மணமுரசுகளின் ஒலியையே எழுப்பும். இவ்வாறு மணமுரசுகளின் ஒலிமுழக்கை உடைத்தாயிருப்பது நின் குன்றம்!

அருஞ்சொற்பொருள் :

குன்றம் - முதலது கிரவுஞ்சம் பின்னது. திருப்பரங்குன்றம். மன்றல் - மணவிழா. மால் கடல் - பெருங்கடல் தருங்கடலும்.ஆம் மயங்கிய கடலும் ஆம்ஏறு – இடி

மகிழ் நல்கும் குன்றம்

பாடல் :

தூதேய வண்டின் தொழுதி முரல்வவர்

காதல் மூதூர் மதில் கம்பலைத் தன்று

வடுவகிர்.வென்றகண் மாந்தளிர் மேனி

நெடுமென் பணைத்தோள் குறுந்தொடி மகளிர்

ஆராக் காமம் ஆர்பொழிற் பாயல் :

வரையகத்து இயைக்கும் வரையா நுகர்ச்சி

முழயா நுகர்ச்சி முற்றாக் காதல்

அடியோர் மைந்தர் அகலத் தகலா

அலர்ஞெமல் மகன்றில் நன்னர்ப் புணர்ச்சி

புலரா மகிழ்மறப் பறியாது நல்கும்

சிறப்பிற்றே தண்பரங் குன்று

பொருளுரை:

தம்மைப் பிரிந்துறையும் தலைவரிடத்தே, தலைவியர் வண்டுகளைத் தூது விட்டனர். அவ் வண்டுக் கூட்டங்கள் . மதுரை அகநகருட் சென்றன. ஊரவர் எல்லாரும் அறியுமாறு மதுரைப் பழநகருட்: சென்ற அவ்வண்டினம், எங்கணும் முரல்வவாய் ஆரவாரித்தன. இதனால் மதிற்பகுதியிடத்தே பெரிதான அலரும் எழுந்தது. குறிப்பிட்ட தலைவர்களும் தம்மை உணர்ந்தனர். “மாவடுப் பிளப்பினையும் உருவமைதியால் வெற்றி கொண்ட கண்கள் மாந்தளிரைப் போனற் ஓளிவிளங்கும் பொன்மேனி நெடிய மென்மைவாய்ந்த மூங்கிலனைய தோள் கள் இத்தகையவர் சிறுவளை அணிந்தோரான நம் காதல் மகளிர்” என்று கூறியவராக, அவர்கள், தத்தம் காதலியரை நினைந்தனர். அவர்களைச் சந்திக்கக் கருதியவராகப் பரங்குன்றின் சோலைப்பகுதிகளுக்கும் விரைந்தனர். அங்கே அவர்கள் - பிரிந்தவர்கள் கூடினர் இன்புற்றனர். இவ்வாறாக, அமையாத காமவின்பத்தைக் காதலர் நுகர்ந்து இன்புறுதற்குரிய இடமாக விளங்கிய பரங்குன்றத்துச் சோலையாகிய பாயலானது, பிரிந்துறைந்த அக் காதலர் மலையிடத்தே கர்வற்ற தனம் இறப்பும் உடையதாகும். நுகர நுகரத்: தீராத துகர்விலே அவர்கள் திளைத்தனர். முற்றாத காதலின்பத்தினை அவர்கள் நுகர்ந்தனர். காதலியர் தம்காதலரது மார்பிடத்து அணைப்பினின்றும் அகலாதவராக மயங்கிக் கிடந்தனர். மலர்களிடத்துத் திரியும் இயல்புடைய மகன்றிற் பறவைகளின் பிரிவற்ற நல்ல

கூட்டத்தைப் போன்று, அக் காதலரும், தம்முள் கெடாத மகிழ்ச்சியை என்றும் மறத்தற்கு அறியாத தன்மையில் பெற்று. அநுபவிக்க உதவும் சிறப்பினைக்கொண்டது, தண்மையுடைய திருப்பரங்குன்றம் அகும்

அருஞ்சொற்பொருள் :

ஏய - ஏவப்பெற்ற. தொழுதி - கூட்டம். முரல்வு - வண்டினத்து ஆரவாரம். கம்பலை - அலரின் மிகுதி. வடுவகிர் - மாவடுப்பிளப்பு. பணை - மூங்கில். குறுந்தொடி - சிறிய வளை் சிறுவளை அவரது பருவத்து இளமையைக் குறிப்பது. ஆராக் காமம் - நுகரநுகரத் தெவிட்டாத தீராக் காமம். முற்றாக் காதல் - முதிர்ந்து சலிப்பை உண்டாக்காது, என்றும் இளமை யோடு திகழும் காதலன்பு. அடியோர் -தலைவியர். மைந்தர் வலியாளர் "தலைர். மகிழ் - மகிழ்வு இன்பம். மகன்றில் - ஒருவகைப்பறவை. பரா - கெடாத. ரான்" சிறப்பை உடையது.

காலையும் மாலையும்

பாடல்:

இனிமன்னும் ஏதிலர் நாறுதி ஆண்டுப் பனிமலர்க்

கண்ணாரோ நகைமலர் மாலைக்கு மாலை வரூஉம்

வரைசூள் நின் காலைப் போய் மாலை வரவு 50

பொருளுரை:

ஒரு தலைவிக்குத் திடுமெனத் தலைவன்பாற் சிறுசினம் உண்டாகிறது. அவன், "நின்னைப் பிரியேன்" என்று கூறிப் பிரியத் தொடங்கும்போது, அவள் ஊளடுச் சீறுகின்றாள். இவ்வேளை, நீதான் மிகவும் ஏதிலரான பரத்தையரின் இன்பத்தை நுகர்ந்து வந்தாயாதலின், அவர் உடலின் நறு நாற்றத்தை நீயும் நாறுபவனாகத் திகழ்கின்றனை! காலையில் வீட்டைவிட்டுப் போகும்நீ, மாலையிலேதான் மீண்டும் வருகின்றாய். இடைப்பட்ட நேரத்தே, அவ்விடத்துச் சேரிக்கண் உள்ளாரான குளிர்தாமரை மலர்போலும் கண்களை உடைய வரான: பரத்தையரோடுக்கூடிக் களியாட்டம் அயர்கின்றாய்! - ஒள்ளிய மலர்கள் விளங்கும் மாலை நேரத்திற்கு மாலைநேரமாக மட்டுமே என்பால் வருகின்றாய். ஆகவே, பரங்குன்றைக் குறித்துப் பொய்யாணையிடும் சார் கன் செய்யாது சிறுத்துக" என்கிறாள்.

அருஞ்சொற்பொருள் :

மன்னும் - மிகவும், ஆண்டு - அவ்விடத்து பனிமலர் - குளிர்ந்த தாமரை மலர் நகை - ஒளி. சூள் - ஆணை

நின் சூள்!

பாடல் :

இனிமணல் வையை இரும்பொழிலும் குன்றப்

பனிபொழி சாரலும் பார்ப்பாரும்

துனியல் மலருண்கண்! சொல்வேறு நாற்றம்

கனியின் மலரின் மலர்கால் சீப் பின்னது

துனியல் நனி நீ! நின் சூள்

பொருளுரை:

தலைவன் தலைவியின் குற்றச்சாட்டைக் கேட்டுத் திடுக்கிடுகின்றான். அவளைத் தேற்றித் தெளிவிப்பானாக, மீண்டும் ஆணையிட்டு உரைக்கின்றான். குவளை மலர் மையுண்டாற் போன்ற கண்களை உடையவளே! நீ கூறிய சொற்கள் உண்மைக்கு மாறுபட்டதாகும். இப்பொழுது, மணல்: பரந்த வையையாற்றின் கரையிடத்துப் பெரிய சோலைகளும், பரங்குன்றிடத்துக் குளிர்ச்சியைப் பொழியும் மலைச் சாரலும், பார்ப்பாரும் சான்றாகக் கூறுகின்றேன் என் உடலின்கண் மாறுபட்ட புதுமணத்தை நீ கண்டது, நின் கூற்றுப்போல் நான் பரத்தையரைக் கூடியமையாற் பெற்றதன்று. பழங்களினும், மலர்களினும் படிந்துவரும் காற்று வீசுவதனால் நீ காண்பதே அப் புதுமணம் என்று அறிந்து தெளிவாயாக.

அருஞ்சொற்பொருள் :

துனியல் - வருந்தாதே கொள். நாற்றம் மணம். சீப்பினது - வீசுதலால் உண்டானது.

சூளுரைத்தல் வேண்டா!

பாடல் :

என்பாணி நில்நில்! எலாஅ பாணி நீ நின்சூள்!
சான்றாளர் ஈன்ற தகாஅத் தகாஅ மகாஅன்!
ஈன்றாட்கு ஒரு பெண் இவள்
இருண்மையீர் உண்கண் இலங்கிழை ஈன்றாட்கு
அரியளோ! ஆவது அறிந்திலேன்? ஈதா

வருபுனல் வையை.மணல் தொட்டேன் தருமணவேள்
தண்பரங் குன்றத்து அடிதொட்டேன் என்பாய்!
கேளிர் மணலின் கெழுவும் இதுவோ?
ஏழுலகும் ஆளி திருவரைமேல்: அன்பளிதேர்
என்னை அருளி அருள்முருகு சூள்சூளின்.

நின்னை அருளில் அணங்கான்மெய் வேல் தின்னும்,
விறல்வெய்யோன் ஊர்மயில். வேல்நிழல் நோக்கி
அறவர் அடிதொடினும் ஆங்கவை சூளேல்!
குறவன் மகளாணை கூறேலோ கூறேல்!
ஐய! சூளின் அடிதொடு. குன்றொடு

வையைக்குத் தக்க மணற்சீர்சூள் கூறல்

பொருளுரை:

இருவரது ஊடலையும், ஊடலுரைகளையும் கண்டாள் . தோழி. அவள் தலைவனிடத்தே சில் செய்திகளைக் கூறுகின்றாள் சான்றாண்மை உடையோர் பெற்றெடுத்தவனாக இருந்தும், தகுதியற்ற செயல்களையே தொடர்ந்து செய்துகொண்டு வருபவனே! நான் கூறும் சொற்களைக் கேட்பதுவரைக்கும் சற்றுப் பொறுமையாக நின் பேச்சை நிறுத்துவாயாக. மீளவும் நீதான் ஆணையிடுதலையும் சிறிது காலத்துக்கு நிறுத்தி ”வைப்பாயாக. “இவளைப் பார், இவளைப் பெற்ற தாய்க்கு இவள் ஒரே பெண்ணாகப் பிறந்தவள். இருட்சியையும், மைதீட்டப் பெற்ற வனப்பையும், செவ்வரிகளையும் கொண்ட கண்களை உடையாள் இவள் விளங்கும் அணிகளை உடையாள் இவள் இவள்தான் இவளைப் பெற்ற தாய்க்குத் தாங்கிப் பெறுதற்கரிய சுமை யாவாளோ? ஆனால், நின்னைக் காதலித்ததன் பயனால், இவளுக்கு ஆகப்போவது என்னவென்பதை யானும் அறிந்திலனே! இதோ பார் புனல் வரத்தையுடைய வையையின் மணலைத் தொட்டேன் மணவாழ்வைத் தரும் முருகவேளது தண்ணிய பரங்குன்றத்து அடியைத் தொட்டேன் அணையிட்டுக் கூறுவேன்” . என்பாய். எம் உறவினைப்போல விளங்கும் வையை மணலிடத்தே . உனத்குள்ள நட்புறவும் இதுதானோ? ஏழுலகங்களையும் ஆட்சி செலுத்துவோனான முருகப் பெருமானுக்கு உரியதான அழகிய . மலையின்மேல் நீ கொண்டிருக்கும் மறவட தன்மையும் இரக்கத்திற்கு உய்தி தாமம் எம்பால் அருள்ரண்டவனாகக் காட்டுதற் பலது நின் தீயொழுக்கத்தை. மறைத்தாயாக, அருளாளனாகிய முருகனின்மீது பொய்யாணையிட்டு ஏதும் உரைத்தாயானால், நின்னை அருளற்றவான அணங்குகளோடு கூடிப் பெருமானிடத் திருக்கும் சத்திய வேற்படையும் உண்டு “வெற்றி தன்ஜிலும் போர்வெம்மை கொண்டோனாகிய முருகப்பிரான். ஊர்கின்ற மயிலதும், “வேலதும் நிழலைத் தரையிடத்துக் கண்டு, அவற்றைத் தொட்டும் ஆணையிடாதிருப்பாயாக. அறிவோர். அடிதொட்டுச் .சூளுரைப்பினும், அவர் அதனைப் பொய்த்தாலும் நின்னைப் பொறுப்பார், அனால் அவையோ பொய்ச்சுளைப் பொறுக்கவே மாட்டா. குறவன். மகளான வள்ளி நாய்ச்சியாரின்மீது ஆணையிட்டு உரைத்தலை ஒருபோதும் செய்யாதிருப்பாயாக் அவள் காதல் ஒழுக்கத்தை மறவாது பேணுபவள் எம்மைக் கருணையோடு காப்பவள்! ஐயனே. இனிச் சூளுரைப்பதாயின், வாய்மையாளர் அடிதொட்டுப் போற்றும் பரங்குன்றத்தோடு, வையைக்குத் தகுந்த மணலாகிய சிறப்பைத்தருகின்ற அதனோடும் குளுரைக்கா திருப்பாயாக.

அருஞ்சொற்பொருள் :

பாணி - காலம். சூள் - அணை. சான்றாளர் - சான்றாண்மை உடையவர். கேளிர் - உறவினர். கெழுவு - அன்பு. அணங்கு - வருத்தும் தேவப்பெண்

அடிசேர்ந்து சொல்லுங்கள்!

பாடல் :

யார்பிரிய யார்வர யார்வினவ யார்செப்ப

நீருரைசெய் நீர்மையில் சூளென்றி நேரிழாய்! கயவாய

நெய்தலலர் கமழ்முகை மணநகை

நயவரு நறவிதழ் மதருண்கண் வாணுதல் :

முகைமுல்லை வென்றெழில் முத்தேய்க்கம் வெண்பல்.

நகைசான்ற கனவன்று நனவன்று நவின்றதை

இடுதுனி கையாறா என்துயர் கூரச்

சுடுமிறை ஆற்றிசின், அடிசேர்ந்து சாற்றுமின்

பொருளுரை:

தோழியுரைத்ததைக் கேட்டான் தலைவன் அவ்வாறாடல் யின், நீங்கள் எனக்காக வேண்டிக் கொள்வீராக எனக் குறும்ட யர்தப் பின்வருமாறு கூறுகின்றான் நேரிழையாளே! யார் பிரிய, யார் கேட்ப,"யார் விடை கூறுவது? நீர் உரைக்கும் குளமெல்லாம் உரடயறி சூள் என்கின்றனை. கயத்திடத்துள்ளணும்! மொட்டுக்கள் இதழவிழ்ந்து மணம்பரப்பி மலர்ந்துள்ளாற் போன்ற, செருக்கிய. . மையுண்ட கண்களையும், அனைவரும் விரும்பும் நறவம்பூக் களின் இதழினைப்போன்ற ஒளிவீசும் நெற்றியினையும், முல்லை மொட்டுக்களையும். தோற்றத்தால் வெற்றி கொண்டு, முத்துக்களைப் போல விளங்கும். வெள்ளிய பற்களையும் உடையாள் தலைவி. அவளிடத்து யாமுற்ற உறவானது. நகைத்தலைப் பொருந்திய கனவுறவு அன்று. ."என்மேலிடும் துயரமே காரணமாக என் துயரத்தினை அவளும் சேர்ந்து அடையுமாறு, பகைவரைச் சுட்டு வருத்தும் இறைவனாகிய முருகன் செய்வான் என்பாய். அவ்வாறு... அவன் செய்வானாயின், நீர்தாம் அவன் திருவடிகளையடைந்து, நும் குறையை அவனிடத்தே கூறுவீராக."

அருஞ்சொற்பொருள் :

நீர்மையில் சூள் -உண்மைத் தன்மையற்ற சூள். மணநகை - மணம்பொருந்த மலர்ந்த நிலை. நறவு - நறவம்பூ. மதர் - செருக்கு. வாள் - ஒளி. நகைசான்ற - நகைத்தலைப் பொருந்திய. துனி - துயரம். கையாறா - துன்பத்தின் காரணமாக. சுடும்இறை - சுட்டெரிக்கும் இறையாகிய முருகப் பிரான்.

### தாள் தொழ எழுவோம்!

பாடல் :

மிக ஏற்றதும் மலர் ஊட்டுதும் அவி 80

தோற்றுதும் பாணி எழுதும் கிணை முருகன்

தாள்தொழு தண்பரவ் குன்று

பொருளுரை:

அவன் பேச்சைக் கேட்டாள் தோழி. தலைவியையும், தன்னொத்த பிறரையும், "முருகனைத் தொழப் போவோம்" என்று அழைக்கின்றாள். முருகப்பெருமானது திருவடிகளைத் தொழுது வேண்டுதற் பொருட்டாக, "யாமனைவரும்" தண்ணிய பரங்குன்றிற்குச் செல்வோம், எழுவீராக. மிகுதியான.மலர்களை அவன் திருவடிதளிற் சொரிவோம். அவனுக்குரிய பலியினைப் படைத்து ஊட்டு வோம். தாளத்தோடும் கூடிய பாட்டைப் பாடி வெறியாடுவோம். தடாரிப்பறையினையும் முழக்குவோம். அனைவரும் எழுவீராக."

அருஞ்சொற்பொருள் :

அவி - பலியுணவு. பாணி - தாளம். கிணை – தயாரிப்பறை

நீயே காண்க!

பாடல் :

தெரியிழாய் செல்கென்றாய்! எல்லா! யாம் பெற்றோம்

ஒருவர்க்கும் பொய்யாநின் வாயிற்சூள் வெளவல்

பருவத்துப் பன்மாண்நீ சேறலின் காண்டை

எருமை இருந்தோட்டி எள்ளீயும் காளை

செருவம் செயற்கென்னை முன்னைத்தன் சென்னி

அருள்வயினான் தூங்கும் மணிகையால் தாக்கி

நிரைவளை ஆற்றிருஞ் சூள்!

பொருளுரை:

அனைவரும் சென்று முருகனைப் போற்றுகின்றனர். அவ்விடத்தே தலைவியின் செயலைக் காட்டியபடி, தோழி, தலைவனிடத்தே இவ்வாறு கூறுகின்றாள்தெரிந்தெடுத்த அணிகளை உடையாளே! முருகனின் சினத்தைத் தணிவிக்குமாறு வேண்டிப் பணிவதற்குச் செல்க.'' என்று, ஏடா, நீயும் சொன்னாய், அந்த நின் சொல்லாலேயே யாம் நின் தன்மையைத் தெரியப் பெற்றோம்.“ஒருவருக்கும் பொய்யுரை கூறாத நின் வாயினிடத்திருந்து, இனியும் சூளுரைத்தலைச் செய்யாதிருப்பாயாக. எருமைக்கடா ஊர்தியை கவர்ந்து வருவோனான காலனது ஆணையையும் இகழ்ந்து, அடியவர்க்கு அருள்தரும் காளை முருகப்பெருமான், அவன் பொரய்ச்சூள் கூறிய நின்னைச் சினந்து கொள்வதற்கு முன்பாக, நிரைத்த வளைகளை உடையாளான நின் காதலி, அவன் திருமார்பில் தொங்கும் மணியினைத் தன் கையால் தாக்கி ஒலியெழுப்பியவாறே, பெரிய பொய்ச்சூளால் நின்னை வந்தடையும் துயரத்தை ஆற்றுதற்கு, அவனடிகளில் தன் தலையைச் சேர்த்தபடி பணிந்து வேண்டுகின்றாள். நின் பரத்தையரைச் சேர்தற்குச் செல்லும் பருவத்தே, நீதான்பலகாலும் அவ்வழிச் .. செல்வாயாதலின் இவளுடைய இத்தகையையும். கண்குளிரக் காண்பாயாக.

அருஞ்சொற்பொருள் :

சூள்வெளவல் - சிறிதும். சூழ்ந்துபருவம் - காலம். இருந்தோட்டி - பெரிதான கட்டளை. எருமை. இருந்து ஓட்டி!” எனக் கொள்ளலும் ஆம். எள்ளீயும் இகழ்ந்து அருள்தரும் எமனை இகழ்ந்து போக்கி, அன்பர்க்கு. அருளும். செருவம் - மாறுபாடு: தூங்கும் - தொங்கும். நிரைவளை - வரிசையாக அணியப் பெற்ற வளையல்கள்

வரைசேர்ந்து தொழுவார்!

பாடல் :

வளிபொரு.சேண்சிமை வரையகத்தால் 90

தளிபெருகும் தண் சினைய

பொழில்கொளக் குறையா மலரக்

குளிர் பொய்கை யளறுநிறைய

மருதம் நளிமணல் ஞெமர்ந்த

நனிமலர்ப் பெருவழிச்

சீறடியவர் சாறுகொள எழுந்து

வேறுபடு சாந்தமும் வீறுபடு புகையும்

ஆறுசெல் வளியின் அவியா விளக்கமும்

நாறுகமழ் வீயும் கூறுமிசை முழவமும்

மணியும் கயிறும் மயிலும் குடாரியும்

பிணிமுக முளப்படப் பிறவு மேந்தி

அருவரை சேராத் தாழுநர்

பொருளுரை:

காற்றுப் பொருதும் உயரமான வட்ட பரங்குன்ற வரையின் உள்ளிடத்தாக மழைவளம் பெருகும். அதனாற் பொழில்கள் எல்லாம் தண்ணிய தளைகள் பொருந்திய - கிளைகளைக் கொண்ட மரங்களை உடையனவாய் விளங்கும். அவை குறைவற்ற மலர்களை உடையவாயும் விளங்கும். குளிர்ந்த பொய்கைகளுள் மழைநீர் சென்று பெருகுதலால், அவ்விடங் களிற் சேறு நிறையும். மழைநீர் மருதப் புறங்களிலும் சென்று பாய்தலால் அவ்விடத்தே மிக்க மணல் “செறிந்திருக்கும். அம்மணலின் மேலாக மிகுதியான மலர்கள் வீழ்ந்து அழகு செய்திருக்கும். இவ்வாறாக மதுரைக்கும் பரங்குன்றிற்கும் இடைப்பட்ட மணல்பரந்த பெருவழி காணப்படும். உடையவரான பெண்கள் முருகப் பிரானுக்கு-விழாக் கொள்ளுதலை விரும்பியவராகப்புறப்பட்டு வரலாயினர். நிறத்தாலும் மணத்தாலும் வேறுபட்ட சாந்து வகைகளும், சிறப்புப்பொருந்திய புகைத்தற் பொருள்களும், வழிக்கண்ணே வீசுங் காற்றால் அவியாத காப்புள்ள விளக்குகளும், மணங்கமளும் பூக்களும், இசை நுவலும் முழவுகளும், மணிகளும், நூற்கயிறுகளும், பொன்னாற். செய்யப்பெற்றுக் காணிக்கை இடுதற்கெனக் கொணரப்படும் மயில்களும், கோடரிகளும், பிணிமுகம் என்னும் யானைகளும், இவையுட் பட்ட பிற வழிபாட்டுப் பொருள்களுமாக, அவர்கள் ஏந்திக் கொண்டு வந்தனர். அன்பரல்லாத பிறரால், அடைதற்கரிய பரங்குன்ற வரையைச் சேர்ந்து, . அவர்கள் மத்தவன் தொழுவாரும் ஆயினர்.

அருஞ்சொற்பொருள் :

சேண்சிமை - உயர்ந்தமலையுச்சி. தளி - மழை. சினை - கிளை. குறையா மலர குறைவின்றி மலர. அளறு - சேறு. நளிமணல் - மிக்க மணல். ஞெமர்தல் - பரவுதல். சீறடி, - சிறியவடி... சாந்தம் - மணச்சாந்துகள். வீறு - வெற்றிச்சிறப்பு. குடாரி - கோடரி.

தொழுது வேண்டுவார்

பாடல் :

கனவில் தொட்டது கைபிழை யாகாது

நனவிற் சேர்ப்பநின் நளிபுனல் வையை

வரபுன லணிகொள வரங்கொள் வோரும்

கருவயி றுறுகென்க் கடம்படு வோரும்

செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரும்

ஐயமர் அடுகென அருச்சிப் போரும்

பாடுவார் பாணிச் சீரும் ஆடுவார் அரங்கத் தாளமும்

மஞ்சாடு மலைமுழக்கும் : 110

துங்சாக் கம்பலை

பொருளுரை:

முருகனைத் தொழுவாரான இளமகளிர் பலரும், தத்தம் வண்டுதலைக் கூறி முறையிடுகின்றனர். அவற்றை இப்பகுதியிற் காணலாம். கனவிலே, தாம்: தம் காதலரோடு சென்று வையைப் புதுப்புனலிலே கைகோத்து நீர்விளையாட்டயர்ந்து இன்புற்றது பிழைபட்டுப்போதல் கூடாது. அவ்வாறே நனவிலும், நினது, வையையின் மிகுந்த புதுப்புனல் வரவிலே யாமும் நீரணி கொண்டு இன்புறுவதற்கு வரமருள்வாயாக l என்று சிலர் வேண்டினர். நெடுங்காலமாகப் பிள்ளைப்பேறு இல்லாதோரான சிலர், “இனியேனும் எம் வயிற்றிடத்துக் கருப்பம் அடைவதாக” என்றுதொழுதபடியிருந்தனர்.எம் காதலர் பொருள் யெத்ற்குச் சென் றுள்ளவிடத்துப் பொருள்தான் அவருக்கு எளிதாக வாய்த்தற்கு அருள்வாயாக” என்று சில பெண்கள் தம் வேண்டுதலைப் பெருமானின் . செவிக்கண் இட்டுவைத்தபடி வேண்டினர். போருக்குச் சென்றுள்ளாரான எம் காதலர், பகைவரை அழித்து வெற்றிவீரராக மீள்வாராக” என்று. சிலர் படத்தி கொண்டிருந்தனர். இன்னு சிலர், பெருமானின் புகழைப் பாடிக் கொண்டிருந்தனர். மற்று சிலர் தானா கழுரபாக் ஆடிக் கொண்டிருந்தனர். வேண்டுதலைச் செய்திருந்த பெண்களின் குரலோடு, பாடுவோரின் தாளக்கட்டமைந்த பாடல்களின் ஒலியும், ஆடுவோரின் அரங்கிடத்தே அடற்கேற்ப எழுந்த தாளவொலியும், மேகந்தவழும் மலையிடத்தே எதிரொலிக்கும் இடிமுழக்கமும் ஆகப், பரங்குன்றம் இடமாக ஆரவாரத்தை , உடையதாக விளங்கிற்று.

அருஞ்சொற்பொருள் :

நளிபுனல் - மிக்க புனல். புனல் அணி நீரணி விழாவிற் கலந்தாடல். உறுதல் - அடைதல். கடம் படல் கேட்டது நடப்பின் இன்னது தருவேம் எனக் கடம்பட்டு நிற்றல். ஐ - தலைவன். பாணி - தாளம். மஞ்சு - மேகம். கம்பலை- பேராரவாரம்.

நீராடிய மகளிர்!

பாடல் :

பைஞ்சுனைப் பாஅய் எழு பாவையர்:

ஆயிதழ் உண்கண் அலாமுகத் தாமரை

தாள்தா மரைத் தோள் தமனியக் கயமலர்

தங்கைப் பதுமம், கொங்கைக் கயமுகை

செவ்வாய் ஆம்பல் செல்நீர்த் தாமரை :

புனல்தா மரையோடு புலம்வேறு பாடுறாக

கூரெயிற்றார் குவிமுலைப் பூணொடு

மாரன் ஒப்பாரக் கலவி

பொருளுரை:

தம் காதலரைத் தம்முடன் கூட்டுமாற று கடம்பூண் டோருள் சிலர் புண்ணிய சரவணத்துட் பாய்ந்து அந்த செம்மை கொண்டன. அவர்களின் முகம் தாமரை மலர் அவர்கள் பாதங்கள் .தர்மரை மலர் அவர்கள் தோள்கள் பொற்றாமரைக் குளத்துத் தாமரை மலர் அவர்கள் உள்ளங்கை கள் தாமரை மலர்.அவர்கள் மார்பங்கள் கயத்து விளங்கும் தாமரை முகைகள் அவர்கள்செவ்வாய் அம்பல் மலர் இவ்வாறு கயத்துட் செல்லும் தாமரை மலரான பெண்களின் உறுப்புக்கள், புனலிடத்து மலர்ந்துள்ள தாமரை மலர்களோடு கலந்து, கட்புலனுக்கு வேறுபாடு தோன்றாவண்ணம் விளங்கின. இதனைக் கண்ட அவர்தம் காதலரும் நீருட் குதித்துத் தம் காதலியரைத் தழுவி எடுத்தனர். கூர்மையான பற்களை உடையவரான அம் மகளிரின் குவிந்த முலைகளின்மேல் விளங்கும் பூண்க ளோடு, மதனனைப் போன்றோரான அவர்தம் காதலரின் மார்பு கள் பொருந்தி அழகு செய்தன. அவ்வேளை அவரணிகளும் தம்முட் கலந்து அழகு செய்தன.

அருஞ்சொற்பொருள் :

தமனியம் - பொன். செல்நீர்த் தாமரை செலவயரும் தன்மை கொண்ட தாமரை

மன்னுக பரங்குன்றம்!

பாடல் :

அரிவையர் அமிர்த பானம்

உரிமை மாக்கள் உவகையமிர்து உய்ப்ப

மைந்தர் மார்வம் வழிவந்த

செந்தளிர் மேனியார் செல்லல் தீர்ப்ப

என வாங்கு,

உடம்புணர் காதலரும் அல்லாரும் கூடிக்

கடம்பமர் செல்வன் கடிநகர் பேண

மறுமிடற் றண்ணற்கு மாசிலோள் தந்த

நெறிநீர் அருவி அசும்புறு செல்வம்

மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா

தண்பரங் குன்றம் நினக்கு!

பொருளுரை:

அரிவையரின் இதழமுதாகிய பானத்தை, அதனை உண்ணுதற்கு உரிமையுடைய அவர்தம் காதலர்கள், உவகையோடு அமுதமாகக் கருதி, அவர் தரத் தாம் உண்டு களித்தனர். அம் மைந்தரது மார்பினைத் தழுவிப்பெற்ற இன்பத்தின் வழியாக வந்த எக்களிப்பு

செந்தளிர்மேனியராகிய. அம் மகளிரின் துன்பத்தைப் போக்கிற்று. என்றிவ்வாறாக, ஒன்று கலந்து தழுவியின்புற்ற காதலரும், அவர்களல்லாப் பிற அடியவரும் கூடிக், கடப்பமரத்தின் அடிக்கண்ணே குடிகொண்டருளும் செல்வனாகிய முருகப்பெருமானின் காவல மைந்த திருக்கோயிலிடத்தே விருப்புடன் சென்று வழிபட்டனர். இவ்வாறு தன்னடியவர் விரும்பி வந்து வழிபட்டுப்போற்றக், கறைமிடற்றண்ணலாகிய சிவபெருமானுக்கு, மாசற்றோளான உமாதேவியார் பெற்றுத்தந்த செல்வனாகிய முருகப்பெருமானின் கோயில் விளங்குவதாகும். நெறிப்படச் செல்லும் அருவி நீரும், ஊற்று நீருமாகிய நீர் வளம், தரை வெடிப்புற மழை பெய்தலற்று வறண்டு போயின காலத்தும், தண்ணிய திருப்பரங்குன்றமே, நின்னிடத்து என்றும் நிலைபெற்று நின்று, நினக்குச் சிறப்பைத் தருவதாக!

அருஞ்சொற்பொருள் :

அமிர்தம் - அமுதம். உய்ப்ப - செலுத்த. செல்லல் -- துன்பம். மறு மிடற்றுஅண்ணல் - கழுத்திற் கறையுடைய அண்ணலாகிய சிவன். ~ மாசிலோள் - குற்றமிலாள் உமையம்மை.

சங்க இலக்கியம் - கழக வெளியீடு, சென்னை
பரிபாடல்- என்சிபிஎச் வெளியீடு, சென்னை

கொள்குறிவினா:

1.திருமாலின் மார்பினில் உறைபவள் யார்?

அ.பார்வதி ஆ.திருமகள் இ.தேவளயானை ஈ.காமாட்சி

2.கூற்று: சூரபன்டமாவை அழிப்பதற்காக முருகன் உயர்ந்த பிணிமுகன் என்னும் யானையின் மீதேறிப் போருக்குச் சென்றான

காரணம்: மிக உயர்ந்த பிணிமுகம் என்னும் யானையினை ஊர்தியாகக் கொண்டவன்

அ. கூற்று சரி, காரணம் தவறு ஆ. கூற்று,காரணம் சரி இ.கூற்று தவறு, காரணம் சரி

ஈ.கூற்று,காரணம் தவறு

3.பாண்டியனின் படையின் எழுச்சி போல வந்தது எது?

அ.வையை ஆ.காவிரி இ. தாமிரபரணி ஈ. பொருநை

விடைகள்:

1.திருமால்

2.கூற்று காரணம் சரி

3. வைகை

குறுவினாக்கள்:

1கடுவன் இளவெயினனா் எழுதிய திருமால் பாடலில் இடம்பெறும் தொன்மச் செய்திளைய எடுத்தியம்புக.

2.திருப்பரங்குன்றத்தின் இயற்கை வளச்சிறப்பை டிஎடுத்துரைக்க.

3.வையையில் நீராடும் இன்பம் குறித்துத் தோழி கூறும் கருத்தைத் தொகுத்துரைக்க

நெடுவினா:

1.முருகனின் பிறப்புக்குறித்து இளவெயினனார் பரிபாடலில் விவரிக்கும் பாங்கை ஆய்க

(அல்லது)

திருமாலின் சிறப்பைப் பரிபாடல் வழி கட்டுரைக்க.

பாடநூல்கள்:

சங்க இலக்கியம் - கழக வெளியீடு, சென்னை
பரிபாடல்- என்சிபிஎச் வெளியீடு, சென்னை

**Related Online Contents**

- **Tamil Virtual University Library – www.tamilvu.org/library**
  **http://www.virtualvu.org/library**
- **Project Madurai – www.projectmadurai.org.**
- **Chennai Library – www.chennailibrary.com**
  **http://www.chennailibrary.com**
- **Tamil Universal Digital Library- www.Ulib.prg**

# அலகு- 5

## ஆய்வுநோக்கு

ஆய்வுநோக்கு - திணையியல், சமுதாயவியல் நோக்கு திணைக்கோட்பாடும் சமுதாய அடிப்படைகளும், களவு, கற்பு வாழ்க்கை, புலவர் மன்னர் உறவுநிலைகள், இனக்குழு அரசு உருவாக்கச் சூழல்கள், தொன்மம் காட்டும் சமுதாயம்,

## அலகு- 5

**நோக்கம்:**

- இனக்குழுச் சமுதாயத்தின் பொதுமைப் பண்புகளை அறியமுடியும்
- சமூகத்திற்கும் அரசுக்கும் உறவுபாலமாகப் புலவர்கள் இருந்ததை அறியலாம்
- பல்வேறுபட்ட அரசர்களும் குறிப்பிட்ட நில எல்லைகளுக்கு உட்பட்டு ஒருகாலத்தில் ஆங்காங்கே ஆண்டிருந்த போதிலும் அரசு தனக்குரிய எல்லா இயல்புகளுடனும் முழுப்பரிமாணத்தோடும் உருவாகி வந்த இயல்பை அறிதல்

### சங்ககாலத் திணைச்சமூகம்

சங்ககால வாழ்க்கைநெறிகள் அகம், புறம் எனும் இரு பகுப்பினுள் அடங்குகின்றன. ஒரு தாளின் இரு பக்கங்களைப் போல் அமைந்த சங்க அகப்பாடல்களும் புறப்பாடல்களும் சங்ககால அரசியல், சமூகம், பொருளாதாரம் பற்றிய பல்வேறு நிலைகளையும் ஒரு நிலையில் ஓரளவு விளக்குவனவாய் அமைந்துள்ளன. சங்க கால மக்கள் வாழ்வில் முக்கிய இடம் பெறுவது திணைக் கோட்பாடு. அகப் பாடல்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பாகுபாட்டிருப்பதைப் போல் புறப்பாடல்கள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என பாகுபட்டுள்ளன. தொல்காப்பியர் இப்புறத்தினைகளை முறையே குறிஞ்சி முதலாய அகத்திணைகளுக்குப் புறனானவையாய்க் காட்டி இருந்தாலும் இவற்றிடையே உள்ள இயல்பு நிலைகளை வாழ்வியல் ஒற்றுமைகளை அவர் விளக்கவில்லை. ஒவ்வொரு அகத்திணைக்கும் புறத்திணை புறனாவது எவ்வாறு என உரையாசிரியர்கள் ஓரளவு விளக்கி இருந்தாலும் அது முழுமையானது அன்று. இது சங்ககால மக்கள் வாழ்வோடு இணைத்துத் தனிப்பட ஆராய வேண்டிய விரிவான ஆய்வாய் இயல்புடையதாயுள்து. அகம், புறம் எனும் இரு திணைப்பாகுபாடுகளும்

சமுதாய வளர்ச்சிப்போக்கோடும் மாற்றங்களோடும் மக்கள் வாழ்க்கையோடும் நெருங்கிய தொடர்புடையனவாய் உள்ளன. பொதுவாக இரு திணைகளும் மக்கள் நிலந்தோறும் நிலைத்து வாழ்ந்த சங்ககாலச் சமுதாயத்தின் பல்வேறு பரிமாணங்களையும் காட்டுவனவாய் அமைந்துள்ளன.

சமச்சீரற்ற வளர்ச்சிப்போக்கும் திணைப்பாகுபாடும்

நிலப் பகுதிகள் தோறும் தங்கி நிலைத்து வாழத் தலைப்பட்ட மனித சமுதாயம் ஆங்காங்கே இருந்த இயற்கைச் சூழல்களை அடிப்படையாய்க் கொண்டு தமது வாழ்வை அமைத்துக் கொண்டது. அவரவர் வாழ்ந்த நிலத்தியல்பு, அவரவர் பயன்படுத்திய உற்பத்திக் கருவிகள் ஆகியவற்றின் நிலைமைக்கேற்ப அவரவர் வாழ்வியல் நிலைகளும் வேறுபட்டு அமைந்திருந்தன.

“உற்பத்தி சக்திகளின் மீது மனிதன் ஆதிக்கம் பெறுவது தான் மனித குல முன்னேற்றத்தின் ஊற்றுக்கண்ணாகும். இயற்கை நிலைமைகள் வரலாற்றுக் கட்டங்கள் இவற்றின் அமைந்துள்ள வேறுபாடுகள் பல்வேறு மக்களின் வளர்ச்சியிலும் பல்வேறு வர்க்கங்கள், சமூக நிறுவனங்கள், பண்பாட்டுத்துறைகள் ஆகியவற்றின் வளர்ச்சி வேகத்திலும் வேறுபாடுகள் ஏற்படுத்துகின்றன. இதனால் வரலாறு முன்னேறுகிற பொழுது சமுதாயத்தின் ஓர் பகுதி அல்லது மற்றொரு பகுதியில் வேகமாகவும் மெதுவாகவோ வளர்ச்சிக் காணப்படும்”. என மார்க்ஸ், எங்கெல்ஸ் குறிப்பிடுவது சமுதாயங்கள் தோறும் ஏற்பட்ட வேறுபட்ட வாழ்வியல் நிலைகளுக்கான காரணங்களை விளக்குகிறது. பொதுவான இந்தச் சமுதாய வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் சங்க இலக்கியங்களை ஆராய்கிற போது திணைப்பாகுபாட்டிற்கான அடிப்படை உண்மைகளையும் காரணங்களையும் விளங்கிக் கொள்ளவும் விளக்கவும் முடிகிறது.

தொல்காப்பிய அகத்திணையியலில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் திணைகளுக்கு உரியன வாய் காட்டப்பட்ட முதல் கருப்பொருட்கள் வேறுபட்ட சமுதாய வாழ்வு நெறிகளுக்கான அடிப்படைகளாய் அமைந்துள்ளன. மலை, மலைசார்ந்த இடம் காடு, காடுசார்ந்த இடம் வயல், வயல்சார்ந்த இடம் கடல், கடல் சார்ந்த இடம் எனும் நால் நிலப்பாகுபாடுகளும் அந் நால்நிலங்களில் இயற்கை விளைபொருட்களும், உற்பத்திப் பொருட்களும், உணவு முறைகளும், மரம்செடி கொடிகளும் இசை முதலானவையும் உற்பத்தி கருவிகளும் வெவ்வேறு பட்டனவாய் இருப்பதைத் தான் முதற்பொருள்

கருப்பொருள் பாகுபாடு காட்டுகின்றது. இவை அகத்திணை இயலில் கூறப்பட்டிருந்தாலும் புறத்திணைக்கும் பொதுவானவையே. இவற்றைப் புறத்திணை வாழ்வோடும் இணைத்து ஆராய வேண்டும். இந்த முதல், கருப்பொருட்களின் அடிப்படையில் காதலையும் போரையும் பொதுவான வாழ்க்கை நடைமுறைகளையும் இணைத்து ஆராய வேண்டும்.

அகப்பாடல்களைக் காட்டிலும் புறப்பாடல்கள் சங்ககால மக்களின் பொதுவான வாழ்க்கை நெறிகளை ஓரளவு விரிவாய்க் காட்டுகின்றன. சிறப்பாக ஆற்றுப்படை பாடல்கள் நிலந்தோறும் நிலவிய வேறுபட்ட வாழ்க்கை நெறிகளை விரிவாய்க் காட்டுகின்றன.

“ஆற்றுப்படையில் உள்ள வர்ணனைகள், இந்நிலப் பிரிவுகள் வெறும் இலக்கிய மரபு மட்டுமல்ல புவியியல் அமைப்பும் கூட என்பதனை ஐயத்திற்குகிடமின்றி நிரூபிக்கின்றன. அத்துடன் இந்நிலப் பகுதிகளில் ஒவ்வொன்றிலும் பலவிதமான நாகரீக நிலைகளில் வாழும் மக்களைக் காண்பதை நாம் முக்கியமாகப் பார்க்க வேண்டும். குன்றுகளில் வாழும் மக்கள் மிகவும் புராதனமான (நாகரிகமற்ற) நிலையிலும் மருத நிலப்பகுதியில் வாழும் மக்கள் வளர்ச்சி அடைந்த நிலையிலும் காணப்படுகிறார்கள். உண்மையாக பார்க்கும் போது ஒரே போக்கு இல்லாத வளர்ச்சியைக் காட்டும் சித்திரமாக இவ்வருணனைகள் திகழ்கின்றன” (1971:342) எனக் கா. சிவதம்பி திணைப்பாகுபாட்டிற்கான காரணங்களை ஆராய்ந்து இவை ஒரு போக்கு இல்லாத சமச்சீரற்ற வளர்ச்சி நிலைகளைக் காட்டுவன என்பதை விளக்கியுள்ளார்.

பத்துப்பாட்டின் ஆற்றுப்படைப்பாடல்களில் இவ் வேறுபாட்டைத் தெளிவாய்க் காண்கிறோம். பெரும்பாணாற்றுப்படையில் எயிற்றியர் குடியிருப்பு (குடிசை) (82-88), அவர்கள் புல்லரிசி எடுத்தல் (89-94), அவர்கள் விருந்தினருக்கு அளிக்கும் உணவு (வாடூன் புழுக்கள்) (95-100), பாலை நிலக்கானவர் வாழ்வு (106-117), எயினரது அரணில் (முயல் வேட்டை) பெறும் பொருட்கள் (சுவல் விளைநெல்சோறு, உடும்புக்கறி) (130-133), குறிஞ்சி நிலத்தவர் இயல்பும் தொழிலும் (134-146), முல்லை நிலவாழ்வு (148-184), முல்லை நிலத்தில் கிடைக்கும் உணவு (வரகுச்சோறு, அவரைப்புழுக்கு) (190-196), மருத நிலத்தின் வளமான வாழ்வு (207-242), மருத நிலத்தில் பெறும் உணவு (வெண்ணெல் உணவு, கருப்பஞ்சாறு), (255-262), வலைஞர் குடியிருப்பு (263-274), வலைஞர் குடியிருப்பில் பெறும் உணவு (அரிசியிலிருந்து வடித்த

கள், சுட்டுமீன்) (275-282), அந்தணர் தரும் உணவு (இராசான்னம் எனும் நெல் உணவு, வெண்ணெய் இட்டு வேக வைத்த கொம்மட்டி மாதுளைக் கறி, மாவடு ஊறுகாய்) (306-310), பட்டினமக்கள் வளவாழ்வு (320-335), தோப்புக்குடிகளில் வாழ்வோர் தரும் உணவு (பலா, இளநீர், வாழை, நுங்கு, சேப்பங்கிழங்கு) (352-362) என்றவாறு ஐந்நில மக்களின் வேறுபட்ட வாழ்க்கை நெறிகள் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறே மதுரைக்காஞ்சியும் மருதம் (238-270), முல்லை (271-285), குறிஞ்சி (286-301), பாலை (302-314), நெய்தல் (315-326) ஆகிய திணை மக்களின் வேறுபட்ட வாழ்வியல்புகளைக் காட்டியுள்ளது.

இன்றைய சமுதாயத்திலும் நிலந்தோறும் வேறுபட்ட இத்தகைய சமச்சீரற்ற வாழ்விவயல் நிலைகளைக் கண்டாலும் சங்ககாலச் சூழலில் இவ் வேறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாய் உள்ளன.

இவ்வேறுபாடுகளைப் புறத்திணைகளோடும் புறப்பாடல்கள் காட்டும் சமுதாய வளர்ச்சிப் போக்கோடும் சமுதாயத் தலைமையோடும், அரசு உருவாக்கத்தோடும் இணைத்து ஆராய்கின்ற பொழுது சங்ககால வாழ்வை இயல்பானதொரு புதிய பரிமாணத்தில் விளங்கிக் கொள்ள முடிகிறது.

நால்வகைத்திணையும் தலைமை வேறுபாடும்

“வேட்டையாடும் இனக்குழு வாழ்க்கையும், ஆடு மேய்க்கும் இனக்குழு வாழ்க்கையும் அழிந்து தனிச்சொத்துரிமையும் அரசும் தோன்றிய வரலாற்றுக்காலம் என்பதை மானிடவியல் நோக்கோடு சங்க இலக்கியத்தைக் காண்போர் அறியலாம்.

இந்நிலைகளில் தொன்மைச் சமுதாயம் (ீசைஅைவைளைந வசடைியட ளழஉைநவல) அழிந்து நிலவுடைமை அமைப்பு (குநரனயட ளுழஉைநவல) தோன்றியகாலம். ஒருபுறம் தனிச் சொத்துடையை அடிப்படையாகக் கொண்ட வர்க்க சமுதாயமும் மற்றொருபுறம் தொன்மைப் பொதுவுடைமைச் சமுதாயமும் அக்காலத்தில் நிலவின. ஒன்று அழிந்து வந்தது. மற்றொன்று வளர்ந்து வந்தது. பழைய சமுதாயத்தின் குறிக்கோள்கள், கருத்துகள், தத்துவங்கள் (ஐனநழடழபல) முதலியன புதிதாகத் தோன்றும் சமுதாயத்தின் குறிக்கோள், கருத்துக்கள், தத்துவங்களுக்கு மாறுபட்டனவாக இருந்தன.” என நா.வானமாமலை (1970:14) குறிப்பிடும் சமுதாய மாற்றத்தை ஆராய இத்திணைப் பாகுபாடு பேரளவில் துணைபுரிகிறது. திணைப்பாகுபாடும் சமூகத் தலைமை

வேறுபாடும் ஒன்றோடு ஒன்று கொண்டுள்ள தொடர்பைப் புறநானூற்றுப் பாடல்கள் தெளிவாய்க் காட்டுகின்றன.

இனக்குழுச் சமுதாய எசச்சங்களைத் தாங்கி, புன்புலங்களாய புன்செய் நிலப்பகுதியில் வாழ்ந்த சமுதாயங்களின் இயல்பை உரைக்கும் பாடலொன்று,

அடலருந் துப்பின்....................

குரவே தளவே குருந்தே முல்லையென்

றிந்நான் கல்லது பூவுமில்லை

கருங்கால் வரகேயிருங் கதிர்த் தினையே

சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொ

டிந்நான் கல்ல துணாவு மில்லை

............................................................

கல்லே பரவி னல்லது

நெல்லுகுத்துப் பரவுங் கடவுளுமிலயே

(புறம்.335)

எனக் குரவம், தளவம், குருந்து, முல்லை எனும் பூக்களையும் வரகு, தினை, கொள், அவரை எனும் உணவு தானியங்களையும் கொண்டு அச்சமுதாயம் வாழ்ந்ததை உரைப்பதுடன் நெல் அச்சமுதாய விளைபொருள் அல்ல என்பதையும் காட்டுகிறது.

இவ்வாறே குறிஞ்சி நிலப்பகுதியை ஆண்ட பாரி பற்றிய,

நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்

உழவ ருழாதன நான்குபய னுடைத்தே

ஒன்றே சிறியிலை வெதிரி னெல்விளையும்மே

இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழ மூழ்க்கும்மே

மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழக் கும்மே

நான்கே அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து

திணிநெடுங் குன்றந் தேன் சொரியும்மே

(புறம்.109:2-8)

எனும் பாடல் உழவர் உழாது கிடைப்பனவாய மூங்கில் நெல், பலா, வள்ளிக்கிழங்கு, தேன் முதலிய இயற்கை விளைபொருட்களைக் குறிஞ்சி நில உணவுப் பொருட்களாய்க் காட்டுகிறது.

இவ்விரண்டு சமுதாய வாழ்நிலைகளிலிருந்து மருதநிலச் சமுதாய வாழ்வு முற்றிலும் வேறுபட்டுள்ளது. மருதநிலப் பொருளாதார மேம்பாடு மருதநிலச் சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சிக்கும் பேரளவில் துணை புரிந்துள்ளது. மருதநிலச் சமுதாயத் தலைவர்களான மூவேந்தர்களைப் ப்றிறய பாடல்களில் மருதநில வாழ்வின் செழுமை பலபடப் பாடப்பட்டுள்ளது. ஷகாட்டுக் கோழி தினைப்புனங் காப்போரைத் துயிலெழுப்பக் கூவும் இயல்பினதான காட்டில் வாழ்பவர் நின் பகைவர். உனது நாடோ வயலின் வேலிப்புறத்தில் நின்று வேண்டுவோர்க்கு அறமென்று கருதி மருதநிலத்தில் வாழ்பவர் பிடுங்கி எறியும் கரும்பானது குளங்களில் உள்ள தாமரைப்பூ சிதையும்படி விழ அது மூத்தரின் ஆடுகளத்தை ஒத்துத்தோன்றும்' (புறம்.28) என மருத நிலத்தின் பெருமை பாடப்பட்டுள்ளது. ஷநெல்லரிசியுடன் வினைஞர் கொண்ட வாளைமீன், உழவர் கொண்ட ஆமை, கரும்பு வெட்டுவோர் எடுத்த தேன், பெரிய துறைகளிலிருந்து நீர் எடுத்துவரும் பெண்டிர் பறித்தெடுத்த செங்கழுநீர் எனும் இவற்றை வன்புலத்திலிருந்து வந்த விருந்தினர்க்குக் கொடுக்கும் மென்புல (மருத) ஊர்களைக் கொண்ட நல்நாட்டு வேந்தன்' (புறம்.42) எனவும் மருதநில வளமும் வாழ்வின் மேன்மையும் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு புறநானூற்றுப் பாடல்களும் நிலந்தோறும் வேறுபட்டமைந்த வாழ்க்கை நெறிகளைக் காட்டுகின்றன. இவ்வாறு நிலவியல்புக்கேற்ப அமைந்த வாழ்விலைகளுக்கு ஏற்ப நிலத்லைமைகளும் வேறுபட்டுள்ளன. சங்ககாலத் தலைவர்களைச் சீறூர்மன்னர், முதுகுடிமன்னர், குறுநிலமன்னர், வேந்தர் என நான்காய்ப் பாகுபடுத்தலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நால்வகை நிலங்களும் இத் தலைமை வேறுபாட்டோடு தொடர்புடையனவாய் அதற்கான காரணங்களாய் இருந்துள்ளன.

நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே

(புறம்.187)

எனும் ஔவையாரின் பாடல் நிலவியல்புக்கேற்ப அமைந்த தலைமை வேறுபாட்டையும் காட்டுவதாய்க் கொள்ளலாம். இங்கு ஷஆடவர்' என்பது ஷஆள்பவர்' எனும் பொருளுடையது. (காண்க. பெ.மாதையன், எவ்வழி நல்லவர் ஆடவர், புலமை, தொகுதி-14, பகுதி-2, பக்.13-35) மதுரைக் காஞ்சியில் ஷஆடவர்' எனும் சொல் ஆள்பவர் எனும் பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது.

நிவந்த யானைக் கண நிறைகவர்ந்த

புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியல்

பெருஞ்செய் ஆடவர் தம்மின் பிறரும்

யாவரும் வருக வேனோருந் தம்மென

வரையா வாயில் செறாஅ திருந்து

பாணர் வருக பாட்டியர் வருக

(744-749)

எனும் பகுதியில் வரும் ஷபெருஞ்செய் ஆடவர்' என்பதற்குப் பழைய உரையாசிரியர் பெரிய செய்கைகளையும் உடைய மண்டலங்கள் ஆள்கின்றவர்' எனப் பொருள் எழுதியுள்ளார். இதே அடிப்படையில் ஔவையார் பாடலில் வரும் ஆடவர் என்பதற்கும் ஆள்பவர், மன்னர் எனப்பொருள் கொள்வதே பொருத்தம். இந்த அடிப்படையில் பார்க்கிறபொழுது ஔவையின் இநத்ப பாடலில் நானிலமும் நானிலத் தலைமையும் உரைக்கப்பட்டுள்ளது எனக் கொள்ளலாம். நாடு மருதநிலத்தையும், காடு முல்லை நிலத்தையும், பள்ளம் (அவல்) நெய்தல் நிலத்தையும், மேடு (மிசை) குறிஞ்சி நிலத்தையும் குறிப்பிடுகின்றன. ஆள்பவரின் நல்லியல்பே அந்தந்த நிலப் பகுதியின் நன்மைக்கு அடிப்படையாகும் இயல்பு இப்பாடலில் உரைக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் தான் நிலத்திற்கேற்பத் தலைமை வேறுபாடுகள் அமைந்துள்ளன.

சீறூர் மன்னர்

புறநானூற்றின் 285 முதல் 335 வரையிலான பாடல்கள் இம் மன்னர் பற்றியனவாய் உள்ளன. புன்செய்நிலப்பகுதியை ஆண்டவரான இவர்கள் ஷபருத்தி வேலிச் சீறூர்மன்னன்' (299) ஷசீறூர்மன்னன் சிறியிலை எ.'.கம்' (308) எனச் சீறூர்மன்னர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் ஆண்ட நிலப்பகுதி,

பருத்தி வேலிச் சீறூர்
(299)

கரம்பைச் சீறூர்
(285)

நிரம்பா இயல்பின் கரம்பைச் சீறூர்
(302)

புன்புலந் தழீஇய அம்குடிச் சீறூர்
(324)

புன்புலச் சீறூர் நெல் விளையாதே
(328)

எனப் புன்செய் நிலப்பகுதியாகவே காட்டப்பட்டுள்ளது.

வரகு, கொள், தினை, அவரை எனும் புன்செய்நில விளைபொருட்கள் மட்டுமே இச்சமுதாய உணவுப் பொருட்களாய்க் காட்டப்பட்டுள்ளன (புறம்.335) புரவுவரி செலுத்துதற்குரிய அளவிற்கும் கூட வருவாய் இல்லாததாய் இச்சமுதாயம் காட்டப்பட்டுள்ளது (புறம்.330:6). இனக்குழுச் சமுதாயப் பொதுமைப் பண்புகள் நிலவிய இச்சமுதாய வாழ்வியல்பு அடுத்த இயலில் விரிவாய் ஆராயப்படவுள்ளது.

முதுகுடிமன்னர்

புறநானூற்றின் 336 முதல் 355 வரையிலான பாடலக்ள முதுகுடி மன்னர் சமுதாயம் பற்றியனவாய் உள்ளன. எல்லாப் பாடல்களும் ஷமகட்பாற்காஞ்சி' எனும் ஒரு துறைக்கு உரியனவாகவே உள்ளன. சீறூர்மன்னரைப் போல் இவர்களும் இயற்பெயரால் குறிப்பிடப்பெறாமல் ஓரெயில் மன்னன் (338), தண்பணைக்கிழவன் (342), தொல்குடிமன்னன் (353) எனப் பொதுப் பெயரால்

மட்டுமே சுட்டப் பெற்றுள்ளனர். இவர்கள் சீறூர்மன்னரைப் போலல்லாமல் மருதநிலத்தை ஆண்டவராய் உள்ளனர்.

பிணங்கு கதிர்க் கழனி நாப்ப ணேமுற்
றுணங்குகல னாழியிற் றோன்றும்
ஓரெயின் மன்னன் (338:10-12)

மென்புல வைப்பினித் தண்பணையூரே (341:19)

பைங்காற் கொக்கின் பகுவாய்ப் பிள்ளை
மென்சோற் றடைகரை மேய்ந்துண்ட தற்பின்
ஆரலீன்ற வையவி முட்டை
கூர்ந லிறவின் பிள்ளையொடு பெறூஉம்
தண்பணைக் கிழவன் (342:7-11)

பன்னல் வேலியிப் பணைநல் லூரே (345:20)

ஏமஞ்சால் சிறப்பினிப் பணைநல் லூரே (351:12)

குன்றுகண் டன்ன நிலைப்பல் போர்பு
நாட்கடா வழித்த நனந்தலைக் குப்பை
வல்வி லிளையர்க் கல்குபத மாற்றாத்
தொல்குடி மன்னன் (353:8-11)

என மகட்பாற்காஞ்சிப் பாடல்களில் முதுகுடிமன்னரின் மருத விளைவயல் கள் பாடப்பட்டுள்ளன. உடைமையாளர்களாய் இருந்த இம்மன்னர்கள் மகட்கொடை வேண்டிய வேந்தரோடு முரண்பட்டுப் போரிட்டு அழிந்தமை மூன்றாம் இயலில் விரிவாய் ஆராயப்படவுள்ளது.

குறுநில மன்னர்

வேளிர், மழவர், ஆவியர் என்றாற் போன்ற பல்வேறு குடிவழி வந்த வராய்த தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அரசாண்ட குறுநில மன்னர்கள் பெரும்பாலும் மலையும் மலைசார்ந்த நிலப்பகுதியையும் ஆண்டவர்களாய் உள்ளனர். புறநானூற்றின் பலபாடல்கள் இவர்களை மலைக்குத் தலைவர்களாகவே காட்டியுள்ளன.

அதியமான் - தகடூர் (மலை சார்ந்த நிலப்பகுதியான தருமபுரி)

பெருமலை விடரகத் தருமிசை கொண்ட சிறியிலை நெல்லித் தீங்கனி

(புறம்.91:8-9)

பாரி - பறம்பு மலை

(பிரான்மலை - புதுக்கோட்டை)

அளிதோ தானே பாரியது பறம்பே

நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே (புறம்.109)

காரி - மலாடு, கோவலூர்(திருக்கோவிலூர்)

முள்ளூர்மலை,

பயன்கெழு முள்ளூர் மீமிசைப்

பட்டமாரி யுறையினும் பலவே (புறம்.123:5,6)

ஆய் - பொதியில்

கழறொடி யாஆய் மழைதவழ் பொதியில் (புறம்.128:5)

பேகன் - பொதினி (பழனி)

மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்

மாரியான்று மழைமேக குயர்கெனக்

கடவுட் பேணிய குறவர் மாக்கள்

பெயல்கண் மாறிய வுவகையர் சாரற்

புனத்தினை யயிலு நாட

(புறம்.143:1-5)

கண்டீரக் - தோட்டிமலை

கோப்பெருநள்ளி கறக்குமிசை யருவிப் பிறங்கு மலைநள்ளி

(புறம்.148:1)

நளிமலை நாடனள்ளியவ னெனவே

(புறம்.150:28)

இளவிச்சிக்கோ - விச்சிமலை

விண்டோய் சிமையவிறல்வரைக்

கவாஅன்

(புறம்.151:2)

ஓரி - கொல்லிமலை

ஓங்கிருங் கொல்லிப் பொருநன்

(புறம்.152:31)

கொண்கானங்கிழான் - சேலம், கோவையின் கீழ்ப்பகுதி.

தண்பல விழிதரு மருவி நின்

னொ்பெருங் கானம் பாடலெனக்

கெளிதே

(புறம்.154:12,13)

ஏறைக்கோன் - பெருங்கனாடனெம் ஏறைக்குத்

தகுமே (புறம்.157:13)

குமணன் - முதிரைமலை (உடுமலைப் பேட்டை, பழனி

மலைத்தொடர்)

கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி

அதிராயாணர் முதிரத்துக் கிழவ

(புறம்.158:21,25)

பிட்டங்கொற்றன் - குதிரைமலை

அருவியார்க்குங் கழை பயி

னைந்தலைக்

................................

ஊராக் குதிரைக்கிழவ (புறம்.168:1-14)

என இவ்வாறு குறுநிலமன்னர் பலரும் வறட்சிக் காலத்தும் வளந்தரும் இயல்பினதான மலையைப் பொருளாதாரத்திற்கான அிெப்படை ஆதாரமாய்க் கொண்டு குறிஞ்சி நிலப்பகுதியை ஆண்டுள்ளனர். இவர்கள் கொடைப் பண்பு மிக்கோராய்க் காட்டப்பட்டுள்ளனர். சிறப்பாகப் பாரி, ஓரி, காரி, அதியன், பேகன், ஆய், நள்ளி எனும் வள்ளல்களின் கொடைப்பண்பே புறநானூற்றில் பலபடப் பாடப்பட்டுள்ளது. குமணனிடம் பரிசில் வேண்டும் பெருஞ்சித்திரனார்,

பரம்பிற் கோமான் பாரியும் பிறங்கு மிசைக்

கொல்லி யாண்ட வல்வி லோரியும்

காரி யூர்ந்து பேரமர்க் கடந்த

மாரி யீகை மறப்போர் மலையனும்

ஊரா தேந்திய குதிரைக் கூர்வேற்

கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும்

.........................................................................

பெருங்க னாடன் பேகனுந் திருந்துமொழி

மோசி பாடிய வாயு மார்வமுற்

றுள்ளி வருத ருலைவுநனி தீரத்

தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்

கொள்ளா ரோட்டிய நள்ளியு மெனவாங்

கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்

பாடி வருநரும் பிறருங் கூடி

இரந்தோ ரற்றந் தீர்க்கிகன விரைந்திவண்

உள்ளி வந்தனென் (புறம்.158:4-20)

என இறந்த வள்ளல்களின் கொடைப் பண்பைச் சுட்டி அவர்கள் இறந்து போனதால் புலவர்களும் இரவலர்களும் குமணனை நாடி வந்த நிலையைப் பாடியுள்ளார். இக் குறுநிலமன்னர்கள் போற்றிய கொடைப் பண்பும் பாடுநரும் இரவலரும் இவர்களிடம் கொண்டிருந்த நெருங்கிய உறவும் இனக்குழுச்சமுதாயத்தின் எச்சங்களாய் உள்ளன. வள்ளல்களின் இறப்பும் வேந்தர்களின் புதிய சமுதாய வளர்ச்சியும் பாடுநராகிய பாணரின் வாழ்விலும் குறிப்பிட்ட புலவர்களின் வாழ்விலும் பெருமாற்றத்தை ஏற்படுத்துகிறது. இச் சமுதாய மாற்றம் புலவர் மன்னர் உறவு பற்றிய இயலில் விரிவாய் ஆராயப்படவுள்ளது.

வேந்தர்

வம்பவேந்தர் (புதியமன்னர்கள்) (புறம்.287,345) எனப்பெறும் மூவேந்தர் நெய்தல் நிலப்பகுதியையும், மருதநிலப்பகுதியையும் அடிப்படையாய்க் கொண்டு ஆண்டுள்ளனர். இயற்கைவளம் மிகுந்த மலைப் பகுதிகளும் இவர்களால் கவரப்பட்டுள்ளன. பொருளாதாரப் பெருக்கத் திற்கு அடிப்படையாய் அமையும் நிலப்பகுதிகள் எல்லாம் இவர்களின் ஆளுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஷவேந்தன் மேய தீம்புனல் உலகம்’ (அகத்.5) எனத் தொல்காப்பியர் சுட்டியதைப்போல் இவர்கள் தங்களை வேந்தர் எனக் குறிப்பிட்டுக் கொண்டது மருதநிலத் தலைவர்கள் என்பதன் அடிப்படையிலேயே எனக் கருதலாம்.

யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந
(புறம்.2:11)

தன்பொருநைப் புனல்பாயும்

விண்பொருபுகழ் விறல்வஞ்சிப்
பாடல்சான்ற விறல்வேந்தன்
(புறம்.11:5-7)

பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே (புறம்.13:10-14)

நீயே
புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பும்போது சிதைய வீழ்நதெனக் கூத்தர்
ஆடுகளங் கடுக்கு மகநாட்டையே (புறம்.28:11-14)

அந்தண் காவிரி வந்துகவர் பூட்டத்
தோடுகொள் வேலின் றோற்றம் போல
ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே (புறம்.35:8-11)

மென்புல வைப்பி னன்னனாட்டுப் பொருந (புறம்.42:18)

என இவர்களின் மருதநில வளமும் சார்பும் பாடப்பட்டுள்ளன.

நிலவுமணல் வியன்கானற்
றெண்கழிமிசைச் சுடர்ப்பூவிற்
றண்டொண்டியோ ரடுபொருந (புறம்.17:11-13)

புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்

இடைப்புலப் பெருவழிச் சொரியும்

கடற்ப.்.றாரத்த நாடு கிழவோயே (புறம்.30:12-14)

கலந்ததந்த பொற்பரிசம்

கழித்தோணியாற் கரை சேர்க்குந்து

மலைத்தாரமுங் கடற்றாரமும்

தலைப் பெய்து வருநர்க்கீயும்

புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்

முழங்கு கடன் முழவின் முசிறி (புறம்.343:5-10)

என வேந்தர்களின் நெய்தல் நில வளமும் பாடப்பட்டுள்ளது.

இயற்கை வளஞ்சார்ந்த மலைப்பகுதிகளும் இவாக்ளின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டுளள்ளன. பாரியின் பறம்புமலை முற்றுகையிடப் பட்டதையும் கவரப்பட்டதையும் கபிலரின் பாடலக்ள (புறம்.109, 110, 111 - 120) காட்டுகின்றன. ஓரியின் கொல்லிமலை சேரர்க்கு உரியதாய் ஆனதை அகநானூற்றுப் பாடல் காட்டுகிறது.

முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி

செல்லா நல்லிசை நிறுத்த வல்லில்

ஓரிக்கொன்று சேரலர்க்கு ஈத்த

செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி (புறம்.209:12-15)

எனும் இப்பாடலடிகள் காரி எனும் குறுநிலமன்னன் சேரர்க்கு உதவியாய்ப் போரிட்டு ஓரியைக் கொன்று கொல்லி மலையைச் சேரர்க்குக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

ஷகொல்லிப் பொருந கொடித்தேர்ப் பொறைய’ (73:15) எனச் சேரர் கொல்லி மலைக்கு உரிமையுடையோராய் ஆனதைப் பதிற்றுப்பத்தும் கூறுகிறது. சேரர் மலைசார்ந்த நிலப்பகுதிகளையும் ஆண்டாலும் அம்மலைகள் இயற்கை வளஞ்சார்ந்தனவாய்ப் பொருளாதாரப் பெருக்கத்திற்கான ஆதாரங்களாய் இருந்துள்ளன.

முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்

புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்

கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்

மிதியற் செருப்பின் பூழியர் கோவே (பதி.21:20-23)

எனப் பல்வேறு மணிகளும் கிடைக்கும் இயற்கை வளம் சார்ந்த செருப்பு மலை எனப்பட்ட சென்னிமலை சேரர்க்குரியதாய் இருந்துள்ளது. இவ்வகையில் மூவேந்தரின் ஆட்சி வளஞ்சார்ந்த நிலப்பகுதிகளை மையமிட்டதாகவே உள்ளது.

இவ்வாறு சமுதாய இயல்புக்கேற்பத் தலைமைகளும் வேறுபட்டு இருந்தன. இவ்வாறு குறிப்பிட்ட நிலப்பகுதி, அதற்கான தலைமை எனும் நிலைமாறி அரசு எனும் அமைப்பு உருவாகத் தலைப்பட்ட நிலையில் நானிலப்பகுதிகளையும் உள்ளிட்ட பிரதேச அமைப்பு உருவாகிறது. இதை பத்துப்பாட்டின் ஆற்றுப்படைகள், மதுரைக்காஞ்சி போன்றவை தெளிவாய்க் காட்டுகின்றன.

தலைமை வேறுபாடும் உடைமை நிலையும் போர் முறையும்

சீறூர்மன்னர், முதுகுடிமன்னர், குறுநிலமன்னர், வேந்தர் எனும் நால்வகைத் தலைவர்களும் உடைமை நிலையிலும் ஊர்க்குடிகளோடும் புலவர்களோடும் கொண்டிருந்த உறவு நிலையிலும் வேறுபட்டிருந்ததைப் போல் போர் முறைகளிலேயும் வேறுபட்டிருந்தனர். இந்த வேறுபாடுகளின் அடிப்படையில் புறத்திணைப் பாகுபாடுகளை அணுகும் போதுதான் வேறுபட்ட போர்முறைகளுக்கான காரணங்களையும் சமுதாயப் பின்னணிகளையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. கா.சிவத்தம்பி குறிஞ்சி முதலான திணைப் பாகுபாடுகளுக்குக் காட்டிய அடிப்படைக் காரணமான ஒரு வழிப்படா வளர்ச்சிப் போக்குகளைத்தான் வெட்சி, கரந்தை, நொச்சி, உழிஞை முதலான புறத்திணைப் பாகுபாடுகளுக்கான அடிப்படையிலும் காணமுடிகிறது. சமுதாய வளர்ச்சி நிலை, தலைமைகளின் இயல்பு வேறுபாடு, உற்பத்தி உறவுமுறைகள் ஆகியவற்றுக்குத் தகுந்தவாறு போர் முறைகளும் வேறுபட்டிருப்பதைச் சங்கப்பாடல்களும் தெளிவாய்க் காட்டுகின்றன. குறிப்பிட்ட புறத்துறைகள் குறிப்பிட்ட சமுதாயம் சார்நதனவாய் மட்டுமே இருப்பதையும் அவை காட்டுகின்றன. எல்லா வகையான போர் முறைகளும் எல்லா வகையானன சமுதாயங்களிலும் இருந்தன எனக் கொள்ள வியலாது. எந்த வகையான

பொருளாதாரம் மையப்படுத்தப்பட்டதோ அந்தப் பொருளாதார ஆதாரத்திற்கு ஏற்பப் போர்முறைகளும் போர் நோக்கங்களும் வேறுபட்டிருந்தன.

வெட்சி, கரந்தைப்போர்

வெட்சிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர்,

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புல களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும் (புறத்:2)

என வேந்தர்களின் போர்வீரர் நிரைகவரும் வெட்சிப்போரில் ஈடுபடுதலை இலக்கணமாய்க் குறிப்பிட்டுள்ளார். புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் வேந்தர் சமுதாயம் வெட்சிப்போரில் ஈடுபட்டமைக்குச் சான்றேதும் இல்லை. வேந்தாக்ளின் போர்கள் முழுக்க முழுக்க நிலங்களைக் கவரும் போர் முறைகளாகவே உள்ளன. மதில் அழிப்பும், விளைவயல் அழப்பும் இவர்களின் போர்ச் செயல்களாய் இருந்துள்ளன. வேந்துவிடுதொழிலுக்கு ஆட்பட்ட சீறூர் மன்னாக்ள் கூட வேந்தர்களுக்காக வெட்சிப்போரில் ஈடுபட்டமைக்கான சான்றுகள் இல்லை. பொருளாதாரச் சூழலுக்கும் மேம்பாட்டிற்கும் தகுந்தவாறு போர்முறைகளும் வேறுபட்டிருந்தன.

கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பனை பாழாக
ஏம நன்னா டொள்ளெரி யூட்டினை
நாம நல்லமர் செய்ய
ஓராங்கு மலைந்தன பெருமநின் களிறே (புறம்.16:15-19)

கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்டிலயில்
புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம்

தேர்வழங் கினைநின் றெவ்வர் தேஎத்துத்

துளங்கியலாற் பணையெருத்திற்

பாவடியாற் செறனோக்கின்

ஒளிறுமருப்பிற் களிறவர

காப்புடைய கயம்படியினை (புறம்.15:1-10)

எனும் பாடல்கள் காட்டுவதைப் போல் வேந்தர்களின் போர் நோக்கங்கள் எல்லாம் பொருளாதார அடிப்படையான விளைவயல்களை அழிப்பனவாகவும், பொருளாதாரப் பாதுகாப்பிற்கான மதில்களை அழிப்பனவாகவும், நாட்டிற்குத் தீயிடுதலாகவும், நீர்நிலைகளைப் பாழ்படுத்துவனவாகவும் இருந்துள்ளன. பதிற்றுப்பத்தின் பல பாடல்கள் (13,15,20,23,25,26,71) விளைவயல், மதில் இவற்றை அழிப்பதைப் பாடியுள்ளன.

தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன் போரெதிர்ந்து

கொடி வேண்டுவனாயிற் கொள்கெனக்

கொடுத்த மன்னர் நடுக்கற்ற னரே (புறம்.51:5-7)

எனும் பாடல் குறிப்பிடுவதைப் போல் தமிழகம் பொதுவானது என்பதற்கு எதிராகத் தமிழகம் முழுவதையும் தாம் ஆளவேண்டும் என்ற எண்ணமே மிக்கிருந்தது. அந்த வகையில் நிலங்கவர்வே போரின் அடிப்படை நோக்கமாய் இருந்தது. புறநானூற்றில் மகட்பாற்காஞ்சிப் பாடல்களும் மருதநில வயல்கைக் கவர்வது வேந்தர் நோக்கமாய் இருந்ததைத் தெளிவாய்க் காட்டுகின்றன. ஷபிறர்மண் மண்ணும் செம்மல்’ (புநம்20:13) என வேந்தர் புகழப்பட்டுள்ளனர்.

வேந்தரின் போர்முறைகளைப் பலபடப் பாடுகின்ற புறநானூற்றுப் பாடல்களும் பதிற்றுப்பத்துப் பாடல்களும் மாடுபிடி சண்டைகளை எங்கும் பாடவில்லை. பதிற்றுப்பதில் வரும்,

குண்டுக ணகழிய கநற்தாண் ஞாயில்

ஆரெயிற் றோட்டி வெளவினை யேறொடு

கன்றுடை யாயத் தரீஇப் புகல் சிறந்து

புலவுவில் விளைய ரங்கை விடுப்ப

மத்துக்கயி றாடாவைகற்பொழுது நினையூஉ

ஆன்பயம் வாழ்நர் கழுவு டலைமடங்கப்

பதிபா ழாக வேறுபலம் படர்ந்து (71:13-18)

எனும் பாடலில் ஆயர்களே வலிந்து வந்து ஆனிரைகளைத் தந்த நிலையில் அதை மறுத்துவிட்ட சேரனின் படைவீரர்கள் காட்டப்பட்டுள்ளனர். எனவே வேந்தாக்ளின் நோக்கம் மதிற் போரும் வயற்போருமாகவே இரந்திருக்கின்றனவே அன்றிக் கால்நடைகளைக் கவரும் போர்களாய் இருக்கவில்லை.

தமது ஆட்சிப்பரப்பைப் பெருக்கிக்கொள்ள வேண்டியும் மருதநிலத்தை ஆட்கொள்ள வேண்டியும் ஏனைய சமுதாயத் தலைவர்களைத் தம் ஆட்சிக்கீழ் கொணர வேண்டியும் முயன்ற வேந்தர்களிடம் மாடுபிடி சண்டைகளைக் காண இயலவில்லை. இவர் தம் நோக்கமெல்லாம் நிலக்கொள்ளையாகவே இருந்துள்ளது.

பிறர் மண்கொளல் (புறம் 20:13) ஞாலகங்காவலா் தோள் வலிமை கெடுத்து ஒரு தான் ஆகல் (புறம்.18:14,15) என்பனவற்றை நோக்ககங்களாய்க் கொண்ட வேந்தரைச் சார்ந்த புலவர்களும்,

அடுகளத் துயர்கநும் வேலே கொடுவரிக்

கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி

நெடுநீர்க் கொண்டையொடு பொறித்த

குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே (புறம்.58:29-32)

எனப் பிற மலைநாடுகளும் வேந்தர்க்குரியனவாய் அவாக்ளின் இலச்சினை பொறிக்கப்பட்ட சிகரங்களை உடையனவாக வேண்டும் எனவே வாழ்த்தியுள்ளனர். புறநானூற்றில் மிகச்சில பாடல்களே கரந்தை, வெட்சி, போர்களைப் பாடுவனவாய் உள்ளன. 259, 260, 261, 263, 264, 265, 270, 286, 287, 290, 291, 298 ஆகிய பன்னிரண்டு பாடலகள் கரந்தைத்திணையினவாயும் 257, 258, 262, 269, 297 ஆகிய ஐந்து பாடலக்ள வெட்சித்திணையினவாயும் காட்டப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பாடப்பட்டோர் பெயரில்லாப் பாட்களாகவே உள்ளன. மூதின்முல்லை, வல்லாண் முல்லைப்பாடல்களும்

பாடப்பட்டோர் பெரில்லாப் பாடல்களாகவே உள்ளன. மூதின்முல்லை, வல்லாண் முல்லைப்பாடலக்ள சீறூர்மன்னர் சமுதாயம் சார்ந்தனவாகவே இருப்பதைப்பபோல வெட்சி, கரந்தைத் திணைப்பாடல்களும் இச்சமுதாயம் சார்ந்தனவாகவே உள்ளன. இந்த அடிப்படையில் இச்சமுதாயத்தைக் கால்நடைப் பொருளாதாரத்தை அடிப்படையாய்க் கொண்ட சமுதாயம் புன்செய்நில வேளாண்மையை அடிப்படையாய்க் கொண்ட சமுதாயம் என இரணடாய்ப் பாகுபடுத்தலாம். இவ்வரண்டில் கால்நடைப் பொருளாதாரத்தை அடிப்படையாய்க் கொண்டு வாழ்ந்த சமுதாயத்தில் நிரை கவர்தல், நிரைமீட்டல் போர் முறைகளைக் காண முடிகின்றதே அன்றி நிலங்ககவர் போர்களைக் காண இயலவில்லை. வேந்துவிடுதொழில் மேல் சென்ற வன்புலச் சமுதாயத் தலைவ்களான சீறூர்மன்னர்கள் தமக்காக நிலங்கவர் போாகளில் ஈடுபட்டமைக்குச் சான்றேதும் இல்லை. “வீரயுகப் பாட்களாகக் கொள்ளத்தகும் புறப்பாடல்கள் பலவும் மாடுபிடி சண்டையை மையமாகக் கொண்டவை.... அக்காலத்தில் செல்வப்பொருளாக மாடு அமைந்த காரணத்தினாலேயே அது சமுதாயத்திலே போருக்குக் காலாயமைந்தது. பசுவைக் கவருவொரும் கவருவோரைத் தடுக்க முனைவோரும் மூர்க்கமான போரில் ஈடுபட்டனர்” என்கிறார் க.கைலாசபதி (1978:58).

புறத்திணைகளும் புறத்துறைகளும் எல்லாக்காலச் சமுதாயத்திற்கும் பொதுவானவை எனும் பொதுநோக்கிறகு மாறாகச் சமுதாய வளர்ச்சிப் போக்கோடும் அவற்றை இணைத்து ஆராய வேண்டியுள்ளது.

“பிற அரசானி நாட்டை வென்று கைக்கொள்ளும் எண்ணமுடைய படையெடுப்போர் தாக்குதலைத் தொடங்குதற்கு நல்ல வசதியான தருணத்தைத் தமக்குள் தீர்மானித்துக் கொள்ளும் ஆரம்பநிலைமை அவர்களுடைய பகைவனுடைய ஆநிரைகளை, அவற்றைக் காப்பதுதான் கருத்து என்று தோன்றும்படி, அவன் நாட்லெிருந்து அப்புறப்படுத்தலோடு தாக்குதலைத் தொடங்குவர்.... நிரைகவர்தல் தொடர்ந்துவரும் போரைப் பற்றிறய எச்சரிக்கையாகவும் அமையும்” என ந. சுப்ரமணியன் (1986:187) குறிப்பிடும் இதே கருத்துநிலைதான் மரபான தமிழாய்வாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியும் வெட்சியைப் போர்த் தொடக்கமாக ஷவெட்சிப் பூவணிந்து: பகைவர் நிரையை கவர்தலைக்கூறும் புறத் துறை’ எனப் போரின் தொடக்கமாகவே காட்டியுள்ளது.

இவ்வாறு வெட்சிப் போரைப் போருக்கான தொடக்கநிலையாய்க் கருதுவது பொருத்தமாயில்லை.

வெட்சித்திணையில் இடம்பெறும் துறைகளும் இது தனித்ததோர் போர்முறையே அன்றிப் போர்தொடங்குதற்கான அறிகுறி அன்று என்பதைக் காட்டுகின்றன. வெட்சியில் ஷபாதீடு' எனும் ஒரு துறை உண்டு. கவர்ந்துவந்த ஆநிரைகளைப் பங்கிட்டுக் கொள்ளுதலைக் கூறுவதே இத்துறையின் பாடுபொருள். மன்னர்களால் ஏவப்பட்டவர்கள் மாடு பிடித்து வருவார்கள் என்றால் பிழடித்து வரப்பட்ட மாடுகள், மன்னனிடம் ஒப்படைக்கப் பட்டிருக்க வேண்டும். பிடித்து வந்தோர் பங்கிட்டுக் கொண்டனர் என்பதே வேந்தர் போன்றோர் வீரர்களை அவ்வாறு போருக்கு விடவில்லைஎன்பதற்குச் சான்று.

இதைப் போலவே வேந்தர் சமுதாயப் போர்முறைகளைப் பற்றிய பாட்டும்,

ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்

தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்

எம்மம்பு கடிவிடுது நும்மரண்சேர் மினென

அறத்தாறு நுவலும் பூட்கை மறம் (புறம்.9:1-6)

எனும் பாடலில் பகைவர் நாட்டின் மேல் படையெடுக்கும் மன்னன் பார்ப்பார், பெண்டிர், நோய்வாய்ப்பட்டோர், புதல்வர் பெறாதவர் ஆகியோருடன் பசுக்களும் போர் தொடங்கும் முன் தத்தமக்குப் பாதுகாப்பான இடத்தைச் சேர்ந்து கொள்ள வேண்டும் என அறிவிக்கிறான். பசுக்களைக் கவரும் வெட்சிப் போர்கள் வேந்தர் நோக்கமல்ல என்பதைப் பகைவர்தம் பசுக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு இட்டுச் செல்லச் செல்லும் இவ்வறிவிப்பாளும் அறியலாம். சங்கப் போர் அறம் பற்றிப் பேசும் ந.சுப்பிரமணியன் இப்பட்டியலில் “பசுக்களும் சேர்க்கப்பட்டிருப்பது வியப்பிற்குரியதே“ (1986:165) எனக் குறிப்பிடுகிறார். நிலங்கவரும் போரை நோக்கமாய்க் கொண்ட சமுதாயத்தின் ஆநிரைக் கவரும் போர் இலக்காய்க் கொல்லப்படாததைத்தான் இப்பாடல் காட்டுகிறது. வேந்தர் சமுதாயம் மாடுபிடி சண்டையில் ஈடுபடாததைப் போல்

சீறூர்மன்னர் சமுதாயத்தில் உழிஞை, நொச்சிப் போர்களைக் காண இயலவில்லை. எங்கு தனியுடைமை பெருக்கமும் அதை பாதுகாப்பதற்கான மதில்களும் உள்ளனவோ அச்சமுதாயத்தில்தான் இப்போர் முறைகளைக் காண முடிகிறது. மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் காட்டும் உடைமைச் சமுதாயத்தில் மதிற்போர்களைக் காணலாம். எனவே உடைமைகளின் வளர்ச்சிக்கு ஏற்பப் போர்முறைகளிலேயும் போருக்கான நோக்கங்களிலேயும் மாற்றங்கள் நிலவியுள்ளதையே இவை காட்டுகின்றன.

புறத்துறைகளும் சமுதாய பின்னணியும்

திணைகளைப் போன்று திணைகளுக்குள் இடம்பெற்ற புறத்துறைகளும் சில சமுதாயப் பின்னணியை மையமிட்டு குறிப்பிட்ட காலப்பகுதியில் மட்டுமே நிலவியுள்ளன. மகட்பாற் காஞ்சி, ஏறக்‘ர்க்கள உருவகம், மலப்புழவஞ்சி, செவியறிவுறூஉ, பரிசில்கடாநிலை, பரிசீல்துறை போன்ற துறைகளை இதற்குச் சான்றாய்க் காட்டலாம்.

முதுகுடி மன்னரின் மகளிரை மணக்க வேண்டியதன் வழி அச்ச சமுதாயத்தின் மருதநில வயல்களை வேந்தர்கள் கைப்பற்ற முனைந்ததொரு காலச் சூழலை மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் காட்டுகின்றன. குறிப்பாக வேந்தர்கள் மட்டுமே இவ்வகைப் போரில் ஈடுபட்டு உள்ளனர். மகக்கொடை வேண்டிய செயலைக் குறுநில மன்னர்களிடம் காண இயலவில்லை.

மருத நிலப் பொருளாதாரம் மேம்பாடு உணரப்பட்டு மருத நில பெருக்கத்திற்கான செயல்களிலும் போர்களிலும் ஈடுபட்டு தண்பணை (மருதநிலம்) ஆளும் மன்னர்களாய் உயர்ந்த வேந்தர்களின் வளர்ச்சிக் காலத்தில் பகைவர்களின் விளைவயல்களை அழித்தொழிப்பதான மழப்புல வஞ்சித் துறைகளைக் (புறம்.31,316) காண்கிறோம். மருதநிலப் பெருக்கத்தின் அவசியம் உணரப்பட்ட நிலையில் விளைநிலப் பெருக்கமும், உழவும், மருத விளைபொருட்களும் மதிப்புற்ற நிலையில் போர்க்களங்களையும் ஏர்க்களங்கலாக உருவகிக்கும் பாடல்கள் உருவாகியுள்ளன (ஏர்க்கல உருவகம், புறம்.369,373). இவற்றுடன் மறக்களவழி (புறம்.368-371,373), மறக்கள வேள்வி (புறம்.372) எனும் துறைகளில் அமைந்த பாடல்கள் எல்லாம் வேந்தர்களைப் பாடும் பாடல்களாகவே இருப்பதும் இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

வேந்தா்களின் வளா்சியில் அக்கறை காட்டிய புலவா்கள் வேந்தா்களின் நன்மை கருதி அவா்களின் மேம்பாட்டுக்கு வழிகாட்டும் வகையில் அறிவுரை

கூறத் தொடங்கிய காலப்பகுதியில் செவியறிவுறூஉப் பாடலக்ள பாடப்பெற்றிருக்கின்றன. செவியறிவுறூஉத் துறையினவாய் அமைந்த பாடலக்ள (புறம்.2,3,5,6,35,40,55,184) எல்லாம் வேந்தரைப் பாட்டுடைத் தலைவர்களாய்க் கொண்ட பாடலக்ளாகவே உள்ளன. இவ்வாறே மன்னாக்ளின் வரையறுத்த கொடையால் வரிசையறிதல் எனும் பண்பால் புறந்தள்ளப்பட்ட புலவாக்ளின் வறுமைப் புலம்பல்களைப் பரிசில் கடா நிலைப் பாடலக்ள (புறம்.11,101,136,139,158-160,164,169,196-199,209-211,266) காட்டுகின்றன. எனவே புறத்துறைகளையும் சமுதாய வளர்ச்சிப் போக்கின் குறிப்பிட்ட காலஎல்லையில் குறிப்பிட்ட தளத்தில் நிறுத்தி ஆராய வேண்டியுள்ளது.

வல்லாண்முல்லையும் இயன்மொழியும்

இவ்விரு துறைகளும் புறநானூற்றில் சில வரையறைக்கு உட்பட்டனவாய் அமைந்துள்ளன. வல்லாண்முல்லைப் பாடலக்ள வன்புலச் சமுதாயத்தலைவர்களான சீறூர் மன்னரின் வீரத்தைப் பாடுவனவாக உள்ளன. இவர்களுக்கு இயன்மொழி பாடும் மரபு இல்லை. குறுநிலமன்னர் சிலர் வல்லாண்முல்லையால் பாடப்பட்டுள்ளனர். வேந்தருக்கு உறுதுணையாய் நின்ற பின்வரும் குறுநிலமன்னர் சலர் வல்லாண்முல்லையால் பாடப்பட்டுள்ளனர்.

1.பிட்டங்கொற்றன் - சேரமான்கோக்கோதை படைத்தலைவன் (புறம்.170,தானை மறமும்)

2.பாண்டியன் கீரஞ்சாத்தன் - பாண்டியர் கீழிருந்த குறுநில மன்னன் (புறம்.178)

3.நாலை கிழவன் நாகன் - பாண்டிய நாட்டு ஊர் - நல்லூர் பாண்டியர்க்குத் துணையானவன் (புறம்.179)

4.ஈர்ந்தூர்கிழான் தோயன் மாறன் - சோழர்க்குத் துணையாய் நின்றவன் (புறம்.180பாணாற்றுப்படையுமாம்)

5.வல்லார் கிழான் பண்ணன் - சோழ நாட்டு ஊரான வல்லார் எனும் ஊரை ஆண்டவன் (புறம்.181)

எனும் ஐவர் பற்றிய பாடலக்ள மட்டுமே வல்லாண்முல்லைத் துறையினவாய்க் குறிப்பிடப் பெற்றுள்ளன. பிட்டங்கொற்றான் பற்றிய பாடலுக்குத் தானை மறமும் ஆம் என வேறு துறையும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவனைப் பற்றிய 168, 171, 172 ஆகிய பாடல்கள் இயன்மொழித் துறையினவாய் உள்ளன. 180, 181 ஆகிய இரண்டு பாடல்களின் பாடுபொருளும் ஆற்றுப்படைக்கு உரியதாய் உள்ளது.

ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்
இன்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல (புறம்.180:7-9)

வலாஅ ரோனே வாய்வாட் பண்ணன்
உண்ணா வறுங்கடும் புய்தல் வேண்டின்
இன்னே சென்மதி நீயே சென்றவன்
பகைப்புலம் படரா வளவைநின்
பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே (புறம்.181:6-10)

எனும் இருபாடல்களிலும் பாணனை ஆற்றுப்படுத்தும் குறிப்பு இடம்பெற்றுள்ளது. எனவே இயல்பாய் இவ்விரு பாடல்களையும் பாணாற்றுப் படையினவாகவே கொள்ள வேண்டும்.

இத்துறைப் பகுப்பில் சில சிக்கல்களும் உள்ளன. வேந்தர், குறுநிலமன்னர்களான கடையெழு வள்ளல் ஆகியோர் பாடலக்ள ஷஇயன்மொழி’ எனத்துறை பெற்றுள்ளன. இயன்மொழியால் பாடப்பட்ட இவர்களுக்கு வல்லாண்முல்லை பாடும் மரபு இல்லை. சீறூர்மன்னர் பற்றிய எப்பாடலுக்கும் இயன்மொழி எனும் துறை குறிப்பிடப்பெறவில்லை. இந்த அடிப்படையில்,

1.இயன்மொழியால் மட்டுமே - வேந்தர், கடையெழு

பாடப்பட்டவர் வள்ளல்கள்

2.வல்லாண்முல்லையால் மட்டுமே - சீறூர் மன்னர்

பாடப்பட்டவர்

3.இரண்டாலும் பாடப்பட்டவர் - கடையெழு

வள்ளல்கள்அல்லாதகுறுநில மன்னர்

எனப் புறநானூற்றில் இத்துறைகள் அமைந்துள்ளன

அதியமான நெடுமானஞ்சியும் இயன்மொழி, வல்லாண்முல்லைத் துறைகளும்

கடையெழுவள்ளல்களில் ஒருவனாய்க் குறிப்பிடப்பெறும் அதியமான நெடுமானஞ்சி பற்றிய புறநானூற்றுப் பாடலொன்று முன்சுட்டிய மரபுக்கு மாறாக வல்லாண் முல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உடைய னாயி னுண்ணவும் வல்லன்

கடவர் மீது மிரப்போர்க் கீயும்

மடவர் மகிழ்துணை நெடுமானஞ்சி

இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்

தோனறா திருக்கவும் வல்லன் மற்றதன்

கான்றுபடு கனையெரி போலத்

தோன்றவும் வல்லன்றான் றோன்றுங்காலே (புறம்.315)

வல்லாண்முல்லை எனும் துறை பெற்ற பாடல் இதுவே. இப்பாடலுக்குத் திணையும் துறையுமவை. நெடுமானஞ்சியை ஔவையார் பாடியது எனும் அடிக்குறிப்பு தரப்பட்டுள்ளது. இதைப் போலவே உள்ள அதியனைப் பற்றிய,

யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா

பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்

கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை

என்வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்

கடிமதி லரண்பல கடந்த

நெடுமானஞ்சி நீயருளன் மாறே (புறம்.92)

எனும் புறநானூற்றுப் பாடலுக்கு இயன்மொழி எனத்துறை குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஔவையாராலேயே பாடப்பட்டுள்ளது. இரண்டு பாடலகளிலும் நெடுமானஞ்சி எனும் பெயர் வந்திருந்தாலும் இரண்டுமே ஔவையாரால் பாடப்பெற்றிருந்தாலும் உ.வே.சாமிநாதையர் 315-ஆம் பாடலில் இடம்பெறும் நெடுமானஞ்சியைக் குறிப்புரையில் ஷஒரு தலைவன்' எனக் குறிப்பிட்டுள்ளார். ஔவை சு. துரைசாமிப் பிள்ளை தம் உரையில் இப்பாடலுக்கு ஷஅதியமான் நெடுமானஞ்சி' எனத் தலைப்பிட்டு அதியமானைப் பற்றிய பாடலாகவே கொண்டுள்ளார். இருவரும் துறையை வல்லாண்முல்லை எனவே கொண்டுள்ளனர்.

ஔவையார் பாடிய பலபாடல்கள் அதியமானைப் பற்றியனவாகவே இருப்பதனாலும் பாடலிலும் நெடுமானஞ்சிஎனும் பெயர் வருவதாலும் 315-ஆம் பாடலையும் அதியனைப்பற்றிய பாடலாகவே கொள்ள வேண்டும். இந்தப் பாடலில் வரும் நெடுமானஞ்சியை ஒருதலைவன் என உ.வே.சாமிநாதையர் குறிப்பிட்டதற்கு ஷவல்லாண் முல்லை' எனும் துறைக் குறிப்பே காரணம்.

வல்லாண்முல்லை பாடும் மரபு சீறூர்மன்னர்க்கு மட்டுமே உரியது என்பதால் உ.வே.சாமிநாதையர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஷஇல்லும் பதியும் இயல்பும்கூறி நல்லாண்மையை நலமிகுத் தன்று' (வாகை.23) எனும் புறப்பொருள் வெண்பாமாலையின் இலக்கண வரையறைக்கு ஏற்ப இவர் ஷஇல்லிறைச் செரீஇய ஞெலிகோல்' என்பதற்கு ஷஅவன் வீட்டின் இறப்பிற் செருகப்பட்ட தீக்கடை கோலைப் போல' எனக் குறிப்புரை எழுதியுள்ளார். இப்பாடலில் குறிப்பிடப்பெறும் இல்லம் நெடுமானஞ்சியினுடையதாய்க் கொள்ளப்பட்டு வல்லாண்முல்லைத் துறை இலக்கணத்திற்கு ஏற்ப உரை கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கொள்ளாமல் பொதுவாய் ஷஇல்லின் இறைப்பில் செருகப்பட்ட தீக்கடைகோல் போல' என உரை கொள்வதே பொருத்தமானது. கடையெழு வள்ளல்கள் பற்றிய பாடலக்ள இத்துறை பெறாமையாலும் சீறூர்மன்னர் பற்றிய பாடலக்ள் இத்துறை பெற்றிருப்பதாலும் வல்லாண்முல்லை எனத் துறை பெற்ற இப்பாடலின் தலைவனை உ.வே.சாமிநாதையர் அதியமானாய்க் கொள்ளாது ஒரு தலைவனாய்க் கொண்டு விட்டார். இயல்பாய் இப்பாடலின் துறையை இயன்மொழி எனக் கொள்வதே பொருத்தம். இந்தப் பாடல் அதியமானைப்

பற்றிய பாடல் வரிசையிலேயே இடம்பெற்றிருந்தால் இச்சிக்கல் நேர்ந்திருக்காது. குறிப்பிட்ட புறத்துறைகளைப் பாடுதலில் சில வரையறைகள் இருந்திருக்கின்றன என்பதைத்தான் ஷவல்லாண்முல்லைத்’ துறைபெற்ற பாடலில் வரும் நெடுமானஞ்சியை உ.வே.சாமிநாதையர் தலைவன் எனக் குறிப்பிட்ட குறிப்பு காட்டுகிறது. இதுவே இயன்மொழி எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் இயல்பாய் அதியமான் நெடுமானஞ்சி எனவே கொண்டிருப்பார்.

இவ்வாறு துறை வேறுபட்டு அமைந்த பல பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. அதியனைப் பற்றிய இப்பாடல் வல்லாண் முல்லைத் துறைப் பாடல்களினூடே அமைந்துவிட்ட காரணத்தால் ஷஇயன் மொழி’ என இருக்க வேண்டிய இந்தப்பாடலின் துறை முன்பின்னமைந்த பாடல்களின் துறைக்கு ஏற்ப வல்லாண்முல்லை எனக் குறிப்பிடப்பட்டுவிட்டது. இதைப் போலவே முன்பின்மைந்த படல்களின் துறையைப் பெற்றுப் பாடு பொருளுக்கும் குறிப்பிடப்பட்ட துறைக்கும் தொடர்பில்லாத பாடல்களும் புறநானூற்றில் உள்ளன. மூதின்முல்லை, வல்லாண்முல்லைப் பாடல்களை இதற்குச் சான்றாய்க் காட்டலாம். புறநானூற்றின் 326 முதல் 335 வரையிலான அனைத்துப் பாடல்களும் மூதின் முல்லைத் துறையினவாய்க் குறிப்பிடப்பட்டுள்ளன. 326-ஆம் பாடலில் சீறூர்மன்னரின் வீரமும் பாடப் பெற்றிருந்தாலும் சீறூர்த் தலைவியின் விருந்தோம்பும் பண்பும் பாடப்பட்டிருப்பதால் அது மூதின்முல்லைப் பாடல் என்பது பொருத்தமானதே.

334-ஆம் பாடலிலும் இருவரின் கொடைப்பண்பும் பாடப்பட்டுள்ளது. ஆனால் 333-ஆம் பாடல் சீறூரார்த் தலைவியின் விருந்தோம்பலைப் பாடுகின்றது. இது மூதின்முல்லைத் துறைக்குரிய பாடுபொருளில் அமைந்துள்ளது. ஆனால் 327 முதல் 332 முடிய உள்ள பாடலக்ள சீறூர் மன்னரின் வீரத்தையும், கொடைப்பண்பையுமே பாடுகின்றன. இயல்பாய் இப்பாடல்கள் வல்லாண்முல்லைப் பாடல்களாய்க் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு திணைத்துறை வேறுபாட்டிற்கும் புறநானூற்றில் பல சான்றுகளைக் காட்ட இயலும். இவ்வாறு முன் பின்னமைந்த பாடலின் துறையைத் தவறுதலாய்ப் பெற்ற பாடல்களுள் அதியமான் நெடுமானஞ்சி பற்றிய 315-ஆம் பாடலும் ஒன்று.

மூதின்முல்லை பாடும் மரபு

மூதின்முல்லைப் பாடல்களுள் ஒரு குறிப்பிட்ட சமுதாயஞ் சார்ந்தனவாய் உள்ளன. சீறூர்மன்னர்கள் வல்லாண்முல்லையால் பாடப்பட்டதைப் போல்

சீறூர்மன்னரின் தலைவியர் மூதின்முல்லையால் பாடப்பட்டுள்ளனர். புறநானூற்றில் இடம் பெற்ற 279, 288, 306, 308, 312, 326 - 335 ஆகிய 15 பாடல்கள் இத்துறையினவாய்க் காட்டப்பட்டுள்ளன. இவ்வற்றுள் 279, 288, 306, 312, 333 ஆகிய ஐந்து பாடல்கள் மட்டுமே இத் துறைக்கேற்ப அமைந்துள்ளன. இப்பாடல்கள் சீறூர்த் தலைவியரின், மறக்குடி மகளிரின் விருந்தோம்பும் பண்பையும், வீரத்தையும் பாடுவனவாய் உள்ளன. சீறூாத் தலைவியர் சமுதாயத்தோடு தொடர்பு கொண்டு விருந்து பேணியதைப் பல பாடல்கள் காட்டுகின்றன. இனக்குழுச் சமுதாயத்தின் எச்சங்களைத் தாங்கி வாழ்ந்த சமுதாயம் சீறூர்த் தலைவனோடும் தலைவியோடும் கொண்டிருந்த நேரடித்தொடர்பைக் காட்டும் வல்லாண்முல்லை, மூதின்முல்லைப் பாடலக்ள குறுநிலமன்னர், வேந்தர் சமுதாயங்கள் பற்றியன அல்ல. குறுநிலமன்னர், வேந்தர் ஆகியோரின் தலைவியர் அந்தப்புர மகளிராய் வாழ்ந்தவர் என்பதால் அவர்களுக்குச் சமுதாயத் தொடர்பு இல்லை. அதனால் அவர்கள் இத்துறையால் பாடப்பெற்றிலர். வல்லாண்முல்லையால் பாடப்பெற்ற சீறூர் மன்னரின் பெயர்கள் குறிப்பிடப்பெறாததைப் போல் மூதின் முல்லைப் பாடல்களில் பாடப்பெற்ற தலைவியரின் பெயர்களும் பாடலின் கொளுவில் குறிப்பிடப்பெறவில்லை.

இவ்வாறு குறிப்பிட்ட புறத்துறைகள் குறிப்பிட்ட சமுதாயஞ் சார்ந்தனவாய்க் குறிப்பிட்ட தலைவன் தலைவியரைப் பாடுவனவாய் மட்டுமே அமைந்துள்ளன. குறிப்பிட்ட சமுதாயச் சூழலோடும், குறிப்பிட்ட காலத்தோடும் தொடர்புடையனவாய் அமைந்த புறத்துறைகளைச் சமுதாய வளர்ச்சிப்போக்கோடு இணைத்து ஆராய்வது சங்ககாலச் சமுதாய மாற்றங்களையும் வளர்சிசயையும் கணித்தறியப் பேரளவில் துணைபுரிவதாய் உள்ளது.

தலைமையும் பெயர் வேறுபாடும்

நிலவியல்புக்கேற்பச் சமுதாயத் தலைமைகளும் அவரவர் போர் முறைகளும் நோக்கங்களும் வேறுபட்டிருந்ததைப்போல் அவர்களுக்கான பெயர்களிலேயும் இயற்பெயரைச் சுட்டிப்பாடுதலிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இயற்பெயர் சுட்டா மரபு

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறாஅர் (அகத்.57)

என அகத்திணைப்பாடல்களில் தலைவன் தலைவியரின் இயற்பெயரைக் குறிப்பிட்டுப் பாடக்கூடாது எனும் மரபு குறிப்பிட்ட நிலைகளில் புறப் பாடலக்ளிலும் பின்பற்றப்பட்டுள்ளது. சீறூர்மன்னர், முதுகுடிமன்னர் பற்றிய பாடல்கள் எதிலும் அவர்களின் இயற்பெயர் சுட்டப்பெறவில்லை. பாடற்கொளுவிலும் பெர்கள் இடம்பெறவில்லை. வேந்தர் பற்றிய எல்லாப் பாடல்களிலும் அவர்களின் இயற்பெயர் இடம்பெறாவிட்டாலும் எல்லாப் பாடல்களின் கொளுவிலும் அவரவர் இயற்பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளது. இவ்வாறே குறுநிலமன்னர் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. சீறூர்மன்னர் வேந்துவிடுதொழிலில் ஈடுபட்டவர்கள் என்றாலும் முதுகுடி மன்னர் மகட்கொடை வேண்டிய வேந்தரொடு போரிட்டு அழிந்தவர்கள் என்றாலும் இவாக்ள பெயர்கள் எங்குமே குறிப்பிடப்பெறவில்லை.

இவ்விருவேறு மன்னர் பெயர்களும் குறிப்பிடப் பெறாததைப் போல் வேந்தர் பெயர்களும் குறிப்பிட்ட சூழல்களில் குறிப்பிடப் பெறவில்லை. முதுகுடிமன்னரிடம் மகட்கொடை வேண்டியோர் வேந்தரே என்பது எல்லாப் பாடல்களிலும் இடம்பெற்றுள்ளது. ஆனால் மகட்கொடை வேண்டிய வேந்தர் யார் என்பது எங்கும் குறிப்பிடப்பெறவில்லை. இவ்வாறே பாரியின் அழிவுக்குக் காரணமாய் இருந்த வேந்தர்கள் யார் என்பதும் குறிப்பிடப் பெறவில்லை.

இவ்வாறு குறிப்பிட்ட இரு சமுதாயத் தலைவர்களின் இயற்பெயர்களை எங்குமே குறிப்பிடாததைப் போல் வீரமும், கொடையும் புகழப்படும் சூழலில் வேந்தர்தம் இயற்பெயரைச் சுட்டும் மரபு அவர்கள் பிற சமுதாயங்களின் அழிவிற்க்க காரணமான சூழலில் இடம்பெறவில்லை. எங்கு சொல்லப்பட வேண்டுமோ அங்கு சொல்லப்பட்டு எங்கு மறைக்கப்பட வேண்டுமோ அங்கு வேந்தர் பெயர்கள்மறைக்கப்பட்டிருப்பது புறப்படல்களின் பெயர் சுட்டும் மரபாய் உள்ளது.

புலவர் மன்னர் உறவு நிலைகள்

இனக்குழுச் சமுதாயத்தின் பொதுமைப் பண்புகள் மறைந்து உடைமைச் சமுதாயத்தின் தனியுடைமைப் பண்புகள் வளர்ந்து உடைமைப் பாதுகாப்பிற்கான அரசு எனும் அமைப்பும், பல்வேறுபட்ட தொழில் பிரிவினரும், வருணமும், வர்க்கமும் உருவான சமுதாயச் சூழலில் அரசின் நலன்களைப் பாதுகாப்பதற்கு உரியவராக அந்தணர்கள் இருந்ததைப் போல் அரசனின் சமுதாய உறவுகளை நிலைநிறுத்துபவர்களாகப் புலவர்கள் இருந்துள்ளனர். அரசர்களுக்குள் பல்வித வேறுபாடுகள், மனநிலைகள், உடமை வேறுபாடுகள், வேறுபட்ட சமுதாய உறவுகள் இருந்ததைப் போல் புலவர்கள் அரசர்களுக்குள்ளும் வெவ்வேறுபட்ட உறவு நிலைகள் இருந்துள்ளன. எல்லாப் புலவர்களையும் அரசர்கள் ஒத்த நிலையில் கருதவில்லை. அரசர் முதலான நால்வகை வருணத்திலும் புலவர்கள் இருந்துள்ளனர். அந்தணர் முதலான மூவருணப் புலவர்கள் அரசருடன் கொண்டிருந்த தொடர்புகளில் வேறுபாடுகள் உள்ளன. அரசன் யாருக்கு முதன்மை கொடுக்க வேண்டும் என்பதிலும் போட்டி இருந்துள்ளது. புலவர்களோடு மட்டுமட்டுமன்றி இனக்குழுச் சமுதாய எச்சமாய் நின்ற பாணர் மரபும் சங்க இலக்கியத்தில் பரவலாய் இருந்துள்ளது. இந்நிலையில் பாணர், புலவர் எனும் இருவேறு பிரிவினரும் பெற்ற மதிப்புகளும் அரசு உறவுகளும் இருவேறுபட்டனவாய்

இருந்துள்ளன. மன்னர்களின் மனப்பாங்கும் இந்த உறவு நிலை வேறுபாட்டுக்குக் காரணமாய் இருந்துள்ளது.

### பாணரும் புலவரும்

சங்ககால வீரயுகம் பற்றி ஆராய்ந்த க.கைலாசபதி பாணர், புலவர் எனும் இருவகையினரைக் குறிப்பிட்டு அவர்களை ,1. குழுப்பாடல், தனிநிலைப் பாடல்களைப் பாடிய பாணர்,2. பாடல் எனும் கட்டமைப்புக்குக் கொண்டு வந்த பாணர், 3. புலவர் என அழைக்கப்பட்ட அறிவுடையோரும் புலமைமிக்கவரும் என மூவகையினராய் வகைப்படுத்திக் காட்டியுள்ளார். துனிநிலைப் பாடல்களை பாடியவராகப் பாணர், பொருநர், பாடினி ஆகியோரையும் குறிப்பிடுகிறார். ( 1968 : 115 ) புலவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் பின் வீரயுக காலத்தில் அதிகமுக்கியத்துவம் வாய்ந்தவராகப் புலவர்களைக் காட்டுவதுடன் இவர்களின் பூர்வீகம் பழங்காலத்தை நோக்கியதாய் இருப்பதையும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் யாழ் போன்றவற்றை இசைக்காதவராயும் ஆடல் நிகழ்த்தாதவராயும் இவர்களை குறிப்பிட்டு இவர்கள் சங்ககாலத்தில் இரண்டாம் காலகட்டத்தை சார்ந்தவர்கள் எனவும் குறிப்பிடுகிறார் (1968 : 121 ). இந்த அடிப்படையில் பாணங்களையும் புலவர்களையும் சங்ககாலத்தில் மாறுதல் காலகட்டத்தில் வாழ்ந்தவர்களாய் கொள்ளலாம். பாணர்கள் ஆடல், பாடல் முதலிய கலைகளில் வல்ல தொழில் சார்ந்தவராக இருந்த நிலையில் புலவர்கள் மூளை உழைப்பை உடையோராய் தொழில் சாராதோராய் அறிவுப்புலம் சார்ந்தவர்களாய் உயர்ந்த நிலையில் இருந்துள்ளனர். அரசரிடம் மிகுதியான நெருக்கம் உடையோராய் புலவர்கள் இருந்துள்ளனர். புாணர், புலவர் வேறுபாட்டைக் காட்டும் செண்பகம் ராமசுவாமி (1987 : 240 – 243) அரசரவையில் நிலைத்த இடம்பெறுதல் (புறம் . 72), அரசரிடம் நட்பு கொள்ளுதல் ( பல பாடல்கள் ) , பெருமித உணர்வை வெளிப்படுத்துதல் ( புறம் . 159, 162, 25,211), சான்றோர் எனும் சிறப்புப் பெறுதல் (புறம் . 218) எனும் சிறப்புகளைப் புலவர்களுக்கு மட்டுமே உரியனமாகக் காட்டியுள்ளார்( மேலது ) இவ்வகையில் புலவர்கள் அரசு எனும் அமைப்பு உருவான சூழலில் அரசனுக்கும் அவன் அரசுக்கும் அறிவுரை வழங்கும் உயர்ந்தோராய் உயர்ந்துள்ளனர்.

சங்க இலக்கியங்களில் பாணர்(ன்) புலவர்(ன்) எனும் இரு பெயர்களும் ஆட்சி பெற்றுள்ளன. பாணர் எனும் சொல் 130 இடங்களிலும் , புலவா் எனும் சொல் 143 இடங்களிலும் ஆட்சி பெற்றுள்ளன. அக இலக்கியங்களில் பாணர் காதலர்களான தூதுவர்களாகவும் இடம்பெற்றுள்ளமையால் பாணர் எனும் சொல்லாட்சி பரவலாய் இடம் பெற்றுள்ளது இவ்விரு சொற்களோடு பரிசினர் , பாடுநர் , இரவிலர் எனும் சொற்களும் இடம்பெற்றுள்ளன, பாணர் புலவர் எனும் இருவரும் இருவேறுபட்ட சமுதாயங்களோடு தொடர்புடையவராய் இருந்துள்ளனர். பாணர் பழைய இனக்குழுச் சமுதாயங்களோடும் புலவர் புதிய நிலவுடைமைச் சமுதாயங்களோடும் தொடர்புடையவர்கள்.

### பாணரும் இனக்குழுச்சமுதாயமும்

சீறூர் மன்னர்களைப் பற்றிய பாடல்களில் புறநானூற்றில் 335 ஆம் பாடல் சீறூர் மன்னர் சமுதாக் குடிகளாய் கடம்பன் எனும் நான்கு வகை குடிகளைக் குறிப்பிட்டுள்ளது.

இப்பாணர் சீறூர்மன்னர்களோடு இருந்ததையும் புறநானூற்றுப்பாடல் காட்டுகிறது. வேந்துவிடுதொழில் ஈடுபட்டு இறக்கும் தருவாயில் உள்ள ஒரு சீறூர்த் தலைவனின் வேல் துடியன் கையிலும் கேடயம் பாணனின் கையிலும் இருந்தது (புறம் . 285 ) எனக் குறிப்பிடுவதன் மூலம் சீறூர் மன்னனோடு துடியன், குடிகளுக்கு இருந்த தொடர்பு காட்டப்பட்டுள்ளது. புறநானூற்றின் 302 ஆம் பாடலில் புன்செய் நிலச் சீறூர்த் தரைலவன் ஒருவன் வேந்துவிடு தொழில் மேற்சென்ற திரும்பி வந்து விறலியருக்குப் பொன்னாலான பூக்களையும் பாணர்களுக்கு கரம்பை சீருகளையும் கொடுத்தது. குறிப்பிடப்பட்டுள்ளது 316-ம் பாடலில் ‘அவன் எம் இறைவன் யாம் அவன் பாணர்’ என சீறுர் மன்னரோடு பாணருக்கு இருந்த உறவு காட்டப்பட்டுள்ளது. சீறூர் மன்னர் ஊரில் பாணரின் யாழ் நரம்பின் கோதுகளுடன் மயில் பீலியால் குருவிக்கூடு கட்டப்பட்டிருந்தது’ ( புறம் . 318 ) எனும் செய்தியும் பாணர் சீறூர்க்குடிகள் என்பதைக் காட்டுகிறது.

இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்து

பாணரொ டிருந்த நாணுடை நெடுந்தகை (புறம் . 324 :11 – 12)

என சீறுர் மன்னன் தன் குடிசையின் பந்தலின் கீழ் பாணரோடு இருந்த நிலையும் உரைக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் பாணர்க்குடி சீறுர் மன்னர் சமுதாயத்தின் குடிகள் என்பதைக் காட்டுகின்றன.

இதற்கு மறுபுறத்தே சீறூர் மன்னரை நாடிப் பரிசில் வேண்டிப் பாணர் வந்த நிலைகளும் இப்பாடல்கள் சிலவற்றில் காட்டப்பட்டுள்ளன. ‘நேற்று வேந்துவிடுதொழில் மேற் சென்ற சீறூர்மன்னன் இன்று வந்து நின் பாடினி மாலை அணிய உனக்குப் பொற்றாமரை சூட்டுவான்’ (புறம் . 319 ). பாணனே வேந்துதரு விழுக்கூழ்களைப் பரிசிலருக்குத் தரும் சீறூர்மன்னர் ஊரில் தங்கிச் செல்.’ (320) கடனாளிகளுக்குக் கொடுத்தது போக எஞ்சிய உணவுப் பொருட்களைப் பசித்த பாணர் உண்டு செல்கின்றனர்’ (327) ‘சீறூர்மன்னரைப் பாடிச் சென்றால் அரிசி உணவைப்பெறுவாய் ‘ (328) எனப் பாணர்களும் சீறூர்மன்னர்களிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு பாணர் சீறூர்குடியாய் இருந்ததையும் சீறூர்மன்னரை நாடி வந்ததையும் புறநானூற்றுப் பாடல்கள் காட்டுகின்றன.

பாணரும் ஆற்றுப்படையும்

ஆற்றுப்படைகள் மிகப்பெரிய சமுதாய மாற்றத்தைக் காட்டும் பாடல்களாய் உள்ளன. தொல்காப்பியத்தில் கூத்தர், பாணர்,பொருநர், விறலியர் ஆற்றுப்படைக்கு உரியோராய் வரையறுக்கப்பட்டுள்ளனர்.(புறத்.30). சங்க இலக்கியங்களில் பாணாற்றுப்படை (புறம். 68, 69,70,138, 141, 155, 180, பதி.67, பத்துப்பாட்டில் பெரும்பாண், சிறுபாண் ஆற்றுப்படைகள்) விறலியாற்றுப்படை (புறம். 64, 103, 105, 133, பதி. 40, 49, 57, 60,78,87,) பொருநராற்றுப்படை (பத்துப்பாட்டு), கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்), என்பன இடம்பெற்றுள்ளன. இவற்றுடன் புறநானூற்றுப்படையில் புலவறாற்றுப்படையும்(48, 49, 141) இடம் பெற்றுள்ளது. இந்த ஆற்றுப்படைப் பாடல்கள் எல்லாம் உடைமைச் சமுதாயங்களான

வேந்தர், குறுநில மன்னர் சமுதாயம் சார்ந்த புலவர்களால் அவர்களிடம் ஆற்றுப்படுத்தும் இயல்பினவாகவே பாடப்பட்டுள்ளன.

“இனக்குழு மக்களிடையே, தொழிலில் பிரிவாகத் தோன்றி இக்கலைஞர்கள் நிலப்பிரபுத்துவத் தோற்றக்காலத்தில், இனக்குழு மக்களின் தலைவர்களிடம் புதிதாகத் தோன்றி வளர்ச்சி பெற்ற மன்னர்களிடமும் பிழைப்பு நாடிச் சென்றனர்” (கா. சுப்பிரமணியன், 1993 : 103) என்னும் கருத்தில் உண்டையுண்டு என்றாலும் இவர்களே இனக்குழுச் சமுதாயக் குடிகளாய் இருந்ததையும் ஆற்றுப்படை எனம் இலக்கிய மரபு இனக்குழுச் சமுதாயத் தவர்களைப் பற்றிய பாடல்களில் இடம்பெறவில்லை என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.வன்புலச்சமுதாயம் பற்றிய பாடல்கள் சிலவற்றில் பாணர் போன்றோரைச் சீறூர் மன்னர்களிடம் ஆற்றுப்படுத்தும் நிலையிலமைந்த பாடல்கள் ( புறம் . 316, 321, 328). இடம் பெற்றிருந்தாலும் அவை ஆற்றுப்படை எனும் துறையினவாய்க் குறிப்பிடப்பெறாமல் மூதின் முல்லை , வல்லாண் முல்லைத் திணையினவாகவே குறிப்பிடப்பெற்றுள்ளன. ஆற்றுப்படுத்தல் எனும் பண்பே உடைமைச்சமுதாயச் செயற்பாடாய்க் காட்டப்பட்டுள்ளது.

வேந்துவிடுத் தொழிலுக்கு ஆட்பட்ட சீறூர் மன்னர்கள் சிலர் வென்ற வேந்தரிடம் தண்ணடை பெற்றதைப் போல் தோற்ற வேந்தரைச் சார்ந்த சீறூர் மன்னர்கள் வறுமை நிலைக்கு ஆட்பட்டுள்ளனர். இந்தச் சமுதாயம் சார்ந்த பாணர்கள் ஏனைய சீறூர் மன்னர்களிடம் ஆற்றுப்படுத்தப்பட்டதைத்தான் சீறூர் மன்னர் பற்றிய மூதின் முல்லை, வல்லாண் முல்லைப் பாடல்கள் காட்டுகின்றன. (புறம் 319, 320, 328), சீறூர் மன்னனது ஊரில், புலவர்களே தங்கி செல்வீர்களாக’ எனும் பாடல்(புறம். 333) புலவர்களும் சீறூர் மன்னர்களிடம் வந்ததைக் காட்டகிறது.

இனக்குழுச் சமுதாய எச்சங்கள் அழிந்து பொதுபண்பு குறைந்து தனியுடைமைப் பண்புகள் மேலோங்கிய நிலையில், சீறூர் மன்னர்களும் தண்ணடைப் பெற்றுப் படைத்தலைவர்களாய் உயர்ந்த நிலையில் வறுமை நிலைக்கு ஆட்பட்ட பாணர், வேந்தர், குறுநிலமன்னர் பலரிடம் பரிசில் வேண்டிச்சென்றுள்ள நிலையை ஆற்றுப்படை இலக்கியங்கள் காட்டுகின்றன. பாணாற்றுப்படைப் பாடல்கள் பெரும்பாலும் முதலில் பாணரது வறுமை நிலையைச் சித்தரிப்பனவாகவே உள்ளன.

உடும்புரித் தன்னவென்பெழு மருங்கிற்

கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது

சில்செவித் தாகிய கேள்வி நொந்துநொந்

தீங்கெவன் செய்தியோ பாண ( 6 : 1 - 4 )

உள்ளி வந்த வள்ளுயிர்ச் சீறியாழ்

சிதாஅ ருடக்கை முதாஅரிப் பாண ( 138 : 4, 5 )

காரெ னொக்கற் கடும்பசி யிரவல ( 141 : 6 )

உணர்வோர் யாரென் னிடும்பை தீர்க்கெனக்

கிளக்கும் பாண ( 155 : 2,3 )

இன்மை தீரவேண்டி னெம்மொடு

நீயும் வம்மோ முதுவாயிரவல ( 180 : 8, 9 )

எனும் புறநானூற்றுப் பாடல்கள், பாணனின் அவன் சுற்றத்தின் வறுமை நிலையைக் காட்டுவனவாகவே உள்ளன. சிறுபாணாற்றுப்படையில்

உணர்வோர் யாரென் னிடும்பை தீர்க்கெனக்

கிளக்கும் பாண ( 155 : 2,3 )

இன்மை தீரவேண்டி னெம்மொடு

நீயும் வம்மோ முதுவாயிரவல ( 180 : 8, 9 )

எனும் புறநானூற்றுப் பாடல்கள், பாணனின் அவன் சுற்றத்தின் வறுமை நிலையைக் காட்டுவனவாகவே உள்ளன. சிறுபாணாற்றுப்படையிலும் ‘தன்னை வெறுத்தல் மிக்க வருத்தத்துடன் கூடிய வறுமை நின்னை ஆற்றுப்படுத்தலால் வழிநடை வருத்தம் தீர்ந்து இருந்த முதுவாய் இரவலனே’ (39, 40 ) எனப் பாணனின் வறுமைக் காட்டப்பட்டுள்ளது. பெரும்பாணாற்றுப்படையிலும் 917 -22 ) பெரும்பாணர் சுற்றத்தின் வறுமை பாடப்பட்டுள்ளது. இனக்குழுச் சமுதாயத்தின் எச்சமாய் இருந்த பாணர்குடி வறுமை நிலைக்கு ஆட்பட்டுப்போய் உணவைத் தேடிச் சுற்றத்துடன் அலைந்த சமுதாய மாற்றத்தை இந்த ஆற்றுப்படைப் பாடல்கள் காட்டுகின்றன.

சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற புலவர்களுள் இந்தப் பாணர் மரபு வழிப்பட்ட புலவர்களும் இருந்துள்ளனர். யார் யார் பாணர் குடியினர் என்பதை உறுதியாய் கூறவியலாது என்றாலும் வாய்மொழி மரபினவாய்த் தோன்றிய சங்கப் பாடல்களில் யாழிசைத்துப் பாடவல்ல பாண்குடிப் புலவர்களும் இருந்திருக்க மிகவும் வாய்ப்புண்டு.

“புலவர், பாணர், அகவுநர், கூத்தர் முதலியோர் பல்வேறு வகைகளிலே மன்னர் பெருமையைப் புகழ்ந்து மக்கள் மத்தியில் அரசுக்கு ஆக்கந் தேடினர். பாணருக்குப் பொருள் வழங்குவதைப் பாண்கடன் என்று இலட்சியப்படுத்தினர் மன்னர்” (1966 : 37) எனும் க.கைலாசபதி கூற்றும்,

“ மன்னரின் பரிவாரக் குழுவில் ஒருவராக இடம்பெறும் பாணர்கள் போர் வேட்கைப் புகழை மன்னரிடமும் வீரர்களிடமும் குறிபிட்ட அளவில் தோற்றுவித்து அதை வளர்த்தெடுப்பவராக இருந்துள்ளனர். அமைதி காலங்களில் அரசரிடம் அவர்தம் வீரரிடமும் அவர்தம் முன்னோர் வீரச்செயல்கள் பற்றிய கதைகளை எடுத்துக் கூறி மகிழ்விப்பதுடன் போர்க் காலத்தே படையினருடன் சென்று தம் போர்ப் பாடல்கள் மூல் முன்னோரின்

வன்மையான வீரச் செயல்களிலும் மேமடபட வேண்டுமென்று எழுச்சி ஊட்டுபவர்களாகவும் இருந்துள்ளனர். இவர்கள் சங்கப் பாடல்களில் பாணர், கூத்தர், பொருநர், விறலியர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.” (66 : 132) எனும் கனக சபையின் கூற்றும் பாணர்மரபில் வந்த புலவர்கள் இருந்ததைக் காட்டுகின்றன

புலவரும் உடைமைச்சமுதாயமும்

“பண்டைய கிரேக்க, ஜெர்மானிய, எகிப்திய பமூகங்களிலே அரசு உதயமாகிய வீரயுகத்தலே புலவர்கள் மன்னர் குடைநிழலில் ஒதுங்கியதைப் போலவே தமிழகத்திலும் பாணரும், கூத்தரும், அகவரும் ஒதுங்கின் எனும் உண்டை உறுதிப்படுகிறது.” (1966 : 49)

“தமிழ்ப்புலவரைப் போற்றிய பழந்தமிழ் மன்னரின் இலக்கிய ஆர்வத்தையும் வற்றன்மையையும் தமிழ் வரலாற்றாசிரியர் பெரிதும் புகழ்வர். ஓப்பிலக்கிய நோக்குடன் நிலைமையைப் பார்க்கும் பொழுது, ஆமல்நோக்கிற்குத் தெரியும் கொடைச் சிறப்பிற்கு அடிப்படையாக ஆளும் வர்க்கத்திற்கு அனுசரணையாகப் புலவன் பிரச்சாரஞ் செய்த பணி தெரிய வருகிறது.” 91966 : 34 ) எனும் க.கைலாசபதியின் கூற்று புலவர் மன்னர் உறவுக்கு அடிப்படை ஆதாரமாய்ப் பிரச்சாரமும் கொடையும் அமைந்ததைக் காட்டுகிறது.

1. வன்புலச் சமுதாயத்தை சீறூர் மன்னரை மட்டும் பாடியோர்

| புலவர் | | புறம் பாடல் எண் |
|---|---|---|
| அடைநெடுங்கல்வியார் | - | 283 |
| அள்ளூர் நன்முல்லையார் | - | 306 |
| ஆலங்குடிவங்கனார் | - | 319 |
| ஆலியார் | - | 298 |
| உறையூர் இளம்பொன் வணிகனார் | - | 264 |
| உறையூர் முதுகூத்தனார் | - | 331 |
| எருமை வெளியனார் | - | 273, 303 |
| ஒக்கூர் மாசாத்தியார் | - | 279 |
| ஒரூஉத்தனார் | - | 275 |
| ஓரம்போகியார் | - | 284 |
| கோடைபாடிய பெரும்பூதனார் | - | 259 |
| தங்கால் பொற்கொல்லனார் | - | 326 |
| நெடுங்கழுத்துப்பரணர் | - | 291 |
| நொச்சிநியமங்கிழார் | - | 293 |
| பாலைபாடிய பெருங்கடுங்கோ | - | 282 |
| பூங்கண் உத்திரையார் | - | 277 |
| பொன்முடியார் | - | 299, 310, 312 |
| மதுரை அறுவை வணிகன் | - | 329 |
| இளவேட்டனார் | - | |

| | | |
|---|---|---|
| மதுரை இளங்கண்ணி கௌசிகனார் | - | 309 |
| மதுரைக் கணக்காயனார் | - | 330 |
| மதுரைக் கள்ளிற் கடையத்தனார் | - | 316 |
| மதுரைத்தமிழ்க்கூத்தனார் | - | 334 |
| மதுரைப் பூதன் இளநாகனார் | - | 276 |
| மதுரை வேளாசான் | - | 305 |
| மோசி சாத்தனார் | - | 272 |
| வடமோதங்கிழார் | - | 260 |
| விரிச்சியூர் நன்னாகனார் | - | 292 |
| விருச்சியூர் நக்கனார் | - | 332 |
| வீரை வெளியனார் | - | 320 |
| வெள்ளைமாளர் | - | 296 |
| வெறிபாடிய காமக்கண்ணியார் | - | 271, 302 |
| வேம்பற்றூரக் குமரனார் | - | 317 |

2. சீறூர்மன்னர் - குறுநில மன்னர் ஆகியோரைப் பாடியோர்

| புலவர் | சீறூர்மன்னர் பற்றிய புறநானூற்றுப் பாடல் | குறுநில மன்னர் | புறம். பாடல் எண் |
|---|---|---|---|
| சேனாட்டு முகையலூர் சிறு கருந்தும்பியார் | 265 | வல்லார்க்கிழான் பண்ணன் | 181 |
| பெருந்தலைச் சாத்தனார் | 294 | இளம்கண்டீரக்கோ<br>இளம்விச்சிக்கோ<br>கடியநெடு வேட்டுவன் மூவன்<br>குமணன் | 151<br>151<br>205<br>209<br>164, 165 |

3. வன்புலச்சமுதாயத்துடன் சீறூர்மன்னர் வேந்தர் ஆகியோரைப் பாடியோர்

| புலவர் | சீறூர்மன்னர் பற்றிய புறநானூற்று | வேந்தர் | புறம் பாடல் எண் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| | பாடல் | | |
| ஆலத்தூர் கிழார் | 324 | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் | 34, 36, 69 |
| உலோச்சனார் | 258 | சோழன் நலங்கிள்ளி<br><br>இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி | 225<br><br>377 |
| உறையூர் முதுகண்ணன் சாத்தனார் | 325 | சோழன் நலங்கிள்ளி | 27 - 30 |
| ஐயூர் முடவனார் | 314 | பாண்டியன் கூட காரத்துத் துஞ்சிய நன்மாறன்<br><br>சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் | 51<br><br>228 |
| கழாத்தலையார் | 270 | சேரமான் குடக்கோ சேரல் இரும்பொறை<br><br>சோழன் வேல்பல் தடக்கை பெருவிறற்கிள்ளி | 62<br><br>62 |
| காக்கைபாடினியார் நச்செள்ளையார் | 278 | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | பதிற்றுப்பத்து ஆறாம் பத்து |
| கோவூர்கிழார் | 308 | சோழன் நலங்கிள்ளி | 31, 33, 68, 382, 386, 400. |

| | | | |
|---|---|---|---|
| | | சோழன் குளமுற்றதடதுத் துஞ்சிய கிள்ளிவளவன்<br><br>நெடுங்கிள்ளி<br><br>நலங்கிள்ளி<br><br>நெடுங்கிள்ளி சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் | 41, 46, 70<br><br>44, 47<br><br>45<br><br>373 |
| சாத்தந்தையார் | 287 | சோழன் போர்வை கோப்பெருநற்கிள்ளி | 80 - 82 |
| மதுரைப்பேரால வாயர் | 262 | பெருங்கோப்பெண்டு | 247 |

4. சீறூர்மன்னர், குறுநில மன்னர், வேந்தர் ஆகியோரைப் பாடியோர்

| புலவர் | சீறூர்மன்னர் புறப்பாடல் | குறுநில மன்னர் | புறம். பாடல் எண் | வேந்தர் | புறம். பாடல் எண் |
|---|---|---|---|---|---|
| அரிசில் கிழார் | 281, 285 | பேகன் | 146 | பெருஞ்சேரல் இரும்பொறை | பதிற்றுப்பத்து எட்டாம் பத்து |
| ஆவூர் மூலங் | 261,301 | கௌணியன் விண்ணந்தாயன் | 166<br>177 | பாண்டியன் இலவந்திகைப் | 196 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கிழார் | | மல்லிக்கிழான் காரியாதி<br><br>பாண்டியன் கிரஞ்சாத்தன் | 178 | பள்ளித்துஞ்சிய நன்மாறன்<br><br>சோழன் குள முற்றத்துத் துஞ்சிய நன்மாறன் | 38, 40 |
| உறையூர் மருத்துவன் தாமோதரனார் | 321 | பிட்டங் கொற்றன் | 170 | சோழன் குராப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் | 60 |
| ஔவையார் | 269, 286, 290, 295, 311 | அதியமான் நெடுமானஞ்சி<br><br>தொண்டைமான் பொகுடெழினி | 87-94<br>97-101<br>104, 26<br><br>232, 235, 315<br>390<br><br>95<br>96,102<br>392 | சேரமான் மாரி வெண்கோ<br><br>பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி | 367 |
| பெருங்குன்றத்தூர் கிழார் | 318 | பேகன் | 147 | சேரமான் குடக்கோச்சேரல் இரும்பொறை | 210 211 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி<br>இளைஞ்சேரல் இரும்பொறை | 266<br>பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்து |
| மாங்குடி கிழார் | 313 335 | வட்டாற்று எழினியாதன் | 396 | பாண்டியன் தலையாலங்கானத்துத் செறுவென்ற நெடுஞ்செழியன் | 24, 26, 372 |
| மாறோக்கத்து நப்பச்சலையார் | 280 | மலையமான் திருமுடிக்காரி | 126<br>174 | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்<br>மலையமான் சோழியஏனாதி திருக்கண்ணன் | 37-39<br>226 |

வன்புலச்சமுதாயத்தைத் சீறூர்மன்னர் சமுதாயத்தைப் பாடிய எந்தப் புலவரும் அந்தச் சமுதாயத்தைக் குறைகூறிப் பாடவில்லை. எல்லோருமே அந்தச் சமுதாயத்தை

உயர்வாகவே பாடியுள்ளனர். குறுநில மன்னருக்கும் சீறூர்மன்னருக்கும் நேரடி தொடர்பில்லை. சில சீறூர்மன்னர் வேந்தரிடம் நிலம்பெற்றுப் படைத்தலைவராய் உயர்ந்த நிலைகளை முன்னமேயே கண்டோம். சீறூர்மன்னர் வேந்தர் இருவருக்கும் இடையே பாலமாய் நின்று வேந்துவிடு தொழிலால் சீறூர்மன்னரை வேந்தருடன் இணைத்த புலவர்களும் உள்ளனர். இந்த மூவகைச் சமுதாயம் நடைமுறைகளையும் நேரடியாய் உணர்ந்த இவர் இவர்களிடம் மூவகைச் சமுதாயத்தையும் பற்றிய மாறுபட்ட மதிப்பீடும் இருந்துள்ளது. சீறூர்மன்னர் சமுதாயம் உயர்வாகவும் குறுநில மன்னர் சமுதாயம் இரவலரை வாழ்வித்தச் சமுதாயமாகவும் பொதுமைப் பண்புடன் உடைமைப் பண்பும் நிலவிய சமுதாயமாகவும் காட்டப்பட்டுள்ளது. இவ்விரண்டிற்கும் மறுதலையாய்த் தான், தனது என்ற பண்போடு நிலவுடைமைச் சமுதாயம் காட்டப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு கொடை எனும் பண்புவழி வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.

உடைமைச் சமுதாய வளர்ச்சகி காலகட்டத்தில் இனக்குழுச் சமுதாயம் எச்சங்களை, சிறப்பாகக் கூட்டுண்ணுதலை இருவேறு நிலைகளில் காண்கிறோம்.1. விருந்தோம்பல், 2. கொடை என்பன அவ்விருநிலைகள் விருந்தோம்பல் எனும் பண்பு வேறு பிற மன்னர்களிடம் ஆங்காங்கே (ஆற்றுப்படைகளில்) காணப்பட்டாலும் சிறப்பாகச் சீறூர்மன்னரிடம் இப்பண்பு மேலோங்கி இருந்தது. விருந்து பெற வேண்டி நடுக்கல்லை வழிபட்ட சீறூர்த் தலைவியின் பண்பே இதற்குச் சான்று. இரண்டாம் இயலில் இது விரிவாகப் பேசப்பட்டுள்ளது. அடுத்த நிலையில் கொடைப்பண்பு கடையெழு வள்ளல்களிடையே மிக்கிருந்தது. இவர்களின் சிறப்பு புலவர்களின், இரவலர்களின் வாழ்விப்பாயக் காட்டப்பட்டுள்ளது. அதியமானின் சிறப்பைப் பாடும் ஔவையார்,

அருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ

இரப்போர் கையுளும் போகிப்

புரப்போர் புன்கண் பாவை சோர

அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்

……………………………

நீயாது வீயு முயிர்தவப் பலவே (புறம்.235:10-20) என அதியமானின் இழப்பைப் பாணர், இறப்போர், புலவர் ஆகியோரின் வாழ்விப்பாய்க் காட்டியுள்ளார். பிறருக்கு ஈயாமல் இறந்துபடும் உயிர்கள் இவ்வுலகத்தில் பல உள எனவும் பாடுகிறார.

குமணனிடம் பரிசில் வேண்டி செல்லும். பெருஞ்சித்திரனார் பாரி, ஓரி, மலையமான், திருமுடிக்காரி, அதியன், பேகன், ஆய், நள்ளி எனும் எழுவரும் இறந்தபின் பாடிவருநர், பிறர் ஆகியோரது துன்பத்தைத் தீர்க்க வல்லவன் நீயே என உன்னிடம் வந்தேன்.( புறம் ,158) எனப்பாடுவதும், கொடைப்பண்பே இவர்களின் தலையாய பண்பாய் இருந்ததைக் காட்டுகின்றது. இதைப்போலவே சிறுபாணாற்றுப்படையிலும் ஏழுவள்ளல்களின் சிறப்பு

குறிப்பிடப்பட்டுள்ளது (84 -13). இக்கொடைச்செயல் 'எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்' (113) எனச் சிறப்பித்து கூறப்பட்டுள்ளது. இவ்விருவகை மன்னர்களின் இவ்விருவகை இயல்புகளும் புலவர்களால் வெகுவாய் பாடப்பட்டுள்ளன. ஆயினும் புரத்தல் வல்லவன் வாழ்கவன் ராளே (புறம்.103: 12) என அதியனும்

முந்நூ றூர்ததே் தண்பறம்பு நன்னாடு

முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர் ( புறம் .110 :3-4) எனவும், 'மழை போல் உலகைப் பாதுகாப்பவன்' எனவும் பாரியும் 'நின் நாடு அந்தணருடையது, மூவேந்தருள் ஒருவர் பொருட்டு போர்மேல் செல்லுகையில் அவர்கள் தரும் பொருட்கள் இரவலருடையன, நின் மனைவியது தோளைத் தவிர உனக்கென எதுவும் இல்லாதவன்' (புறம். 122) எனக் காரியும் 'இம்மையில் செய்தது மறுமைப்பயன் கருதியது எனும் அறவிலை வணிகன் ஆய் அல்லன், சான்றோர் சென்ற நெறிவழிப்பட்டது. அவனது கொடைப்பண்பு(134) என ஆயும் 'கொடுத்து ஓம்புதலைத் தலைக் கடனாக கொண்டவன்' (149) என நல்லியும் 'பாதுகாவாத வரையறுக்காத வள்ளன்மை உடையவன்' (152) என ஓரியும்

எத்துணை ஆயினும் மீத்த னன்றென

மறுமை நோற்கின்றோ வன்றே

பிறர் வறுமை நோக்கின் றவன் கைவண்மையே (புறம். 141:13-15) என மறுமை பயனைக் கருதாமல் பிறர் வறுமையைப் போக்குதலை அடிப்படை நோக்கமாய் கொண்டது அவன் கொடைப்பண்பு எனப் பேகனும் புகழப்பட்டுள்ளனர்.

வரையறையில்லாக கொடை

எமக்கும் பிறர்க்கும்

யாருக்கும் மீய்ந்து துயிலேற் பினனே (புறம் .317 : 6 -7)

என வரையறையின்றி சீறூர்மன்னர் யாவருக்கும் கொடுத்ததைப் போல் குறுநில மன்னர்களிடமும் வரையறுக்காதக் கொடைப்பண்பு இருந்ததாகப் புலவர்கள் பாடியுள்ளனர். எருக்கம் பூவைக்கூட கடவுள் ஏற்றுக்கொள்வதைப் போல் அறிவில்லாதவர் உண்மையான குணங்களை உடையவர் சென்றாலும் கொடை அளிக்கும் கடமை பூண்டவன் எனப் பாரி புகழப்பெறுகிறான். பரிசிலர் யாவரும் எடுத்துக் கொள்ளத்தக்க தனக்கென வரையறுத்துக் கொள்ளாத உடைமை உரிமை உடையவன் என ஆய் புகழப்பட்டுள்ளான். இவ்வாறு வரையறை இல்லாதகட கொடை வள்ளல்களிடம் மிகுதியாக இருந்தமை பரவலாய்ப் பாடப்பட்டுள்ளது.

## வரிசை அறிதல்

இனக்குழுச் சமுதாய எச்சங்களாய் நின்ற விருந்தோம்பலும் கொடைமையும் எல்லோரையும் விருந்தினராய் ஏற்றல், யாவர்க்கும் கொடை வழங்கு வழங்குதல் எனும் நிலையில் எல்லோருக்கும் பொதுவானவையாய் இருந்த நிலை வேந்தரின் உடைமைச் சமுதாயத்தில் மாற்றம் அடைகிறது. வரிசை அறிதல் எனும் பண்பு மன்னர்களிடம் வேண்டப்படுவதுடன் அறிவுறுத்தவும் வலியுறுத்தவும்படுகிறது. வரிசை என்னும் சொல் சங்க இலக்கியத்தில் 10 இடங்களில் வந்துள்ளது. இச்சொல் மேம்பாடு, (புறம். 53:14, 206:4), பாராட்டு (கலி.85-35), முறைமை (புறம்.398) எனும் பொருள்களோடு தரம், தகுதி (சிறுபாண். 217), (புறம் .184:4), எனும் பொருளிலும் ஆளப்பட்டுள்ளது. போர்ச்சூழலில் முறைமை எனும் கொடைச்சூழலில் தகுதி எனும் பொருளிலும் ஆளப்பட்டுள்ளது.

வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை (புறம்.47:6)

வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்துத்தாம்

உள்ளியது முடிக்கு முரனுடை யுள்ளத்து

வரிசைக்கு வருந்துமபி பரிசில் வாழ்க்கை (புறம்.26:2-4) எனக் கோவூர் கிழாரும் ஔவையாரும் முறையே நலங்கிள்ளியிடம் அதியமான் நெடுமான்ஞ்சியிடம் தத்தம் தகுதிக்கேற்ப கொடை தர வேண்டிய இயல்பை வற்புறுத்தியுள்ளனர். கபிலர் ஈதல் எளிய செயல், தகுதி அறிதல் (வரிசை அறிதல்) அறிய செயல், எனவே இவ்விரண்டில் அரிதான வரிசை அறிதலை கைக்கொண்டு அனைவரையும் ஒன்றாய் கருதி கொடை தரும் பொதுமை நோக்கை புலவர்களிடம் தவிர்ப்பாயாக எனக் கொடை பொதுமையைத் தவிர்க்க அறிவுறுத்தி தகுதி உடையோருக்கு மட்டுமே கொடை தரும் பண்பை வற்புறுத்துகிறார். பாரியைப் பற்றி பாடுகையில் அறிவில்லாதவர், புண்மைக் குணம் உடையோர் சென்றாலும் பாரி பரிசில் தருவான் (புறம். 106) எனப் பாடிய கபிலர் புலவர்களிடம் பொதுநோக்கை ஒழிக்க வேண்டும் என காரிடம் வலியுறுத்துவது காலம் மாற்றத்தால் நேர்ந்த கருத்து மாற்றமாக உள்ளது. இந்த வரிசை அறிதல் எனும் பண்பு புலவர்களிடையே வரிசை அறிகம் எனும் இயல்பை வலியுறுத்தியோர், பொதுநோக்கை வலியுறுத்தியர் எனும் இருவேறுபட்ட நிலையினர் உருவாகக் காரணமாய் இருந்துள்ளது. வரிசை அறிதல் எனும் செயலால் புறம் தள்ளப்பட்ட புலவர்கள் வறுமை நிலைக்கு ஆட்பட்டு போவதையும் சீறூர்மன்னர் குறுநில மன்னர் ஆகியோரின் கொடை மாண்பை உயர்த்திப் பேசி வேந்தரை தாழ்த்தி பேசுவதையும் புறநானூற்றுப் பாடல்களில் காணலாம்.

பரிசில் கடாநிலை பரிசில்துறைப் பாடல்கள்

ஒவ்வொரு புறத்துறைக்கும் பின்னாலும் ஒரு சமுதாய மாற்றம் இருப்பதைப்போல் அரசனிடம் பரிசில் பெறுதல் தொடர்பான பரிசில் கடாநிலை, பரிசில் விடை, பரிசிற்றுறை, பரிசினிலை எனும் பரிசிலோடு தொடர்புடைய பலதுறைகளும் சமுதாய மாற்றத்தைக் காட்டுவதோடு புலவர், அரசர் மனநிலைகளையும் உறவு நிலைகளையும் காட்டுவனவாய் உள்ளன.

பாடாண்திணை உடைமைச்சமுதாயத் தோற்றுவாயச் சூழலில் நிகழ்ந்த பல்வேறு சமுதாய மாற்றங்களையும் காட்டுவதாய் உள்ளது. இத்திணையின் துறையாகத்தான் ஆற்றுப்படையும் (தொல். புறத்.30) இடம்பெற்றுள்ளது. இதைப்போலவே மேற்குறித்த துறைகளும் இத்திணை சார்ந்தனவாகவே உள்ளன. தொல்காப்பியர் ‘கொடுப்போர் ஏத்திக் கொடாஅர் பழித்தல்’ சேய்வரல் வருத்தம், வீட வாயில் காவலற்க்கு உரைத்த கடைநிலை, செவியறிவுறூஉ’, ‘பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலை’ (புறத்.29) இருவகை விடை எனும் பல்வேறு துறைகளையும் பாடாண்திணையில் குறிப்பிட்டுள்ளார் (புறம்.30). இத்துறைகளில் பரிசில் நீட்டித்த தலைவனிடம் தன் வறுமையைக் கூறிப் புலவன் பரிசில் கேட்டல் பற்றிய பரிசில்கடா நிலையும் மன்னர்களிடம் தாம் கருதிய பரிசில் இதுவெனக் கூறி வேண்டும் பரிசில் துறையும் வரிசைஅறிதல் எனும் செயல்பாட்டின் விளைவாய் நேர்ந்த துறைகளாய் உள்ளன. இந்தத் துறைகளில் அமைந்த பாடல்கள்,

1. புலவர்களின் வறுமைச்சூழல்
2. வேந்தரை இகழ்தல்
3. சீறூர்மன்னரின் மேன்மை காட்டுதல்
4. வள்ளல்களின் பெருமை பாடுதல்

எனும் பல்வேறு நிலைகளையும் காட்டுவனவாய் உள்ளன.

## வறுமைச் சூழல்

பரிசில்கடாநிலைத் துறையினவாய்க் காட்டப்பட்ட பல பாடல்களில் (புறம். 136, 139, 158, 160, 164, 210, 211, 266) புலவர்களின் வறுமைநிலை வெளிப்படையாய் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. புலவர்கள் தம் குடும்பம், சுற்றத்தின் வறுமையைக் கூறிப் பரிசில் வேண்டுகின்றனர். பேன் பகை, பசிப்பகை, ஆறலைப்போர்ப் பகை எனும் மூன்றைத் துறையூர் ஓடைக்கிழார் குறிப்பிட்டுள்ளார் (136). ‘இளைஞரும் விறலியரும் வாழ்தல் வேண்டி பொய் கூறாமல் மெய் கூறுகிறேன்’ என்கிறார் மருதன் இளநாகனார (136). ‘நூல் போல் நரைத்த தலையுடன் கோல் கொண்டு நடக்கும் தாயும் பல சிறு பிள்ளைகள் பிசைந்து பாலுண்டதால் உலர்ந்த முலையுடையவளாய் குப்பை வேளையை உப்பின்றி வேகவைத்து தின்னும் மனைவியும் மனம் மகிழ பரிசில் நல்கு’ (159) எனவும், உணவு இல்லாமையால் வாடிய என் மனைவியின் பால் இல்லாத வற்றிய முலைகளைச் சுவைத்து பால் பெறாதவனாய் கூழும் சோறும் வேண்டி உள்ளே ஒன்றும் இல்லாதப் பாத்திரத்தை திறந்து பார்த்து அழுதலால் புலியைக் கூப்பிட்டு அச்சுறுத்தியும் நிலவைக் காட்டியும் அழுகையைத் தணிய வைக்கும் அவளின் துயரம் தீரப் பரிசில் கொடு’ (160) எனவும் பெருஞ்சித்திரனார் தன் வறுமை சூழலை குமணனிடம் எடுத்துரைத்துப் பரிசில் வேண்டுகிறார். இவ்வாறே பெருங்குன்றூர் கிழாரும் சமைத்த சமைத்தல் செயல் பலநாட்கள் நடைபெறாததால் அடுப்பில் காளான் பூத்திருப்பதையும் பால் இல்லாத முலையைச் சுவைத்து அழும் குழந்தையின் பசிதுயரையும் எடுத்துக்காட்டிப் பரிசில் வேண்டுகிறார். மேலும் ‘உண்ண ஏதுவும் இல்லாமையால் வீட்டில் வாழும் எலிகளும் இறந்து போன பழைய சுவர்களையுடைய இல்லத்தில் பாலில்லாத

முலையைச் சுவைத்து வெறுத்த பிள்ளையுடன் வறுமையற்றிருந்த என் இல்லாள' (211) எனவும் அவர் தம் வறுமையைக் காட்டிப்பொருள் வேண்டியுள்ளார். 'கசிவுற்ற என் பல்கிளையொடு (136) எனவும் 'விறலியரும் வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்' (139) எனவும் பாணர் சுற்றம் கூறப்பட்டுள்ளது இவை பாணரின் வறுமை நிலையைக் காட்டும் பாடல்களாய் உள்ளன. வரிசைஅறிதல் எனும் செயலால் புறக்கணிக்கப்பட்ட புலவர்களின் குரல்களாய் இவை உள்ளன. 'ஊன், துவை, கறிசோறு ஆகியவற்றை உண்டு வருந்தும் செயல் அல்லது வேறு செயலறியாத வேந்தர் நாட்டுப் பாடுநர் கை மெல்லியவாய் உள்ளன' (புறம்.14) எனக் கபிலர் காட்டிய நிலைக்கு மாறாய் இப்புலவர்கள் நிலை உள்ளது.

## வேந்தர் இகழ்வும் சீறூர்மன்னர், குறுநில மன்னர் உயர்வும்

பொதுவாக வேந்தர், வள்ளல்கள் ஆகியோரின் இயல்பு முரண்பாட்டை புறநானூற்றின் பல பாடல்கள் காட்டுகின்றன.

அரசர் ருழைய ராகவும் புரைதபு

வள்ளியேூர் படர்குவர் புலவர் (154: 4-5) எனக்

கொண்கானாங்கிழானிடம் மோசிக்கீரனார் அரசர், வள்ளல் எனும் வேறுபாட்டைக் காட்டியுள்ளார்.

பணைக்கெழு வேந்தரை யிறந்தும்

இரவலர்க் கீயும் வள்ளியோன் (119:6-7)

எனப் பாரி புகழப்பட்டிருப்பதைப் போல் ஆயும் புகழப்படுகிறான். இருபாடல்களிலும் வேந்தர்களின் கொடை பண்பு புகழ் துரைக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் தாமே அனுபவிப்பவராய் வேந்தர் (முரசு கெழுச்செல்வர்) காட்டப்பட்டுள்ளனர்.

இம்மை செய்தது மறுமை காமெனும்

அறவிலை வணிக னாயலன் (134:1-2) என ஆயும்

எத்துணை ஆயினும் மீத்த னன்றென

மறுமை நோக்கின்றோ வன்றே

பிறர் வறுமை நோக்கின்றவன் கைவண்மையே (141:13-15) எனப் பேகனும் வறுமை பயன் கருதாத கொடையாளர்களாய் மறுமை பேற்றின்பொருட்டு அறத்தை விலையாக தரும் இயல்பு அல்லாதவராய் பிறர் வறுமை போக்கும் இயல்பினராய் காட்டப்பட்டுள்ளனர். வேந்தருக்கும் வள்ளல்களுக்கும் இடைப்பட்ட இவ்வகை வேறுபாட்டையும் மிக அழுத்தமாக பரிசில் கடாநிலை, பரிசில் துறைப்பாடல்கள் காட்டுகின்றன.

சேரமான் பாமளூற்றெரிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியிடம் ஊன்பொதி பசுங்குடையார்’ இன்னும் எமக்கு பரிசல் வேண்டும் என எம்மை போன்ற பரிசிலர் கேட்டால் முன்பே பரிசில் கொண்டீர்கள் என நும் போன்றவர் மறுப்பது இன்னாதது. எனவே நீ இரப்போரைப் பாதுகாப்பதை முறைமையாக மேற்கொள்’ (புறம்.23) என அறிவுறுத்துகிறார். ‘அன்பு மாறிப்போன அறன் இல்லாத பார்வையோடு கூடிய உம்மைப் போன்றவர் அருள் பண்பு மாறுபட்டவர்களானால் எம்மைப் போன்ற இரவலர் இவ்வுலகத்தே இனிப் பிறவார்’ (புறம்.214) எனச் சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறையிடம் பெருங்குன்றூர்கிழார் அறிவுறுத்துகிறார். ‘கொடுக்க இயலாததை இயலும் என்பதும் இயலுதை இல்லை என்று மறுத்தலும் பரிசலரை வாட்டுவதோடு அவை பாதுகாப்போரின் புகழ் குறையும் வாயில்கள். எம்குடியில் உள்ளோர் முன்பு எவரும் காணாத இயல்பு இது’ (புறம். 196) என ஆவூர்மூலங்கிழார் பாண்டியன் இலவந்திகைப் பள்ளதித் துஞ்சிய நன்மாறனிடம் கூறுவதும் வேந்தரின் கொடைப்பண்பில் ஏற்பட்ட மாற்றத்தையும் அவர்களின் உடைமைப் பண்பின் இயல்பையும் காட்டுவனவாய் உள்ளன. இவற்றுடன்

பாடுப வென்ப பரிசிலர் நாளும்

ஈயா மன்னர் நாண

வீயாது பரந்த நின் வசையில்வான் புகழே (புறம், 168: 20 -22)

வேந்தர் நாணப் பெயர்வேன் (புறம்.161:26)

எனும் குரல்களும் வேந்தரின் எதிர்ப்புக் குரல்களாக ஒலிக்கின்றன. ‘நீ இல்லாத உலகத்தில் புலவர்கள் இருக்க மாட்டார்கள், அருகில் சென்று பெரிய அளவில் எடுத்துரைத்தாலும் சிறிதளவும் அதை உணராத சிறப்பு எதுவும் இல்லாமல், மிகுதியாய் இருக்கும் பெரும் செல்வத்தை உடைய பெருமை இல்லாத மன்னர்களை எம் இனத்தவர் பாடாதொழிவாராக’ (புறம். 375) என ஆயைப் பாடிய ஏணிச்சேரிமுடமோசியார் கூற்றும் வேந்தர் சமுதாயத்தைப் பழித்துரைப்பதாகவே உள்ளது.

செவியறிவுறுத்தல்

உடைமையாளர்களாய், செல்வம் உடையவராய் உயர்ந்த வேந்தர்கள் குறிப்பிட்ட புலவர்களிடம் மட்டுமே தொடர்பு உடையோராய் மாறிய நிலையில் சில புலவர்கள் அவர்களுக்கு அறிவுரை கூறுகின்றனர். புறநானூற்றில் இடம்பெற்ற செவியறிவுறூஉப் பாடல்கள் அனைத்தும் வேந்தரைப் பற்றியனவாகவே உள்ளன.

| புறம். பாடல் எண் | மன்னர் | புலவர் |
|---|---|---|
| 2 | பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் | முரஞ்சியூர் முடிநாகராயர் |
| 3 | பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும் | இரும்பிடத் தலையார் |

| | | |
|---|---|---|
| | பெயர் வழுதி | |
| 5 | கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை | நரிவெரூஉத் தலையார் |
| 6 | பாண்டியன் கல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி | காரிகிழார் |
| 35 | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் | ஆவூர் மூலங்கிழார் |
| 55 | பாண்டியன் இலவ்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் | மதுரை மருதன் இளநாகனார் |
| 184 | பாண்டியன் அறிவுடைநம்மி | சிராந்தையார் |

இவற்றில் இரண்டாம் பாட்டுக்கும் ஆறாம் பாட்டுக்கும் இரண்டாம் துறையாய்த் தரப்பட்ட வாழ்த்தியல் என்பதே பொருத்தமானது. எஞ்சியவை செவியறிவுறுத்தல் தன்மையாகவே உள்ளன. (3:14,24 -26), (55:10-17) நமர்,பிறர் எனும் நிலைக்கு ஏற்பச் செயற்படாமல் வானம் போல் வரையாது வழங்கும் கொடைப்பண்பு உடையனவாய்ப் பொருள் இல்லாதவர் இல்லையாகும்படி வாழ்க' என அறிவுறுத்துவது கொடைமையின் அவசியத்தையும் எவருக்கும் கொடைதர வேண்டிய பொதுவியல்பையும் முன்னிறுத்துகிறது. 'செல்வம் அறவழிப்படுதல் வேண்டும்' என்பதும் வேந்தரிடம் அறிவுறுத்தப்படுகிறது.

ஆதனால் அறனும் பொருளு மின்பமும் மூன்றும்

ஆற்றும் பெருமநின் செல்வம்

ஆற்ற ாமைந்நிற் போற்றாமையே (புறம்.28:15-17)

ஏன உறையூர் முதக்கண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியிடத்து அறம், பொருள், இன்பம் மூன்றையும் செய்வதற்குரியதே செல்வத்துப்பயன் என்பதையும் அவ்வாறு செய்யாவிட்டால் அது நின்னைப் பாதுகாவாது என்பதையும் அறிவுறுத்துகிறார்.

குடலால் சூழபட்ட உலகம் முழுவதையும் ஆண்டவருக்கும் யாமத்திலும் நண்பகலிலும் உறங்காமல் வேட்டையாடித் திரியும் கலிவியறிவில்லாத வேடருக்கும் உண்பதும் உடுப்பதும் ஒரே அளவும் இயல்பும் உடையன. பிற எல்லாம் இருவருக்கும் பொதுவானதாகும். அதனால் செல்வத்தின் பயன் ஈதலே ஆகும். நமது எனும் பண்பு மாறி எனது எனும் தனியுடைமையும்நமர் எனும் பொதுமைப் பண்பு மாறி எமர் எனும் சுயநலப்பண்பும் உருவானச் சூழலில் கூட்டுழைப்பில் வாழ்ந்த பாணர், பாடுநர் முதலானோர் புகலிடம் தரும் நிலைக்கு இழிந்துபோனச் சூழலில்

ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென

ஏலாது கவிழ்ந்தவென் னிரவன் மண்டை

முலர்ப்போர் யாரென வினவலின் (புறம். 179:1-3)

எனப் பாணர் உணவுடேி அலைந்த சமுதாயச் சூழலில். வரிசையறிதல் எனும் பண்பு புலவர்கள் பலரையும் புறந்தள்ளிய நிலையில், குறிப்பிட்ட புலவர் சிலர் வேந்தர்களிடம் அனுக்கமாய் இருந்த சூழலில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் குரல் மேலோங்கி ஒலித்த நிலையில் பழைய இனக்குழுச் சமுதாய எச்சங்களைத் தாங்கிய உடைமையில்லாத சீறூர்மன்னரும் உடைமையுடன் வல்லண்மை பண்பும் உடைய கடையெழு வள்ளல்களும் வாழ்ந்த பொதுமைப் பண்புமிக்க வாழ்வின் பெருமைகள் உரத்துப் பாடப்பட்டுள்ளன.

வேந்தரும் குறிப்பிட்ட புலவர் சார்பும்

கபிலர், பரணர் போன்ற புலவர்களிடம் வறுமைப் புலம்பல்களையோ அனைவரையும் ஒன்றாய்க் கருத வேண்டும் என்ற குரலையோ பார்க்க இயலவில்லை. இவர்கள் வேந்தர்களுக்கும் பாரி, பேகன் போன்ற வள்ளல்களுக்கும் மிக நெருக்கமான உறவுடையோராய் இருந்துள்ளனர். இவ்வகைப் புலவர்கள் வேந்தர்களிடம் பெற்ற புறப்பாடல்கள் காட்டுவதைப் போலவே இவ்வகைப்புலவர்களே தம் புகழ்பாட வேண்டுமென வேந்தர் விரும்பியதையும் அகப்பாடல்கள் காட்டுகின்றன.

தலையானங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் 'மாங்குடி மருதன் தலைவனாக , உலகமொடு நிலைஇய பலர்புகழ்ச் சிறப்பின் புலவர் பாடாது வரைக' (புறம்.720) என வஞ்கினம் கூறுவதும் 'பல பொருள்களை அடக்கிய செய்யுள்களையும் செவ்விய நாக்கினையும் மிக்க கேள்வியறிவையும் புகழையும் உடைய கபிலன் இன்று உளன் ஆயின் நன்று எனக் கூறும் நின்வெற்றிச் சிறப்பிற்கு ஏற்பப் பாடுவேன்' (புறம் 53) என மாந்தரஞ்சேரல் இரும்பொறையிடம் பொருந்தில் இளங்கீரனார் கூறுவதும் குறிப்பிட்ட புலவர் தம் புகழைப் பாட வேண்டும் என்ற வேந்தரின் மனநிலையைக் காட்டுகிறது.

வேந்தருக்கு உற்றுழி உதவியவனும் ஓரியைக்கொன்று கொல்லிமலையைச் சேரர்க்குக் கொடுத்தவனுமாகிய மலையமான் திருமுடிக்காரிடத்தும் மாறோக்கத்து நப்பசச்லையாரிடத்தும் கபிலரால் பாடப்படுவதே சிறப்பு எனும் நிலவியிருந்ததை (புறம்.126:10-18) எனும் பாடல் காட்டுகிறது.

பிரச்சாரம்

இனக்குழுச் சமுதாய வாழ்வு முறைகளின் அழிவில் பல்வேறு இனக்குழுக்களும் சிதறுண்டு போன நிலையில்கலைஞர்களின்வாழ்வு உணவு தேடும் வாழ்வாக அமைந்துவிடுகிறது. ஆற்றுப்படைப்பாடல்கள் கலைஞர்களன் உணவுதேடும் வாழ்வையே முன்வைக்கின்றன. சிதறுண்டு போன சமதாயக் கலைஞர்களைப் பேணிய சீறூர்மன்னரும் குறுநில மன்னரும் பிரச்சாரம் என்பதைவிட இனக்குழுச் சமுதாய எச்சமான கூட்டுண்ணுதலை, விருந்தோம்பலை, கோடையையே பிரதானமாய்க் கொண்டிருக்க அரசு என்னும் அமைப்பு தரலயெடுக்கக் தொடங்கிய வேந்தர் சமுதாயத்தில் பிரச்சாரம் என்பதே

முதன்மைப்படுத்தப்படுகிறது. “அரசன் எல்லாம் வல்லவன் அல்ல என்றாலும் அவன் தெய்வத்தின் அம்சம் என்றும் அவனுக்குத் தெரியாதது யாதுமில்லை என்றும் பிரகடனப்படுத்த வேண்டியதை நன்கு அறிந்திருந்தார் கௌடில்யர்” எனக்குறிப்பிடும் தேவிப்பிரசாத் சட்டோபாத்யாயா இந்தப் பொய்க்கதையை நாடெங்கும் பரப்ப கௌடில்யர் 1. நாட்டின் ஒற்றறிந்து கூறுதல் 2.நன்கு திட்டமிட்ட பிரச்சார ஏற்பாடு எனும் இரண்டையும் குறிப்பிடுவதாய்க் கூறிள்ளார்.(ஆ.இ.238,239). அதற்கு தத்துவார்த்தமான பிரச்சார முறையை ஏற்படுத்துவது அவசியமாக உள்ளது. நம் பழந்தமிழ்ச் சான்றோர்கள் புதிதாக உருவெடுத்துக் கொண்டிருக்கும் அரசுகள் தம் மேலான ஆதிகத்தை நிலைநிறுத்தும் போராட்டத்தின் பிரச்சார அணியைத் தம் பாக்களால் நிறைவு செய்கின்றனர்” (கோ.கேசவன், 1979:79).

யானெ பெறுக அவன்தாள் நிழல் வாழ்க்கை

அவனே பெறுகவென் னாவிசை நுவறல் (புறம். 379:1,2)

எனப் புறத்திணை நன்னாகனார் பாடியுள்ளதைப் போல இப்பிரச்சாரம் கொடுக்கல், வாங்கல் எனும் முறையில் கொடை, புகழ்பாடுதல் எனும் நிலையில் அமைந்துள்ளது. இந்தப் பிரச்சாரப் பணியை ஆற்றலுடன் செய்ய வல்ல பெரும் புலவர்களையே வேந்தர் நாடியுள்ளனர்.

வல்லினும் வல்லோன் னாயினும் வல்லே

என்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த

நின்னளந் தறிமதி பெரும (புறம்.161:23,25)

எனும் பெருஞ்சித்திரனார் கூற்றும்

வல்லே மல்லே மாயினும் வல்லே

நின்வயிற் கிறக்குவ மாயின் (புறம்.126:56)

எனும் மாறோக்கத்து நப்பசலையார் கூற்றும்

வல்லா ராயினும் வல்லுந ராயினும்

வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி

அருள் வல்லை யாகுமதி (27:15 -17)

எனச் சோழன் நலங்கிள்ளியிடம் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் கூறுவதும் வல்லுநர், வல்லாதோர் எனும் நிலையில் புலவர்களின் திறமை கணக்கில் கொள்ளப்பட்டதைக் காட்டுகின்றன. புலவர்களும் புலவரால் பாடப்படும் புகழே மறுமை உலகத்தை நல்கும் என வேந்தர்களிடத்து அறிவுறுத்தினர். மறுமை உலகத்தைத் தருபவராய் கருதப்பட்ட புலவர் பாடும் புகழின் பொருட்டுக் கொடைமையை மேற்கொண்ட வேந்தர்களின் செயல்கள், மறுமைப்பயன் நோக்காது பிறர் வறுமையைப் போக்குதலை மட்டுமே அடிப்படை நோக்கமாய்க் கொண்ட வள்ளல்களின் (புறம்.141, 134) செயல்களோடு இணைத்துப்பேசப் பெறுகின்றன.

வறுமையைப் போக்குவதை அடிப்படை நோக்கமாய்க் கொண்ட கொடைகள் இழிந்து பிரச்சாரமாகவும் மறுமைப்பயன் கருதிய செயலாகவும் மாறிபோவதையும் இவை காட்டுகின்றன

## சங்ககால அரசு உருவாக்கச் சூழல்

சங்ககாலம் ஒரு மாறுதல் நிலைக்காலம் என்பதால் பழைய இனக்குழுச் சமுதாய எச்சங்களையும் புதிய நிலவுடைமைச் சமுதாயத்தின் வளர்சி நிலைகளையும் ஒருசேரக் காணமுடிகிறது. இனக்குழுச் சார்ந்த திணைநிலை மக்கள் வாழ்வோடு நகர, பட்டின வாழ்வையும் வெகுவாய்க் காணமுடிகிறது. இனக்குழுச் சமுதாயத் தலைமைகளை ஒருபுறத்தேயும் மறுபுறத்தே நிலவுடைமைச் சமதாயப் பாதுகாப்பிற்கான அரசையும் அரசனையும் சங்கப்பாடல்கள் காட்டுகின்றன. அரசு தனக்குரிய இயல்புகளோடு உருவான காலமாய் சங்ககாலம் உள்ளது. இன்மை, உடைமை, இல்லோர், உடமையாளர்கள், உழுதுண்போர், உழுவித்துண்போர், உழவு, கைத்தொழில், ஆளுவோர், ஆளப்படுவோர், கலைஞர், புலவர், ஊர், நகரம் எனும் இருவேறு முரண்களுடன் சமுதாயம் உருமாறி உள்ளது. இவ்வகை இருவேறுபட்ட சமுதாய அமைப்புகளுடன் அரசுகுரிய படை, வேளாண் பெருக்கம், வருவாய், இலக்கிய உருவாக்கம், ஆட்சியாளர் எனும் கூறுகளும் இருந்துள்ளன. இந்நிலையில் அரசு எனும் அமைப்பு சங்ககாலத்தில் இருந்த நிலையைச் சுருக்கமாய் இவ்வியல் ஆராய்கிறது.

## திணை வாழ்வும் வேலை பிரிவினையும்

அந்தந்த நிலப்பகுதிகளோடு தம்மை இணைத்துக்கொண்டு வாழ்ந்த திணைமக்களின் வாழ்வை ஆற்றுப்படைப்பாடல்கள் விரிவாய் காட்டியுள்ளன. குறிஞ்சியில் குறவர், குறத்தி, எயினர், எயிற்றியர், முல்லையில் ஆயர், (இடையர், கோவலர்,) ஆய்ச்சியர், மருதத்தில் உழவர், உழத்தியர், நெய்தலில் உமனர், உமட்டியர், பரதர் எனும் திணை மக்கள் வாழ்வு ஆற்றுப்படைகள், மதுரைக்காஞ்சி போன்றவற்றில் விரிவாய்ப் பாடப்பட்டுள்ளது. இதை முதல் இயலில் விரிவாய் கண்டோம் உழவு என்பது மையப்படுத்தப்பட்ட நிலையில் அரசு உருவான சூழலில் கைத்தொழில்கள் பல்கி பெருகியுள்ளன. தச்சர் (குறுந். 61:1, பெரும்.248, நெடு .118, 119, புறம்.87:3, 216:1, 290:4), கொல்லர் (புறம்.170:15, 180:13, 312:3, அகம. 202:5, நற்.13-5, பெரும்.207, 437), குயவர் (புறம்.228:1), நெசவாளர் (மது .521,) பருத்திப்பெண்டு (புறம் .125:1, 326:5), பொற்கொல்லர் (நற்.313:2,394:3, புறம்.353:1, செம்பு வினைஞர் (நற். 153:2), மரவேலை செய்யும் கம்மியர் (நெடு.85) எனும் பல்வேறு கைத்தொழிலாளரும் உடைமையாளர் குரிய பணியாளர்களாய் இருந்துள்ளனர். இவர்களோடு கட்டில் பின்னும் இழினன் (இழிபிறப்பாளன்) (புறம்.82:3), ஆடை வெளுப்போர்,( காழியர் - வண்ணார்) (அகம்.89:7), வண்ணாத்தி, (புறம்.311:2, அகம். 387:6, நற்.90:3, கலி. 72:14), பிணம் சுடும் புலையன் (புறம். 360:19), நீர் இறைக்கும் தொழுவர், நெல்லரியும் தொழுவர், (புறம் .24:1, 209:2, 379:3), உழவு வேலை செய்யும் கடைசியர் (புறம்.61:1 ), விறகு விற்போர் (புறம்.70:17), பாசவர் எனும் ஆட்டு வணிகர் (பதி.21:9, 67:16) சாணை பிடிப்போர் (அகம். 1:5, 356:9), எண்ணெய் ஆட்டும் செக்கர் (நற். 328:8,9), சங்கை வளையலாக அறுப்போர், பொன்னை உரைத்து காணும் பொன் வணிகர், ஆடை விற்பவர், செம்பை நிறுத்து கொள்வோர், கட்சி முடிவோர், பூ, சாந்து, விற்போர், (மது.511-515), முத்து சங்கு குளிப்போர் (மது.135.136) பூ, சுண்ணம், வெற்றிலை, பாக்கு போன்ற பண்டங்கள் விற்கும் பல்வேறு சிறு வணிகர்கள் மது 395 -401, எனும் பல்வேறு தொழிற் பிரிவினரையும் சங்கப்பாடல்கள் காட்டுகின்றன.

இத்தகைய பல்வேறு வினைஞர்களோடு பறையர், துடியன், பாணன், கடம்பன் (புறம், 335:7,8), கூத்தர் (புறம்.28-13, விறலியர் (பதி18:6, புறம்.170:11, சிறு.31, பெரும்.486, பொரு. 110, மதுரை.218), கட்டடக்கலைஞர் (நெடு.76-78), ஓவியர் (நெடு.110-114, மது.516-518) எனும் பல்வேறு கலைஞர்களும் வாழ்ந்துள்ளனர். இவ்வாறு சங்க கால நிலவுடைமைச் சமுதாயத் தோற்றம், சமுதாய மக்கள் பொருளாதார ஏற்றத்தாழ்வுடன் பல்வேறு தொழில் பிரிவினராய்ப் பிரிந்து போவதற்குக் காரணமாய் இருந்துள்ளது. பொதுநிலையில் தமக்கெனத் தாமே உழைத்துக் கொண்ட இனக்குழுச் சமுதாய அமைப்பு மாறி பிறருக்கென உழைக்கும் நிலை

ஏற்படுகிறது. உயர்ந்தோர், இழிப்பிறப்பாளர், செல்வர், ஏழை எனச் சமுதாயம் வர்க்க வேறுபாடு உடைய சமுதாயமாய் மாற்றம் அடைந்து போயிற்று.

தொழில்ரீதியான இந்தப் பிரிவினைகளுடன் மேலோர் மூவர் எனப்பட்ட அரசர், அந்தணர், வணிகர் எனும் இவர்களுடன் நிலவுடைமையாளரான உழுதுவித்துண்ணும் வேளாளர் இணைந்த நால்வருணச் சமுதாயமாகவும் சங்க சமுதாயம் மாற்றம் அடைந்துள்ளது. அரசை மையமாய் கொண்ட இந்நாள்வரைப் பற்றிய செய்திகள்தான் சங்கப்பாடல்களில் பாடு பொருள்களாய் உள்ளன. இத்தகைய பல்வேறுபட்ட சமுதாய பிரிவினைகள் (மேலோர், கீழோர் எனும் பொருளாதார பாகுபாட்டுடன்) பல்வேறுபட்ட படித்தர நிலைகளைக் கொண்டு அமைந்துள்ளன. அன்றாட வாழ்வுக்காக உழைத்தோர், வாழ்வின் வளத்துக்காக வாழ்ந்தோர் எனச் சமுதாயம் இருவேறுபட்டதாய் மாறிப்போகிறது.

ஊரும் நகரமும் நாடும்

குடி என்பது ‘சிறுகுடி பெருந்தொழுவர்’ (மது.122) என இருவேறு நிலைகளில் பாகுபடுத்தப்பட்டதைப் போல் ஊர் எனும் பொது பெயரும் சிற்றூர் (பெரும்.191, நற்.3:5, குறுந். 41:3, அகம்.52:7), பேரூர் (பொரு.1, பெரும்.254, நற்.132:1, குறுந்.223:1, ஐங்.77:2, அகம்.382:11, புறம்:57:7) என இரண்டாய் பாகுப்பட்டு போகிறது. இந்தப் பேரூரர்கள் பின்னர் நகரம் எனவும் பட்டினம் எனவும் பெயர் பெறுகின்றன. ஆட்சியாளர்களும் ஊர் ஆண்டோர், பேரூர் அல்லது நகரம் ஆண்டோர் என வேறுபடுகின்றனர். சீறூர்மன்னரும், முதுகுடிமன்னரும் ஊர் ஆண்டோராகவே காட்டப்பட்டுள்ளனர். சீறூர்மன்னரின் ஆட்சி எல்லை சீறூரைச் சார்ந்ததாகவே இருந்துள்ளது. பருத்திவேலி சீறூர் (புறம்.299:1, சீறூர். 297:4, 330:6), கரம்பைச் சீறூர். 302:7), அம்குடிச்சீறூர். 306:2, 324:8), வன்புலச் சீறூர், புன்புல சீறூர், சில்குடிச்சீறூர் எனச் சீறூர் எனவும் பெருந்தகை ஊர், நெடுந்தொகை ஊர், ஊர் எனவும் சீறூர் மன்னர் நிலப்பகுதி குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப் போலவே முதுகுடிமன்னர் ஆண்ட பகுதியும் அருங்கடி மூதூர் (புறம்.336:7, தண்பணை ஊர் (341:19, 345:20), நெடுநல் ஊர் (343:17), வேர் துளங்கின நம் ஊருள் மரனே (347:12), அணங்கு ஆயினன் தான் பிறந்த ஊருக்கு (349:7), கருவாய் மூதூர் (350:2) பணைநல் ஊர் (351:12), ஊர் கவின் இழப்ப (354:7), என ஊர் எனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் ஆண்ட இடமும் வாழ்ந்த இடமும் நகர் எனும் பெயரால் குறிப்பிடப் பெறவில்லை ஊர், நகர் எனும் இரண்டும் வேறுபாடு உடையனவாய் ஆளபட்டதை

> புழனக் கம்புள் பயிர்ப்பெடை அகவும்
>
> ………………………………………..
>
> துஞ்கு மனை நெடுநகர் வருதி (60:1-3)
>
> ஆன்னையும் அறிந்தினள் அலரும் ஆயின்று
>
> ……………………………………………
>
> நும்ஊர்செல்கம் எழுகமோ தெய்யோ (236)

எனும் ஐங்குறுநூற்றுப் பாடல்களால் அறியலாம். வேந்தரின் தலைமை இடங்கள் நகர் எனும் பெயராலேயே குறிப்பிடப்பட்டுள்ள. கடற்கரை சார்ந்த நகரங்கள் பட்டினங்கள் எனப்பட்டன. இந்நகரங்கள் அரசின் முக்கியமான மையங்களாக பொருளாதார மூலங்களாக மாறி உள்ளன. நிலக்கொடை பெற்ற வீரர்களும் சீறூரைக் கொடையாகப் பெற மறுத்ததை முன்னர் கண்டோம். இந்நிலையில் மூவேந்தர்களில் சேரர் முசிறி (பட்டினம்), வஞ்சி (கருவூர்) ஆகியவற்றையும் சோழர் புகார் (பட்டினம்) உறையூர் ஆகியவற்றையும் பாண்டியர் கொற்கை (பட்டினம்) மதுரை ஆகியவற்றையும் மையங்களாய்க் கொண்டு ஆண்டுள்ளனர். நிலக்கொடை பெற விளைந்த வீரர்களும் சீறூரைப் பெற மறுத்த நிலையில் பொருளாதார பெருக்கத்திற்கு மூலாதாரமான மருத ஊர்களே சிறப்பைப் பெற்றுள்ளன. நகர் எனும் சொல் சங்க இலக்கியங்களில் 140 இடங்களில் வந்துள்ளது. ஊர், நகரம் எனும் பொருள்களில் ஏறத்தாழ

32 இடங்களில் ஆளபட்டுள்ளது. ஒரு இடத்தில் மனைவி (கலி.8:22) எனும் பொருளில் வந்துள்ளது. எஞ்சிய இடங்கள் அனைத்தும் அரண்மனை (அகம்.35 :12, புறம்.247:8, 23 : 9), மாளிகை (நற்.162:7, பதி.88:28, அகம்.93 : 12), படைவீடு (ஆயுத சாலை) (பெரு. 405) என அரசு சார்ந்த பொருட்களிலும் உடமையாளர் குடியிருப்பைச் சுட்டவும் ஆளப்பட்டுள்ளது. இவற்றுடன் கோயில் எனும் பொருளிலும், (அகம்.99:9, 136 : 6, புறம்.6: 18) வந்துள்ளது. நகர் எனும் சொல் உடைமைச் சமுதாய உருவாக்கத்தினூடே உருவான சொல்லாய் உள்ளதை இவை காட்டுகின்றன.

சிறுசிறு ஊர்களை ஆண்ட நிலைமைகள் மாறி படையெடுத்து பல்வேறு ஊர்களையும் கவர்ந்து ஆளும் நிலைகள் உருவாகின்றன. மன்னர்கள் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, கருவூர் ஏரிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை எனக் குறிப்பிட்ட ஊரால் சிறப்புற்ற நிலைகள் மாறிச் சோணாட்டு அண்ணல் (புறம்.337:1), சோழநாட்டு பொருநன் புறம். 382 : 3) என நாட்டை முதன்மைப்படுத்தி அழைக்கப் பெறுகின்றனர். சீறூர்மன்னரும் முதுகுடிமன்னரும் ஆண்ட நிலப்பகுதிகள் ஊர்களாய் மட்டுமே இருந்த நிலையில் அவை நாடு என அழைக்க பெறவில்லை. குறுநில மன்னரும் வேந்தரும் ஆண்ட நிலப்பகுதிகளே நாடு என்று அழைக்கப்பட்டுள்ளன (புறம்.30:15,42:18, பதி.13:28). குறுநில மன்னர் ஆண்ட நிலப்பகுதி நாடு என குறிப்பிடப்பட்டுள்ளது (சிறு.87,107, புறம்.110:13,89:3,126:23,130:1ஈ2,165:11), நாடு எனும் சொல் சங்க இலக்கியத்தில் 289 இடங்களில் வந்துள்ளது. பொதுவாய் குறிஞ்சி நில தலைவனைச் சுட்டும் 'நாடன்' எனும் பெயர் (நற்.304:4, அகம் .272:19 குறு.379:3) 'நாட்டை உடையவன் எனும் பொருளில் பெருநிலப் பகுதிகளை ஆண்ட மன்னரைக் குறிப்பிடும் பெயராய் மாற்றம் பெற்றுள்ளது. பெருங்கல் நாதன் பேகன் (சிறு . 87) தண் கடல் நாடன் (மது . 524), செல்வரை நாடன் (பெரும் .103), கானகநாடன் (புறம் .5:3), மலைகெழு நாடன் (புறம்.135:13), வன்புலநாடன் (புறம்.172: 8), வேங்கடநாடன் (புறம்.381:22), என அரசர் நாடன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முல்லை குறிஞ்சி முதலான நிலப்பகுதிகள் அந்த நிலப்பகுதிகளில் வாழும் திணை மக்கள், அவர்களைப் பாதுகாக்கும் தலைமை எனும் நிலையில் இருந்த சமுதாய அமைப்பு ஒருபுறம் தொடர்ந்தாலும் மறுபுறத்தே நானிலத் தலைமை எனும் நிலை உருவாகிறது. சீறூர்மன்னர் முல்லை நிலப் பகுதிகளிலும் முதுகுடி மன்னர் மருதநிலப் பகுதிகளிலும் இருந்த நிலைகளுக்கு மாறாக வேந்தர், குறுநில மன்னர் நானிலத்தன்மை உடையவராக உயருகின்றனர். இந்நானிலத் திணை வாழ் மக்களும் குறிப்பிட்ட தலைமையின் கீழ் வந்ததை ஆற்றுப்படை இலக்கியங்களும், மதுரைக்காஞ்சியும் காட்டுகின்றன. பெரும்பாணாற்றுப்படையில் பாலைக் கானவர், குறிஞ்சி நில மக்கள் (134 - 146), முல்லை நிலக் கோவலர் (148 – 168), முல்லை நில உழுதுண்போர் (185 – 195) மருத உழவர் செயல்பாடு- உணவு (207 – 255), மருத வலைஞர் (263 – 282), மருதநில அந்தணர் (297 – 310), திமிலர் வாழும் பட்டினம் (320 – 336), பட்டினம் மக்கள் (337 – 345), தென்னந் தோப்புகளில் வாழும் தண்டலை உழவர் (352 – 362), எனப் பல்வேறு குடிகளின் மக்களின் குடியிருப்புகள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. முல்லை, மருதம் போன்ற நிலப்பகுதிகளில் திணை மக்களோடு வேறுபிற குடிகளும் இருந்தமை காட்டப்பட்டுள்ளது. "பிரதேசம் அப்படியேதான் இருந்தது மக்கள்தான் அங்கேயும் இங்கேயும் வந்து போய்க் கொண்டிருந்தார்கள் எனவே பிரதேசப்படி பிரிப்பது என்பது தொடக்க ஏற்பாடாகக் கொள்ளப்பட்டது எங்கெல்லாம் பிரஜைகள் குடி தங்கினார்களோ அங்கு அவர்கள் தமது பொது உரிமைகளையும் கடமைகளையும் ஆற்ற அனுமதிக்கப்பட்டார்கள். எந்தக் காலம் எந்தக் குலம் என்று பார்க்கப்படவில்லை (1978: 264) என எங்கெல்ஸ் குறிப்பிட்டுள்ளதைர் போல் மருதம், நெய்தல் முதலான நிலப்பகுதிகள் பல்வேறு இன மக்கள் வாழும் நிலப்பகுதிகளாய் மாறி உள்ளன. மதுரைக்காஞ்சியில் தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் நாடு ஐம்பால் திணையும் அமைந்து இருந்தமை பாடப்பட்டு நாட்டின் நடுவில் தலைநகரமாகிய மதுரை அமைந்து இருந்தமை காட்டப்பட்டுள்ளது. (328 -331). மதுரை மாநகர் அமைப்பு, நாளங்காடி நாளங்காடியில் பல்வேறு விலைஞர்கள் சுற்றித்திரிந்து விற்றல், செல்வர்களின் மாளிகை, பௌத்தப்பள்ளி, அந்தணர் பள்ளி, சமணப்பள்ளி பல்வேறு தொழிலாளர் கூட்டம், பரதையர்

வாழ்க்கை எனும் பலவும் விரிவாய் பாடப்பட்டுள்ளன. இவ்வாறு பட்டினப்பாலையில் பூம்புகார் நகரச்சிறப்பு பாடப்பட்டுள்ளது. பல்வேறு மொழி பேசும் மக்களும் கலந்து உறவாடிய நிலையும் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு ஆற்றுப்படை இலக்கியங்களும் பத்துப்பாட்டின் பிற பாடல்களும் நானிலப் பகுதிகளுடன் பல்வேறு மக்களும் கலந்து வாழும் நகரை மையமாய்க் கொண்ட நாடு எனும் அமைப்பு உருவானதைக் காட்டுகின்றன.

அரசும் சிற்றரசும்

வம்பவேந்தன் (ர்) (புறம்.287:13,345:7) என அழைக்கப்பட்ட மூவேந்தர் கொடி, முடி, முரசு (புறம், 38:3, 35:4, 75:12), ஆணைச்சக்கரம் (புறம் .3:4) பணம் பூ, வேப்பம்பூ, அத்திப்பூ எனும் அடையாளப் பூக்கள் (புறம். 45:1-3), எனும் இவற்றை உடையவராயும் ஏனைய குறுநில மன்னரை தம் கீழ்ப்படுத்தி ஆள முயன்றவராயும்

வேந்து மேம்பட்ட பூந்தார் மாற (புறம். 55:6) என மூவேந்தர்களுக்குள் மேம்பட்டவர்களாயும் உயர விரும்பி எஞ்சிய இரு வேந்தர்களை அடக்கி ஆள விரும்பியவராயும் காட்டப்பட்டுள்ளனர், சங்ககாலத்தைப் பொருத்தவரையில் மேல்நிலையில் இருந்த அரசர்கள் மூவேந்தர்களே. சில குறுநிலமன்னர் இவர்களின் கீழ் இருந்து இவர்களுக்குக் கட்டுப்பட்டும் உதவிசெய்தும் ஆண்டுள்ளனர்.

முலையமான் திருமுடிக்காரி - மூவெந்தருக்கும் உதவியாய் இருந்தவன்.

வீயாத் திருவின் விறல்கெழு தானை

மூவரு ளொருவன் றுப்பா கியரென

ஏத்தினர் தரூஉங் கூழே நுங்குடி' (புறம். 122:5-7)

நாஞ்சில் வள்ளவன் - சேரர் கீழிருந்த சிற்றரசன்

'…………………………

சாத லஞ்சாய் நீயே (புறம்.139:11,12)

ஏனாதி திருகுட்டுவன் - சோழநாட்டுக் குறுநில மன்னன்

என் என பல குறுநில மன்னர்கள் மூவேந்தர் கீழிருந்து ஆண்டு அவர்களுக்கே துணையாய் இருந்துள்ளனர். வேந்தர்களின் கீழ் இருந்து ஆண்டு அவர்களுக்கு உதவியாய் நண்பர்களாய் இருந்து பேருதவி ஆற்றிய இந்தக் குறுநில மன்னர்களைப் போல் அன்றி மூவேந்தர்களுக்கு அடங்கி ஆண்டு அவர்களுக்குத் திரை செலுத்திய குறுநில மன்னர்களும் இருந்துள்ளனர்.

பலிகொண்டு பெயரும் பாசம் போல

…………………………………

ஆனையை யாகன் மாறே ககைவர் (பதி..80:9-12)

என்பன பகைவரிடம் வேந்தர் நிலைபெறும் செயல்பாட்டைக் காட்டுகின்றன இவையெல்லாம் பேரரசு, சிற்றரசு எனும் படித்தரநிலையில் சங்ககால அரசு அமைந்திருந்ததைக் காட்டும் சான்றுகளாய் உள்ளன.

தமிழகத்தில் முடி மன்னர் மூவர் சங்ககாலத்தில் ஆண்டு வந்தனர் இம்மூவர் தவிர பல குறுநிலமன்னர்கள் நாட்டின் ஆட்சியைப் பகிர்ந்து கொண்டனர். சிற்றரசர்கள் ஒவ்வோரமயம் முடிமன்னர்தம் அடி சாராது சுதந்திரமாக ஆட்சி புரிந்தனர். ஆயினும் கொள்கை அளவிலேனும் அவர்கள் மூவரில் ஒரு மன்னருக்குக் கீழ்ப்படிந்தவராகக்

கருதப்படுவார். அத்தகைய சிற்றரசர்களின் தொகை 120 என்று ஸ்மித் கணக்கிடுகிறார் (1986 51) எனும் ந.சுப்பிரமணியன் கூற்று இந்தப் படிதர ஆட்சி முறையைக் குறிப்பிடுகிறது. மதுரைக்காஞ்சி (70-74) எனத் தலயாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைத் தமிழகம் முழுவதற்குமான கோன் ஆக வேண்டும் என வாழ்த்துவதும் பேரரசாக உயர விழைந்த மன்னர் எண்ணத்தைக் காட்டுகிறது. ஒரு தாம் ஆகிய உரவோர் உம்பல் (புறம் .18 :4) எனவும் இம்மன்னனே புகழப்பட்டுள்ளான்.

படை

தங்களுக்குள் முட்டிமோதிக் கொண்டு அரசுகள் உயர தலைப்பட்ட சங்ககாலம் போர்கள் மலிந்தகாலம். ‘ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று இவ்வுலகத்து இயற்கை’ (புறம். 76:,2) எனப் போர் இயற்கைச் செயல்பாடாய்க் கருதப்பட்ட காலம். சான்றோன் (வீரன்) ஆக்குதலே தந்தையின் கடமையாகவும் களிறு எறிந்து பெயர்வது வீரனின் கடமையாகும்.(புறம். 312) குறிப்பிடப்பட்ட காலச்சூழலில் போர் முக்கியத்துவம் வாய்ந்த சமதாயச் செயற்பாடாய் இருந்துள்ளது. அரசுகள் உருவான சங்ககாலச் சூழலில் ‘படை’ என்பது அரசின் அடிப்படை அங்கமாய் அமைகிறது. சங்கப்பாடல்களில் படை குறித்த செய்திகளும் பரவலாய் இடம் பெற்றுள்ளன. படை என்பது (ஏறத்தாழ 119 இடங்களில்) குதிரைச் சேணம்(பெரும்.492), கற்படை (சுவர்ப்படை) (மது.352), கலனை எனும் குதிரை அணி (மலை.574), அடுக்கு (நற்.132-6), சூட்டுக்கோல் (கலி.106:1), கூட்டம் (குறுந்.373:1, அகம்.35:4) எனும் பல்வேறு பொருட்களுடன் போர்ப்படை எனும் பொருளில்தான் பரவலாய் வந்துள்ளது. இதைப் போலவே தானை எனும் சொல்லும் ஏறத்தாழ 128 இடங்களில் போர்ப்படை எனும் பொருளில் வந்துள்ளது.

இந்தப்படையைத் திரண்டபடை, நிலைத்தபடை என இரண்டாய்ப் பாகுப்படுத்தலாம். மாடுபிடி சண்டைகளில் ஈடுபட்ட படையைத் திரண்ட படை எனக் கொள்ளலாம். மீட்ட நிரைகளை ஊரார் பாதிட்டுக் கொண்டனர் என்பதால் ஊரார் திரண்டு மீட்டு வந்ததை அறியலாம். நிலங்கவர் போர்களில் ஈடுபட்ட அரசுகள் உருவான நிலையில் நிலையான படைகள் இருத்தலே இயல்பு. இதற்கான குறிப்புகளும் சங்கப்பாடல்களில் ஓரளவு உள்ளன.

முரசு முழங்கு தானை மூவர் (பொரு.54)

தெறலருந் தானைப் பொறையன் (நற்.18:5)

சினம் மிகு தானை வானவன் (புறம்.126:14)

கடந்தடு தானைச் சேரலாதன் (புறம்.8:5)

சினம்கெழு தானைச் செம்பியன் மருக (புறம்.37:6)

அரவக் கடல் தானை அதிகன் (சிறு.103)

என அரசர்கள் படையுடையோர் எனப் புகழப்பட்டுள்ளனர். இத்துடன் படைகலக் கொட்டல்கள் இருந்ததை ‘இவ்வே பீலி இணிந்து’ (புறம்.95) எனும் பாடல் காட்டுகிறது. இத்துடன் போர்காலத்தே படைகள் சென்று தங்கிய பாசறைப் பற்றிய செய்திகளும் (ஏறத்தாழ 50 இடங்களில்) இடம் பெற்றுள்ளன. இக்குறிப்புகளுடன் நால்வகைப் படை குறித்த செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்

நெடுங்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய புகன்மறவருமென

…………………………………..

அறநெறி முதற்றே ணரசின் கொற்றம் (புறம்.55:7-10)

எனும் பாடல் நால்வகைப்படை கொண்ட பெருமை உடையது அரசு எனக் குறிப்பிடுகிறது.

மதில்

தனியுடைமைகளின் தோற்றுவாய்க்குப் பின்னர் அவ்வுடைமைகளைப் பாதுகாக்கும் நிலைகளும் தேவைபட்டன. மதில்களும் கிடங்குகளும் ஞாயில் எனப்பட்ட மதில் உறுப்புகளும் அரண்களும் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாய் இடம்பெற்றுள்ளன. மதில் 42 இடங்களிலும் ஞாயில் 10 இடங்களிலும் எயில் 53 இடங்களிலும் அரண் 32 இடங்களிலும் புரிசை 20 இடங்களிலும் இடம்பெற்றுள்ளன.

உடைமையற்ற சீறூர்மன்னர் சமுதாயத்தில் உடைமைப் பாதுகாப்பிற்கான மதில்களும் இல்லை. மதில் போர்களும் இல்லை குறுநில மன்னர், வேந்தர் பற்றிய சிறு.152. பெரும்.451,மது.66,பதி.15:3,20:18,22:25, புறம். 18:11, 31:8, 36:10,40:15, அகம். 335:11, எனும் பாடல்களிலும் முதுகுடிமன்னர் பற்றிய பாடல்களிலும் (புறம்.343:16, 2,355:1), மதில் பற்றிய குறிப்புகள் அமைந்துள்ளன. எயில் எனும் சொல் வரும் இடங்களிலும் குறுநில மன்னரும், வேந்தரும் மதிற் போரில் ஈடுபட்ட செய்திகள் பாடப்பட்டுள்ளன. அரசு உருவாக்கம் பற்றிப் பேசும் எங்கெல்ஸ் “அரண் செய்யப்பட்ட நகரங்களைச் சுற்றிலும் பெரிய பெரிய சுவர்கள் எழுப்பியது சும்மா விளையாட்டுக்காக அல்ல,அவற்றின் விரிந்த அகழிகள் கணமுறையின் சமாதிகளாகும்.அறந்நின் கொத்தளங்கள் நாகரிக நிலையை எட்டித் தொட்டுக் கொண்டிருந்தன. (1978:254)எனக் குறிப்பிடுவதைப் போல் இந்த மதில்கள் எல்லாம் இனக்குழுச் சமுதாயத்தின் அழிவின் மீது எழுப்பப்பட்டனவாகவே உள்ளன. அரசின், அரசனின், உடைமையாளரின் பாதுகாப்பிற்கான அரண்களாக உள்ளன.

வருவாய்

உழவு, வணிகம் இரண்டும் அரசின் வருவாய்க்கான ஆதாரங்கள்.ந நிலவரி, அரசர் தந்த திறை, வணிகத்தால் பெற்ற சுங்கவரி என்பன அரசுக்கான வருவாய்களாக இருந்துள்ளன.

நிலவரி

பாண்டியன் அறிவுடை நம்பியிடம் பிசிராந்தையார் ‘அறிவு சான்ற வேந்தன் முறை அறிந்து வருவாய்த் திரட்டுவானாயின் நாடு கோடிப்பொருளை ஈட்டித் தந்து வளம் உடையதாய் தழைக்கும்’ (புறம்.184:5,6), என அறிவுறுத்துகிறார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடம் வெள்ளைக்குடி நாகனார் ‘நின்படை தருகின்ற வெற்றி உழுகின்ற கலப்பை நிலத்தே விளைவித்த நெல்லின் பயன்’ எனப் போர் வெற்றியை உழவின்மேல் வைத்துக் கூறி ‘மழை பெய்யவில்லை என்றாலும் விளைச்சல் குறைந்தாலும் இயற்கையல்லன செயற்கையில் தோன்றினாலும் அரசனையே இவ்வுலகம் பழிக்கும். எனவே நீ நொதுமலாளர் (புதியோர்) புறங்கூற்று மொழியைக் கேளாது எருதுகளைப் பாதுகாப்பவராகிய வேளாளர் குடியைப் பாதுகாப்பாயாக’ என அறிவுறுத்திப் பழைய நிலவரியை நீக்குமாறு வேண்டியுள்ளதைப் புறநானூற்றுப் பாடல்(35) காட்டுகிறது.

புரவு என்னும் வரியும் அரசனால் திரட்டப்பட்டுள்ளது. ‘புரவிற்கு ஆற்றாச்சீறூர்’ (புறம்.330:6), எனும் பாடலுக்குப் புரவுவரி செலுத்துதற்கும் ஆற்றாத வருவாயையுடைய சீறூர்’ என உரை கூறப்பட்டுள்ளது. 297 –ஆம் பாடலில் வரும் ‘சீறூர்க் கோளிவண் வேண்டேம்’ எனப் பழைய உரையும் ‘புரவாவது விளைநிலம், இதற்கு அரசிறையன்றி யேனைப் புரவு வரி முதலியன உளப்பட வழங்கும் நிலம்’ (ஔவை சு.துரைசாமிப்பிள்ளை,1972:195) என விளக்க உரையும் கூறப்பட்டுள்ளது. புரவு என்பதே வரி எனும் பொருளிலும் ஆளப்பட்டுள்ளது.

திறை

வேந்தர்களின் ஆளுமைக்கு உட்பட்டு ஆண்ட பகைவர்கள் அளித்த கப்பம் (திறை) அரசுக்கான வருவாயாக இருந்துள்ளது.

வந்துவினை முடித்தனன் வேந்தனும் பகைவரும்

தம்திறை கொடுத்துத் தமர் ஆயினரே (அகம்.44:1,2)

எனும் பாடல்களுடன் அகம்.124:2, 127:7, 334:3, பொரு.120, மது.210, பதி.17:3,53:2, 59:12, 62:12, 66:7, 71:24, 80:10,புறம். 22:26, 97:20.387:12 எனும் பல பாடல்களிலும் பகைவரிடம் வேந்தர், அதியன் போன்ற குறுநிலமன்னர் ஆகியோர் திறை பெற்றமை பாடப்பட்டுள்ளது. ர.பூங்குன்றன் (1999:118) குறிப்பிடவதைப் போல திறைக் காணிக்கைப் பொருள் மட்டும் அல்ல. இது பெரும்பாலான இடங்களில் அரசனுடன் இணைத்தே கையாளப்பட்டுள்ளதுடன் ஒரு அரசனுக்குக் கீழிருந்த வேறு ஒரு அரசன் திறை கொடுத்ததும் (பதி.59:12), அரசன் படையெடுத்துச் சென்று பகைவரை அடக்கித் திறை பெற்றதும் (மது.230). திறை காணிக்கைப் பொருள் மட்டும் அல்ல அது அரச மேலாண்மையை நிலைநிறுத்துவதற்கான அடையாளம் என்பதைக் காட்டுகின்றன.

சுங்கம்

வணிகம் பெரிய அளவில் நடைபெற்ற நிலையில் ஏற்றுமதி, இறக்குமதி மிகுதியாய் நடைபெற்ற சூழலில் அப்பொருள்களின் மீது அரசு விதித்த உல்கு எனப்படும் சுங்கவரியும் அரசுக்குப் பெரும் வருவாயைத் தேடித்தந்துள்ளது. கடலருகில் இருக்கும் பரதவருடைய அகன்ற தெருவிடத்தில் உள்ள காவல் நிறைக்த பண்ட பண்ட சாலையில் எல்லை அறியாதபடி வந்து திரண்ட பொருட்களைக் கடலில் கப்பலில் ஏற்றுவதற்காகவும் கப்பலில் வந்த பொருட்களைக் நிலத்தில் இறக்கவும் புலிச்சின்னத்தை அடையாளமாக இட்டுச் சுங்கம் கொள்ளுதலைப் பட்டினப்பாலை (116-131) காட்டுகிறது.

நல்லிறைவன் பொருள் காக்குமந்

தொல்லிசை தொழில் மாக்கள் (பட்.120-121)

'அரசனின் பொருளைப் பிறர் கொள்ளாதபடி காக்கும் பழைமையான புகழை உடையவர்' எனப்பட்ட சுங்கம் கொள்வோர் ஒரு பொழுதும் சோம்பியிராமல் நாள்தோறும் சுங்கம் கொண்டமை குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரில் சுங்க அதிகாரிகள் இருந்ததை இது காட்டுகிறது.

வம்பலர்கள் முதுகில் மிளகு மூட்டைகள் ஏற்றப்பட்ட கழுதைக் கூட்டத்தோடு செல்லும் காட்டு வழியில் விற்படையினர் சுங்கம் திரட்டும் சுங்கச்சாவடி இருந்ததைப் பெரும்பாணாற்றுப்படை (75-82) காட்டுகிறது.

அரச மேலாண்மை

" சமுதாயத்திலிருந்து தோன்றிய, சமுதாயத்திற்கம் மேலாகத் தன்னை உயர்த்தி வைத்துக்கொண்டு, சமுதாயத்திலிருந்து மேலும் மேலும் தன்னை வேறாகப் பிரித்துக் கொண்டு செல்லும் இந்தச்சக்தியே அரசு என்பது" (1978:264) என எங்கெல்ஸ் குறிப்பிடுவதைப்போல் சமுதாயத்திற்கு மேலாகத் தன்னை உயர்த்தி வைத்துக்கொண்ட அரசு அதன் தலைவனான அரசனை எல்லாம் வல்ல ஆற்றல் வாய்ந்தவனாய்க் காட்டிக் கொண்டது. இந்தப் பணியைச் சங்ககாலப் புலவர்கள் சிறப்பாகவே செய்திருக்கின்றனர். நெல்லும் நீரும் உயிரன்று மன்னனே உயிர்(புறம்.186). எனுமட நிலையில் அரசனே உலக நல்வாழ்வுக்கு அடிப்படையானவன் எனும் கருத்தை முன்வைக்கும் பொருண்மொழிக்காஞ்சிப் பாடல்கள் அரசனின் மேன்மையைப்

பாடியுள்ளன. இத்துடன் அரசனைத் தெய்வங்களுடன் இணைத்துப்பாடும் ‘பூவைநிலைப்’ பாடல்களும் பிரச்சாரர்களான புலவர்களால் பாடப்பட்டுள்ளன.

நீ, உடன்று நோக்கம்வா யெரிதவழ

……………………………………..

வேண்டியது விளைக்கு மாற்றலையாகலின் (புறம்.38:5-9)

என அரசன் ஞாயிற்றின் குளிர்ச்சியையும் திங்களுள் வெயிலையும் விளைவிக்கும் ஆற்றல் வாய்ந்தவன் எனப் புகழப்பட்டான்.

கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்

காவற் சாகாடு கைப்போன் மாணின்

ஊறின் றாகி யாறினிது படுமே (புறம்.185:1-3)

காப்பாகிய சகடத்தைச் (வண்டியை) செலுத்துபவன் மாட்சிமைபட்டவனாக இருக்க வேண்டும் எனக் கூறுவதோடு ‘மன்னர் உயிர்த்தே மலர்த் தலையுலகம்’ (புறம்.186:2) எனக் காட்டப்பட்டுள்ளான்.

இலக்கிய உருவாக்கம்

சங்ககால அகம், புறம் எனும் இருவகை இலக்கியங்களில் புற இலக்கியங்கள் முழுக்க முழுக்க அரசரை மையப்படுத்தியதாகவே இருக்கின்றன. குறிப்பிட்ட அரசனை குறிப்பிட்ட சில பாடல்களில் பாடும் புறநானூற்று மரபில் மாற்றம் ஏற்பட்டு குறிப்பிட்ட சேர அரசர்களை பத்துப்பத்துப் பாடல்களில் பாடும் மரபு ஏற்பட்டதைப் பதிற்றுப்பத்துக் காட்டுகிறது. இந்த மரபிலும் மாற்றம் ஏற்பட்டதைப் பத்துப்பாட்டின் நெடும்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. “பத்துப்பாட்டினுள் இடம்பெறும் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய பாடல்களில் அகத்திணை, புறத்திணை இயக்கப்பட்டுள்ள முறையில் நியயாமான திணை,துறை மரபில் இல்லாத ஒரு நெகிழ்ச்சியை அவதானிக்கலாம்” என்கிறார் க.சிவதம்பி (1998:73).

தனிப்பாடல்களாய் பாடப்பட்டவற்றை இலக்கியமாக்கித் தொகையாக்கம் செய்வித்தவர்கள் அரசர்களே. அகநானூற்றைப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும் குறுந்தொகையைப் பூரிக்கோவும், ஐங்குநூற்றினை யானைகட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் தொகுப்பித்துள்ளனர். திட்டமிட்டு பாடப்பட்டுள்ள பதிற்றுப்பத்து முழுக்க முழுக்கச் சேரர்கள் பற்றிய பாடல்களாகவே இருப்பதாலும், புறநானூற்றின் முதல் பாடல் சேரர் சார்பில் தொகுக்கப்பட்டனவாகக் கொள்ளலாம். “பாடுநர் காலத்திற்குரிய இப்பாடல்களைத் தொகுத்து . அதற்கு முன்னிருந்த காலத்து இலக்கியத்தேட்டத்தை நிலைபேறுடையதாக்கி, அதன் மூலம் மன்னர் பரம்பரைகளின் தொடர்ச்சியை நிச்சயப்படத்துவதற்காக விருக்கலாம்” (1988:61) எனக் க.சிவதம்பி சங்க இலக்கியத் தொகையாக்கத்தை அரசருடன், அரசுடன் இணைத்து நோக்குகிறார்.

பல்வேறுபட்ட அரசர்களும் குறிப்பிட்ட நில எல்லைகளுக்கு உட்பட்டு ஒருகாலத்தில் ஆங்காங்கே ஆண்டிருந்த போதிலும் அரசு தனக்குரிய எல்லா இயல்புகளுடனும் முழுப்பரிமாணத்தோடும் உருவாகி வந்ததை மேலே ஆராயப்பட்ட எல்லாச் சான்றுகளும் உறுதிசெய்கின்றன. மருதவேளாண் பொருளாதாரமும் நெய்தல்நிலப் பகுதியின் வணிகப் பொருளாதாரமும் அரசர்களால் மிகுதியும் கவனத்தில் கொள்ளப்பட்டன. இவ்விருவகைப் பொருளாதாரக் கவனத்துடன் நில எல்லைப் பெருக்கத்திற்கான , மருத விளைவயல்

பெருக்கத்திற்கான போர்களில் ஈடுபட்டு வைதீக நெறிக்கும் அந்தணருக்கும் முக்கியதுவம் அளித்த வேந்தர் சமுதாயங்களில் அரசு உருவாக்கச் சூழலை அழுத்தமாகக் காண முடிகின்றது. திணைத் தெய்வங்கள் திணை எல்லைகளைக் கடந்து நானிலங்களிலும் செல்வாக்கைப் பெரும் நிலையில் ஊர், நகர், நாடு எனும் படி நிலை அமைப்பு உருவாகின்றது. நானில இணைப்பு வேந்தர் சமுதாயத்தில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் இதற்குச் சான்றுகளாய் அமைந்துள்ளன. சங்ககால அரசு மூவேந்தர்களின் வளர்ச்சியுடன் இணைந்தது(1998:49). இது வேளாண் சமுதாய வளர்ச்சியுடன் இணைந்தது (மேலது.ப.51) எனவும் க.சிவதம்பி கூறுவது மேற்காட்டிய சான்றுகளால் உறுதிப்படுகிறது. மூவேந்தர்களும் அவர்களின் அரசுகளும் பேரரசாய் உருவாகவில்லை. அரசாட்சிகென ஒரே குடிகளுக்குள்ளும் நில எல்லைப் பெருக்கத்திற்கென மூவேந்தர்களிடையேயும் நடைபெற்ற போராட்டங்கள் பேரரசு உருவாகத் தடையாய் இருந்துள்ளன. சேரமான் கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரலிரும்பொறை, கொற்கைப் பொருநன், வெள்வேல் நெடுஞ்செழியன், பெருஞ்சேற்று உதியன் சேரலாதன், உருவப்பல்தேர் இளஞ்சேட்சென்னி, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் போன்றோர் காலம் தொடங்கி மெல்ல மெல்ல வளர்நத அரசு கரிகாற்சோழன் , தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போன்றோர் காலங்களில் வலுவுடன் வளர்ந்து உயர்ந்ததைப் பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி போன்றவை காட்டுகின்றன. சங்ககாலத்தின் இறுதிக்காலப் பகுதியில் மூவேந்தர் அரசுகள் வீழ்ச்சியடைந்ததைச் சிறுபாணாற்றுப்படை போன்ற இலக்கியங்கள் காட்டும் ஔவையார் பாடல் (புறம்.367) போன்றவை காட்டுகின்றன.

சங்ககால இறுதிப்பகுதியைச் சார்ந்த சிறுபாணாற்றுப்படையில் ‘இயல் தேர்க் குட்டுவன்,வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே’(49,50), கடுந்தேர்ச் செழியன் தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே’ (65 -67), ‘தூங்கெயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை, நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன், ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே’ (81-83) என வஞ்சி, மதுரை, உறந்தை மூன்றும் வறிதாகப் போய்விட்ட நிலை காட்டப்படுவது மூவேந்தர்களின், அவர்தம் அரசுகளின் நிலைகுலைவைக் காட்டுகின்றது.

கொள் குறி வினா

1.வேந்து விடு முனைஞர் வேற்றுப்புல களவின் ஆதந்து ஓம்பல் மேற்று ஆகும் - என்பது

அ) கரந்தை

ஆ) வெட்சி

இ) உறந்தை

ஈ) காஞ்சி

2.புறநானூற்று பாடல்களில் சீறூர் மன்னர்களின் விராதத்தை பாடுவதாக அமைந்த துறை

அ) ஏறான் முல்லை

ஆ) எருமை மறம்

இ) வல்லாண் முல்லை

ஈ) குடை மங்கலம்

3.புறநானூற்றில் இடம் பெறும் செவியறிவுஉப் பாடல்கள் யாரைக் குறிப்பவை?

அ) முதுகுடி மன்னர்கள்

ஆ) மறவர்கள்

இ) வேந்தர்கள்

ஈ) வயிரியர்

4.நலங்கிள்ளியிடம் தத்தம் தகுதிக்கேற்ப கொடைதர வேண்டிய இயல்பினை வற்புறுத்தியவர்

அ) ஔவையார்

ஆ) கோவூர் கிழார்

இ) பரணர்

ஈ) வெள்ளிவீதியார்

விடைகள்

1. ஆ) வெட்சி
2. இ) வல்லாண் முல்லை
3. இ) வேந்தர்கள்
4. ஆ) கோவூர் கிழார்

குறுவினாக்கள்:

1.சங்ககால அகப்பாடல்களில் இயற்பெயர் சுட்டா மரபினை எடுத்தியம்புக

2.சங்ககாலத் திணைப்பாகுப்பாட்டில் காணப்படும் மனித நாகரீகத்தின் வளர்ச்சி போக்கினை விளக்குக

3. சங்கஇலக்கியங்களின் சுட்டப்படும் மூவேந்தர் மரபினை விளக்குக

4. சங்கஇலக்கியத்தின் வழி பாணர் புலவர் ஆகியோரின் பாடும் மரபினை எடுத்தியம்புக

5. மன்னரின் வரிசை அறிதல் திறத்தின் சிறப்பினை சங்க இலக்கியத்தின் வழி விளக்குக

6. ஆற்றுப்படை நூல்களில் சுட்டப்படும் பாணர்களின் வாழ்வியலை எடுத்தியம்புக

## நெடுவினாக்கள்

1.சங்க இலக்கியத்தில் காணப்படும் தலைமை வேறு பாடுகளைப் பகுப்பாய்வு செய்க

2.புலவர் மன்னர் உறவு நிலையில் கொடைத் திறம் பெறும் சிறப்பினை விளக்குக

## பாடநூல்கள்

1.தமிழ்ச் செவ்வியல் படைப்புகள், பெ.மாதையன், நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்(பி) லிட்

2.சங்ககால சமூக உருவாக்கமும் அரசு உருவாக்கமும், -பெ.மாதையன் நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்(பி) லிட்

**Reference Books:**

1.சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும், அம்மன் கிளி முருகதாஸ், 2006, குமரன் புத்தக இல்லம்

2.சங்க இலக்கியத்தில் நிலையியல் உயிர்கள்.- இரா.காஞ்சனா, 1998, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

**Related Online Contents**

- **Tamil Virtual University Library – www.tamilvu.org/library http://www.virtualvu.org/library**
- **Project Madurai – www.projectmadurai.org.**
- **Chennai Library – www.chennailibrary.com http://www.chennailibrary.com**
- **Tamil Universal Digital Library- www.Ulib.prg**